“பவன்” “மண்டல்” முதலியன
இனியேனும் தமிழகத்தில்
பயிலா வண்ணம்
அவண்சென்று முழங்கிடுவீர்!
ஆங்கிலச்சொல் இந்தி மொழி
வடசொல் யாவும்
இவண் தமிழிற் கலப்பதுண்டோ
“பிராம்மணர் கள்உண்ணும்
இடம்” இப் பேச்சில்
உவப்புண்டோ தமிழ்மானம்
ஒழிந்திடுதே ஐயகோ
உணர்வீர் நன்றே!

- பாவேந்தர்

வளவன் பதிப்பகம்
2, சிங்காரவேலர் தெரு
தியாகராயர் நகர்
சென்னை - 600 017


20

இளங்குமரனார் தமிழ்வளம்

இளங்குமரனார்

# தமிழ்வளம்

20



கல்விச்செல்வம், இருசொல் அழகு,
தனிப்பாடல் கனிச்சுவை,
பொதுமக்கள் பேச்சில் பொய்யாமொழி

இளங்குமரனார்

# தமிழ்வளம்

20

1. கல்விச் செல்வம்
2. இருசொல் அழகு
3. தனிப்பாடல் கனிச்சுவை
4. பொதுமக்கள் பேச்சில் பொய்யாமொழி

ஆசிரியர்

முது முனைவர் **இரா. இளங்குமரன்**

**வளவன் பதிப்பகம்**

சென்னை - 600 017.

<u>*நூற் குறிப்பு*</u>

| | |
|---|---|
| நூற்பெயர் | : **இளங்குமரனார் தமிழ்வளம் - 20** |
| ஆசிரியர் | : இரா. இளங்குமரன் |
| பதிப்பாளர் | : இ. இனியன் |
| பதிப்பு | : 2009 |
| தாள் | : 16 கி வெள்ளைத்தாள் |
| அளவு | : 1/8 தெம்மி |
| எழுத்து | : 11 புள்ளி |
| பக்கம் | : 16 + 240 = 256 |
| நூல் கட்டமைப்பு | : இயல்பு (சாதாரணம்) |
| விலை | : உருபா. **240/-** |
| படிகள் | : 1000 |
| நூலாக்கம் | : பாவாணர் கணினி<br>தி.நகர், சென்னை - 17. |
| அட்டை ஓவியம் | : ஓவியர் மருது |
| அட்டை வடிவமைப்பு | : வ. மலர் |
| அச்சிட்டோர் | : ஸ்ரீ வெங்கடேசுவரா<br>ஆப்செட் பிரிண்டர்சு<br>இராயப்பேட்டை, சென்னை - 14. |

வெளியீடு

**வளவன் பதிப்பகம்**

எண் : 2 சிங்கார வேலர் தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24339030

# பதிப்புரை

இலக்கிய இலக்கணச் செம்மல் முதுமுனைவர் **அய்யா இளங்குமரனார்** அவர்கள் எழுபத்தைந்து ஆண்டு நிறைவு எய்தியதைப் போற்றும் வகையில் தமிழ் இளையர்க்கென்று அவர் எழுதிய நூல்களையெல்லாம் சேர்த்து எழுபத்தைந்து நூல்கள் கடந்த 2005 - ஆம் ஆண்டு திருச்சித் திருநகரில் வெளியிட்டு எம் பதிப்புப் பணிக்குப் பெருமை சேர்த்துக் கொண்டோம்.

அந்த வகையில் 2010 - ஆம் ஆண்டு இப்பெருந் தமிழாசான் 81 - ஆம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் தமிழ்மொழி - இன - நாட்டின் காப்பிற்காகவும், மீட்பிற்காகவும், மேன்மைக்காகவும் இவர் எழுதிய அனைத்து அறிவுச் செல்வங் களையும் தொகுத்துப் பொருள் வழிப் பிரித்து 20 தொகுதிகளாக வெளியிட்டுள்ளோம். மதுரைத் தமிழ்ச் சங்கச் **செந்தமிழ் இதழுக்கும்,** சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நடத்திவரும் **செந்தமிழ்ச் செல்வி, குறளியம்** மற்றும் பிற இதழ்களுக்கும், மலர்களுக்கும் இவர் எழுதிய அறிவின் ஆக்கங்களைத் தொகுத்துத் தமிழ்கூறும் நல்லுலகிற்கு வழங்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளோம்.

இப்பெருமகன் வாழும் காலத்திலேயே இவர் எழுதிய எழுத்துக்கள், பேசிய பேச்சுக்கள் அனைத்தையும் தொகுத்து வெளியிடுவது என்பது தமிழ்நூல் பதிப்பு வரலாற்றில் போற்றி மகிழ்வதற்கான, அனைவரும் பின்பற்றுவதற்கான அரும்பெரும் தமிழ்ப் பணியாகும்.

இவர் தந்நலம் கருதாமல் தமிழ் நலம் காத்து வருபவர். தம்மைமுன்னிறுத்தாது தமிழை முன்னிறுத்தும் பெருந்தமிழறிஞர். தமக்கென வாழாது தமிழ்க்கென வாழ்பவர். ஒருநாளின் முழுப் பொழுதும் தமிழாகவே வாழும் தமிழ்ப் போராளி. சங்கச் சான்றோர் வரிசையில் வைத்து எண்ணத்தக்க அருந்தமிழறிஞர். தமிழ் இலக்கண - இலக்கிய மரபைக் காத்து வரும் மரபு வழி

*அறிஞர். ஆரவாரம் மிகுந்த இன்றைய சூழ்நிலையில் படாடோபம் இன்றியும், விளம்பரப் போலிமை இன்றியும், தமிழ் மொழியின் ஆழ அகலங்களை அகழ்ந்து காட்டும் தொல்தமிழறிஞர். மொழிநூல் கதிரவன் பாவாணரின் வேர்ச்சொல் ஆய்வில் அவர் காட்டிய வழியில் தம் தமிழாய்வைத் தொடர்பவர்.*

*இவர் எழுதிக் குவித்த தமிழ் அறிவுச் செல்வங்களை அவரிடமே வேண்டிப் பெற்று 20 தொகுதிகளாக* **இளங்குமரனார் தமிழ் வளம்** *எனும் தலைப்பில் பொருள்வழிப் பிரித்து வெளியிடுகிறோம். தமிழாய்வுக் களத்தில் தம் ஆய்வுப்பயணத்தைத் தொடங்கும் தமிழ் ஆய்வாளர்களுக்கும், தமிழ் உணர்வாளர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் தங்கத் தட்டில் வைத்துப் பொற் குவியலாகத் தந்துள்ளோம். எம் தமிழ் நூல் பதிப்புப் பயணத்தில், தமிழ்த்தென்றல் திரு.வி.க.வையும், தனித்தமிழியக்கத் தந்தை மறைமலையடிகளையும், மொழிநூல் கதிரவன் பாவாணரையும், தமிழ்க் மொழிக் காவலர் இலக்குவனாரையும் வழிகாட்டியாகக் கொண்டு தமிழ் நூல் பரப்பின் எல்லையைக் கண்டு காட்டும் சங்கத்தமிழ்த் சான்றோராக விளங்கும் ஐயா இளங்குமரனார் வாழும் காலத்திலேயே அவர் நூல்களை வெளியிடுவதை யாம் பெற்ற பேறாகக் கருதுகிறோம். தமிழர் இல்லம்தோறும் இருக்கத்தக்க இவ்வருந்தமிழ்ச் செல்வங்களைத் தமிழ் இளம் தலைமுறைக்கு வைப்பாகக் கொடுத்துள்ளோம்.*

**“ ஒண்டமிழ்த்தாய் சிலம்படியின்**
**முன்னேற்றம் ஒவ்வொன்றும்**
**உன்முன் னேற்றம்!**

.......... .....

**இதுதான்நீ செயத்தக்க**
**எப்பணிக்கும் முதற்பணியாம்**
**எழுக நன்றே.”**

*எனும் பாவேந்தரின் தமிழியக்க உணர்வுகளை நெஞ்சில் ஏந்தி வாழ முற்படுவோம்.*

***- பதிப்பாளர்.***

# பெறும் பேறு

**வளம்** *எங்கே இருக்கிறது?*

*வளம் எங்கேயும் இருக்கிறது! அஃது இல்லாத இடமே இல்லை!*

*வளம் எங்கும் இருப்பதை எப்படி அறியலாம்?*

*வளத்தைத் தேடும்* **உளம்** *இருந்தால், வளம் எங்கேயும் இருப்பதை அறியலாம்?*

*வளத்தின் அளவு என்ன?*

***வளத்தின் அளவும் உளத்தின் அளவேயாம்!***

*உளத்தில் வளம் இல்லையானால், உள்ள வளமும் உடையவனுக்கும் உதவாது ஊருக்கும் உலகுக்கும் உதவாது!*

*வளத்தைத் தரும் உளத்தை ஒருவர் வாய்க்கப் பெற்றால் போதும்!*

**அவ்வளம் குன்றியளவானால் என்ன?**

**குன்றத்தனைய வளமானால் என்ன?**

**தினை அளவானால் என்ன?**

**பனை அளவானால் என்ன?**

**வளம் வளமே!**

*தேனீ வளம்? தினைத்தனை அளவுப் பூவில், தேனீ கொள்ளும் தேன் எவ்வளவு இருக்கும்?*

*கோத்தும்பி கொணரும் தேன் வளம் எவ்வளவு இருக்கும்?*

*கோத்தும்பி கொணர்வதே வளம், தேனீ கொணர்வது வளமில்லை என எவராவது கூறுவாரா?*

*வளம் வளமே! அவரவர் உழைப்பு, அறிவுத்திறம், உண்மையறிவு, பட்டறிவு, கால-இட-சூழல் கொடை- ஆகியவற்றைப் பொறுத்தது அது.*

**பொருள் மட்டுமா வளம்?**

**புலமை வளமில்லையா?**

*ஊக்குதல் உதவுதல் உறுதுணையாதல் ஒன்றுதல் ஆயவை - வளமில்லையா?*

*எல்லாம் வளமே! "மல்லல் வளனே" என்பது தொல்காப்பியம். (உரி.7) உடலாலும் வளம்; உழைப்பாலும் வளம்; உணர்வாலும் வளம்; உரையாலும் வளம்; "**வளம் பட** வாழ" வேண்டாதார் எவர்? **வளம் பெற** வேண்டாதார் எவர்?*

**"வளந்தலை மயங்கிய வஞ்சி முற்றம்"**

*என்பது சிலம்பு! வளத்தின் அளவு, "**அளந்து கடை அறியாவளம்**" என்பது (25:33-34)*

**"நாடென்ப நாடா வளத்தன"**

*என்பது நாட்டின் இலக்கணம்! **எளிமை, இனிமை, இறைமை, நிறைமை** என மக்கள் வாழ்ந்த நாள் இலக்கணம்! இன்றோ,*

**நானில வளங்களையும் நாடா நாடில்லை!**

**எந்த நாடு ஏற்றுமதி செய்யவில்லை?**

**எந்த நாடு இறக்குமதி செய்யவில்லை?**

*பாலைவளத்தை நாடிச்சோலை நிற்றல் வெளிப்படை என்றால், சொல்வானேன்?*

*நாடாவளத்தில் குப்பைக்கீரை சேராதா? குறுந்தூறு சேராதா?*

***வளத்தை வழங்குதல் தான் பிறவிக் கடனே யன்றி அளவிடும் பொறுப்பு வழங்குவார்க்கு இல்லை! பெறுவார் பொறுப்பு.** ஆனால்,*

*வளம் பெற்றுப் பெற்றுப் பெருகி வாழ்ந்தவர், அவ்வளத்தைத் தமக்கு வழங்கிய மண்ணுக்கு மறித்து வழங்கிப் 'பெற்ற கடனைத் தீர்க்காமல் போனால்' கடன்காரராகவே போவது மட்டுமன்றி, பிறவி அடையாளமே இல்லாமலும் போய்விடுவார்!*

பெற்றவர் வழியாகக் கருவிலே பெற்ற திரு என்ன! கற்ற கல்வியால் பெற்ற வளம் என்ன! பட்டறிவால் - ஆழ்மன ஆய்வால் - தேடிக் கொண்ட வளங்கள் என்ன என்ன! **பிஞ்சுப் பருவ முதல் பெரும் பிரிவு வரை பெற்றவற்றை, அந்நிலைப்பருவத்தர்க்குப் பருவமழை போலப் பலப்பல வகையாலும் வழங்குதல் வாழ்வார் வாழ்வுச் சீர்மையாதல் வேண்டும்!**

புரிவு தெரிந்த நாள் முதல் புலமை பெருகிவரும் அளவுக்குத் தகத்-தகத் தொல்காப்பியர் ஆணை வழி,

**"ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்**
**ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கம்"**

என்னும் **நால்நெறிக் கடன்களையும் நிறைவேற்றல் வேண்டும்! கூற்றையும் ஆடல் கொள்ளும் கொள்கை இதுவென உணர்வார் ஓயார், ஒழியார்; சாயார்; சரிந்தும் போகார்!**

என் இளந்தைப் பருவமே, ஆசிரியப் பருவமாகிவிட்டது. அக்காலச் சூழல் அது.

பிறந்தநாள் : **30.01.1930**

ஆசிரியப் பணி ஏற்ற நாள்: **08.04.1946**

கால் சட்டை போடும் மாணவப்பருவத்தில் வேட்டி கட்டும் ஆசிரியனாகி விட்டேன்! "மூன்றாண்டு ஆசிரியப் பணி செய்தால் போதும்! புலவர் தேர்வைத் தனியாக எழுதலாம்" என்னும் வாய்ப்பு! அவ்வாய்ப்பைச் சிக்கெனப் பற்றியமையால் **1949, 1950, 1951** ஆகிய மூவாண்டுகளில் தொடர்ந்து நுழைவுத் தேர்வு, புலவர் இடைநிலைத் தேர்வு, புலவர் நிறை நிலைத் தேர்வு எனச் சிறப்புற வெற்றி வாய்ப்பு எய்தியது. உயர்பள்ளி, மேல்பள்ளி என்பவற்றிலும் பல்கலைக் கழகத் தமிழியல் ஆய்வுக் களத்திலுமாக ஏறத்தாழ **43** ஆண்டுகள் தமிழ்வாழ்வாக வாழ வாய்த்தது. தமிழ்த்தொண்டும், தமிழ்நெறித் தொண்டும் என்றும் விடுதல் அறியா விருப்பொடு செய்து கொண்டிருத்தலே இயற்கையோடு இயைந்த வாழ்வாகி விட்டது!

புலமைத் தேர்வுக்குரிய பாடத்தளவிலோ, நூல்களின் அளவிலோ என் கல்வி நின்றது இல்லை! தொல்காப்பியம் முதல் இற்றைநாள் நூல்கள் வரை இயன்ற அளவால் தமிழ்வளம் பெறுதலை நோன்பாகக் கொண்டு கற்கும் பேறுபெற்றேன்.

பேராசிரியர் சி.இலக்குவனார், மொழிஞாயிறு பாவாணர், நாவலர் ச.சோ.பாரதியார், வரலாற்றுச் செம்மல் அரசமாணிக்கனார், பைந்தமிழ்ப் பாவலர் அ.கி.பரந்தாமனார், உரைவேந்தர் ஔவை சு.துரைசாமியார், மூதறிஞர் செம்மல் வ.சுப.மாணிக்கனார், தாமரைச் செல்வர் வ.சுப்பையனார், ஈரோடு வேலா, குழித்தலை மீ.சு. இளமுருகு பொற்செல்வி, பதிப்புச் செம்மல் மெய்யப்பனார், பாரதி சோ.சாமிநாதனார், தமிழ்ப்போராளி இளவழகனார், தமிழ் மீட்புக்குத் தலைநின்ற ஆனாரூனா, பாவாணர் அறக்கட்டளையர் கோவலங்கண்ணனார், மலையக மாரியப்பனார் இன்னர் நெருக்கத் தொடர்புகள் வாய்த்தன.

இளந்தைப் பருவத்திலேயே பாவேந்தர், ஓகி சுத்தானந்த பாரதியார், கவிமணியார், கவிராச பண்டித செகவீர பாண்டியனார், அறிஞர் மு.வ. ஆயோர் அரிய காட்சியும் சின்முறைச் சந்திப்புகளும் என்னுள் பசுமை நல்கின.

தமிழ்ப் பொழிவுகளும், ஆய்வுக் கட்டுரைகளும், குடும்பச் சடங்குகளும் என் மீட்டெடுப்புப் பணிகள் ஆயின!

எம் குடும்பக் கடமைகள் எம் பணியையோ தொண்டையோ கவர்ந்து கொள்ளா வகையில் இனிய துணையும் மக்களும் அமைந்தனர்.

அதனால், காலமெல்லாம் கற்கவும் கற்பிக்கவும் நூல் படைக்கவும் வாய்த்த வாய்ப்புப் பெரிதாயிற்று.

"அன்பும் அறிவும்" என்னும் நூல் தொடங்கிச் செந்தமிழ்ச் சொற்பொருள் களஞ்சியம் எனத் தொடர்ந்து ஏறத்தாழ 400 நூல்கள் இயற்றவும் வெளியிடவும் வாய்த்தன.

குழந்தை நூல்கள், நூலக நூல்கள், ஆய்வு நூல்கள், அகராதிகள், உரைநூல்கள், பதிப்பு நூல்கள், பா நூல்கள், காப்பியங்கள், கதைகள், கட்டுரைகள், தொகுப்புகள் இலக்கண நூல்கள் எனப் பலப்பல திறத்தனவாய்ப் பால் வாய்ப் பருவத்தர் முதல் பல்கலைக் கழக ஆய்வர் வரைக்கும் பயன் கொள்ளும் வகையில் அவை அமைந்தன.

எதை எடுத்தாலும் பாடலாக்கல் ஒருகாலம்; கதையும் நாடகமும் ஆக்கல் ஒருகாலம்; பதிப்புப் பணியே ஒரு காலம்; உரை

காணலே ஒரு காலம்; படிப்படியே சொல்லாய்வே வாழ்வென ஆகிவிட்ட காலம் என அமைந்தன.

இக் கொடைகள் வழங்கியவை பாரதி பதிப்பகம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், மணி பதிப்பகம், முருகன் பதிப்பகம், வேலா பதிப்பகம், மணிவாசகர் பதிப்பகம், வேமன் பதிப்பகம், மூவேந்தர் பதிப்பகம், பாவாணர் அறக்கட்டளை, சாகித்திய அகாதெமி, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்மண் பதிப்பகம், அமிழ்தம் பதிப்பகம், வளவன் பதிப்பகம், மாணவர் பதிப்பகம், அமிழ்தமணி பதிப்பகம், திருவள்ளுவர் தவச்சாலை அறக்கட்டளை வெளியீடுகள் என விரிந்தன.

நூலுருப் பெற்று அச்சக வழியும் பதிப்பக வழியும் காணப்பெறாமலும் எதிர்பாரா மறைவுகளாலும் ஏறத்தாழச் சிறிதும் பெரிதுமாய் ஒழிந்தவை இருபதுக்கு மேல் ஆயின.

செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப்பாவை, குறள் நெறி, குறளியம், மலர்கள், ஆய்வரங்கங்கள் எனக் கட்டுரைகள் பெருகின. அச்சுக்கு வாராதவையும் ஆகின! இவை என்றும் ஒருமுகமாய்க் கிடைக்க வாய்ப்பில்லை.

எம் நூல்கள் எம்மிடமே முப்பதுக்குமேல் இல்லாமல் மறைந்தன. எழுதியன எல்லாவற்றையும் ஒருமுகமாகப் பெறப் பலர் அவாவினார். தவத்திரு **ஆத்துமானந்த அடிகளார்** (ஆருயிர்க்கு அன்பர்) **அதில் தலைப்பட்டு நின்றார். ஆயர் ஆண்டகை சூசைமாணிக்கனார் சுடரேற்றினார்.** பாரதிதாசன் பல்கலைக்கழகம் மதிப்புறு முதுமுனைவர் பட்டம் வழங்கியது. அதற்கு மகிழ்வுற்ற வகையால் பாவாணர் தமிழியக்கம் முதலாம் அமைப்புகளும், முனைவர் **திருமாறனார் முதலாம்** ஆர்வலர்களும் விழா ஒன்று எடுத்தனர். அவ்விழாத் தலைமையைத் திருத்தகு துணைவேந்தர் **பொன்னவைக்கோ** ஏற்றார். தவத்திரு ஆத்துமானந்த அடிகளார் வாழ்த்துரைத்தார். பொறிஞர் தமிழறிஞர் **பாலகங்காதரனார்** என் நூல்கள் சிலவற்றை ஒளிப்படியாக்கி உயரட்டைக் கட்டில் வழங்கி அவற்றை முழுதுறப் பெற மீளச்சிடுதல் வேண்டும் என்றார். தமிழாக்கப் பதிப்பே வாழ்வாக ஒன்றிய இளவழகனார் முழுதுற அச்சிட ஒப்பினார். அடிகளார் வெளியீட்டுப் பொறுப்பு ஏற்பதாகக் கூறினார். கிடைக்கும் நூல்கள் தவிர்த்துப் பிறவற்றையெல்லாம்

அச்சிடும் திட்டம் கொண்டு ஏறத்தாழ இருபது, இருபது தொகுதிகளாக வெளியிடுவது என உறுதிப்படுத்தப் பட்டது. அவ்வகையில் வாய்ப்பபதே, **"இளங்குமரனார் தமிழ்வளம்"** என்னும் இத் தொகை நூல்களாம்! இத் தொகையில் விடுபடும் நூல்கள் கட்டுரைகள், பாடல்கள் பல்லபல. தொகுக்க வாய்க்கா வகையில் கிட்டாவகையில் மறப்பு வகையில் விடுபாடுடையவை உள. எனினும் தொண்ணூறு விழுக்காடேனும் ஒரு முகமாகப் பெறும் பேறு வாய்க்கின்றது என்பது மகிழ்வூட்டுவதாம்!

மக்கள் வாழ்வு வளர்நிலையது! நூல்களும் வளர் நிலையவை! ஆதலால் ஒருவாழ்வுக் கொடை மட்டுமன்று ஈது; ஒருவாழ்வு பெறத் தக்க பல்பருவக் கொடையுமாம் எனல் சாலும்! இதன் அடிப்படையாம் எத்தேடலிலும் பெரிதும் தோயாமல் தமிழ்வளத் தேடலிலேயே காலமெல்லாம் சோம்பலைச் சுட்டெரித்து, இடுக்கணுக்கு இடுக்கண் ஆக்கி வாழ்ந்த வாழ்வுக் கொடையாம் இது!

இவ்வளத்தை முழுதுற எண்ணின் ஒன்று உறுதியாக வெளிப்படும். "நலவாழ்வு நல்வாழ்வு கருதாத - இயற்கை இறைமைப் பொதுமை கருதாத - எப்படைப்பும் எம்படைப்பில் இரா" என்பதேயாம். இவற்றைப் பயில்வார் பெறும் பேறும் அதுவாக அமையின் அப்பேறே யாம் **பெறும் பேறாம்.**

இவ்வளம் வெளிவர விரும்பினோர் உழைத்தோர் உதவினோர் ஆய அனைவர்க்கும் நன்றிக் கடப்பாடுடையேன்! வாழிய நலனே! வாழிய நிலனே!

"நெல்லுக்கு உமியுண்டு"

"நீருக்கு நுரையுண்டு"

"புல்லிதழ் பூவுக்கும் உண்டு"

"குறைகளைந்து நிறை பெய்து"

"கற்றல், கற்போர் கடனெனல் முந்தையர் முறை"

இன்ப அன்புடன்,

**இரா. இளங்குமரன்**

# உள்ளடக்கம்


பதிப்புரை ........ iii

பெறும் பேறு ........ vi


## நூல்


**கல்விச்செல்வம்**

1. கல்விச் செல்வம் ........ 1

முன்னுரை ........ 1

1. கல்விச் செல்வம் ........ 2
2. கல்வியே கண்கள் ........ 5
3. கல்வி ........ 8
4. எத்தகைய நூலைக் கற்க வேண்டும்? ........ 11
5. எப்படிக் கற்க வேண்டும்? ........ 14
6. அறிவின் பயன் ........ 17
7. செல்வாக்கு ........ 21
8. சொல்லும் சொல் ........ 25
9. செயல் வகை ........ 29
10. எவரோடு சேர வேண்டும்? ........ 32
11. பொருட் பயன் ........ 35
12. ஈடில்லா ஈகை ........ 39
13. முள்ளும் தைக்கக் கூடாது ........ 41
14. என் வாழ்வும் பெறுக ........ 46
15. நெஞ்சுள் இருப்பவன் ........ 52

**2. இருசொல் அழகு**

முன்னுரை ........ 57

காப்பு ........ 61

நூல் ........ 62

முச்சொல் அலங்காரம் ........ 96

### 3. தனிப்பாடல் கனிச்சுவை

1. பட்டு ..... 103
2. பொன்னாடு ..... 104
3. உண்டி ..... 105
4. திரி ..... 106
5. இலை ..... 107
6. போலி ..... 108
7. கூடு ..... 109
8. பழக்கமும் பண்பும் ..... 110
9. பேச்சும் கீச்சும் ..... 111
10. செல்வம் ..... 112
11. பெரியர் ..... 113
12. உடனே சொல்லுக ..... 114
13. வீணானவை ..... 115
14. நாற்பொருள் ..... 116
15. போகின்றவை ..... 117
16. துரும்பு ..... 118
17. கையூட்டு ..... 119
18. நாட்டுவளம் ..... 120
19. தீயவை நீங்கும் ..... 121
20. அரிதில் அரிது ..... 122
21. உழவு இனிது ..... 123
22. காட்சி ..... 124
23. ஓட்டைச்செவி ..... 125
24. தலை ..... 126
25. அரியாசனம் ..... 127
26. ஆறுமுகன் பெருமை ..... 128
27. ஏழை ..... 129
28. மருத்துவர் வீட்டில் மாறாநோய் ..... 130
29. கால் ..... 131
30. ஆவரை ..... 132
31. டுடுடுடுடு ..... 133

32. மா ........ 134
33. அவாள் ........ 135
34. கரி ........ 136
35. உமி ........ 137
36. காதவழி ........ 138
37. நராயணன் ........ 139
38. பூசுணை ........ 140
39. பணிவிடை ........ 141
40. பெற்றவர் பெருமை ........ 142
41. நல்ல வாணிகம் ........ 143
42. அலைந்தபாடு ........ 144
43. வாட்டம் ........ 145
44. அம் என்றால் ........ 146
45. கடையை மூடு ........ 147
46. சற்றே இரு ........ 148
47. சடையன் ஊர் ........ 149
48. வெளியேறு ........ 150
49. இல்லையோ இடம் ........ 151
50. அம்பு ........ 152
51. நன்றி ........ 153
52. முடி நடல் ........ 154
53. புலவன் ........ 155
54. கலிங்கம் ........ 156
55. ஓசை உண்டு ........ 157
56. இனியான் ........ 158
57. கொடார் ........ 159
58. எரியூட்டல் ........ 160
59. பார் ........ 161
60. ஏன்? ........ 162
61. முத்து ........ 163
62. பிள்ளையார் ........ 164
63. சென்னை ........ 165

64. கோடி ........ 166
65. அப்பாத்துரை ........ 167
66. மாசு ........ 168
67. செல் ........ 169
68. தத்தை ........ 170
69. கோமான் ........ 171
70. கால் ........ 172
71. தட்டல் ........ 173
72. படுக்கை ........ 174
73. கறி வை ........ 175
74. அருமை ........ 176
75. கணு ........ 177
76. பத்து உரூபா ........ 178
77. அவனா? ........ 179
78. முதலை ........ 180
79. மிளகு சாறு ........ 181
80. கண்டால் கதி ........ 182
81. கல்லாடம் ........ 183
82. பொல்லார் நட்பு ........ 184
83. கையிரண்டு ........ 185
84. தரம் ........ 186
85. முகட்டுப்பூச்சி ........ 187
86. கடையார் ........ 188
87. வினாவிடை ........ 189
88. வாழல ........ 190
89. உரை! ........ 191
90. முத்தலை ........ 192

**4. பொதுமக்கள் பேச்சில் பொய்யாமொழி**

முகம் ........ 193
1. கழிசடை ........ 195
2. கயவாளி ........ 197
3. தமுக்கு ........ 199

4. ஏழைசொல் ........ 201
5. மடையன் ........ 203
6. குறி கூறுதல் ........ 204
7. செல்வாக்கு ........ 205
8. சுடுசொல் ........ 207
9. பொருட்டு ........ 208
10. செவிலி ........ 209
11. இருக்கிறார் ........ 211
12. முளையிலே கிள்ளல் ........ 212
13. குருடு ........ 214
14. விதை நெல் ........ 216
15. பசியாற்றல் ........ 218
16. பகுத்துண்ணல் ........ 220
17. துப்புக் கெட்டவன் ........ 221
18. நிலக்கிழார் ........ 222
19. கூலி ........ 224
20. பொச்சாப்பு ........ 226
21. காடிக்குக் கேடு ........ 227
22. பூமிக்குப்பாரம் ........ 228
23. பதர் ........ 229
24. சாய்க்கடையில் பால் ........ 230
25. வேடதாரி ........ 231
26. செத்தவன் ........ 233
27. உறவாடிக் கெடுத்தல் ........ 234
28. சிரித்துக் கெடுத்தல் ........ 235
29. புதைமண் ........ 236
30. ஆற்றமாட்டாதவன் ........ 238
முடிவுரை ........ 240

# கல்விச் செல்வம்

## முன்னுரை

*செல்வம் தேட எவரும் விரும்புவர். செல்வங்களுள் பெருஞ் செல்வம் கல்விச் செல்வம். பொருட் செல்வம் இல்லாமல் முடியாது என்றாலும், அருட் செல்வம் பிறவிப் பேறு என்றாலும், கேள்விச் செல்வம் பயன்மிக்கது என்றாலும் கல்விச் செல்வமே கண்ணாக மதிக்கப்படும். கண் கொண்ட பயனே கல்வி என்பதாம்.*

*கல்லாதவர்க்குக் கண்கள் இருப்பினும் அக்கண் களில் ஒளி இருப்பினும் அவை கண்கள் எனப்படா. கல்வி ஒளியைப் பெறவே கண்ணொளி என்பது இதனால் விளங்கும்.*

*கண்ணொளி இல்லார் கூட, கல்வி என்னும் உள்ளொளியால் கண்ணொளி பெற்றாரினும் சிறந்து விளங்குதல் நாம் கண்முன்னரும் வரலாற்றிலும் கண்டறியும் செய்திகளாம்.*

*இக்கல்விச் செல்வம் இளமைப் பருவத்திலேயே ஒவ்வொருவரும் பெற வேண்டும் ஒன்றாகும். அதனைத் தக்க வகை யில் பெறுதற்கு ஆசிரியரும் பெற்றோரும் உதவுதல் வேண்டும். அவர்களுக்குத் துணையாம் வகை யால் இக் கல்விச் செல்வம் என்னும் நூலை* ***மாணவர் பதிப்பக*** *உரிமையாளர் திருவாட்டி* ***இ. வளர்மதியர்*** *வெளியிட்டுத் தன் கடமை புரிந்துள்ளார்.*

*தவம் செய்வார் தம் கருமம் (கடமை) செய்வார் என்பது வள்ளுவம். இத் தவப் பணி சிறந்தோங்குவதாக.*

*அன்புடன்,*
**இரா. இளங்குமரன்**

# 1. கல்விச் செல்வம்

கல்வி என்பது செல்வமா? ஆம்! செல்வமே தான். செல்வத்துள் எல்லாம் சிறந்த செல்வம் கல்வியே ஆகும்.

**செல்வம் என்பது எது?**

மனநிறைவைத் தருவது எதுவோ அதுவே செல்வம். 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே' என்றார் குமரகுருபரர். கல்வியைப் போல் மனநிறைவு தரும் ஒன்று இல்லவே இல்லை. ஆதலால், கல்வியே சிறந்த செல்வம் என்பது தகும்.

எந்தச் செல்வமும் எவ்வளவு வளர்ந்தாலும் பெருகினாலும் போதும் என்ற மனநிறைவு ஏற்படாது. ஆனால், கற்றது போதும் என்னும் மனநிறைவைக் கல்வி வழங்கும். இதனைக் "கற்பனவும் இனி அமையும்" என்னும் தாயுமானவர் வாக்கால் நன்கு அறியலாம்.

கல்வி உள்ளப் பொருள். என்றும் அழியாமல் உள்ள பொருள். தன்னை உடையவனையும் உள்ளவன் ஆக்கும் பொருள். உலகைப் படைத்தவன் ஒருவன் உளன் என்பதை உணர்த்தும் உண்மைப் பொருள் ஆதலால்,

"கைப்பொருள் தன்னின் மெய்ப் பொருள் கல்வி"

என்றார் ஔவையார்.

வெள்ளம் ஆடு மாடுகளை அடித்துச் செல்லும்; நிலபுலங் களிலுள்ள மண்ணையும் விளைவையும் வாரிக்கொண்டு ஓடும்; பள்ளத்தை மேடாக்கும்; மேட்டைப் பள்ளமாக்கும். ஆனால், எந்த வெள்ளத் தாலும் கல்விச் செல்வம் அடித்துக் கொண்டு போகப் படாது.

தன்னை நெருங்கிய பொருளை எல்லாம் சுட்டெரிக்க வல்லது தீ. அத் தீயானும் சுட்டெரிக்க முடியாதது கல்வி.

*பொருளுக்கு வரி வாங்குவதுபோல வரி வாங்க ஆள்பவர்கள் நினைத்தாலும் கொள்ள முடியாதது கல்வி!*

*எந்தச் செல்வத்தை அள்ளிக் கொடுத்தாலும் கொடுத்தவரிடத்து அப் பொருள் குறையவே செய்யும். ஆனால், கல்விச் செல்வம் மட்டுமே கொடுத்தவர்க்குக் குறையாதது மட்டுமன்றி மேலும் பெருகவும் செய்யும்.*

*"கள்வர் பெரியரா? காப்பார் பெரியரா?" என்பது பழமொழி. எவ்வளவு கட்டுக்காவல் இருந்தாலும் அவற்றைக் கடந்து களவாடிக் கொண்டுபோகக் கூடியவர்களும் உலகில் உளர். எத்தகைய திறமான களவாளர்களையும் கையும் களவுமாகப் பிடித்துவிடக் கூடிய காவல் தேர்ச்சியாளர்களும் உளர். ஆனால், எத்தகைய கள்வர்களாலும் களவாட முடியாதது கல்விச் செல்வம். எத்தகையவர்களாலும் எளிதாகக் காக்கக் கூடியது கல்விச் செல்வம். ஆம்! கள்வர்க்கு மிக அரியது; காப்பவர்க்கு மிக எளியது.*

*இக்கருத்துக்களை ஒருங்கே விளக்குகின்றது ஒரு பாட்டு. அது வருமாறு :*

"வெள்ளத்தே போகாது வெந்தழலால்
　　வேகாது வேந்த ராலும்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும்
　　நிறைவொழியக் குறைப டாது
கள்ளர்க்கோ மிகஅரிது காவலோ
　　மிகஎளிது கல்வி என்னும்
உள்ளத்தே பொருளிருக்க உலகெல்லாம்
　　பொருள்தேடி உழல்வ தேனோ"

*நாடாளும் காவலன் ஒருவன் புகழும், அவன் நாட்டெல்லையளவில் அமையும். ஆனால், ஏடாளும் நாவலன் புகழோ நாட்டெல்லை கடந்து உலகெல்லையாக விரியும்! பொருட்செல்வத்தினும் கல்விச் செல்வம் சீரியது என்பதை இது வெளிப்படுத்துமல்லவா!*

*நாடாள்பவனாக இருப்பவன், வயதால் முதிர்ந்த ஒருவனை அழைத்து நல்லுரை கேட்பது இல்லை; கல்வியால் சிறந்த ஒருவனையே கனிந்து வரவேற்று அவன் காட்டும் வழியில்*

செல்வான். ஆதலால், ஆண்டு முதுமையினும் அறிவின் முதிர்வே மதிக்கப்படும் என்பதும் வெளிப்படும்.

இத்தகையவற்றை எல்லாம் நன்கு அறிந்ததால் தான் ஆட்சிச் செல்வமும் அறிவுச் செல்வமும் ஒருங்கே கொண்டு விளங்கிய அதிவீரராம பாண்டியன்,

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்றும்,

"அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும்"

என்றும் கூறினான். அவனே கல்வி யறிவில்லாத ஒருவனைப் பெறுவதினும் அவன் பெற்றோர்க்குப் பிள்ளைப் பேறே வாய்க்காது போயிருந்தால்கூடப் பெருமையாம் என்றும் இடித்துக் கூறினான்! கல்விச் செல்வத்தைப் பெறாதவனை எவ்வளவு வெறுத்தான் அவ்வேந்தன் என்பது இதனால் நன்கு விளங்கும்; அன்றியும் கல்விச் செல்வத்தின் சிறப்பும் விளங்காமல் போகாது.

# 2. கல்வியே கண்கள்

*எண்சான் உடல் உடையவன் மனிதன். அவன் எண்சாண் உடலுக்கு முதன்மை வாய்ந்தது ஒருசாண் அளவுள்ள தலை. அவ்வொரு சாண் தலையிலும் ஒரு விரல் அளவுடைய கண்களே மிக முதன்மையானவை. ஆதலால்தான் கல்வியின் சிறப்பினைக் காட்ட வந்த சான்றோர்கள் அதனைக் கண்களுக்கு உவமையாகக் கூறினர்.*

"எண்ணும் எழுத்தும் கணெணனத் தகும்"

*என்பது ஔவையார் மொழி.*

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

*என்பது திருவள்ளுவர் திருவாக்கு.*

"கற்றறி வில்லா மாந்தர்
கண்கெட்ட மாடே யாவர்"

*என்பது பிற்காலப் புலவர் ஒருவர் வாக்கு.*

*கண்போன்றது கல்வி! ஆயினும், கண்ணினும் சிறப்புடையது! கண்காணாத இடத்தையும், காண முடியாத ஒன்றையும் காணும் அகக்கண் கல்வியாகும். அதனால், 'உள்ளொளி' என்றும், 'ஞானக்கண்' என்றும் கூறினர்.*

*கற்றவன் கண்களே கண்கள்! மற்றவர் கண்கள் கண்களல்ல! புண்கள்! ஏன்?*

*கற்றவர் அகக்கண் உடையவரல்லவா! அகக்கண் என்பது அருட்கண் ஆகும்! அக்கண் பிறவுயிர்க்குத் துன்பம் தராது; துன்பப்படும் ஒருயிரைப் பார்க்கப் பொறுக்காது. தான்பட்ட துயர்போலத் துடிக்கும். அத் துடிப்பு ஏற்படா விட்டால் கண்ணில் இருந்து இரக்கக் கண்ணீர் வழியாது; நெஞ்சம் நெகிழாது; உதவுவதற்கு உடல் ஓடி ஆடாது! அகக்கண் பெறாத புறக்கண்ணால் ஆகும் பயன் என்ன?*

ஓர் உயிர் படும் துயரைக் கண்டு அருட் கண் ணாகிய அகக்கண்ணுடைய உயிர் ஒன்றே கண்ணீர் வடிக்குமே ஒழியக், கண்ணாடி நீர் வடிக்குமா? கண்ணீர் வடிக்காத கண்ணுக்கும் கண்ணாடிக்கும், எத்தகைய வேற்றுமையும் இல்லை. ஆதலால், கல்விக் கண்ணின் சிறப்பு நன்கு புலனாகும். கண்ணின் இயல்பு கொள்ளாத கண், கண்ணாகுமா? புண் என்பதால் குற்றம் உண்டா?

புண் என்ன செய்யும்? உடலுக்கும் வலியைத் தரும்; உள்ளத்திற்கும் வலியைத் தரும்! அதே வலியைத் தரும் கண்ணை அதனினும் உயிருக்கும் கேடு தரும் கண்ணைப் புண்ணென்று கூறுவதால் குற்றமில்லை.

கல்லாத ஒருவனிடம் ஒரு கடிதத்தைத் தந்தால் என்ன செய்வான்? "நான் குருடன்; என்ன எழுதி யிருக்கிறது என்பது தெரியாது" என்பான். அவ் வாறானால் கல்விக்கண் என்பதை அவன் அறிந்திருக்கத்தானே செய்கின்றான்.

இன்னும் ஒருவகையாலும் அறியலாம். அந்தகக் கவி வீரராகவர் என்றொரு புலவர் இருந்தார். அவர் தம் நெஞ்சினையே ஏடாகக் கொண்டு படித்தவர். "ஏடா யிரங்கோடி எழுதாது தன் மனத்து எழுதிப் படித்த விரகன்" என்று தம்மை அவரே கூறுகின்றார். அவர் எண்ணற்ற பாடல்கள் பாடினார். இலங்கை நாட்டுக்கும் சென்று அந்நாளில் அங்கு ஆட்சி செலுத்திய பரராசசிங்கன் என்னும் அரசனையும் பாடினார்.

கண்ணொளி இழந்த புலவர் வீரராகவரைக் காண மன்னன் பரராசன் முதலாவது விரும்பவில்லை. மன்னர்களிடம் பார்வை இலாதவரைப் பார்க்கக் கூடாது என ஒரு வழக்கம் இருந்தது. ஆனாலும், வீர ராகவர் திறமையை அறிந்து அவரை அவைக்கு அழைக்க இசைந்தான். அவர் அரண்மனைக்குள் வரும் போது அவர் திறமையை ஆராய விரும்பி, வில்லை எடுத்துக் கொண்டு நின்றான் வேந்தன்.

"இலங்கைக் கோமானாம் இராவணன் இல்லை; ஏழு மராமரங்களும் இல்லை; மாரீசனாகிய மானும் இல்லை; அவ்வாறாகவும் நீ வில்லை எடுத்துக் கொண்டு நிற்பது எதற்காக? எமக்குக் கூறுவாயாக" என்னும் பொருளமைய ஒரு பாடலைப் பாடினார்!

*அரசன் வியப்பும் திகைப்பும் அடைந்தான்.*

*கண்ணொளி அற்ற அப்புலவர் எப்படி இத் திறமை பெற்றார்?*

*எண்ணும் எழுத்தும் கண்களாக இருந்தன; ஒளியூட்டின; அதனால், உயர்ந்த அறிவுத் திறம் பெற்றுச் சிறந்தனர்.*

*அந்தகக்கவி வீரராகவர் மட்டுமா சான்றாக இருந்தார்?*

*மாம்பழக்கவிச் சிங்க நாவலர் என்பவர் கண்ணொளி இழந்தவர்! இரட்டைப் புலவர்களுள் ஒருவரும் கண்ணொளி இல்லாதவர்! இவர்களை யெல்லாம் வெற்றி கொள்ளும் திறம் பெற்றவர் கெலன் கெல்லர் அம்மையார்! அவர்க்குக் கண்ணொளி இல்லை; காது கேளாது; வாய் பேசார்! ஆனாலும், அவ்வம்மையார் உலகப் பேரறிஞர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார் என்பது எவ்வளவு வியப்பான செய்தி!*

*அகக்கண்ணால் பார்க்கும் திறம் வாய்த்தவர்களுக்கு முகக்கண்ணால் பார்க்க முடியாமல் போனால் என்ன குறைந்து போகும்? இதனால், அல்லவா,*

> "முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
> அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்."

*என்றார் திருமூலர்! அகக்கண் திறக்கும் கல்வியின் சிறப்புக்கு அளவும் உண்டோ?*

# 3. கல்வி

கல்வி என்பது கல்லிப் பெறுவது என்பதாம். கல்லுதல் என்பது தோண்டுதலாகும். ஊற்றைத் தோண்டி நீரைப் பெறுவதுபோல், பாறையைத் தோண்டித் தங்கப் பாளத்தைப் பெறுவதுபோல், அரிதில் அகழ்ந்து தேடி வயிர மணியைக் காண்பது போல் ஆய்ந்து அறிந்து தேடிக் கொள்வதே கல்வி யாகும்.

கல்லுதல் தோண்டுதல் என்னும் பொருள் தருமா? தரும். "கொழுங் கொடியில் விழுந்த வள்ளிக் கிழங்கு கல்லி எடுப்போம்" என்பது குற்றாலக் குறவஞ்சி. "மலையைக் கல்லி எலியைப் பிடித்தல்" என்பது பழமொழி. இவற்றால் கல்லுதல் என்பதற்குத் தோண்டுதல் என்னும் பொருள் உண்மை புலப்படும்.

இதே தோண்டுதல் பொருளில் உவமையால் கல்வியை விளக்குகின்றார் திருவள்ளுவர்.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

என்பது அவர் வாக்கு.

"மணலைத் தோண்டிய அளவிற்கே ஊற்றில் நீர் ஊறும். அதுபோல் முயன்று கற்ற அளவுக்கே முதிர்ந்த அறிவு உண்டாகும்" என்பது இதன் பொருள்.

நீர் எங்கே இருக்கிறது? ஊற்றிலேயே இருக்கிறது. நீர் ஏன் வெளிப்படவில்லை? மணல் மூடிக் கிடப்பதால் ஊற்றில் நீர் வெளிப்பட வில்லை; மணலைத் தோண்டியபின் மறைந்திருந்த ஊற்று வெளிப்பட்டது. ஊற்று நீர்க்குப் பொருந்திய இத்தன்மை கல்வி அறிவுக்கும் பொருந்த வேண்டுமல்லவா?

அறிவு ஒவ்வொருவர் மூளையிலும் பதிந்து கிடக்கவே செய்கிறது. ஆனால், மாயை என்னும் திரை அவ்வறிவு

வெளிப்படாது தடை செய்து வைத்திருக்கிறது. கல்வி என்னும் விளக்கை ஏற்றி வைத்தால் அத்திரை அகல்கிறது. அங்கே மறைந்து கிடந்த அறிவு வெளிப்பட்டுச் செயலாற்றுகின்றது. இயல்பாக ஓரிடத்து மறைந்து இருந்த நீரையே ஊற்று வெளிக் கொண்டு வந்தாற்போல, இயல்பாக ஒருவரிடத்து அமைந்து இருக்கும் அறிவையே கல்வி வெளிப்படுத்துகின்றது. இக் கருத்துக்களை யெல்லாம் புலப்படுத்து மாறு வள்ளுவர் "தொட்டனைத் தூறும் மணற்கேணி" என்னுங் குறளை இயற்றியுள்ளார்.

இனிக் கல்வி மேலோட்டமாக அமையாது என்பது அதன் பெயராலேயே விளங்கும். நீரில் எழுதிய எழுத்து - நீர்ப் பூச்சிகள் செல்வதால் நிலத்தில் அமையும் கோடுகள் - நிலைக்குமா? ஆனால், கல்லில் எழுதிய எழுத்து கல்லுள்ள அளவும் நிலைக் கின்றது அல்லவா! நம் முன்னோர் கட்டி வைத்த திருக்கோயில் சுற்றுகளில் உள்ள கல்வெட்டுகளைப் பாருங்கள்! எத்தனை ஆயிரம் ஆண்டுகளாக நிலைத்து நின்று வரலாற்றுப் பெட்டகங் களாகத் திகழ்கின்றன. அவ்வாறு நிலைக்கத் தக்கவாறு கற்பதே கல்வியாம்.

அழுத்தமான கல்வி அமைய வேண்டும் என்றே, "ஓதுவது ஒழியேல்" என்றார் ஔவையார். "ஓதி மறப்போன் ஓட்டைக் குடமே" என்றார் இன்னொருவர். ஓதினால் மட்டும் போதுமா? "நூறு நாள் ஓதி ஆறு நாள் விடத் தீரும்" என்பதல்லவா பழமொழி! அதனால், "பாடம் ஏறினும் ஏடது கைவிடேல்" என்றனர். இதனையே சற்று மாற்றியும் கூறினர். "பாடை ஏறினும் ஏடது கைவிடேல்" என்பது அது.

கற்பன கற்று - அழுத்தமாகக் கற்று - மீண்டும் மீண்டும் நினைத்தும் சொல்லியும் ஒழியாமல் கற்று வருவது கல்வியாகும். இதனையே, "சாவாமல் கற்பதே கல்வி" என்று நம் முன்னோர் கூறினர். நாம் கற்ற கல்வி சாவாததாக இருக்குமானால், அதனைக் கற்ற நம்மைச் சாவாத நிலைமையில் வைக்குமல்லவா! இதனால் தான் வள்ளலார், "சாவாக் கல்வி" பற்றிப் பன்முறை கூறினார்.

சாவாக் கல்வி எத்தகையது? அழியா இறைவனைப் போன்றது. ஆதலால், 'அறிவே கடவுள்' என்று ஆன்றோர் கூறினர். அறிவே ஆண்டவன் ஆவது எப்படி?

*அறிவு நுண்ணியது; விரிந்தது; ஆழமானது! அறிவின் முத்தன்மைகள் இவை. இவற்றை, "நுண் மாண் நுழைபுலம்" என்றார் திருவள்ளுவர்.*

*ஆண்டவனும் இம் முத்தன்மைகளைக் கொண்டவன் என்பது ஆளுடைய அடிகள் வாக்கு. இறைவனை, "ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே" என்றுபாடு கின்றார் அவர்.*

*அறிவின் இலக்கணமும் ஆண்டவன் இலக்கணமும் ஒன்றானால், 'அறிவே கடவுள்' என்பது பொருள் பொதிந்த மொழியல்லவா! கல்வியைக் கடவுள் ஆக்கிய கோலந்தானே "கலைமகள்!" இறைவனுக்கும் மறை யோதிய திருக்கோலந் தானே குருபரன்! கல்விக்கும் கடவுளுக்கும் தொடர்பு இருப்பதால் தானே,*

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

*என்றார் திருவள்ளுவர்.*

# 4. எத்தகைய நூலைக் கற்க வேண்டும்?

"உன் நண்பன் யாவன் என்று சொல்; உன் தன்மை இன்ன தென்று சொல்லி விடுகின்றேன்" என்பது ஒரு பழமொழியின் பொருள். இதைப் போலவே சொல்லலாம், "நீ படிக்கும் நூல் எதுவென்று கூறு; உன் தன்மை இன்னதென்று சொல்லி விடுகின்றேன்" என்று! இதனால், ஒருவன் கற்கும் நூல் அவன் மனப்பான்மையை வெளிப்படுத்தும் என்பது தெளிவாம்.

***நூல் என்பது என்ன?***

ஒரு மரத்தை நேராக அறுக்க வேண்டும்; ஒரு கல்லைச் செம்மையாக உடைக்க வேண்டும்; ஓரிடத்தைச் சரியான அளவில் தோண்ட வேண்டும்; ஒரு சுவரை ஒழுங்காக வைக்க வேண்டும்- இத்தகைய வேலைகளுக்கு எதைப் பயன்படுத்துகின்றனர்?

காவியோ, கரியோ, சுண்ணாம்போ குழைத்து நூலில் தோய்த்து நேராக வரி அடிக்கின்றனர்; இரு முளைகள் நட்டு நூலைக் கட்டுகின்றனர்; தூக்குக் குண்டுகளைப் பயன்படுத்து கின்றனர்; பஞ்சு நூல் மரத்தையும், கல்லையும் மற்றவற்றையும் நேராக்கப் பயன்படுகின்றது. செம்மையாக்கப் பயன்படுகின்றது. ஆதலால், ஒருவன் மனத்தைச் செம்மைப்படுத்துவது எதுவோ அதுவே உண்மையான நூலாகும்; மற்றவை நூலென்று கருதப் பெற மாட்டா.

சந்தையில் போய்க் காய்களை வாங்குகிறோம்; கண்ட கண்ட காய்களையெல்லாம் வாங்கி வந்து விடுகின்றோமா? நல்ல காய்களாக - நம் உடல் நலத்திற்கு ஏற்ற காய்களாக வாடி வதங்கிக் கெட்டுப் போகாதனவாகப் பார்த்தே வாங்குகின்றோம். பழம் வாங்கினாலும் இப்படியே பார்த்து வாங்குகின்றோம்.

விதைப்பதற்கு விதை தேர்ந்தெடுத்தலிலும் நல்ல பொறுக்கு மணியான விதையையே தேர்ந்தெடுக்கின்றோம். இவற்றைப் போலவே உயிர்க்கு நலம் பயக்கும் நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்றல் இன்றியமையாததாகும். இதனால்தான் 'கற்க' என்று

கூறிய திருவள்ளுவர், 'கசடறக் கற்க' என்றார். 'கசடறக் கற்க' என்று கூறிய திருவள்ளுவர், 'கற்பவை கசடறக் கற்க' என்று தெளிவாக விளக்கிக் கூறினார். ஆதலால், கற்கத் தக்க நூல் களையே நாம் கற்றல் வேண்டும்.

நாம் கற்கத் தக்கவை எனத் தேர்ந்தெடுக்கும் நூல்களை மூன்று வகைப்படுத்தலாம். அவை பண்படுத்தும் நூல்கள், அறிவூட்டும் நூல்கள், இன்புறுத்தும் நூல்கள் என்பன.

ஒரு நிலத்தில் விதையைப்போடு முன்னரோ நடு முன்னரோ அதனைப் பண்படுத்தி வைத்திருப்பர். பண்படுத்தப்படாத நிலத்தில் விதைக்கப் பெற்ற விதைகள் முளைக்கா; முளைத்தாலும் வளமுற வளரா; வளர்ந் தாலும் பயன்தரா. ஆகவே, நிலம் பயன் தரவேண்டுமானால் அதனைப் பண்படுத்துதல் இன்றியமை யாதது. அதுபோல் வாழ்வு பயன்பட வேண்டுமானால் அது பண்பட்டதாக அமைதல் வேண்டும். அவ்வாறு பண் படுத்துவதற்கு ஏற்ற நூல்கள், அறநெறி நூல்கள், இலக்கிய நூல்கள், சான்றோர் வரலாற்று நூல்கள் என்பவையாம்.

நமக்கு முன்னே வாழ்ந்த பெருமக்கள் தம் பட்டறி வாலும், படிப்பறிவாலும் கண்டறிந்த கருத்துக் கரு வூலங்களே அறநெறி நூல்களும், இலக்கிய நூல்களுமாகும். அவர்கள் வாழ்ந்து காட்டி அவர்கள் வழியில் நம்மை இட்டுச் செல்லுதற்கு அமைந்த நூல்களே வரலாற்று நூல்கள். ஆகலின், இவை நம்மைப் பண் படுத்திப் பிறவிப் பயனை நாம் அடைவதற்கு வழி செய்வன. நாம் அறியாமலே நம்மை வயப்படுத்தி ஆட்கொண்டு மேல் நிலைக்குத் தூக்கிச் செல்வன. ஆதலால், அத்தகைய நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கற்றல் நன்றாம்.

ஒருவர் எந்தத் துறையில் ஈடுபட்டு இருக்கின்றாரோ, அந்தத் துறையில் மேலும் மேலும் அறிவை வளர்த்துத் திறம் பெறுவதற்காகக் கற்கும் நூல்கள் அறிவு நூல்கள் ஆகும். கணக்கில் ஈடுபாடுடைய ஒருவர் கணக்குத் துறையில் புதிது புதிதாக வெளிவரும் நூல்களையும் கட்டுரைகளையும் கற்றல் வேண்டும். அவ்வாறு கற்பது அத்துறையில் அவரை மேம்பாடு அடையச் செய்யும். அவர் அத்துறையை மேம்படுத்தி வளர்ப்ப தற்கும் துணை செய்யும். இவ்வாறே வரலாறு, அறிவியல் முதலிய துறையில் ஈடுபட்டுள்ளவர்களும் அவ்வத்துறை நூல் களைக் கற்றால் நலம் பெருகும்.

இனி, இன்புறுத்தும் நூல்கள் என்பன நல்ல பொழுது போக்குக்குப் பயன்படுவதுடன், மகிழ்ச்சி யூட்டுவனவாகவும் இருப்பன. சிறு கதைகள், தொடர் கதைகள் ஆகியன இவ் வகையைச் சேர்ந்தவை. இக் கதைகளிலும் இலக்கியம் என்று பாராட்டக் கூடிய பெருமையுடையவையும் உண்டு. அத்தகையவை இன்பத்தைத் தருவதோடு பண்படுத்த வல்லனவாகவும் அமையும்.

ஆனால், கையால் தொடக் கூடாத அளவு இழிந்தவையும் நூல் என்னும் பெயருடன் உலா வருவதுண்டு. அவை வேண்டாத உணர்ச்சிகளைத் தூண்டியும் கண்ணால் காணவும் கூடாத படங் களைப் போட்டு வயப்படுத்தியும் பணம் ஈட்டுவது ஒன்றே குறியாக வெளிவரும் கீழ்த்தர நூல்களாகும்; நூல் என்ற பெயர்க்கே இழுக்குத் தேடித் தருபவையாகும்.

ஒரு தாய் தன் மக்களுக்குச் சுவையான உணவுகளைப் படைக்க விரும்பி அன்பைக் குழைத்துத் தன் கைத்திறனைக் காட்டி ஆக்கிப் படைப்பாள். சுவையாக இருக்க வேண்டும் என்பதில் அவள் கருத்து இருந்தால் கூட உணவு உடல் நலந்தருவதாகவும், ஊட்ட மிக்க தாகவும் இருக்க வேண்டும் என்பதில் மிகுந்த கருத்துச் செலுத்துவாள். சுவையைக் கருதி உடல்நலத்திற்குக் கேடு செய்யும் எவ்வுணவையும் எப் பண்டத்தையும் அவள் ஆக்குவதும் இல்லை; படைப்பதுவும் இல்லை.

இத்தகைய தாய்மைத் தன்மையமைந்த எழுத் தாளர்களின் படைப்பே நலமிக்க படைப்பாகும். இத் தன்மை இல்லாமல் உடலுக்கு எவ்வளவு கேடானதாக இருந்தாலும் நாவுக்கு மட்டும் சுவையாக அமைத்துப் பணம் திரட்டுவதையே குறியாகக் கொண்ட கீழ்த்தரமான உணவு விடுதிக்காரனைக் போன்ற எழுத்தாளர்களின் படைப்பு கற்கத் தகாத நூல்கள் ஆகும்.

இன்னும் சொல்வதானால் விடுதிக்காரனுடைய கேட்டினும் மிகக் கேடானது கீழ்த்தரமான உணர்வுகளைத் தூண்டும் எழுத்தாளன் படைப்பு. ஏனெனில், தீய உணவு உடல் நலத்தை மட்டும் கெடுக்கும்; தீய நூலோ உடலையும் உள்ளத்தையும் உயிரையும் ஏன் உலகையும் கெடுக்கும் கொடுமை வாய்ந்தது. ஆதலால், 'கற்பவை கற்க' என்பது பொன்னே போல் போற்றிக் காக்கத்தக்க மொழியாகும்; கற்பவர் அனைவரும் மேற் கொள்ளத்தக்க கடமையுடையதும் ஆகும்.

## 5. எப்படிக் கற்க வேண்டும்?

*எத்தகைய நூல்களைக் கற்க வேண்டும் என்பதை அறிந்தோம். அவற்றை எப்படிக் கற்க வேண்டும் என்பதையும் அறிய வேண்டும்.*

*நீர் வேட்கை மிகுந்தபோது நீர் பருகுவதற்கு ஆவலுறுவது போலவும், பசி வாட்டும் போது உண்ணு வதற்கு ஆவலுறுவது போலவும், கோடை வெயில் கொடுமையாக வாட்டும் போது குளிர் நிழலை விரும்புவது போலவும் கற்பதில் ஆர்வம் செலுத்துதல் வேண்டும். விரும்பிச் செய்வதாயின் எத்தகைய கடினமான செயலும் எளிதானதாகும். விருப்பில்லா மல் செய்யும் எந்த எளிய செயலும் கூட மிகக் கடினமானதாகிவிடும்! விளையாட்டு, படக்காட்சி இவற்றில் உள்ள ஈடுபாடு கல்வியிலும் ஏற்பட வேண்டும். ஏற்பட்டு விட்டால் மிக இனிய நிலையில் நிறைந்த திறமை பெற்று விடலாம்.*

*"புல்லைக் காட்டிக்கொண்டு போனால் அவனைப் பின்பற்றியோடும் மாட்டைப்போல நல்லறிவைத் தேடி நான் ஓடுகின்றேன்" என்று சொல்லும் அறிஞர் சாக்கரடீசு உரையில் அவர் அறிவு ஆவல் புலப்படவில்லையா?*

*"என்னை நடுத்தெருவில் நிறுத்தி வாரந் தோறும் நாற்பது கசையடிகள் தரப்பெறும்; அதனைப் பெற்றால் தான் நீ படிக்க அனுமதிக்கப் படுவாய் எனும் கட்டளையிட்டால் கூட கசையடிக்கு அஞ்சிக் கற்பதை விடமாட்டேன்" என்றாரே காரல் மார்க்கசு! அவர் மொழியில் கல்வியின் தணியாக் காதல் புலப்பட வில்லையா?*

*"தேன் படிக்கும் அமுதாம் உன் திருப்பாட்டை நாள் தோறும், நான் படிக்கும் போதென்னை நானறியேன் நாவொன்றோ, ஊன் படிக்கும் உளம் படிக்கும் உயிர் படிக்கும் உயிர்க்குயிரும், தான் படிக்கும் அனுபவங்காண் தனிக்கருணைப் பெருந்தகையே" என்று ஆளுடைய நம்பிகள் அருள் மாலையிலும்,*

"வான்கலந்த மாணிக்க
வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து
செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து
உவட்டாமல் இனிப்பதுவே"

என்று ஆளுடைய அடிகள் அருள் மாலையிலும் வள்ளலார் பாடிய வாய் மொழிகள் அவர்தம் தெய்வ நூற் காதலைப் புலப்படுத்தவில்லையா? ஆதலால், "ஆர்வமே அரை வெற்றி" என்பதை உணர்ந்து ஆவலோடு கற்பவர் அழுத்தமாகக் கற்று முழுநிறை கல்வி பெற்றவராவார்.

"நீரும் பாலும் கலந்து இருந்தாலும் நீரை விலக்கிப் பாலை மட்டும் பருகுந் திறம் படைத்திருந்தது அன்னம் என்ற பறவை" என நூல்கள் கூறுகின்றன. கால வெள்ளத்தில் அழிந்துபோன பறவை அது. ஆயினும், கருத்து வெள்ளத்தில் அழியாமல் நிலை பெற்று விட்டது. அதன் இயல்பு கற்க விரும்புவார்க்கு நல்ல எடுத்துக்காட்டாம்.

பதரை விலக்கி மணியைக் கொள்கிறோம்; கரும்பில் சக்கையை ஒதுக்கிச் சாற்றைக் கொள்கிறோம்; நெய்யை வடிகட்டிக் கசடு நீக்கி நறு விதைக் கொள்ளுகிறோம். இவற்றைப் போலவே நாம் கற்கும் நூலில் சாரமானவற்றைக் கொண்டு சாரமற்றவற்றை விலக்கி விடுதல் வேண்டும். வேண்டாதவற்றையெல்லாம் மூளையில் திணித்துக் கொண்டிருந்தால் வேண்டிய செய்திக்கு வாய்ப்புக் குறைந்து போகும். ஒரு பையில் போட வேண்டாப் பொருள்களைப் போட்டுக் கொண்டே வந்தால், போடவேண்டிய பொருளுக்கு இடமில்லாமல் போய்விடுமல்லவா!

காந்தியடிகள் கப்பலில் போய்க் கொண்டிருந்தார். ஓர் ஆங்கில நண்பர் தாம் எழுதிய கட்டுரை ஒன்றை அடிகளிடம் தந்து, "இதில் உள்ள சாரமான செய்தியைத் தாங்கள் கூற வேண்டும்" என்றார். அக்கட்டுரையை வாங்கிப் படித்த அடிகள் பின்னே அந்நண்பரிடம் ஒரு குண்டூசியைத் தந்தார். ஏன் என்பது அந் நண்பருக்குப் புரியவில்லை. "தங்கள் கட்டுரையில் சாரமாக

இருந்தது இக் குண்டூசியே. இதனைப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்று பாதுகாத்து வைத்தேன்" என்றார் அடிகள். சாரம் சாரமற்றது என்பதை அடிகள் எவ்வளவு எளிமையாக விளக்கினார். இதனை நாம் உணர்ந்து கற்க வேண்டும்.

இன்றியமையாத நூல்களைப் பன்முறை கற்றல் வேண்டும். அவ்வாறு கற்றால்தான் மறவா நிலை அமையும். அன்றியும் கற்றறிந்த செய்தியைப் பிறரிடம் கூறுவதும் மனத்தில் அழுத்தமாகப் பதிவதற்கு வாய்ப்பாகும். இதனால்தான் பவணந்தி முனிவர் என்பார், "ஆசிரியரிடம் பன்முறை பாடம் கேட்டால் கூட, கால் பங்கு அறிவே பெறமுடியும்; தன்னைப் போல் பயிலும் மாணவருடன் அப்பாடம் பற்றி உரையாடுதலால் ஒருகால் பங்கு பெறமுடியும். எஞ்சிய அரைப்பங்கும் பிறரிடம் செவ்வையாக எடுத்துரைப்ப தால் தான் அமையும்" என்கிறார். இந்நெறியைக் கற்பார் மேற் கொள்ளுதல் சிறப்பாம்.

கற்கும் நூல்களைப் பொருளுணர்ந்து கற்றல் வேண்டும். பொருளுணராமல் கற்கும் கல்வி உள்ளத்தில் தங்காது; தங்கினாலும் நிலைக்காது. மனப்பாடம் செய்தது போலவே மறந்தும் போய்விடும். நாம் உண்ணும் உணவு நம் உடலோடு சேராமல் அப்படியே வாந்தியாகவோ, கழிச்சலாகவோ போய் விட்டால் அந்த உணவால் பயனுண்டா? உணவு குடலில் அரைக்கப் பெற்று அதன் ஊட்டப் பொருள் குருதி யோடு சேர்ந்தால்தானே உடலுக்கும் உயிருக்கும் பயனாகும். அவ்வாறு பயன் செய்யாத உணவால் நன்மை யில்லாதது போலத் தன் உள்ளத்தோடு தங்காத - நம் உடைமைப் பொருள் ஆகாத - கல்வியாலும் பயனில்லை. இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு கற்பவர் நலமெய்துதல் உறுதியாம்.

# 6. அறிவின் பயன்

*கண்ணால் கண்டு அறிகிறோம்; காதால் கேட்டு அறிகிறோம்; மூக்கால் முகர்ந்து அறிகிறோம்; நாவால் சுவைத்து அறிகிறோம்; உடலால் உற்று அல்லது தொட்டு அறிகிறோம்; இவை ஐயறிவு எனப்படும். இவற்றின் விஞ்சிய ஓர் அறிவே ஆறாம் அறிவு எனப்படும் பகுத்தறிவாகும். அதை மன அறிவு என்றும் கூறுவர். மனிதர் ஆறாம் அறிவாம் பகுத்தறிவு உடைய வர் என்பது தனிப்பெருஞ் சிறப்பாகும். அதனால் தான், "அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்பர்.*

*நல்லது கெட்டது, இனியது இன்னாதது என்பவற்றைப் பகுத்து அறிவது பகுத்தறிவு.செய்யத்தக்கது தகாதது என்பவற்றைப் பகுத்தறிவதும் பகுத்தறிவே. அவ்வறிவு பெறாதவர் மனிதராக இருந்தாலும் மனித ராகக் கருதப் பெறார். அவரை அறிவுக் குறையராக இகழ்வர்.*

*நாம் ஒன்றைச் சொல்லியபடி ஒருவன் கேட்கவில்லை என்றால் "அறிவு இல்லையா?" என்று சினந்து கேட்கிறோம். நம்மேல் ஒருவன் வந்து மோதிவிட்டால் "அறிவில்லையா?" என்கிறோம். ஏன்? அவன் பகுத்தறிவுடன் செயல் படவில்லை என்ற எண்ணத்தால்தான் அப்படிக் கேட்கிறோம். எத்துணை சொன்னாலும் கேட்காமல் தன் போக்கில் போய்க்கொண்டு இருப்பவனை 'முட்டாள்' என்கிறோம். அவன் தானே முட்டித் தெரிந்து கொள்வானே அன்றிச் சொல்லித் தெரியான்; முட்டியும் பட்டும் தெரிந்தாலும் தெரியான்; அவனே முட்டாள். முட்டாள் என்பதும் பகுத்தறி வற்றவன் என்பதையே குறிக்கும். இக் குறிப்புக்களால் அறிவின் பயன் என்ன என்பது அறியவரும். உலகம் ஒருவனை எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று எண்ணுகின்றதோ அப்படி நடப்பதே அறிவின் பயன். அப்படி நடப்பவனே அறிவாளி. இக் கருத்து வள்ளுவனார்க்கும் உடன்பாடேயாகும்.*

"உலகியல்பு அறிந்து அதற்கேற்ப நடக்கத் தெரியாதவர் அறிவில்லாதவர்" என்றும், "உலகம் எப்படி நடக்கிறது என்பதை அறிந்து அப்படி நடக்கத் தெரிந்து கொள்வதே அறிவு" என்றும் கூறியுள்ளார். இதற்கு மேலும் பல இடங்களில் அறிவுப் பயனை அவர் விளக்கியுள்ளார்.

"எந்தப் பொருள் பற்றி எவர் சொன்னாலும் சரி, அவர் சொன்ன வுரையில் அமைந்துள்ள மெய்யான பொருளைக் காண்பதே அறிவு" என்றும்,"எப்பொருள் எத்தன்மையுடையதாக இருந்தாலும் சரி, அப் பொருளின் மெய்யான தன்மையைக் காண்பதே அறிவு" என்றும் விளக்கியுள்ளார்.

சிலர் பெயர் பெற்றவர்களாக இருக்கலாம்; மிகப் படித்தவர் களாகவும் பதவியில் உள்ளவர்களாகவும் சொல்லாற்றல் மிக்கவர் களாகவும் இருக்கலாம். அதற்காக அவர்கள் சொல்லுபவற்றை யெல்லாம் மெய்ம்மை என்று ஏற்றுக் கொண்டால் அறிவாகுமா? உண் மையைக் காண்பதே அறிவு அல்லவா!

இனிச் சில பொருள்கள் தோற்றத்தில் ஒருவாறும் தன்மையில் வேறொருவாறும் இருக்கலாம். யாழ் வளைவானது; ஆனால், அதன் இசை செவிக்கும் சிந்தைக்கும் இன்பந்தரும். கணை நேரானது; ஆனால், அதன் தாக்குதல் உடலுக்கும் உயிருக்கும் ஊறுண் டாக்கும். குளிர்ச்சியாகத் தோன்றும் 'பனிப்பழம்' வெப்பமிக்கது. வெதுப்ப மிக்க மின்சாரத்தாலோ, கம்பியாலோ சில நோய்கள் தீர்வதற்குச் சூடு போடுதல் உண்டு. கசப்பான மருந்து நோய் நீக்கும்; இனிப்பான பண்டத்தை மிகத் தின்றால் நோய் ஆக்கும். இவற்றால், எப்பொருளாயினும் அதன் தன்மையை ஆராயாமல் ஒரு முடிவுக்கு வர முடியாது என்பது புலப்படு மல்லவா! இஃது அறிவின் பயனாம்.

'முக்காலமும் அறிந்த முனிவர்' என்று சிலரைப் பாராட்டுவர். முக்காலங்களிலும் எதிர்காலம் அறிதல் சீரிய அறிவுடையார்க்கே கூடுவதாம். அத்தகைய அறிவுடையவரையே அறிவாளர் என்பது வள்ளுவர் நெறி. ஆதலால் அவர்,

"அறிவுடையார் ஆவது அறிவார்"

என்றார். அவ்வளவில் நில்லாமல் அதனை அழுத்திக் கூற நினைந்து,

"அறிவிலார் அஃதறிகல்லா தவர்"

என்றார்.

*எதிர்காலம் அல்லது வருங்காலம் அறியாதவர் வாழ்வு நெருப்பின் முன் வைக்கப் பெற்ற வைக்கோற் போர்போலக் கெடும் என்றும் உவமையால் திரு வள்ளுவரே தெளிவாக்கினார்.*

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்"

*என்பது அவர் வாக்கு.*

*எந்தக் கருவியாயினும் சரி, எவர் துணையாயினும் சரி, எத்தகு செல்வமாயினும் சரி உற்ற பொழுதில் உதவிக்கு வந்து ஒருவனைக் காக்குமென்று சொல்லி விட முடியாது. "தலையிலே பாம்பு மலையிலே மருந்து" என்பது போல ஆகிவிடும். ஆனால், அவன் பெற்றுள்ள அறிவே அற்றம் காக்கும் (அழிவு வராமல் காக்கும்) கருவியாகும்; எப்பகைவர் எப்படை கொண்டு தாக்கினாலும் உட்புகுந்து அழிக்க முடியாத வலிய கோட்டை போலவும் அறிவு நிமிர்ந்து நிற்கும். இக் கருத்துக் களையும் வள்ளுவமே நமக்கு வழங்கி உதவுகின்றது.*

*"போகாத இடந்தனியே போக வேண்டா" என்பர். போகாத இடந்தனில் போவது அறிவுடைமை அன்று. அங்குப் போக்குவது அறிவும் அன்று. தீய நெறியில் மனம் போனால் அங்குப் போகவிடாமல் திருப்பி நல்வழியில் செலுத்துவதே அறிவு ஆகும். தீமைப் படுகுழியில் கண்ணை மூடிக் கொண்டு வீழ் வதோ, தீமை எதிரே வந்தால் அதனைக் கட்டிப் பிடித்து அணைத்துக் கொள்வதோ, முட்டிக் கொண்டு மோதுவதோ அறிவுடைமையாகுமோ? தீயைக் கண்டதும் அப் பக்கம் பாராமல் திரும்புதலே அறிவுப் பயன்.*

*இனி, அறிவின் தலையாய பயன் பிறிதுயிர் படும் துயரைத் தன் துயராகக் கருதி, அத்துயரை மாற்றுவதற்குப் பாடுபடு வதாகும். "எனக்கு வரும் துயரும், என் குடும்பத்திற்கு வரும் துயருமே என்னால் போக்கப்பட வேண்டியவை; மற்றையோர் துயர் பற்றி எனக்கென்ன கவலை" என்று வாழ்ந்தால் அவர்கள் படும் துயருக்குக் கண்ணீர் வடிப்பவர்களும் அவர்களாகவே இருப்பர்! வேறு எவர் துணைக்கு வருவார்?*

*பிறிதின் நோயைத் தம் நோயாகக் கருதாதவர் அறிவுடையவர் அல்லர் என்பதை அறைந்து கூறுகிறார் அறவோர் திருவள்ளுவர்.*

"அறிவினான் ஆகுவ துண்டோ, பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை"

*சுருங்கச் சொன்னால் நல்லவற்றை அறிதலும், உணர்தலும், செயலாற்றுதலும் அறிவின் பயனாம்.*

# 7. செல்வாக்கு

செல்வமும் வாக்குத் திறமும் சேர்ந்தவர்க்குச் செல்வாக்கு உண்டாகும் என்று கூறுவர். செல்வம் இருப்பவர்க்குப் புகழ் இருப்பது உண்மைதான்! வாக்குத் திறமை இருப்பவர்க்கும் புகழ் இருப்பது உண்மைதான்! இவ்விரண்டையும் தனித்தனியேயும், சேர்ந்தும் பெற்றிருப்பவர்களினும் செல்வாக்குப் படைத்தவர்கள் உலகில் இலரா?

செல்வாக்கு என்பது செல்வத்தால் ஏற்பட்டது அன்று. வாக்கால் ஏற்பட்டதுமன்று. அவையும் ஒருவர் செல்வாக்கிற்குத் துணையாக இருக்கலாம். அவையே செல்வாக்கு அல்ல. அவ்வாறானால் செல்வாக்கு என்பதன் பொருள் தான் என்ன?

எவரொருவர் ஏதேனும் ஒன்றைக் கூறினால், மூலை முடுக்கெல்லாம், பட்டி தொட்டியெல்லாம், நாடு நகரெல்லாம் பரவி, அங்குள்ள மக்களெல்லாம் தம் மூச்சோடு மூச்சாகக் கொண்டு முழு ஈடுபாட்டுடன் செயலாற்றுமாறு செல்லும் வாக்கே செல்வாக்கு ஆகும்! செல்வாக்குக்கு உரியவர் எவரோ அவரே செல்வாக்காளர்; அவர் வாக்கே செல்வாக்கு. மற்றை வாக்குச் செல்லாவாக்கு!

காந்தியடிகள் பெருஞ் செல்வரல்லர்; பெரும் வாக்குத் தேர்ச்சியாளரும் அல்லர். நான்கு முழ வேட்டி துண்டுடன் வறிய உழவர் போலவே தோன்றினார். ஆனால், ஆடை அணிகல அழகுகளெல்லாம் உரு எடுத்தாற்போன்ற ஆங்கிலப் பேரரசரும் வரவேற்று உடனிருந்து உரையாடும் ஒரு நிலையைப் பெற்றார். அவர் என்ன சொல்கிறாரோ- அச்சொல் இந்தியத் துணைக் கண்டத்தின் கடலையும் மலையையும் மோதி நின்றன. மண்ணையும் விண்ணையும் தொட்டன! அழுங் குழந்தை தொட்டு ஆவிசோரும் நிலையுற்றோரையும் ஆட்படுத்தின! அவர்தம் கனிந்த மொழிகள் காந்தத் திறம் பெற்றுக் கவர்ந்தன.

அவரைக் காணவும், அவர் சொற் கேட்கவும் கோடி கோடியாக மக்கள் திரண்டனர். அவர் சொல்லை நிறைவேற்றுதற்கு

வெங்கொடுமைச் சிறைச்சாலையையும் மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாகக் கொண் டனர். "ஆவிசோரினும் அஞ்சிடோம்; நாம் துஞ்சிடோம்" என்று கிளர்ந்தனர். "உரிமையே எங்கள் உயிர்" என்று அறை கூவினர். அவ்வுரிமையைப் பெற்று உவகையுற்றனர். காந்தியடிகளின் செல்வாக்கின் சிறப்பு அல்லவா இது!

காந்தியடிகள் செல்வாக்கு, ஒரு கால எல்லையில் இட எல்லையில் கட்டுப்பட்டு நின்று ஒழிவதோ? இந்த வுலகில் வாய்மை எவ்வளவு நாள் வாழுமோ, இன்னா செய்யாமை எவ்வளவு காலம் இலங்குமோ, அறப்போர் எவ்வளவு காலம் நடக்குமோ, மனிதரினம் எவ்வளவு காலம் வாழுமோ அவ்வளவு காலமும் காந்தியடிகள் செல்வாக்கு மறையாது.

கடந்த நூற்றாண்டிலே வாழ்ந்தவர் வள்ளலார். கையால் காசினைத் தீண்டாக் கடுநோன்பும் கொண்ட பெருந்தகை. செல்வருடன் உறவு கொண்டால் அவர்தம் செல்வங் கருதி உறவாடுவதாகக் கருதி விடுதலும் கூடும் என்று அஞ்சி அகன்று ஒதுங்கி ஒடுங்கி வாழ்ந்த ஒப்பில்லாப் பெரியர். ஈட்டுதலோ ஈட்டித் தொகுத்துச் சேர்த்தலோ அவர் அறியாதவை! "வட்டி கொண்டு ஈட்டும் பட்டிப் பதகர்" என்று வட்டி கொண்டு ஈட்டுவாரை எள்ளியவர். தமக்கென எந்த ஒன்றையும் வைத்துக் கொள்ளாதவர். தம் உடலைக் கூட வெளியே காட்டிக் கொள்ளுதற்கு நாணி முகத்தை விடுத்து உடல் முழுவதையும் போர்த்துக் கொண்டு உலாவியவர். அடியார் கூட்டம் திரண்டு வர, ஆளடிமைக் கூட்டம் அணுகி வர அஞ்சி ஒதுங்கி அணுவும் இடந்தராமல் வாழ்ந்தவர் அவர். ஆனால், அவர்தம் 'செல்வாக்கு' க்கு அளவும் உண்டோ?

உள்ள பொருளெல்லாம் எள்ளத்தனை கூடத் தமக்கென வைத்துக் கொள்ளாது வாரி வழங்கியவர்களைக்கூட பெயர் கூறித்தான் பாரி வள்ளல், ஓரி வள்ளல், சடையப்ப வள்ளல் என அழைக்க வேண்டும்! ஆனால், இவரை வள்ளலார் என்றாலே போதும்! மற்றை வள்ளல்களைப் போல் பொருட் செல்வத் தையோ வாரி வழங்கினார்? அவர் வழங்கிய 'திருவருட் செல்வ'த்தைப் போல் எந்த வள்ளல் வழங்கினார்?

திருவருளாற்றல் உலகில் உள்ள அளவும் வள்ள லார் செல்வாக்கு ஒழியுமா? 'சமரச சன்மார்க்கம்' என்னும் 'பொது நிலை' உலகில் திகழும் அளவும் வள்ளலார் புகழ் மறையுமா?

சமய வெறி குறைந்து, பொதுநெறி நிறைந்து வளர்ந்தால் அன்றி இந்த உலகம் வாழாது என்னும் நிலைமை உலகில் உண்டாகும் போது ஓங்கி உலகளந்த உத்தமராகச் சிறப்புற்று விளங்க இருப்பவர் வள்ளலாரே என்பதில் ஐய முண்டா? வள்ளலார் செல்வாக்கு செல்வத்தால் வந்ததா? வாக்கால் வந்ததா?

திருவள்ளுவர் தமிழ் மண்ணிலே தோன்றினார். அவர் எப்படி வாழ்ந்தார் என்பதை அறிய வரலாற்றுக் குறிப்பு இல்லை. ஆனால், அவர் வாழ்ந்த வகை இன்னது என்பதை அவர் இயற்றிய **திருக்குறள்** ஓவியம் போலத் தீட்டிக் காட்டுகிறது.

திருவள்ளுவர் செல்வாக்கு, தமிழ் உலகை தமிழ் இலக்கிய உலகை வயப்படுத்திய அளவுக்கு வேறு எப்புலவர் செல்வாக்கும் வயப்படுத்தி விடவில்லை. திருவள்ளுவர் காலத்திற்குப் பின் வாழ்ந்த எப்புலவரும் அவர் வாக்கைத் தலைமேல் வைத்துப் போற்றத் தவறவில்லை; தத்தம் நூலில், வயிரமணி என வைத்து அழுத்தியது போலத் திருக்குறளை வைத்துப் போற்றி யுள்ளனர். அவர்தம் புகழ் கூறுவதற்கு எழுந்தது திருவள்ளுவ மாலை! அப்படி ஒரு நூலுக்குப் புகழ்நூல், தமிழ் உலகில் திருவள்ளுவருக்கு முன்னும் தோன்றியதில்லை; பின்னும் தோன்றியதில்லை. உலகத்துப் பல்வேறு மொழிகளும் போட்டி போட்டுக் கொண்டு மொழிபெயர்க்க வந்த பெருமையும் திருக்குறளைப் போல் வேறு நூலுக்கு வாய்த்ததில்லை. ஏன்?

திருவள்ளுவர் உலகுக்கென நூலை இயற்றினார்; உலகம் அது தனக்குரியதென்று ஏற்றுப் போற்றுகின்றது. இஃது இயற்கையேயாகும்.

திருவள்ளுவரின் செல்வாக்கு திருக்குறள் உள்ள காலம் வரை என்ன, உலகம் உள்ள வரை வளரவே செய்யும். இன்னும் சொல்லப் போனால் ‘உலக அரசு’ அமையும் நாள் உண்டானால் அன்று உலக மன்றில் ஒரு தனிக் கோலோச்சுவது திருக்குறளாகவே இருக்கும்?

காந்தியடிகளும், வள்ளலாரும், திருவள்ளுவரும் செல்வாக்குப் பெற்றது எதனால்?

அவர்கள் தங்களைச் சுற்றிக் கையெட்டும் அளவுக்கு ஒரு வட்டம் போட்டுக் கொண்டு அதற்கு உட்பட்டு வாழ்ந்த சிற்றுள்ளம் உடையவர்கள் அல்லர். அவர்கள் இவ் உலகளவு

*விரிந்த பெரு வட்டம் மட்டும் போட்டுக் கொள்ளாமல், அப்பாலும் அப்பாலுக்கு அப்பாலும் விரிந்த வட்டமிட்டு வாழ்ந்த பேருள்ளம் படைத்தவர்கள். அவர்கள் தூய உள்ளம் தாயுள்ளம்; தெய்வவுள்ளம். அத்தகைய தாய்மைத் தெய்வ உள்ளத்தில் என்ன சுரக்கும்?*

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

*என்னும் இன்ப அன்பு சுரக்கும். அவ்வாறு சுரந்தவர் செல்வாக்கே செல்வாக்கு! அஃது உரை கடந்து உயர்வற உயர்ந்த பெருமை யுடையது.*

# 8. சொல்லும் சொல்

*நாம் சொல்லுஞ் சொல் எத்தகையதாக இருக்க வேண்டும்? என்று வினாவினால் விடை எளிதாகக் கூறி விடலாம். "நாம் பிறரிடமிருந்து எத்தகைய சொல்லைக் கேட்க விரும்புகிறாமோ அத்தகைய சொல்லை நாம் சொல்லுதல் வேண்டும்" என்பதே விடையாம்.*

*நாம் பிறரிடமிருந்து எத்தகைய சொற்களைக் கேட்க விரும்புகின்றோம்? பிறர் சொல்லும் சில சொற்களைக் கேட்டு மட்டற்ற மகிழ்வடைகின்றோம். சில சொற்களைக் கேட்டு எல்லை யில்லாத துன்பமும் எரிச்சலும் அடைகின்றோம். ஏன்? அச் சொற்கள் செய்யும் திருவிளையாடல்களே அவை.*

*பன்னீரைத் தெளித்தால் தெளிப்பவனுக்கும் மகிழ்ச்சி யுண்டாகின்றது. தெளிக்கப் பெறுபவனுக்கும் மகிழ்ச்சி உண்டா கின்றது. சந்தனத்தை வழங்கினால் வழங்குபவனுக்கும் இன்பம் உண்டா கின்றது; வழங்கப் பெறுபவனுக்கும் இன்பம் உண்டா கின்றது. இவற்றைப் போல் இனிய சொற்களைச் சொல்வது சொல் பவனுக்கும் இன்பமாம்; கேட்பவனுக்கும் இன்பமாம். இனிமையற்ற சொற்களைச் சொல்வதால் சொல்பவன் மனம் கொதிக்கின்றது. கேட்பவன் மனமோ மிகக் கொதிப்படைகின்றது. கொடிய செயல்களைச் செய் வதற்குக்கூட இனிமையில்லாத சொற்கள் தூண்டி விடுவதுண்டு. ஆதலால் தான் திருவள்ளுவர்,*

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று"

*என்றார். இனிய சொற்களை நறிய கனிகளுக்கும், இன்னாத சொற்களை வெறுப்பூட்டும் காய்களுக்கும் உவமையாக அவர் கூறியுள்ளதைக் கருதுதல் வேண்டும்.*

*இனி, இனிய சொற்களைக் கூற வேண்டும் என்பதற்காக உண்மையில்லாதவற்றைப் புனைந்து சொல்ல வேண்டும் என்பது இல்லை. அவ்வாறு சொல்வது சொல்பவன்,*

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று" பேசுபவன் என்னும் எண்ணத்தை உண்டாக்கத் தவறாது. "கெட்டிக்காரன் பொய்யும் எட்டு நாளில் தெரியும்" என்பது பழமொழியல்லவா! இனிமையாகக் கூறுவது என்பது இல்லாததைக் கூறுவதுஆகாது என்க.

உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால் உள்ளதை உள்ளவாறே, நடந்ததை நடந்தவாறே கூறுவதாம். அதற்காக உள்ளதை உள்ளவாறே கூறுகிறேன் என்று பிறர்க்குத் தீமை தருபவற்றைக் கூறுவது கூடாது. அதனால்தான் அறங்கூற வந்த பெரு நாவலர், "பிறர்க்குத் தீமை தாராத சொற்களையே வாய்மைச் சொல்" என்று கூறினார். ஆதலால், பிறர்க்கு நன்மை தரும் சொல்லே நற்சொல் என்றும், வாய்மைச் சொல் என்றும் பெரியோர்களால் கொள்ளப் பெறும். அத்தகைய சொற்களைக் கூறுதல் வேண்டும்.

பொய் கூறுவது அச்சத்தின் அடையாளம்; அது வலுவடைந்து வஞ்சத்திற்கு வித்தாக அமைந்து விடும். ஆதலால் தான் 'பொய் கூறாமை'யை ஒருவன் சிக்கெனக் கடைப்பிடித்தால் வேறு எந்த அறங்களைச் செய்யாவிட்டால் கூட நல்லதே என்றார் திருவள்ளுவர்.

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

என்பது அவர் வாக்கு.

பதி இழந்தும், பாலனை இழந்தும், நிதி இழந்தும், நாடு நகர் இழந்தும் பொய் கூறுவதற்கு இசையாத அரிச்சந்திரன் புகழ்பாடும் நாட்டிலே பொய் கூறுவதை நெய்ச் சோறு என்று கொள்ளும் மக்கள் பெருகி யுள்ளமை இழிவேயாம்.

அரிச்சந்திரன் வாய்மை வாழ்வை நாடகத்தில் கண்டு தம் வாழ்வையே வாய்மைப் பொருளாக்கிக் கொண்ட காந்தியடிகள் பொய்யை மலச் சிக்கலுக்கு ஒப்பிடுகிறார். மலச்சிக்கலே மற்றை மற்றை நோய்களுக் கெல்லாம் அடிப்படை நோய். அது போல் பொய்யே எல்லாக் குற்றங்களுக்கும் அடிப்படைக் குற்றம். ஆதலால், பொய் கூறாமையை நோன்பெனக் கொள்ளுதல் வேண்டும்.

இதனை அடுத்துக் கேடு தருவது கோள் சொல்லு தலாகும். ஒருவனைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் ஆகிய சொற்களை அவன் இல்லாத இடத்திற்குக் கொண்டுபோய்ச் சொல்லுதலே 'கோள்' சொல்லுதல் ஆகும். இக் கோளுரையால் எத்துணையோ நன்மக்கள் கொடுமைகளுக்கு ஆளாகித் தீராத் துன்பப்பட்டுள்ள னர். மனிதர் வாழ்வை இழிவாக்கு பவற்றுள் 'கோள்' உரைக்கு இடம் உண்டு என்பதை உணர்பவர் அதனைக் கொள்ளுதல் அறவே கூடாது.

எள்ளத்தனைக் கருத்தும் இல்லாமல் இழிந்த சொற்களை வாரி வழங்குபவர்களும் உளர். இவ் வுடலே நாற்றமிக்கது. வியர்வையாலும், மலத்தாலும், நீராலும், கோழையாலும், சொண்டாலும், சொரியா லும், குறும்பியாலும், பீளையாலும் நிரம்பியது. இத் தீமைகளையெல்லாம் நல்லெண்ணம், நற்சொல், நற்செயல்களால்தான் ஒழிக்க முடியும். இவற்றோடு அருவறுக்கத் தக்கவற்றையே பேசி வருபவரை என்ன பெயரிட்டு அழைக்கலாம்! நாற்றமிக்க வாயைச் சொல்லாலுமா நாறவைக்க வேண்டும்? புதை சாய்க் கடையின் மூடியைத் திறந்துவிட்டால் போல் வாயைத் திறப்பவர்களைக் கண்டு எவரேனும் நெருங்குவரா? உறவாட வருவரா? அவர்கள் நிலை இரங்கத்தக்கதாம்.

இனிப் பயனற்ற சொற்களைச் சொல்வதையே தொழிலாகக் கொண்டவர்களும் பலர்; அவர்கள் சொல்லும் சொல்லை விரும்பிக் கேட்டுப் பாராட்டும் வம்பர் கூட்டமும் நாட்டில் உண்டு. பொன்னினும் உயர்ந்த பொழுதைப் பயனற்ற சொல்லால் பாழாக்கும் இவர்கள் பதர் போன்றவர் ஆவர். நீரையும் உரத்தையும் உண்டு வளர்ந்து ஒரு பயனும் தாராது ஒழிவது பதர்; அப் பதருக்கும் பயனிலாதவற்றைக் கூறுபவர்க்கும் உருவ வேற்றுமை அன்றி வேறொரு வேற்றுமையும் இல்லை. அதனால், சினஞ் சிறிதும் கொள்ளாத வள்ளுவப் பெருந்தகை கூட வறிதே பொழுதைக் கழிக்கும் அவனை நினைந்து,

"பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி எனல்"

என்கிறார். ஆதலால், பயனற்ற சொல்லைச் சொல்லாது ஒழிதல் நயன்மிக்க செயலாம்.

*சொல்பவர்க்கு மணந்தருபவை எவையோ, கேட்பவர்க்கும் மணந்தருபவை எவையோ, மீண்டும் மீண்டும் நினைத்து மகிழத் தக்கவை எவையோ அத் தகையவே நாம் சொல்லும் சொற்களாக அமைவதாக.*

“பல்லக்கு ஏறுவதும் சொல்லாலே!
பல் உடை படுவதும் சொல்லாலே!!”

# 9. செயல் வகை

*ஔவையார் என்னும் தண்டமிழ்ச் செல்வி பட்டறிவும் படிப்பறிவும் மிக்கவர்; நாடெல்லாம் சுற்றிப் பார்த்து நல்லறிவு பெற்றவர்; அவர் நமக்குப் பயன்படும் நல்ல செய்திகள் பலவற்றைப் பகர்ந்துள்ளார்.*

*பலா மரத்தில் பூவைக் காண இயலாது; ஆனால், கனியைக் காணலாம்; மாமரத்தில் பூவைக் காணலாம்; அவ்வாறே கனியையும் காணலாம். பாதிரி என்னும் மரத்தில் நறும் பூக்கள் பலவற்றைக் காணலாம்; ஆனால், பூம்பிஞ்சைக் கூடக் காண இயலாது. இவற்றைப் போல் மக்களிலும் முப்பிரிவினர் உளர்.*

*ஒரு நல்ல செயலை எவரும் சொல்லாமல் தாமே செய்பவர்; சொல்லிச் செய்பவர்; சொல்லியும் செய்யாதவர் - என்பவர் இம்முப் பிரிவினர்.*

*மூன்று மரங்களைக் காட்டி மூவகை மக்களை விளக்கிய பாட்டியின் பட்டறிவு பாராட்டத்தக்கது. வாழ்க அவர்தம் திறமை!*

*மூவகை மரங்களுடன் மூவகை மக்கள் எப்படிப் பொருந்துகின்றனர்?*

பூவாமல் காய்க்கும் பலாமரம் போன்றவர்
- சொல்லாமல் செய்பவர்.

பூத்துக் காய்க்கும் மாமரம் போன்றவர்
- சொல்லிச் செய்பவர்

பூத்துங் காய்க்காத பாதிரி மரம் போன்றவர்
- சொல்லியும் செய்யாதவர்!

*ஔவையார் கூறியவாறு நாம் சொல்லாமலே செய்யும் பெரியோராகத் திகழ வேண்டும்.*

*சொல்லாமலே எதைச் செய்வது?*

*செய்யத்தக்க செயலைமட்டுமே செய்தல் வேண்டும்; செய்யத்தகாச் செயலைச் செய்தல் கூடாது. இதனைத் திருவள்ளுவர்,*

"செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும்."

*என்றார். செய்யத் தகாதவை எவை? தனக்குப் பெருமை தராதவை எவையோ, பிறர்க்குத் தீமை தருபவை எவையோ அவை செய்யத் தகாதவை. தனக்குப் பெருமை தருபவை எவையோ, பிறர்க்கு நன்மை தருபவை எவையோ அவை செய்யத் தக்கவை. செய்யத் தக்கவற்றைச் செய்தால் போதுமா? போதாது. செய்தற்கு அரியவற்றைச் செய்தலும் வேண்டும். ஏன்?*

*கருங்கல்லுக்கும் கட்டி வயிரத்திற்கும், செங்கல்லிற்கும் செம்மணிக்கும், ஆமணக்கு முத்திற்கும் ஆணி முத்திற்கும் வேறுபாடு இல்லையா? மிகவுண்டு. ஆகவே, பிறரால் செய்தற்கு அரியவற்றைத் தேடித் தேடிச் செய்தல் வேண்டும். செய்தற்கு அரியவற்றைச் செய்பவர்தாமே பெரியர்? அப்பெரியாராக இலங்குதல் வேண்டும்.*

*சொல்லாமல் செய்தல் - செய்யத்தக்க வற்றைச் செய்தல் - செயற்கு அரிய செய்தல் - ஆகியவற்றை எப் பொழுது செய்வது? இதற்கும் வள்ளுவர் வாய்ப்பாக விடை வழங்குகின்றார். எப்படி?*

*கால வாய்ப்பு, இடவாய்ப்பு, துணை வாய்ப்பு, பொருள் வாய்ப்பு ஆகியவை கிட்டுமானால் கிட்டிய அந்த நொடியிலேயே அரிய செயலைச் செய்து முடிக்க வேண்டும்.*

"எய்தற் கரிய தியைந்தக்கால்; அந்நிலையே
செய்தற் கரிய செயல்"

*என்று ஏவிய அவர் கண்முன்னர் ஒரு காட்சியையும் காட்டி விளக்குகின்றார்.*

*ஏரியிலோ குளத்திலோ எத்துணை மீன்கள் ஓடுகின்றன. சிறிய மீன்கள் வரும் போதெல்லாம் கண்ணை மூடிக் கொண்டிருக்கும் கொக்கு ஒரு பெரிய மீன் வரக் கண்டதும் எவ்வளவு விரைவாகக் குத்தி எடுத்துக் கொள்கின்றது. அதுபோல் அரிய செயலைச் செய்தற்கு வாய்ப்பு அமையுமானால் உடனே முடித்து விட வேண்டும். இதனை விளக்குகின்றது.*

"கொக்கொக்க கூம்பும் பருவத்து; மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து"

என்னும் குறள். நாம் குறள் வழி நிற்கும் செயல் வீரர்களாக - செயற்கரிய செய்யும் செம்மை சான்ற வீரர்களாகத் திகழ்வோமாக!

## 10. எவரோடு சேர வேண்டும்?

"சேரிடம் அறிந்து சேர்" என்பது நம் முன்னோர் மொழி. "சேராத இடந்தனிலே சேர வேண்டா" என்பதுவும் நம் முன்னோர் மொழியே!

சேரிடம் என்பது யாது? சேரிடம் அறிந்து என் சேர வேண்டும்?

சேரிடம் என்பது சேரத்தக்க இடமாகும். சேர்ந்த இடத்தைப் பொறுத்தே ஒருவன் இயல்புகள் அமையும்; ஆதலால், சேரிடத்தை அறிந்து சேரவேண்டும்; சேரத் தகாத இடத்தை நெருங்குதல் கூடாது.

நறுமணப் பூம் பொய்கையை நாம் அடுத்துச் செல்கின்றோம். அப்பொழுது அதன் தண்மையையும் நறுமணத்தையும் நாம் அடைகின்றோம். உடலும் உள்ளமும் குளிர்ந்து மகிழ்வடைகின்றோம்.

தீப் பற்றிப் பரவி எரியும் ஓரிடத்தை அடுத்துச் செல்கின்றோம். அப்பொழுது அதன் வெப்பத்தையும் கொடிய நெடியையும் கண்ணின் காந்தலையும் நாம் அடைகின்றோம். உடலும் உள்ளமும் வெதும்பி நோகின்றோம். இத் தன்மைகள் நாம் சேர்ந்த இடத்தால் எய்தியவை அல்லவா! இடத்திற்கு மட்டும் தான் தன்னைச் சேர்ந்தவர்களை இவ்வாறு மாற்றும் தண்மை யுண்டா? இல்லை!

மனித இனத்திற்கும் இத்தன்மை உண்டு. இதனால் தான் "சிற்றினஞ் சேராமை" என்றோர் அதிகாரத்தைத் திருவள்ளுவர் வகுத்தார். சிற்றினஞ் சேராமை வேண்டும் என்றால் எவ்வினத்தைச் சேர வேண்டும் என்ற கேள்வி எழுமல்லவா! அதனால் "பெரியாரைத் துணைக் கோடல்" என்றோர் அதிகாரத்தையும் அத்திருவள்ளுவர் வகுத்துக் கூறினார்.

பெரியர் யார்? சிறியர் யார்?

*பிறருக்கென வாழும் பெருந்தகைமை உடையவர் எவரோ அவர் பெரியர்; தமக் கெனவே வாழும் சிறு தன்மை உடையவர் எவரோ அவரே சிறியர். அவரவரைச் சேர்தலால் அவ்வத் தன்மைகள் உண்டாம். சந்தனக் கலவையைத் தொடுதலால் நன் மணமும், சாணத்தைத் தொடுதலால் நாற்றமும் நாம் பெறுவது இல்லையா! அதுபோல்.*

*நன்மை செய்யும் பெரியவரை நாம் சேருவது எப்படி? தீமை செய்யும் சிறியவரைச் சேராது ஒதுங்கு வது எப்படி? இதனை நம் முன்னோர் நன்கு விளக்கியுள்ளனர்.*

நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் நன்று.

*ஆம்! நல்லவரைக் காண்க! நல்லவர் சொல் கேட்க! நல்லார் புகழ் உரைக்க! நல்லாரோடு கூடி இருக்க! என்றனர். அவரே,*

“தீயாரைக் காண்பதுவும் தீதே; திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவும் தீதே - தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் தீது.”

*என்றனர்.*

*இப்பாடல் கூறுவது என்ன? “தீயவரைப் பாராதே; தீயவர் சொல் கேளாதே; தீயவரைப் பற்றிப் பேசாதே; தீயவரோடு கூடி இருக்காதே” என்பதாம்.*

*மக்களுள் சிறந்து விளங்கிய காந்தியடிகள் மூன்று குரங்குப் பதுமைகள் வைத்திருந்தார். அவற்றுள் ஒன்று வாயைப் பொத்திக் கொண்டிருக்கும்; மற்றொன்று காதைப் பொத்திக்கொண்டிருக்கும்; இன்னொன்று கண்ணைப் பொத்திக் கொண்டிருக்கும். ஏன்?*

*பேசவேண்டியதைப் பேசு; வேண்டாததைப் பேசாதே. கேட்க வேண்டியதைக் கேள்; வேண்டாததைக் கேட்காதே. பார்க்க வேண்டியதைப் பார்; வேண்டாததைப் பார்க்காதே - இவையே அக்குரங்குப் பதுமை கற்பிக்கும் பாடமாம்.*

*தீயோர் தன்மையைத் தெளிவான உவமைகளால் நம் முன்னோர்கள் விளக்கி நமக்கு அறிவுறுத்தி யுள்ளனர்.*

*"ஈக்கு விடம் தலையில் மட்டும் இருக்கும்; தேளுக்கு விடம் கொடுக்கில் மட்டும் இருக்கும்; பாம்புக்கு விடம் பல்லில் மட்டும் இருக்கும்; ஆனால், தீயவர்க்கு விடம் உடலெல்லாம் நிரம்பி இருக்கும்" என்று கூறினர். இதனால் தீயவரைக் கண்டு நாம் ஒதுங்க வேண்டும் என்றும் கூறினர்.*

*எப்படி ஒதுங்க வேண்டும்? இதனையும் தெளிவு படுத்தியுள்ளனர்.*

*"கொம்புள்ள மாட்டுக்கு ஐந்து முழம் விலகு; குதிரைக்குப் பத்து முழம் விலகு; கொடிய யானைக்கு ஆயிரம் முழம் விலகு; ஆனால் தீயவர்களின் கண்ணில் தெரியாத தொலைவுக்கு ஓடிவிடு" என்பது அவர்கள் உரை.*

*சேரும் இடம், சேரும் வகை, சேரும் பயன் இவற்றை அறிந்து பயன் என்ன? அதனைப் பின்பற்றினால்தானே பயன்? தேன் என்றால் இனிக்குமா? நாவில் எடுத்து வைத்தால் அல்லவா இனிக்கும்!*

# 11. பொருட் பயன்

பொருள் ஒருவனை 'உடையவன்' ஆக்குகின்றது. அஃது இல்லாதவன் 'இல்லாதவன்' எனப்படுகின்றான். பொருள் உடையவன் வேறு எவற்றை இல்லாதவனாக இருந்தாலும் பிறரால் பொருட்டாக எண்ணப் பெறுகின்றான். ஓரிலக்கம் தேடிவிட்டால் 'இலட்சாதிபதி' என்றும், கோடி தேடிவிட்டால் 'கோடீசுவரன்' என்றும், 'ஈசுவரன்' என்றும் பாராட்டுமாறு செய்தது அவன் பொருளே அல்லவா! அவன் பொருளுக்காக அப்பொருளை வேண்டி நிற்போர் அவனை எத்துணை மதித்துப் போற்றுகின்றனர்! இம் மதிப்பும் பாராட்டும் தான் பொருளின் உண்மைப் பயனா?

பொருள் உலக வாழ்க்கைக்கு இன்றியமை யாதது. முற்றுந் துறந்தவர் எனினும் பொருளின்றி வாழுதற்கு இயலாது. ஆதலால் தான் "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்று தெளிவாகக் கூறினார் திருவள்ளுவர். அத்தகைய பொருள் நேரிய வழியில் தன்னிடம் வந்து சேர்ந்திருக்கிறது என்றால் ஒருவன் பெருமைப் பட்டுக் கொள்ள வேண்டும். அவன் பிறக்கும் போது அப்பொருளைக் கொண்டு வந்தானல்லன்; முடிவில் கொண்டு போவானும் அல்லன். அவனொடு தொடர்ந்து வருவது அவன் செய்த அறச் செயல்கள் மட்டுமேயாம். ஆதலால் அப் பொருளை அறச்செயல்களுக்குப் பயன்படுத்துதல் வேண்டும். அதற்குக் கிடைத்த வாய்ப்பாகக் கருதி நல்வழியில் செலவிட வேண்டும். அப் பொருளுக்குத் தன்னைத் தானே அறங்காவலனாக அமைத்துக் கொண்டு செய லாற்ற வேண்டும். இதுவே பொருட்பயனாம்.

பொருள் வாய்ப்பு உள்ளவருக்கு அறம் செய்வது எளிதாகும்; இன்பம் அடைவதும் எளிதாகும். ஆதலால் அறத்தையும் இன்பத்தையும் வழங்கும் பொருள் போற்றிப் பேணத்தக்கதே. அப்படிப் பேணிச் சேர்த்துக் கொண்டவர் எச்செயலையும் எளிதில் நிறைவேற்றிக் கொள்வர். "பணம்

பத்தும் செய்யும்" என்றும், "முன்னுவ எல்லாம் பொன்னால் முடியும்" என்றும் நம் முன்னோர் கூறினர். "மலைமேல் இருந்து கொண்டு கீழே நடக்கும் யானைப் போரை எவ்வளவு எளிதாகக் காணலாமோ அவ்வளவு எளிதாகச் செல்வமுடையார் எச் செயலையும் முடித்துக் கொள்ளலாம்" என்று திருவள்ளுவர் உவமையால் விளக்குகின்றார்.

பொருள் உடையவனுக்குப் பெருமையும், அறப்பேறும் இன்ப நலமும் வாய்க்கும் அளவில் நிற்பது சிறப்பன்று. அதனினும் விரிந்து செல்வதே பொருட் பயனாகும்.

'ஊருணி நீர்' யாருக்கு உரிமையானது? ஊரார் அனைவருக்கும் உரிமையானது; ஊருணியில் நீர் நிறைந்தால் அவரவர்க்கு வேண்டுமளவு அவரவர் விருப்பம்போல் எடுத்துக் கொள்வர். எவருடைய வேண்டுதலோ தூண்டுதலோ ஊருணி நீரைப் பெறுவ தற்கு வேண்டுவதில்லை. இவர் அவர் என்று பார்த்தும் ஊருணி நீர் வழங்குவது இல்லை. அதுபோல் மிகுந்த அறிவாளிகளின் செல்வம் ஊருக்குப் பொதுவாகப் பயன்படும்.

சுவைமிக்க கனியைத் தரும் மரம் ஒன்று ஊர் நடுவே பழுத்துள்ளது; மிகுதியான பழங்களையும் கொண்டுள்ளது. ஊருக்குப் பொதுவான அம் மரத்தின் பழம் - ஊரின் நடுவே பழுத்துள்ள அம் மரத்தின் பழம் - ஊரார் அனைவருக்கும் பயன்படுமல்லவா! நிழல்தந்த அம்மரம் கனியும் தந்து களிப்பூட்டும் வாய்ப்புப் பெருமைக்குரியதல்லவா! "மரம் பழுத்தால் வௌவாலை வா என்று கூவி, இரந்து அழைப்பார் யாரும் அங்கில்லை" என்பர். ஆதலால் பறவைகளுக்கும் விருந் தளிக்கும் பழமரம் தனிச் சிறப்பினதே யாகும். இப்பழ மரம் போன்றது, நற்குண நற்செயல்களையுடையவர்களது செல்வம்.

இனி, இவ்விரண்டினும் உயர்ந்தது மருந்து மரம்! அம் மருந்து மரத்தின் மாண்பு சொல்லுவார் சொல்லைக் கடந்ததாகும். மருந்துக்குப் பயன்படும் மரத்தின் இலை பறிக்கப்படும்; காய் பறிக்கப்படும்; பழமும் பறிக்கப்படும்; கிளையும் கொப்பும் வெட்டப்படும். அவ்வளவோ? தோலும் உரிக்கப்படும்; வேரும் வெட்டப்படும். அவ்வளவு பொருளும் தந்து தன்னை அழித்தவர் நோயையும் பேரருட் பெருக்கத்தால் தீர்க்கும் பெருமை கொண்டது மருந்து மரம். இம் மருந்து மரம் போன்றது பெருந்தகை மீக்கூர்ந்த பெருமக்கள் செல்வம். தன்னை

அழித்துக் கொண்டும் தணியா நலங்களைப் பிறர்க்குச் செய்யும் பெருமை வாய்ந்தது அது.''

இனி மருந்துச் செடியாகட்டும், பழமரமா கட்டும், ஊருணியா கட்டும் இவற்றுக்கெல்லாம் வாழ் வளிக்கும் சிறப்புடையது மழை! அம் மழைபோன்றது பேருணர்வாளர் செல்வம்.

மழை இன்ன இடத்துப் பெய்யவேண்டும் என்று எண்ணிப் பெய்கின்றதா? இன்ன அளவு பெய்ய வேண் டும் என்று எண்ணிப் பெய்கின்றதா? இன்ன பொழுதில் பெய்ய வேண்டும் என்று எண்ணிப் பெய்கின்றதா? இன்னாருக்குத் தான் பெய்ய வேண்டும் என்றாவது கருதிப் பெய்கின்றது? மீண்டும் கிடைக்கும் என்றோ புகழ்ச்சி கிடைக்கும் என்றோ பெய்கின்றதா? எதுவும் இல்லை.

“எதைப் பற்றியும் கருதாமல் பொழிவது என்கடன்; அவ்வளவே என் வேட்கை! அதன் பயனைப் பற்றி எனக்கு என்ன கவலை?'' என்று பெய்கின்றது! இத்தகைய கைம்மாறு கருதாது பொழியும் மழைக்கு இந்த உலகம் என்னதான் செய்துவிட முடியும்?

இம்மழையைப் போல் தம் செல்வத்தை வழங்கும் வளியோர்க்கும் நாமோ இவ்வுலகமோ என்ன கைம்மாறு செய்துவிட முடியும்? கைம்மாறு வேண்டி நிற்பவர்கள் அல்லவா கைம்மாற்றைப் பெறுவர்! ஆனால் கைம்மாறு கருதாத அவர்களையும் கவிஞர்கள் விட்டு விடவில்லை!

“பாரி! பாரி! என்று கொடைக்கு உன்னையே புகழ்கிறார்கள்! மாரி என ஒன்று இருப்பதை மறந்தே போனார்களே'' என்று எவ்வளவு நயமாகப் பாடியுள்ளார் கபிலர். “மாரி ஈகை மறப்போர் மலையன்'' என்று மலையமான் திருமுடிக் காரியைப் பாடுகிறாரே ஒரு புலவர்! இப்படி எத்துணையோ மழையன்ன செல்வர்கள் இலக்கிய உலகிலும், நேரிடை உலகிலும் காணப் பெறுகின்றனர்! அவர்கள் பெற்ற இப்பேறு பொருட்பயன் அல்லவா!

தீயவர்பொருள் நச்சுக் குண்டாக, நலிக்கும் கருவியாக, மயக்கும் மதுவாக, மாய்க்கும் ஆட்டமாக ஒழிகின்றது. நல்லவர் பொருள் கலைக் கூடமாக, மருத்துவமனையாக, சாலையாக, சோலையாக விளங்குகின்றது.

கோடி கோடிப் பேர்களைக் கெடுப்பதும் பொருளே! கோடி கோடிப் பேர்களை வாழ வைப்பதும் பொருளே. ஆனால், அறவழியில் வந்த பொருளும் அறநெறியாளர் கையில் உள்ள பொருளும் நாட்டின் அழிவுக்கு ஒரு நாளும் பயன்பட மாட்டா அப்படிப் பயன்பட்டால் அவை நல்லோர் பொருள் அல்ல! நச்சுத் தன்மையர் பொருள் எனப்படும்.

## 12. ஈடில்லா ஈகை

*ஈகை என்பது கொடை எனப்படும். கொடை மிகச் சிறந்த பண்பாகும். பிறவியிலே வாய்க்கும் பெருங் குணம் ஈகை என்று சான்றோர் கூறுவர். "கொடையும் தயையும் (அருளும்) பிறவிக் குணம்" என்பது அவர்கள் உரை.*

*பொன்னைக் கொடுப்பதும் கொடையே; பொருளைக் கொடுப்பதும் கொடையே; நல்லுரை வழங்குவதும் நற்றுணை யாவதும் கூடக் கொடையே. ஆனால், அவற்றை ஈடிலாக் கொடை என்று இயம்புதற்கு இயலாது. ஒருவன் தன்னையே கொடுக்கும் கொடையே ஈடிலாக் கொடையாகும்.*

*பத்தாயிரம் ரூபாயுடன் ஒருவன் காட்டு வழி போகின்றான்; கள்வன் இடைமறித்துக் கொள்கிறான். பணத்தைக் கொடுக் கின்றாயா? உன்னைக் கொலை செய்யவா? என்று கூறினால், அவன் பணத்தைப் பறி கொடுத்தாவது தன் உயிரைக் காத்துக் கொள்ளத் தானே விரும்புவான்? பணத்திற்காகவே ஆள்களைக் கடத்திக் கொண்டு செல்கின்றனரே! இவ்வளவு பணம் தந்தால் உயிரோடு விடுவோம்; இல்லாவிடில் கொன்று விடுவோம் என்று எவ்வளவு கொடுமைப்படுத்துகின்றனர்? பணத்தினும் சிறந்தது உயிர் என்பதால் தானே அவர்கள் கேட்கும் பணத்தைத் தந்து தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்கின்றனர்!*

*பணம் போனால் தேடிக் கொள்ளலாம். இழந்த தொகைக்கு மேலும் மிகுதியாகத் தேடிக் கொள்ளலாம். ஆனால், உயிரை இழந்தால் இழந்ததுதானே. கவிமணி அவர்கள் கூறுவது போல் "ஒரு வேந்தன் நினைக்கினும்" இழந்த உயிரை மீட்டுக்கொண்டு வர முடியாதே! இவ்வாறாக இருந்தும் அந்த உயிரைக் கொடுக்கும் கொடையாளர்களும் உலகில் உளர் என்றால் அவர்கள் கொடை தானே ஈடிலாக் கொடை!*

*பொருட் செல்வத்தைப் போற்றாமல் கொடுத்த வள்ளல் குமணன். அவன் நாடு இழந்து காடு புகுந்து வாழ்ந்தான். அவனைக் காணுதற்குப் பெருந்தலைச் சாத்தனார்' என்னும்*

*புலவர் சென்றார். புலவர் போய பொழுது பொருள் பெறுவதற்குப் பொருந்தாத பொழுதுதான்! இருப்பினும் அவர்தம் வறுமை அத்தகைய நிலைமையிலும், அவனை விடாமல் இரக்குமாறு செய்தது.*

*புலவர்க்கு அள்ளி அள்ளி உதவிக் கை சிவந்த வள்ளல் குமணன், தன்னைப் பாடி வந்த புலவர் பரிசில் பெறாமல் மீள வேண்டிய நிலைமை இருப்பதை எண்ணி வருந்தினான்! தன் தலையைக் கொணர்பவர்க்குப் பெருஞ் செல்வம் தருவதாகத் தம்பி அறிவித்து இருப்பதை உணர்ந்தான். ஆதலால், தன் கைவாளைப் புலவர் கையில் தந்து தலைகுனிந்து வெட்டிக் கொண்டு போய்த் தம்பியிடம் கொடுத்துப் பொருள் பெற்றுக் கொள்ளுமாறு ஏவினான். சாத்தனார் ஏற்பரோ? ஏற்காவிடினும் இக்கொடை **தலைக்கொடை** யல்லவா!*

*நாட்டுரிமைக்காக எத்துணை நன்மக்கள் தங்கள் உயிரை நல்கினர்! தாயின் மணிக் கொடியைக் காப்பதற்காகத் **திருப்பூர் குமரன்** தன்னுயிர் தந்து புகழ் கொண்டதை நாடு நன்கு அறியுமே! நாட்டு விடுதலைக் காக **வீரபாண்டியக் கட்ட பொம்மனும்** வீரர் **மருது** இருவரும் நல்லுயிர் தந்த செய்தியை நானிலம் அறியுமே!*

*செந்தமிழ் காப்பதற்காகச் **செம்மல் சின்னசாமி** முதலியோர் செந்தீக்கு இரையாயதைத் தமிழகம் மறக்குமா? தமிழ்நாடு என்னும் பெயரிட வேண்டித் தம்முயிர் தந்த **சங்கரலிங்கனார்** கொடையைத் தமிழகம் மறக்குமா? பகைவர் படை கொண்டு வந்த போது தம் முயிரைப் பொருட்டாக எண்ணாமல் தாய் நாட்டைக் காக்கத் தங்கள் உயிரை வழங்கிய உரவோர்கள் கொடை ஈடிலாக் கொடை அன்றோ! எவராலும் ஈடு கொடுக்க முடியாத கொடை ஈடிலாக் கொடைதானே! இக் கொடையாளர் புகழ்தானே உலகில் ஈடு இணை அற்றது!*

# 13. முள்ளும் தைக்கக் கூடாது

*'தமிழ்' என்பதற்கு 'இனிமை' என்னும் பொருளை நம் முன்னோர் கண்டனர். அக்காட்சி தேன் பால் அமுது என்றும், இணையில்லா இன்பவீடு என்றும் பொருள் கொள்ளுமாறு புலவர்களைத் தூண்டியது.*

*'தமிழர்' என்பதற்கும் 'இனியர்' என்னும் பொருள் கிளர்ந்தது. 'தமிழ் தழீஇய சாயலலர்' என்றார்* **திருத்தக்க தேவர்** *(சீவ. 2026).*

*தமிழர் இனியர் என்பதற்குச் சான்று என்ன? அவர் தம் சாயலே - பண்பாடே - நாகரிகமே - வாழ்வே - இனியர் என்பதை நிறுவும் சான்று.*

*தமிழர் இனியர் என்பதற்கு வாழ்வுச் சான்று வாய்க்கும் நிலையில்தான் பெருமையுண்டு; பேறும் உண்டு. இல்லையேல் போலிப் புகழும் பொருந்தா உரையுமாய்ப் போயொழியும்.*

"கொல்லா நலத்தது நோன்மை; பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு"

*என்பது வள்ளுவர் கண்ட தமிழினியர் தகைமை.*

*"வயல் வரப்பில் அமைந்த வளைக்குள் நண்டும் அதன் பெண்டும் உள. வன்மையாய் வரப்பில் அடி வைத்து நடந்தால் அவை அஞ்சிப் பிரிதல் கூடும். ஆதலால் மெல்ல நட" என்றும்,*

*"பயிரூடு இருந்த குவளை, அல்லிக் களைகளைப் பறித்து வரப்பிலே போட்டுளர். அப் பூக்களை மிதி யாமல் செல்க. ஏனெனில், அதனுள் தேனருந்தப் புகுந்துள்ள ஈக்களைத் துயராக்கும்" என்றும் இயம்புவது* **இளங்கோவடிகள்** *தமிழ் நெஞ்சம்.*

*ஓடும் தேரில் மணி ஒலிக்கிறது. அவ்வொலிக்கு, இணையொடு வாழும் வண்டு அஞ்சுகிறது. ஆதலால், "மணியின் நாவினை ஒலியாமல் இறுக்கிக் கட்டிக் கொண்டு தேரைச் செலுத்துக!" எனத் தன் தேர்ப் பாகனுக்கு ஆணையிடுகிறான் ஒரு தமிழ்த்*

தலைவன். இது **குறுங்குடி மருதனார்** என்னும் பெருந்தகைப் புலவர் கண்ட தமிழினியர் உள்ளம் (அகம். 4).

நம் உடலில் தினவு வந்தால் சொறிகின்றோமே; நமக்குச் சொறியுமாறு எட்டா இடத்தில் தினவு வந்தால் பிறரைச் சொல்லிச் சொறிந்து கொள்கிறோமே; கையும் இல்லா, பேசும் திறமும் இல்லா விலங்கு களுக்குத் தினவு வந்தால் அவை என்ன செய்யும்? என இரங்கி, ஆடுமாடு செல்லும் வழிகளில் ஆஉறிஞ்சு குற்றியை நட்டு வைக்கிறதே இளகிய தமிழ் நெஞ்சம்!

இத்தமிழினிய நெஞ்சங்கள் இன்று என்ன வினாவுகின்றன? 'அந்த உணர்வு எங்கே?' என நம்மை நோக்கி வினாவுகின்றன? 'தமிழர்' என்பார் தமிழுணர் வாளராக இருத்தல் அன்றோ!

தமிழினியர் உள்ளத்தைத் தளிர்ப்புடன் சொல்லும் இவ்வேளையிலேயே "கொள்ளும் பொருள் இல்லை என்றாலும் துள்ளும் உடலைக் கண்டு களிப்பதற்காகவே கொல்லும் கொடியரும் இருந்தனர் என்னும் குறிப்பும் இல்லையோ" என்னும் தமிழறிவாளரும் உளர்.

ஆம்! உண்மையே! மறக்கவும் இல்லை! மறுக்க வும் இல்லை! ஆனால் அக்கொடியரைக் 'கல்லாக் கயவன்' என்றும், 'கல்லாக் களிமகன்' என்றும், 'கல்லினும் வலிய நெஞ்சக் கண்ணிலி' என்றும் இடித்துரைக்கும் சான்றோர் இருந்தனரே! இந்நாளில் அவர் உளரோ?

'கொடுமை' செய்வாரைக் கொடியர் என்று இடித்துக் கூறும் கொடுமை அறியாச் சான்றோர் உளரோ? நல்லது பாராட்டி அல்லது இடித்துரைக்கும் ஆன்றோரும் உளரோ? உருகி நிற்கும் நெஞ்சும், உருக்காகி நிற்கும் உரமும் ஒருங்கே கொண்ட உயர்ந்தோரும் உளரோ?

என் சாதி, என் சமயம், என் கட்சி என்பதால், என்னென்ன கொடுமை செய்வாரையும் கண்டும் காணாமல் போகும் சார்புக் குருடர் இலரா?

என்னலமே என்குறி என்பதால் எத்தகைய கயமை நிகழினும் என்னவென்று கண்டு கொள்ளாமல் ஒட்டிக் கொள்ளும் ஒட்டடைப் பிறவியர் இலரா?

"என் கூட்டில் உள்ளவனா அவன் தூயன்; மாற்றான் கூட்டில் இருப்பவனா அவன் தீயன்" என்று கண்ணை இறுக

மூடிக் கொண்டு உலகறிந்த பொய்ம்மைக்கு இருப்பாகிக் கிடக்கும் தலைமையர் இலரா?

"அறத்தைத் தான் சொல்ல வேண்டும்; ஆனால் அவ்வறம் என் பக்கம் இருப்பதாகவே கூற வேண்டும்; இல்லாக்கால் என் பகையே" என்னும் மூட முனைப்பாரை ஒட்டியிருப்பாரும், உவகையால் பாராட்டும் போலிமை நடிப்பாரும் கூட்டுறவாக இருந்து நாட்டைக் கெடுத்து வரும் போழ்திலே தமிழினியர் உள்ளம் நாணிக் குனியாமல் இருக்குமா? 'அந்த உணர்வு எங்கே?' என்று வினவாமல் இருக்குமா?

வஞ்சக வலை விரிப்பையே வாழ்வாகக் கொண்ட வர்கள் போகட்டும்!

குணக் கேட்டையே கண் கண்ட கடவுளாகக் கொண்டு குலவுவார்கள் ஒழியட்டும்!

கொலை செய்து புதைத்த குழியிலே கொடி முல்லை நட்டு மணங்கொள்ளும் மணவாளர்கள் நீங்கட்டும்!

பொய்ம்மையே பெருக்கிப், போலிமையே நெருக்கிப் புன்மைக்கு இடமாகிப் பொருந்துபவர்கள் தொலையட்டும்!

தமிழ் வாழ்வுடைய தமிழர்க்கேனும் தமிழ்த் தகவு வேண்டாவா? தகவமைந்த தமிழினியரைக் கண்டு வாழ்த்தும் தகவு வேண்டாவா?

ஒரு தலைவன்; வீர மிக்கவன்; அதே பொழுதில் ஈரமும் மிக்கவன். வீரத்தினை எங்கு எப்படிக் காட்ட வேண்டும் என்பதும் அறிவான். ஈரத்தினை எங்கு எப்படிக் காட்ட வேண்டும் என்பதும் அறிவான். ஆதலால், அவனை வீரச் சுற்றம் ஒருபால் சூழ்ந்திருக்கும்; ஈரச் சுற்றமும் ஒருபால் இணைந்திருக்கும். அச் சுற்றங்களுள் பிணக்கம் உண்டாக அவன் நடந்து கொண்டது இல்லை. அவர்கள் பிணங்கியதும் இல்லை. அவன் தேர்ச்சித் திறம் அவ்வாறு பாலமாக இணைத்திருந்தது.

அவன் பெருநிலம் முழுதாளும் வேந்தனும் அல்லன்; குறுநிலங் காக்கும் கொற்றவனும் அல்லன்; சிற்றூர்த் தலைவனே அவன். ஆனால் வேந்தர்களும் விரும்பும் ஏந்து புகழாளனாக இலங்கினான். பொய்யாச் செந்நாவின் புலவர் புகழுக்கு இலக்காகிச் சிறந்தான். **பிட்டங் கொற்றன்** என்பது அவன் பெயர்.

*பிட்டங் கொற்றனுக்கு இப்பெருமை எப்படி ஆயது? "வாழ்வோர் வாழ வாழ்ந்தவன்" அவன் ஆதலால் புகழின் கொள்கலம் ஆனான்.*

*உலகில் எவர் இடரின்றி வாழ வேண்டும்?*

*வாழத் தக்க நல்லோர் அல்லல் எதுவும் இல்லாமல் வாழ வேண்டும். அவர் நல்வாழ்வே உலகின் நல்வாழ்வு. ஆதலால் அவர் நெடிது வாழ்வதற்கு அரண்போல் அமைந்து காக்க வல்லார் கட்டாயம் வேண்டும்.*

*பிறர்க்கென வாழும் பெருந்தகையர் தம்மைக் காத்துக் கொள்ளத் தாம் எண்ணார். அத்தகையர்க்கு உதவிக்காக்கும் கடப்பாட்டாளர் வேண்டும். அவ்வாறு காப்பவரே வாழ்வோர் வாழ வாழ்பவர் ஆவர். அவ்வாறு வாழ்ந்தவன் பிட்டன் என்றால் அவன் மட்டிலாப் புகழுக்கு இருப்பானவன் தானே!*

*பிட்டனைப் பாடிய புலவர் பெருமக்களுள் ஒருவர்* ***கண்ணனார்.*** *அழகுமிக்க கருநீலக் கண்ணர் அவர். காவிரிப் பூம்பட்டினத்தார். முடியுடைய மூவேந்தர் அன்பையும் ஒருபடியாகப் பெற்ற பெருமை யர். அவர் முழுப் பெயர்* ***காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்*** *என்பது.*

*பிட்டன் பெரும் புகழ் கேட்டு அவனை அண்மினார் கண்ணனார். தாம் கேட்டறிந்த புகழ் அனைத்தும் உண்மையே என்பதை உணர்ந்தார். தமக்கு அள்ளி வழங்கிய வள்ளன்மையில் ஒன்றினார். அவ் வொன்றுதல் தந்நலத்தால் ஆயது அன்று. அவர்க்கு எப்படி வழங்கினானோ அப்படியே பிறர்க்கும் வழங்கினான் பிட்டன். அதனால் இப் 'பெருந்தகை பிறர்க்கும் அன்னன்' என்பதை உணர்ந்த பெருமிதத்தில் ஓங்கினார்.*

*"இப்பொழுது தருகிறான். இன்னும் சில நாள் சென்று வரினும் தருவான்; அதற்குப் பின்னரும் முன்னே தந்தேன் எண்ணாமல் மேலும் தருவான்.*

*சென்ற பருவத்தில் கனிதந்தேனே என்று இல்லாமல் பருவந்தோறும் தரும் கனிமரம் போலத் தருவான்.*

*கனிமரத்திற்குக் கூடப் பருவம் என ஒன்று உண்டு. ஆனால் இவன் கொடைக்குப் பருவம் என்பது தானும் இல்லை. எப்பொழுது வேண்டினும் வேண்டுமாறு தருவான்.*

*இவன் நெடிது வாழ வேண்டும், வாழ்வோர் வாழ இவன் நெடிது வாழ வேண்டும். இவன் எடுக்கும் முயற்சிகள் எல்லாம் வெற்றியாய் முடியவேண்டும்" எனப் பலவாறு எண்ணி மகிழ்ந்தார் கண்ணனார்.*

*"என் தந்தை போல்வானாகிய இவனை நான் வாழ்த்துதல் வேண்டும். எப்படி வாழ்த்துவேன்" எனச் சிந்தித்தார். பிட்டனைப் பற்றிப் பாடியவர் பாடல்கள் அவர் நினைவில் நின்றன.*

*"கொல்லன் தன் சம்மட்டியை ஓங்கி ஓங்கி அறைகிறானே உலைக்கல் (பட்டடை)! அவ்வுலைக் கல் அசைகின்றதா? சம்மட்டி எப்படித் தாக்கினால் என்ன? இம்மியும் நடுங்காத உலைக்கல் அன்னவன் பிட்டன்" என்ற* **மருத்துவர் தாமோதரனார்** *பாடல் நினைவில் வந்தது (புறம்.170).*

*"கோசர் என்பார் படைப்பயிற்சியில் சிறந்தவர், அப்பயிற்சிக்காக அகன்ற பெரிய முண்முருங்கை மரத்தைக் கம்பமாக நட்டு அதனை இலக்காக வைத்து வேலும் அம்பும் ஏவிப் பயிற்சி செய்வார். அக்கருவிகளுக்கு இலக்காகிய மரம் போல், பகைவர் படைக் கலம் தைக்கவும் நிமிர்ந்து நிற்கும் வல்லாளன் பிட்டன்" என வியந்து போற்றினார்.*

*'பிட்டன் விழுப்புண் படட்டும்; நேர்தாக்குதலில் நெஞ்சகத்து இடமில்லையாய்ப் படைகள் துளைப் பினும் துளைக்கட்டும். ஆனால் அவன் உள்ளடியில் முள்ளும் தைக்காமல் இருக்கட்டும்' என்று பெருமூச்சு விட்டார்.*

*பிறருக்காக வாழ்பவனுக்கு அவன் அறியாமல் மறைமுகமாக, ஒரு முள்ளும் கூட - அதுவும் புறத்தடி யில் இல்லாமல் உள்ளடியில் கூட - தைத்தல் கூடாது என்னும் கொள்கைச் சிறப்பு என்னே! என்னே!*

*இக்கொள்கையில் ஊன்றியிருந்தால்* **முத்தநாத னியமும் கோட்சேயியமும்** *இன்ன பிற வல்லியங் களும் நாட்டில் தோன்றியிருக்குமா? மாந்தர் நோக மாந்தர் பார்க்கும் வழக்கமும் வாழ்க்கையும் தலைவிரித் தாடுமா?*

"எந்தை உள்ளடி முள்ளும் நோவ உறாற்க"

*என்று கனிவுடன் வேண்டும் காரிக்கண்ணரின், "அந்த உணர்வு எங்கே? எங்கே?"*

# 14. என் வாழ்வும் பெறுக

*வாழ்க!*

*நெடிது வாழ்க!*

*பல்லாண்டு பல்லாண்டு வாழ்க!*

*ஆல்போல் படர்ந்து அறுகுபோல் ஊன்றி அரசுபோல் துளிர்த்து வாழ்க!*

*நூற்றிதழ்த் தாமரை போல வாழ்க!*

*மழைத்துளியினும் மணற் பெருக்கினும் மல்கி வாழ்க!*

இன்னவாறெல்லாம் வாழ்த்துவதை உலகியலிலும் இலக்கிய உலகிலும் கேட்டுளோம்.

வாழ்த்து ஒருவரை வாழவைக்குமா?

வாழவைக்கும் என்பது நம்பிக்கை! வாழ்த்து பவர்க்கும் வாழ்த்தப் பெறுபவர்க்கும் உள்ள நம்பிக்கை! அதனால்தான் மணவாழ்த்து முதல் எத்துணையோ வாழ்த்துகள் வாழ்வில் இடம் பெற்றுள்ளன.

"ஆயிரம் திட்டு ஆனையையும் சாய்க்கும்" என்பது பழமொழி என்றால், "ஆயிரம் வாழ்த்து பூனையையும் யானையாக்கும்" என்பது தானே பொருள்.

வாழ்த்துதலால் வாழ்த்துவோர் வாய் இனிக்கும்; கேட்போர் செவி இனிக்கும், வாழ்த்துக்கு உரியவர் நெஞ்சு இனிக்கும்.

இனியவை கூறுதலே கனியினை அனையது என்றால், செவ்விய இனிய வாழ்த்து ஔவை யுண்ட நெல்லிக்கனி அனையது. அதனால் அன்றே; "நீலமணி மிடற்றொருவன் போல மன்னுக பெரும் நீயே" என்று **ஔவையாரின்** வாழ்த்தைப் பெறும்பேறு பெற்றான் **அதியமான்**.

*கனியால் பெற்ற பேறா அது? கனிவால் பெற்ற பேறா? தான் வாழக் கருதாமல் தண்டமிழ் வாழவாழும் தனியுயர் ஔவை வாழ்தலே தமிழ் வாழ்வெனக் கருதிய தமிழ் வழங்கிய வாழ்த்தே அது.*

*'ஒழிக' என்பதும் வாய்தான்.*

*'வாழ்க' என்பதும் வாய்தான்.*

*வாய்க்கு மணம் தருவது எது?*

*ஒழிகவா? வாழ்கவா?*

*மணம் தருவதைச் சொல்க! சொல்ல முடிய வில்லையா? மணம் தாராததைச் சொல்லாமலேனும் விடுக!*

*அடியாமல் விட்டுவிட்டால், தானே படுத்து விடும் பந்து!*

*ஆட்டாமல் விட்டுவிட்டால், தானே நின்று விடும் ஊசல்!*

*நேரில் காண்பதை நிகழ்த்திக் காட்டுவதுதானே முறைமை!*

*முதியர் இளையரை வாழ்த்துவதா?*

*இளையர் முதியரை வாழ்த்துவதா?*

*இளையர் முதியரை வணங்குவதும், முதியர் இளையரை வாழ்த்துவதும் வழக்கம். அதற்காக இளையர் முதியரை வாழ்த்துதல் கூடாது எனின் முறையன்றாம்.*

*உலகுக்கு மூலமாம் ஒன்றை வாழ்த்துகிறோம். அதற்கு 'இறைவாழ்த்து' என்பது பெயர், நாம் வாழ அதனை வாழ்த்துகிறோம். அதுபோல் பெருமக்களும் நல்லோரும் வாழ்த்தப் பெறுதலால் பெருமையும் நன்மையும் வாழ்த்துப் பெற்று, வாழ்த்துவார் தமக்கே நலம் செய்வதாம்.*

*பன்னீரை இறைத்தால் இறைப்பவனுக்கு மணவாதா?*

*வாழ்த்துக்கு அடிப்படை உள்ளார்ந்த அன்பு. அவ்வன்பு உடையோர் எவரையும் வாழ்த்தலாம். வாழ்த்துக்கு முதுமை இளமை இல்லை! உள்ள முதிர்வே முதிர்வு! நெஞ்ச நெருக்கமே நிறைவு!*

*வாழ்த்துவதன் நோக்கம் எதையும் எதிர் நோக்குதல் - தமக்காக எதிர்நோக்குதல் - அன்று. 'அது கிடைக்கும்' 'இது*

*கிடைக்கும்' என எதிர்பார்த்து வாழ்த்தும் வாழ்த்து வாணிக வாழ்த்து. வாய் வாழ்த்து, வாய்மை வாழ்த்துமாவது வருபயன் கருதாமை யாலேயே!*

*வாழ்த்தின் நோக்கு பலபல அல்ல! ஒன்றே! அது வாழ்த்துதல் என்னும் ஒன்றே!*

*கையசைவே வாழ்த்தா? வாயசைவே வாழ்த்தா? கண்ணசைவே வாழ்த்தா? எதுவானால் என்ன?*

*வாழ்த்துவார் நெஞ்சம் வாழ்த்தப் பெறுவார் நெஞ்சுக்கு நிறைவு செய்வதாய் அமைய வேண்டும்! அதுவே வாழ்த்து!*

*மணிக்கணக்காக வாழ்த்தும் வாழ்த்தில் உண்டாகும் உள்ள உருக்கத்தினும், மணித்துளிப் பொழுது வாழ்த்தும் வாழ்த்திலே உருக்கமிக்கு இருப்பது இல்லையா? அதனினும் கண்மணி அசையும் ஓரசை விலே உண்மை உருக்கம் வெளிப்பட்டு விடுவது இல்லையா? வாழ்த்தின் மதிப்பீட்டுக்கு நெஞ்சத்து அளவேயன்றி வேறு அளவு இன்று!*

*இதோ, ஒரு வாழ்த்து நெடுங்காலத்திற்கு முற்பட்ட வாழ்த்து. ஆனால் காலத்தை வென்று இன்றும் பசுமையாக விளங்கும் வாழ்த்து.*

*வாழ்த்துபவன் முடியுடைய வேந்தன்.*

*வாழ்த்துப் பெறுபவன் அவன் குடிபடைகளுள் ஒருவன்.*

*வாழ்த்துபவன் போரேர் உழவன்.*

*வாழ்த்துப் பெறுபவன் சீரேர் உழவன்.*

*வாழ்த்துபவன் மதிலும் கோட்டையும் மாடமும் கூடமும் மலிந்த மாநகராளி.*

*வாழ்த்துப் பெறுபவன் வயலும் சோலையும் தோட்டமும் துரவும் சூழ்ந்த சிறுகுடியாளி.*

*இத்துணை வேறுபாடுகள் இருப்பினும் நெஞ்சார்ந்த வாழ்த்துப் பிறக்கிறது.*

*நெஞ்சுக்கு வேண்டுவது உண்மை. அதனைக் கண்ட இடத்தில் நெஞ்சு, கொஞ்சி விளையாடுவதும் உண்மை!*

*பெருநடை நடந்து சிறுகுடியை நெருங்குகிறான் வேந்தன். அவன் செல்லும் வழியில் முட்டநிரம்பிய வயிற்றொடு கிட்ட நெருங்கி வருகிறது ஒரு கூட்டம் அவர்கள் அகத்தின் மகிழ்ச்சி முகத்தில் வெளிப்படுகிறது. அவர்கள் பாணிசைத்து வாழும் பாணர்கள்.*

*பாணர்களை நோக்கிய அதேபொழுதில் அவன் செவியில் ஓர் ஒலி கேட்கின்றது. ஒலி மட்டுமோ?*

*முட்டைகளைத் தூக்கிக் கொண்டு திட்டை மேலே ஏறும் எறும்பு வரிசைகள் போலச் சோற்றுக் கலங்களைத் தூக்கிக் கொண்டு இப்பாலும் அப்பாலும் வரிசை வரிசையாகச் சிறுவர்கள் செல்வதையும் காண்கிறான்.*

*"இந்த ஒலி எங்கே இருந்து வருகிறது. இச் சிறுவர்கள் எங்கே இருந்து வருகிறார்கள்? நான் தேடிவரும் சிறுகுடி அணித்தே தோன்றும் இவ்வூரோ? அன்றி வேறோர் ஊரோ?" எனத் திகைக்கிறான். தன் திகைப்பை வினாவாக்கிப்பாணர் களிடம் கேட்கிறான்.*

*பண்ணன் **சிறுகுடி** அதுவே என்றும், பண்ணன் வழங்கிய உணவை உண்டு மகிழ்வார் ஒலியும், கொண்டு செல்வார் வரிசையுமே தான் கேட்பதும் காண்பதும் என்றும் அறிந்து கொள்கிறான்.*

*"நாட்டில் பசியும் பிணியும் பகையும் நலிவும் இல்லாமல் காக்க வேண்டுவது காவலனாம் என்கடன். என்கடனை என்னைப் பார்க்கிலும் இவனல்லனோ நன்றாகச் செய்கின்றான். என் கடனை நானே செய்தலில் என்ன சிறப்பு? என்கடனைச் செய்தேன் என்ற அளவில் ஓர் நிறைவு. அவ்வளவே! ஆனால், இவன் செய்வதோ உயிர் இரக்கம் ஒன்றாலே செய்யும் உயர்வற உயர்ந்த உயர் செயல்! இவனல்லனோ உலகை வாழ வைப்பதற்காக நெடிது வாழ வேண்டியவன்!*

*பண்ணன்! ஆ! ஆ! பண்ணன்! இப்பெயர், எத்துணைப் பேர் இசைத்து மகிழும் பெயர்! இசைந்து வழங்கிய பெயர்!"*

*இசை எவரையும் இசையவைப்பது. இவ் விசை யாளன் தன் இனிய கொடையால் இசை போலவே இசை வைத்துள்ளான்.*

*பண் அன்னவனை எப்பெயரால் அழைப்பது? **பண்ணன்** என்பதே ஆகும். நல்லவற்றைத் தேர்ந்து தேர்ந்து பண்ணும்*

*நல்லோனைப் பண்ணன் என்றது எத்தகைய பொருத்தம்! பண்ணன் வாழ்க! பண்ணவன் வாழ்க! பண்ணையாளனாம் பண்பாளன் வாழ்க!*

*மருத்துவர் என்ன செய்கிறார்? உடற் பிணியைத் தீர்க்கிறார். அப்பிணி தீர்ந்தார்க்கும், பிணி இல் லார்க்கும் தீராப் பிணியாக இருப்பது அன்றோ பசிப்பிணி; அப்பசி, பிணியா? பாழும் பாவி! அப் பாவியின் பிடியில் சிக்குண்டவர் அடையும் துயர்க்கு அளவும் உண்டோ?*

*பசிப்பிணி தீர்ப்போர் அறவோர்; அவர், பிறரையும் அறவோர் ஆக்கும் உயர் அறவோர்!*

*பசிப்பிணி தீர்த்தல் என்பது சோம்பர்களையும் தடியர் களையும் உருவாக்குவது அன்று. அதனைச் செய்யின் சட்டி தூக்கிச் சாய்ந்தழியும் கூட்டமே பெருகும்; நாட்டைக் கெடுக்கும்; உழைப்பவரையும் உழைப்பில் நம்பிக்கை இழக்கச் செய்து ஒழிக்கும்.*

*இப்பண்ணன் பணி, கேட்டைப் பெருக்கும் பணி யன்று; நாட்டைக் காக்கும் பணி. உழைத்து உழைத்து உருக்குலைவோர் வாட்டம் போக்கும் வளப்பணி. ஆதலால் இப்பணி வாழ்க! இப் பணியாளன் வாழ்க!*

*இவனை, 'நீடு வாழ்க' என்பேனா? வாழ்த்து என்பதே அதுதானே!*

*காவலன் கடமையை ஆவலுடன் தானே தாங்கிக் கண்ணெனக் குடிகளைக் காக்கும் இவன், ஒரு சிறந்த காவலன்! ஆதலால் காவலனாம் என் வாழ்நாளையும் இவனே கொண்டு நெடுங்காலம் வாழ்வானாக!*

*என் வாழ்நாள் அளவு எவ்வளவு? எனக்குத் தெரியாது. ஆனால் அதனை முழுமையாக வழங்க உடன்படு கின்றது என் உள்ளம். என்னால் முடிவது அதுவே. இதனை நன்றியுணர்வால் கூறுகிறேன் என்பது இல்லை. நாட்டு வேந்தனாம் நான் பட்டுள்ள கடனைத்தீர்ப்பதற்காகக்கூறுகிறேன்.என்வாழ்நாளையும் இவனே கொண்டு வாழ்வானாக!*

"யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய!"

*ஒருவன் தன் வாழ்நாளை மற்றொருவனுக்குத் தந்து வாழ வைக்கவும் முடியுமோ? 'முடியும்' என ஓரிரு சான்று காட்டுவார் காட்டுக. 'முடியாது' என நாட்டுவார் நாட்டுக!*

*நெஞ்சார்ந்த உணர்வோடு தன் வாழ் நாளைத் தருதற்கும் முந்து வந்து நின்றானே அந்த வேந்தன் கிள்ளிவளவன் அந்த உணர்வு எளிதில் உண்டா வதோ?*

*அலுவலக ஊழியனை அலுவலகத் தலைமையன் ஒருவன் இவ்வாறு நெஞ்சாரப் பாராட்டும் நிலைமை உண்டா? அதுவே அரிதாம் எனின், ஆட்சியில் அமர்ந்தோன்தானா, தன் ஆளுகைக்கு உட்பட்டோனைப் பாடிப் பரவுவான்! பாராட்டிப் போற்றுவான்!*

*பண்ணனைப் பாணாற்றுப்படை பாடிப் பரவிய சோழன்* **கிள்ளி வளவனின்** *"அந்த உணர்வு எங்கே? எங்கே?" என்று நம்முள் வினா எழுகின்றது அன்றோ!*

## 15. நெஞ்சுள் இருப்பவன்

*நெஞ்சுக்கு உலகம் தரும் மதிப்பு மிகுதி.*

*வாழ்வையே 'மனம் போல வாழ்வு' என்பர்.*

*திருமணத்தை 'இருமனம் கூடினால் திருமணம்' என்பர்.*

*நெஞ்சே நேரான சான்று என்பதை, "நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகம் இல்லை" என்பதால் குறிப்பர்.*

*பொய் கூறுதலை விலக்குவாரும், "நெஞ்சாரப் பொய் தன்னைச் சொல்ல வேண்டா" என்பர்.*

*வெறுங் கல்வியுடையவனை, "நெஞ்சிலக்கணம் அறியாதவன் பஞ்சலக்கணம் அறிந்தும் பயனென்ன?" என இழித்துரைப்பர்.*

*"அழகாவது நெஞ்சத்து அழகே" என அறுதியிட்டு உரைப்பர்.*

*முறைமையை வேண்டுவாரும் "நெஞ்சிலே கை வைத்துக் கூறு" என்று ஆணை இடுவர்.*

*"நெஞ்சினால் பிழைப்பு இலாள்" எனப் பாவக் கழுவாய்க்கு நெஞ்சு உதவுதலையும் கூறுவர்.*

*மெய்யுணர்வுப் பெருக்கால் "நெஞ்சம் பெருங் கோயிலாகக் கண்டு நெஞ்சம் உமக்கே" என இறைப் படையலாக்கி இறைஞ்சுவர்.*

*இன்னவை எல்லாம் நெஞ்சுக்கு உலகம் தரும் மதிப்பின் சான்றுகளேயாகும். ஆனால் பலர் வாழ்வில், "நெஞ்சு என்பதொன்றும் உண்டோ?" என்பது வினாவுக்குரிய தாகவே உள்ளது.*

*சுடுசோற்றை அள்ளினாள் ஒரு தலைவி. அள்ளியதை அப்படியே தட்டத்தில் போட்டாள். ஏன்? கை சுட்டு விட்டதா? இல்லை! சுடு நெருப்பிலே சோறாக்கிச் சுடச்சுட வடித்துச் சூட்டிலே இறக்கிச் சுவைப்படுத்தத் தேர்ந்த அவள் கை, சூட்டைத் தாங்காமலா போய்விடும்?*

*சோறு கையைச் சுடவில்லை. நெஞ்சைச் சுட்டு விடுமாம். அப்பஞ்சின் மெல்லியலாளின் நெஞ்சச் சூடு, அவள் நெஞ்சம்கவர் கள்வனாக வீற்றிருக்கும் நேயக் காதலனைச் சுட்டு விடுமாம்! 'அவன் வெந்து விடக் கூடாதே' என நொந்து சுடு சோற்றை அவள் உண்ண வில்லையாம். வள்ளுவர் வரைந்த நெஞ்சக் காதல் கொஞ்சிக்குலவும் ஓவியங்களுள் ஈதொன்று!*

*அவன் எழுதுகிறான் ஓர் ஓவியம். சுவரிலா? இரட்டுத் துணியிலா? தாளிலா? இல்லை. உள்ளத் திரையில் உவகையால் எழுதுகின்றான்.*

*தண்ணீர் வண்ணமோ எண்ணெய் வண்ணமோ எடாமல் தண்ணிய எண்ண வண்ணம் ததும்ப எழுதுகிறான் ஓவியம். எழுதுவதும் எப்படி?*

*"அழகு என்றால் அழகு இதுவே அழகு!" என்று சொக்குமாறு அந்தச் சொக்கன் தன் சொக்கியை எழுதுகின்றான். அப்படிச் 'சொக்குப் பொடி' போட்டு மயக்கியிருக்கிறாள் அச் சொக்கி!*

*எழுதப்பட்ட ஓவியம் எவருக்கோ எழுதப்பட்டதோ? இல்லை! அவனுக்கு என்றே எழுதப்பட்டது. அதனையும் மூடிமறைத்துப் பொதிந்து வைத்துக் கொள்ளாமல் இமைத்த கண் மூடாமல் 'இமையா நாட்டப் பெரியோனாய்' நோக்கிக் கொண்டிருத்தற்கே எழுதுகிறான்.*

*சித்திரத்தில் மலர்ந்த செந்தாமரை சிரிக்குமா?*

*ஓவியத்தில் உள்ளவள் ஓடி ஆடிக் களிப்பாளா?*

*அவள் உயிர் ஓவியமாக விளங்குகிறாள். ஆகலின் காண்கிறாள்; களிக்கிறாள்; நோக்குகிறாள்; நோக்கெதிர் நோக்குகிறாள்; தாக்கணங்காக விளங்குகிறாள். அவள் "ஒருவன் திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிர் ஓவிய"மாகத் திகழ்கிறாள். குமரகுருபரர் குறித்த தெய்வக் காதல் நெஞ்ச ஓவியங் களுள் ஈதொன்று.*

*நெஞ்சம் காதலுக்குத் தானா உறையுள்? சிலர் கொண்டுள்ள சீரிய நட்பு செவ்விய காதலையும் வென்று விடுமோ?*

*காதல், பருவ ஒற்றுமை பால்வேற்றுமை இவற் றிடையே அரும்பி வளர்வது.*

நட்போ பருவ வேற்றுமை பால் வேற்றுமை இவற்றிடையேயும் இனிதின் அரும்பி இலங்கும் இயல்பினது.

காதலோ, புலக்குறும்புக்கு ஓரளவேனும் இடம் தாராது ஒழிவது இல்லை.

நட்போ, புலக்குறும்பு புகுதலும் அறியாப் பொறுப்பில் ஓங்குவது.

இவற்றால், காதலையும் வெற்றி கண்டு விடும் போலும் கனிந்து வளர் நட்பு!

இயற்கைக் காதலும் இனிய நட்பும் முரண்படுபவை போலத் தோன்றினும் இணையானவையே. நட்பு, காதலாம். காதல், நட்பாம். புறப்படும் இடம், போகும் தடம் இவற்றால் சிலச்சில வேறுபாடுகளை யுடையவை எனினும் முடிவில் இரண்டும் ஒன்றான வையே. இத்தகை யதை 'நட்புக் காதல்' என்பதா, 'காதல் நட்பு' என்பதா? எப்படி உரைப்பினும் ஒப்புக் கொள்பவை அவை.

உயர்வற உயர்ந்த ஒரு நட்புக் காதல்.

சென்னை நகரின் ஒருபகுதி **நுங்கன்பாக்கம்.** அது, நுங்கன் என்பான் ஒருவன் பெயரால் அமைந்த பழைமையானதோர் ஊர். சங்க நாளில் வேங்கட மலைப்பகுதியைப் பாங்குடன் ஆட்சி செய்த வேந்தன் ஒருவன் பெயர் **நுங்கன்**. அவன் தந்தை **ஆதன்**. ஆதலால், அவன் 'ஆதனுங்கன்' என வழங்கப்பட்டன.

ஆதனுங்கன் அருங்கொடையாளன். அறிவறிந்த பண்பாளன்; புலவர் தோழமைப் புகழாளன்; அவன் பண்பிலே ஊன்றிப் பாடிய புலவர் **ஆத்திரையன்** என்பார். அவர் **கள்ளில்** என்னும் ஊரினர். ஆதலால், கள்ளில் ஆத்திரையனார் என வழங்கப்பட்டார்.

ஆத்திரையனார் ஆதனுங்கனை ஒருநாள் கண்டார்; களிப்புற்றார்; இருவரும் பெருநண்பினர் ஆயினர். புலவரைப் பிரிய விரும்பாப் பெருநிலையாளனாகத் திகழ்ந்தான். அவன் விருப்பும், விழுமிய அன்பும் புலவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன.

ஆத்திரையனார் ஆதனுங்கனை நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து மகிழ்ந்தார். "உள்ளு தோறும்" உவகை

*ஊற்றெடுக்க உறவாடினார். உரிமை அன்பில் உருகினார். அந்நிலையில் ஆதனுங்கன்.* **"எம்மை உள்ளுமோ"** *(எம்மை நினைப்பீரோ) என வினாவினான். அவ்வினாவினால், ஆத்திரையர் வியப்பும் விம்மிதமும் ஒருங்கே எய்தினார்.*

*"வேந்தே! நின்னை நினைப்பது எப்படி?*

*நின்னை மறந்தால் அன்றோ நினைக்க முடியும்?*

*மன்னவ! நுண்ணிய கருவி கொண்டு என் நெஞ்சைத் திறந்து காணவல்லார் ஒருவர் உளராயின் அவர் அங்கே என்ன காண்பார் என்பதை நீ அறிவையோ? நின்னையே காண்பார்!*

*இன்னும் கேள்:*

*என்னினும் எனக்கு இனியவனே, நீ வினவியவாறு நின்னை மறக்கும் நாளும் உண்டு! அது எந்நாள்?*

*என்னை நானே மறந்தொழிவதாகிய நாள் அது! ஆம்; நான் இறக்கும் நாள் அந்நாள்! என்னை மறக்கும் அப்பொழுதில் எப்படி நின்னை நினைப்பேன்?*

*அண்ணலே! அம்மறப்புக்கு யான் என்ன செய்வேன்? அம்மறப்பும் இல்லாதொழிய வழிவகை உண்டோ? ஏங்குகிறேன்!*

*இரங்கத்தக்க அந்நிலையில் யான் என்ன செய்தல் கூடும்? இயம்புக" என்றார்!*

"எந்தை வாழி! ஆத னுங்க! என்
நெஞ்சம் திறப்போர் நின்காண் குவரே;
நின்னியான் மறப்பின் மறக்கும் காலை
என்னுயிர் யாக்கையின் பிரியும் பொழுதும்
என்னியான் மறப்பின் மறக்குவென்"

*என்பது ஆத்திரையனார் வாக்கு (புறநானூறு.175)*

*அரசன் ஆதனுங்கன்; புலவர் ஆத்திரையனார்.*

*புரவலன் ஒருவன். இரவலர் ஒருவர்.*

*மாடமாளிகையன் ஒருவன்; கூரைக் குடிசையர் ஒருவர்.*

*அண்ணல்யானை,அணிதேர்ப்புரவி ஆட்பெரும்படையன் ஒருவன். ஏடு எழுத்தாணி என வாழும் பாடுதொழிலர் ஒருவர்.*

*இரைவேட்டெழுந்த புலிபோலும் இயல்பாளன் ஒருவன்; கலைந்தோடும் மான் போலும் தன்மையாளர் ஒருவர்.*

*செல்வம், செல்வாக்கு, பட்டம் பதவி, பழக்கம் வழக்கம் இவற்றால் அமைந்த இடைவெளி பெரிதாயினும் நட்புரிமை அவற்றை அகற்றி நெஞ்சந் திறக்கும் நெருக்கத்தை அமைத்து விட்டது. இத்தன்மை எதற்கு உண்டு? காதல் நட்புக்கே உண்டு! அந்த உணர்வு எங்கே? எங்கே? என்று அலமர வைக்கிறது இற்றை உலகம்!*

*வஞ்சமின்றி நெஞ்சந் திறந்து பழகும் நண்பர் எத்துணைப் பேர்?*

*ஒவ்வொரு கோலம். ஒவ்வொரு நோக்கு, ஒவ்வொரு போக்கு, ஒவ்வோர் எதிர்பார்ப்பு, உள் ளொன்று புறம் பொன்றாம் நடிப்பு, உண்மையில்லாப் பசப்பு- என்பனவே நட்புக் கோலம் காட்டிவரும் நாளில்,*

***"என் நெஞ்சந் திறப்போர் நிற்காண்குவரே"***

*என்னும் அந்த உணர்வைத் தேடிக் காண்டலும் உண்டோ?*

*நெஞ்சால் வாழ்ந்த அந்த வாழ்வு எங்கே?*

*அந்த வாழ்வும் வருமோ?*

❖ ❖ ❖

## 2. இருசொல் அழகு

## முன்னுரை

"**இருசொல் அலங்காரம்**" (அழகு) என்பதொரு சிறு சுவடி, அது 1886 ஆம் ஆண்டில் சென்னை சகல கலா நிலைய அச்சுக் கூடத்தில் அச்சிட்டு வெளிவந் துள்ளது.

இந்நூலின் ஆசிரியர் பெயர் குறிக்கப்படவில்லை. திருமயிலை வைதிலிங்க தேசிகரால் பார்வையிடப் பட்டது என்றும், கணலூர் கிருஷ்ணப்ப செட்டியா ரால் பதிப்பிக்கப்பட்டது என்றும் முகப்பில் குறிப்புகள் உள.

இருசொல் அலங்காரம் என்னும் பெயருடைய இந்நூலின் இறுதியில், முச்சொல் அலங்காரம் என்ப தும் இணைக்கப் பட்டுள்ளது. முன்னதில் 105, பின்ன தில் 10 என 115 அலங்காரத் தொடர்களைக் கொண் டுள்ளது.

சிதைவுடன் கிடைத்த இந்நூலில் முதல் 35 அலங்காரங்களும் பின் 62 முதல் இறுதி வரையும் உள்ள வையே கிடைத்தன. 35 - "ஊர்ப்பன்றி கொழுப்பதேன் - உள்ளம் மயங்கித்தி" என்பதன் பின் "சித்திரம் பொன் னிற மாவதேன் என்னும் 62 ஆம் அலங்காரம் உள்ளது. ஆகவே 26 அலங்காரங்கள் கிட்டவில்லை. கிட்டி யவை இச்சுவடியில் உள்ளன.

இருசொல் அலங்காரம் ஒரு நெறிமுறையை மேற் கொண்டுள்ளது. அகரத்தில் தொடங்கி ஆத்திசூடி, கொன்றை வேந்தன் என்பவைபோல அகர நிரலில் செல்கின்றது. ஆதலால் ஊர் என்பது முதல், சித்திரம் என்பது முடிய உள்ளவை எவை என அறியக் கூட வில்லை. சிதைவில்லா நூல் எவரிடமேனும் எங்கேனும் கிடைப்பின் முழுமையாகக் கூடும்.

இப்படியொரு நூல் உண்டு என்பது அறியாத என் இளமைப் பருவத்தில் இவ்வலங்காரத்தில் வருவன போன்ற தொடர்களைக்

கேட்டு மகிழ்ந்துள்ளேன். இதனை அந்நாளில் எனக்குச் சொல்லிக் காட்டிய வர்கள், என் ஆசிரியர்களும் அல்லர்; கற்றுத் தெளிந்த தேர்ச்சியரும் அல்லர். உழவு வேலையில் ஈடுபட்டுள்ள ஒரு வேலைக்காரர் சொன்னார்; திகைப்பும் வியப்பும் ஊட்டினார்.

யான், நான்கு, ஐந்தாம் வகுப்புப் படிக்கும் காலம். ஆதலால் சுவையான செய்திகளைக் கேட்டுக் கொண்ட அளவில் நில்லாமல் உடன் மாணவர்களுக்குக் கூறி, அவர்களைத் திகைப்பிலும் வியப்பிலும் ஆழ்த்துவதில் பெருமிதம் கொள்ளும் பருவம். அதனைச் செய்த என் இளந்தைப் பருவத்தை எண்ணிப் பார்க்க இன்றும் நகைப்பாக உள்ளது.

ஆலிலை உதிர்வதேன்?

இராவழி நடப்பதேன்?

இவ்விரண்டு வினாக்களுக்கும் பொருத்தமாக ஒரே சொல் அல்லது ஒரே தொடர் விடையாக வரவேண் டும். விடை புரியாத நிலையில் இப்படி இருக்குமா, அப்படி இருக்குமா எனத் திகைப்பும், அப்படியொரு விடை கிடைத்துவிட்டால் வியப்பும் ஏற்படுதல் கண்கூடு.

இத் தொடரைக் கூறியவர் திகைப்பூட்டினார். விடை சொல்லத் தெரியாது என்று அறிந்து கொண்ட பூரிப்பாலும் தமக்குத் தெரியும் என்னும் பெருமிதத் தாலும் விடை கூறினார்.

"பறிப்பாரற்று; பறிப்பாரற்று"

என்பது விடை.

ஆலிலையைப் பறித்திருந்தால் பழுத்துத் தானே உதிர்ந்திராது. இரவுப் பொழுதில் நடந்தால், உள்ள வற்றைப் பறித்துக் கொள்ளும் திருடர்களுக்கு ஆட்பட்டு இழக்க நேரும் என்றால் இரவு வழிநடை கொள்ளமாட்டார். ஆதலால் பறிக்கும் திருடர் ஆங்கு இல்லை. இரண்டு வினாக்களுக்கும் வாய்த்த விடை "பறிப்பாரற்று, பறிப்பாரற்று" என்பது பொருந்தி அமைவதாயிற்று.

"பாறை இடிவதேன்?

பாம்பு ஓடுவதேன்?"

என்பது இன்னோர் இருசொல் அழகு. இதன் விடை,

"அடிப்பா ரற்று; அடிப்பா ரற்று"

என்பதாம்.

*பாறையின் அடிப்பகுதி அற்றமையால் இடிந்தது (அடி - பார் - அற்று); அடிப்பவர் இல்லாமையால் பாம்பு ஒடுகிறது. அடிப்பவர் இருந்தால் அடிபட்டு ஓடாதிருக்கும் (அடிப்பார் - அற்று) - என்பதாம்.*

*அடிப்* **பாறை** *என்பதை அடிப்* **பார்** *எனலாமா? எனின், அவ்வாறு சொற்பிழை, வினாவிடைத் தொடர் புப் பிழை என்பவை போற்றப்படாத அமைப்பு, இவ்வமைப்பு, என்பதும் அறிய வேண்டும். எல்லாமும் அப்படியோ எனின், அப்படி இல்லாமல் சீரிய அமைப் பினதும் உண்டு என்பதும், மொழிப் பிழை பற்றிப் பெரிதும் கருதாமல் சொற்சுவை கருதிய அமைப்பு அது என்பதும் தகும்.*

"ஆலிலை உதிர்வதேன்?

ஆவின்கன்று சாவதேன்?"

*என்பதும் இளந்தையில் யான் கேட்டறிந்த தொடர்.*

*இதே, ஆலிலை உதிர்வதேன்? என்ற வினாவும், அதற்கு விடையும் உண்டே எனின், அவ்விடை இதனைத் தொடராாமல் வேறு விடை உண்டு எனக் கொள்ள வேண்டும். அவ்விடை,*

"பாலற்று, பாலற்று"

*என்பது. இலையின் பசுமை மாறிப் பழுப்பு அமைய மூலமாவது ஆலின் உயிரூட்டமான பால். அப் பால் வரவு அற்றுப் போனதால் பழுத்து உதிர்ந்தது. கன்றுக் குட்டிக்குப் பால் விடாமல் கறப்பதனால் அது செத்து விட்டது. ஆகவே "பாலற்று" என்னும் விடை இரண் டற்கும் பொதுவாயிற்று.*

*ஆலிலை பற்றிய இரண்டு இருசொல் அலங்கா ரங்கள் யான் கேட்டவைபோல் இங்கும் இரண்டு உள்ளன. ஆனால் நடைமாற்றமும், விடைமாற்றமும் உள்ளன. இதனால் ஆங்காங்கு வழங்கியவற்றையும், தாம் அமைத்தவற்றையும் சுவடியாக்கி வெளியிட் டுள்ளார் பதிப்பாசிரியர் என்பது புலப்படுகின்றது.*

ஆசிரியர் தொல்காப்பியர் முதுசொல், பிசி என்பவை, பழமொழி எனவும், பிதிர் (புதிர், விடுகதை, அழிகதை) எனவும் கூறுவன இன்றும் மக்கள் வழக்கில் மாறா இளமையாய்ப் போற்றப் பட்டே வருகின்றன. அப் பிசி வகையைச் சார்ந்ததே இவ்விருசொல் அழகு என்க.

ஒரு புலவர் ஒரு வள்ளலைப் பாடினார். வள்ளல் புலவர்க்கு ஒரு குதிரையை வழங்கினார். புலவர் குதிரையோடு வந்தார். வளமான வளர்ப்பிலே இருந்த அது, வறுமைப் புலவர் வளர்ப்பில் மெலிந்து உயிரையும் விட்டது. அவர், "பரிசாகப் பெற்றேன்; பரிசாகப் பெற்றேன்" என்றார். "பரிசு - ஆக - பெற்றேன்" "பரி - சாகப் பெற்றேன்."

என இருவகையாகப் பிரிந்து நின்று பொருள் தருவது "இரட்டுறல்" (சிலேடை) என்னும் அணிநலம் பெறுவதாம். ஆதலால், இரட்டுறல் அணியை அறி வார்க்கு, இருசொல் அலங்கார அமைப்பு பொது மக்கள் வாயில் இயல்பாக வழங்கப் பட்ட அமைப்பு என்பது புலப்படும்.

ஒரு பெரியவர் கைத்தடியோடு வந்தார். எங்கேயோ வைத்துவிட்டுத் தேடினார். ஒரு பாட்டியிடம் "பிரம்பு" (கைக்கம்பு) இருக்கிறதா என்றார். அவர் இயல்பை அறிந்த பாட்டி, பிரம்பு இல்லை என்பதை, "உனக்கு உள்ளம்பு இருந்தால் தானே பிரம்பும் இருக்கும்" என்றார்.

"உள்ளன்பு இருந்தால்தானே பிறர் அன்பும் இருக்கும்" என்பது கொச்சை அல்லது பிழை வடிவில் அவர் வாயில் இருந்து வெளிப்பட்டாலும் எவ்வளவோ பெரிய பண்பாட்டியல் ஓவியக் காட்சியாக அவர் வாய் வழியே தீட்டிக் காட்டப்பட்டு விட்டது அல்லவா!

இம் மண்ணின் மைந்தர் மணமே இருசொல் அலங்காரம் எனப் புலவர்களுக்கு வழிகாட்டியது என உணரலாம்.

இதனை இந்நாளில் தமிழ் மண்ணுக்கு வழங்குபவர், **மாணவர் பதிப்பக** உரிமையாளர் திருவாட்டி **இ. வளர்மதியர்** என்பதும் நயத்தக்க பொருத்த மானவை எனப் பாராட்டி மகிழ்கிறேன்.

**அன்புடன்**
**இரா. இளங்குமரன்**

# காப்பு

"திருவளர் விநாயகன் சேவடி வணங்கி
இருசொல் அலங்காரம் இனிதுரைப் பேனே"

*எடுத்துக் கொண்ட நூல் இனிது முடியவேண்டு மென்று மூத்த பிள்ளையாரை வழிபடுவது பிற்கால நூலாசிரியர் வழக்கம். அவ்வழக்கப்படி இந்நூலாசிரி யர் இக் காப்புப் பாடினார். திரு என்பது மங்கலச் சொல். சேவடி = திருவடி. "இருசொல் அலங்காரம்" - நூற்பெயர்.*

*இருசொல் அலங்கார விடை இரட்டிப்பாக இருத்தலே முறை. ஆனால் அச்சுப் பாடத்தில் ஒன்றாக மட்டுமே இருந்தது. ஆதனால் அவ்வாறே பதிப்பிக்கப்பட்டது. படிப்பவர்* வேலைவிட்டு *(1) என வருவதை இரட்டிப்பாக* "வேலைவிட்டு வேலைவிட்டு" *எனப் படித்துக் கொள்ளலாம். பயன்படுத்தலாம்! இரண்டு வினாக்களுக்கும் இரண்டு விடைகளாக அமைந்து சிறக்கும்.*

# நூல்

**இருசொல்**

**அலங்காரம் : அசுரர் குலம் அழிவதேன்?**

**அரிவையர் துணிகள் கிழிவதேன்?**

**- வேலை விட்டு வேலை விட்டு**

***விளக்கம் :*** *வேல் உடையவன் வேலன். வேல் வழிபாடே படைவீடுகள் வழிபாடு ஆயதாம். வேல் = கருவி (படை). முருகன் வேலை ஏவி சூரன் முதலிய வர்களை அழித்தான் என்பது தொன்மம் (புராணம்)*

*“துணி முள்ளிலே பட்டால் முள்ளுக்குச் சேதமில்லை; துணிக்கே சேதம்” என்பது பழமொழி. வேல் என்பது முள்மரம். கருவேல், வெள்வேல், உடை, ஒட்டடை முள்மரம். கருவேல், வெள்வேல், உடை, ஒட்டடை ஆயவை முள் வகை. வேலி என்பது வேல்முள் அடைப்பாகும். (1)*

**இ-ம் : அச்சுவண்டி ஓடுவதேன்?**

**மச்சான் உறவாவதேன்?**

**- அக்காளையிட்டு அக்காளையிட்டு**

***வி-ம் :*** *அச்சுடைய வண்டி, அச்சுவண்டி. அது, காளை மாட்டைப் பூட்டி ஓட்டப்படுவதாகும். அ + காளை + இட்டு. அந்தக் காளையைப் பூட்டி. உற்றார் = உடன் பிறந்தார்; உறவு = கொண்டு கொடுத்து உறவானவர். அக்காளை மணந்தவர் ‘மச்சான்’ என்னும் உறவினராகிவிடுகிறார். இட்டு = மாலையிட்டு, காரணமாக; கொண்டு. (2)*

**இ-ம் : அந்தணர் சிறப்பதேன்?**

**ஆணிகள் சுழல்வதேன்?**

**- மறையிருந்து மறையிருந்து**

***வி-ம் :*** *அந்தணர் என்போர் அறவோர் என்பது தமிழ்நெறி. அந்நெறி மாறி வேதம் ஓதுவோர் அந்தணர் எனப்பட்ட நிலையில் வெளிப்பட்டது இது. மறை வடமொழி வேதம்; வேதத்தை மனத்தில் கொண்டிருந்து.*

*ஆணியின் தலையில் உள்ள ஊடு பள்ளம் மறை (வரி) ஆகும். அதன்மேல் உளி வைத்துத் திருப்பினால் ஆணியும் சுழலும். மறை + இருந்து.* *(3)*

**இ-ம் : அரக்கர் இலங்கை அழிவதேன்?**

**அடுப்பிற் சாதம் கொதிப்பதேன்?**

**- தீயிட்டு தீயிட்டு**

***வி-ம் :*** *இராவணனால் ஆளப்பட்ட இலங்கை அனுமனால் எரியூட்டி அழிவு செய்யப்பட்டது என்பது இராமாயணம்.*

*அடுப்பில் தீயிட்டு எரித்தலால் உலை கொதித்து, அதில் போடப்பட்ட அரிசியும் கொதித்து, சோறு ஆக்கப்படுகிறது. இரண்டும் தீ இடுதலால் நேர்ந்ததும், நேர்வனவும் ஆம்.* *(4)*

**இ-ம் : அரக்கு பொன்னிற மாவதேன்?**

**அனுமார் இலங்கை போவதேன்?**

**- அரிதாரத்தால் அரிதாரத்தால்**

***வி-ம் :*** *அரக்கைப் பொன்னிறமாக்க 'அரிதாரம்' என்னும் பொடியைத் தூவிக் காய்ச்சுவர். அரிதாரம் + அத்து + ஆல்.*

*அனுமார் இலங்கைக்குச் சென்றது, சீதையைத் தேடுவதற்காக. அரி + தாரம் + அத்து + ஆல். அரி யாகிய இராமன் மனைவியாகிய சீதையைத் தேடிக் காண்பதற்காக. தாரம் = மனைவி.* *(5)*

**இ-ம் : அரிசி எருதில் ஏறுவதேன்?**

**அசடர் உழைக்காது இருப்பதேன்?**

**- சாக்கிட்டு சாக்கிட்டு**

***வி-ம் :*** *கோணிப் பையில் அரிசியை இட்டுக் கட்டி, அதனை எருதின் முதுகில் ஏற்றிச் செல்லுவர். சாக்கு + இட்டு. கோணியில் அள்ளிக்கட்டி.*

*அசடர் = சோம்பேறி. உழைக்காமல் இருப்பதற்காக இல்லாத காரணங்களை இட்டுக்கட்டி உரைப்பது சோம்பேறிகள் வழக்கம். சாக்கு = பொய்க்காரணம்.*

*"காரணம் சொல்பவன் கடமை செய்யான்" (6)*

**இ-ம் : அரைக் கீரை விதைப்பதேன்?**

**அபராதம் வாங்குவதேன்?**

**- கட்டியடித்து கட்டியடித்து**

***வி-ம் :*** *அறுகீரை (அறைக் கீரை). கீரை விதை மிகச் சிறியது. மிக ஆழமாக மண்ணுள் போதலோ, விதை மேல் பெருங்கட்டி கிடத்தலோ முளை ஆகாது பயிரிடும் நிலத்தில் கட்டி இல்லாமல் புழுதியாக்கு தல்கட்டி அடித்தலாம்.*

*திருடு முதலிய குற்றம் செய்தவனைத் தண்டிப்பது கை, காலைக் கட்டிவைத்தோ, ஆளையே கட்டி வைத்தோ நிகழ்த்துதலைக் குறிப்பது. (7)*

**இ-ம் : அரைக்கீரை முளைப்பதேன்?**

**கிளிப்பிள்ளை வளர்ப்பதேன்?**

**-பேசிவிக்க பேசிவிக்க**

***வி-ம்:*** *அறைக் கீரையைப் பயிர் செய்வது விலைபேசி, விற்பதற்காக என்பது; 'பேசி விக்க' எனக் கொச்சை யாயது. அது பேச்சு வழக்கு. சோறு எங்கே விக்கும் (விற்கும்) என்று கேட்க, ஒரு புலவர் தொண்டைக் குள் விக்கும் என்றதை நினைக்கலாம்.*

*கிளிப்பிள்ளை வளர்ப்பது 'பேசுவிக்க' என்பது பேசிவிக்க எனப் பிழையாயது. இரண்டையும் பொருத்த வேண்டி இவ்வாறு வழுப்படுதல் பலவாதல் அறியக் கூடியது. (8)*

**இ-ம்: அரையாப்புக் கட்டி வாங்குவதேன்?**

**அன்னதானம் செய்வதேன்?**

**- சத்திரமிட்டு சத்திரமிட்டு**

***வி-ம்:*** *அரை யாப்புக் கட்டி, தொடையில் வரும் ஒருவகைக் கட்டி. அதனை அகற்றச் செய்யும் அறுவையைச் 'சத்திரம்' என்பார். சல்லியக் கிரியை என்று கல்வெட்டு அதனைக் குறிக்கும். 'உனக்குச் சத்திரம் வைக்க' என்பது வசைச் சொல். சத்திரம் + இட்டு.*

*அன்ன தானச் சத்திரம் பழநாளில் பெருநகரங்களில் எல்லாம் இருந்தது. சத்திரப்பட்டி என்றும் சத்திரம் என்றும் ஊர்ப் பெயர்கள் உண்டு. மதுரை மங்கம்மாள் சத்திரம் புகழ் மிக்கது. "சத்திரத்தில் சாப்பாடு" என்பது பழமொழி. (9)*

**இ-ம்: அவரை பூப்ப தேன்?**

**ஆரூர்த் தேர் ஓடுவ தேன்?**

**- கொடியேறி கொடியேறி**

***வி-ம்:*** *கொடி வகையுள் ஒன்று அவரை. அதற்குப் பந்தல் இட்டு, கொடியை அதில் ஏற்றிப் படர விடுதல் வழக்கம். படர் கொடியாய அது, படராமல் சுருண்டால் பயன்தராது. ஆதலால் பந்தலில் கொடிபடரல் குறித்தது முன்னது.*

*தேர் ஓட்டம் ஊரில் நடைபெற வேண்டுமானால், கோயிலில் திருவிழா நிகழும். திருவிழாவின் தொடக்கமாக நிகழும் நிகழ்ச்சி கொடியேற்றமாகும். ஆதலால் கொடி ஏற்றமாகித் தேர் ஓடுதல் பின்னது ஆயிற்று. (10)*

**இ-ம்: அழகிய மச்சு வீடு இடிவதேன்?**

**அத்தம் உச்சமாவதேன்?**

**- உத்தரம் சாய்ந்து உத்தரம் சாய்ந்து**

***வி-ம்:*** *மச்சு வீடு, மாடிமேல் மாடி எழுப்பப்பட்ட வீடு; மேலுள்ள தளத்தைத் தாங்கும் வலிய பெரிய ஊடு மரம் உத்தரம் ஆகும். அது சாய்ந்து விட்டால் வீடு இடிதல் உறுதியாம்.*

*அத்தம் (அஸ்தம்) ஒரு விண்மீன்; அது உத்தர விண்மீன் மறைந்தபின் உச்சநிலையை அடையும். 'முன்னை உத்தரம். மரக்கட்டை; பின்னை உத்தரம், விண்மீன், சாய்தல் இரண்டற்கும் பொது வினை. (11)*

**இ-ம்: அறுந்த காது கூடுவதேன்?**

**சிறந்த வாழ்க்கை வாடுவதேன்?**

**- தையலை விட்டு தையலை விட்டு**

***வி-ம்:*** *தமிழ்ப் பெண்கள் வழக்கத்தில் காது வளர்த் தல் ஒரு கலை. தண்டட்டி, பாம்படம் முதலியவற்றை அணிந்து வடிந்து வீழ் காதினராக வாழ விரும்பினர். அந்நிலையில் காது*

*அறுமானால் தையல் போட்டு ஒட்டும் வழக்கம் குறிப்பது முன்னது. தைத்தல் தொழில்.*

*அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை என்னும் இல்லறத்திற்கு இல்லாள் இல்லை என்றால் சிறவாது. ஆதலால் தையலாகிய மனையாளை இழந்துவிட்டால் இல்லறச் சிறப்பு ஒழிந்து போகும் என்பது பின்னது. தையல் = பெண், மனையாள். (12)*

**இ-ம்: அறுத்த கொல்லையில் அறுப்பதேன்?**

**அடுத்துக் கடன் கேட்பதேன்?**

**- சீட்டைப் பார்த்து சீட்டைப் பார்த்து**

***வி-ம்:*** *கொல்லை என்பது தோட்டத்து இடம். பெரும்பாலும் கீரை (அறைக் கீரை) பயிரிடுவது வழக்கம். அறுத்த பாத்தியில் மீண்டும் அறுக்க இத்தனை நாள்கள் ஆகும். என்னும் வழக்கம் உண்டு. தேங்காய் பறிக்க, தோப்புகளில் அப்படிக் குறிப்புகள் உள்ளது போன்றது அது.*

*அவ்வாறே இவர் கடன் இன்னும் வரவேண்டும், வந்து விட்டது என்பதை அறிந்து கடன் கேட்கவும் சீட்டை (கணக்குச் சீட்டை)ப் பார்க்கும் வழக்கம் உண்டு. சீட்டுப் பார்த்தல் இருவகைக்கும் பொது. (13)*

**இ-ம்: ஆடவர் தலையாற்றுவதேன்?**

**அரவு விடம் போவதேன்?**

**- குடுமியிட்டு குடுமியிட்டு**

***வி-ம்:*** *ஆடவர் முன்னர்க் குடுமி வைத்திருந்தனர். தலைக் முழுக்குச் செய்தால் குடுமியை இந்நாளில் மகளிர் உலர்த்துவது போல் காற்றில் உலரச் செய்வர். "குடுமி அவிழ்ந்தவனோடு போர் புரிதல் ஆகாது" என்பது போர் நெறி என்பதால் படை வீரரும் குடுமித் தலையராக இருந்தமை புலப்படும் (தொல். நச். உரை).*

*பாம்பு நஞ்சு இறக்கக் கூடிய மருந்து விற்பவன் குடுமி எனப்படுதலும், பாம்பாட்டி 'குடுமி' எனப்படுதலும் உண்டு. அதனால் அவனைக் கொண்டு விடம் போக்குதல் குறித்தது பின்னது. (சான்று: மருத்துவ அகராதி; மரு. சாம்பசிவனார்) (14)*

**இ-ம்: ஆடவர் காது சிறப்பதேன்?**

**அடாத சொல்லைத் தடுப்பதேன்?**

**- ஒட்டிட்டு ஒட்டிட்டு**

***வி-ம்:*** *ஆண்களும் கடுக்கன், குண்டலம் முதலிய காதணிகளை அணிந்து முன்பு பொலிவாகத் தோற் றம் தந்தனர். பொன்னில் முத்துப் பதித்து அணிந்த காதணியைப் பொன்னப்பர், முத்து என்னும் புலவர்கள் "பொன்னும் முத்தும் அழகப்பா" என்ற செய்தி வரலாற்றில் உண்டு. ஒட்டு என்பது காதில் ஒட்டப்படும் அணிகலம்.*

*அடுக்காத பழியைச் சொல்வாரை உண்மை சொல் - சத்தியம் செய் என்பது வழக்கம். கோயிலில் வந்து கூறு என்பதும் உண்டு. இவ் வுண்மைக்கு ஒட்டு என்பது பெயர். ஒட்டாரம் என்பதும் அது. (15)*

**இ-ம்: ஆடு தழை மேய்வதேன்?**

**அதிகாரம் மாறுவதேன்?**

**- துறையிட்டு துறையிட்டு**

***வி-ம்:*** *ஓரிடத்து நின் று மேய்தல் இல்லாதது ஆடு. என்ன பசுமையான இடமாக இருந்தாலும் அங்கே இருந்து அயலிடம் பார்ப்பதே அதன் இயல்பு. இக்கரைக்கு அக்கரை பச்சை என்பது அதன் வழியாக ஏற்பட்ட பழமொழி. துறை = மேய்ச்சல் இடம்.*

*அலுவல் பார்ப்பவர் அலுவல் மாற மாற அதிகாரமும் மாறும். அதிகார மிக்க பணி, அதிகாரமே இல்லாத பணி, ஏந்தான வாய்ப்புப் பணி, எடுபிடியே இல்லாத பணி எனப் பணித்துறைகள் அரசில் உண்டு. அத் துறைக்குத் தக்கவாறு அதிகாரம் மாறுபடும். துறை = பதவி நிலை. (16)*

**இ-ம்: ஆடு கறப்பதேன்?**

**ஐவர் பிறப்பதேன்?**

**- குந்தியிருந்து குந்தியிருந்து**

***வி-ம்:*** *ஆட்டில் பால் கறக்க அதன் மடுவைப் பற்றிக் கறக்குமாறு உட்கார்தல் - குந்தியிருத்தல் - வேண்டும். குந்துதல் = குத்துக்கால் இட்டு இருத்தல்.*

*குந்தி என்பவள் பாண்டு என்பவன் மனைவி. அவள் பிள்ளைகள் பாண்டவர். அவர்கள் தருமன் முதலிய ஐவர். அவர்கள் குந்தி என்பாள் பிள்ளைகள் ஆதலால் குந்தி வயிற்றி லிருந்து பிறந்தவர் என்பதாம். இருதாய் மக்கள் எனினும் ஒரு தாயாகக் கொண்டு உரைத்தது இது. (17)*

**இ–ம்: ஆட்டுக் கறி கசப்பதேன்?**

**ஆண்டி பட்டினி யிருப்பதேன்?**

**– பிச்சை எடாமல் பிச்சை எடாமல்**

***வி-ம்:*** *ஆட்டுக் கறியில் பித்து முதலியவற்றை அகற்றி எடுத்தே கறியாக்குவர். அவற்றை எடுக்காமல் ஆக்கிவிட்டால் கசப்பாக இருக்கும் என்பது முதற் செய்தி. பிச்சு = பித்து.*

*இரண்டாம் செய்தி வெளிப்படை. ஆண்டி, வீடுக ளுக்குச் சென்று பிச்சை வாங்கப் போகாவிட்டால் பட்டுணியாகவே இருக்க வேண்டி வரும்! பட்டி னத்தடிகளைப் போல என் பசிக்கு எடுத்துக் கொண்டு வந்து தாமே தந்தால் அன்றி உண்ணேன் என எத்தனை பேர் இருக்க முடியும்? (18)*

**இ–ம்: ஆட்டுக் குட்டி ஊட்டுவதேன்?**

**அரிசி கடன் வாங்குவதேன்?**

**– முட்டிமுட்டி முட்டிமுட்டி**

***வி-ம்:*** *ஆட்டின் மடுவில் இருந்த பாலைக் குட்டி முட்டாமலே குடிக்கும். மேலும் தேவை என்றால் முட்டி முட்டிப் பால் சுரக்கச் செய்து குடிக்கும். முட்டி முட்டி என்பது அடுக்கு.*

*சட்டி முட்டி என்பது இணைச் சொல். சட்டியில் சிறியது முட்டி. தட்டு முட்டு என்பது அத்தகையதே. முட்டியில் இருக்கும் அரிசி இல்லை என்றால் அதனைக் கொண்டுபோய் அடுத்த வீட்டில் அளவாக வாங்கி வந்து, அளவாகத் தருவது வழக்கம். அது குறி எதிர்ப்பு எனப்படுதல் இலக்கிய வழக்கு. கொண்டு மாற்று என்பது மக்கள் வழக்கு. (19)*

**இ–ம்: ஆயம் எவரும் இறுப்பதேன்?**

**அரிவையர் கால் விரல் சிவப்பதேன்?**

**– மெட்டை இட்டு மெட்டை இட்டு**

*வி-ம்: மெட்டை என்பது ஆயத்துறை. கடல் வழியாக வரும் பொருள் மேடேறும்; மேட்டில் இருந்த பொருள் கடலில் இறங்கும். இரண்டும் மெட்டை வழியேதான் செல்ல வேண்டும். அப்படிச் சென்றால் மெட்டையின் முத்திரையோடு சென்றதாம். மற்றவை கடத்தல் குற்றம் உடையவை. மெட்டை - ஆயத்துறை. இறுத்தல் = செலுத்துதல்.*

*அணிகலங்களுள் ஒன்று மெட்டி. மகளிர் காலில் அணிவது. அதுவும் திருமணம் கொண்டவர் என்பதன் அடையாளம். அது விரலில் இறுக்கமாக அணியப்படுவதால் விரல் சிவந்து தோன்றும். (20)*

**இ-ம்: ஆரைச் சுவர் கட்டுவதேன்?**

**ஆண்டி குல்லா போடுவதேன்?**

**– தலைமறைய தலைமறைய**

***வி-ம் :*** *ஆரைச் சுவர் = சுற்றுச் சுவர். குளிக்க கழிக்க உரிய இடம் எனினும், வீட்டுச் சுற்று எனினும், அரண்மனை கோயில் எனினும் மறைப்புச் சுவர் எழுப்பப்படுதல் உண்டு. ஆரை என்பது மதில் என்றும் மறைவு என்றும், வளைவு, வேலி என்றும் பொருள் தரும்.*

*குடும்பத்தவனாக இருந்த ஒருவன், வீட்டுச் சோறுண்டு வாழ்ந்த ஒருவன் பிச்சை எடுக்கத் தெருவுக்குப் போக நேர்ந்தால் அடையாளம் தெரியாமல் இருக்க, தலைப்பாகை, முக்காடு, குல்லா என புனைதல் வழக்கம். எல்லாம் இன்னார் என்பதை மறைத்துக் கொள்ளத்தான்.*

*இனி, பிச்சை எடுப்பவன் கும்பிடு போடுதலையும் பின்னது குறிக்கும். (21)*

**இ-ம் : ஆலிலை பழுப்பதேன்?**

**இராவழி நடப்பதேன்?**

**– பறிப்பாரற்று பறிப்பாரற்று**

***வி-ம்:*** *ஆலிலையைப் பறித்துத் தைத்து உண்ணும் இலையாகப் பயன்படுத்துதல் உண்டு. அப்படிப் பயன்படுத்தினால் இலை பசுமையாக இருக்கும் போதே பறிக்கப்பட்டு விடும். அது பழுக்க நேராது. ஆதலால் பறிப்பார் இல்லாமையால் நேர்ந்தது அது.*

*இரவுப் பொழுதில் நடந்தால் வழிப்பறிக்கு ஆட்பட நேரும் என்றால் இரவில் வழிநடக்க மாட்டார். இரவில் வழி நடந்தால் வழிப்பறி செய்வார் இல்லை என்பது பொருளாம். பறிப்பார் = இலைபறிப்பார்; வழிப்பறி செய்வார். (22)*

**இ-ம்: ஆலிலை பறிப்பதேன்?**

**அனுமார் இலங்கைக்குப் போவதேன்?**

**- தையலை யிட்டு தையலை யிட்டு**

***வி-ம்:*** *ஆலிலையைத் தைத்து உண்கலமாகப் பயன் படுத்துவார் அதனைப் பறிப்பர். அது பொதுமரம். எல்லாரும் தேவைக்குப் பயன்படுத்த வாய்த்தது. செலவற்றது. அதனைப் பறித்துக் காம்பு வெட்டி, சோளத் தட்டை ஈர்க்கால் தைத்து உண்கலமாக்கிக் கொள்ளல் சிற்றூர் வழக்கம். தையல் = தைத்தல் தொழில்.*

*அனுமார் இலங்கைக்குச் சென்றது சீதை அங்கே இருக்கிறாளா? என்பதைக் காண்பதற்கேயாம். ஆதலால் சீதை என்னும் பெண்ணைப் பார்க்க வேண்டிச் சென்றார். தையல் = பெண். (23)*

**இ-ம்: ஆழப்பட வெட்டுவதேன்?**

**நேரப்படக் குத்துவதேன்?**

**- தண்ணீர் காண தண்ணீர் காண**

***வி-ம்:*** *வெட்டுதல், கிணறு வெட்டுதல். நன்செய் புன் செய்ப் பயிர்களுக்கு நீர் விடுதற்கு ஆறு, கால் இல்லா நிலையில் கிணறே பயன்படும். கிணற்றில் தண்ணீர் காணும் அளவும், தம் தேவைக்குத் தண்ணீர் கிடைக்கும் அளவும் ஆழமாகத் தோண்டலும் வெட்டலும் வேட்டுப் போடலும் (வெடிவைத் தல்) கம்பி போட்டுக் குடைதலும் வழக்கம். எதற்காக வெட்டுதல், குத்துதல் எனின் தண்ணீர் காண்பதற்கு என்பதாம்.*

*இலை தழைகளில் சாறு கொள்ள விரும்புவார் நெடுநேரம் இடித்துப் பிழிவு கொள்வதை எண்ணலாம். வேறு வகையும் கருதுவர் போலும்! (24)*

**இ-ம்: ஆறிடம் கொள்வதேன்?**

**வாய்மதம் பேசுவதேன்?**

**- தடுப்பாரற்று தடுப்பாரற்று**

*வி-ம்: காட்டு ஆறு, கட்டற்ற சேதமாக்கும். கரையை இடிக்கும் வெள்ளமும், ஊரை அழிக்கும் வெள்ளமும் உண்டு. வெள்ளத் தனைய இடும்பை என்பது வள்ளுவம். வலுவான அணை கட்டினாலும் தாங்காவெள்ளம் வரும்போது, அந்நீரைப் பிரித்துக் கொள்ளுமாறு செய்த ஆறே கொள்ளிடம் என்பதாம். மேல் நீர் கொள்ள அமைந்த இடம் கொள்ளிடம். அது வெள்ளத் தடுப்பு ஆகும்.*

*சிலர் தட்டிக் கேட்க ஆள் இல்லை என்றால் குதித்துக் குதித்து ஓங்கி ஓங்கிப் பேசுவர். அவரை அடக்கும் ஒருவரைக் கண்டதும், வாலை ஒடுக்கு வதுபோல் வாயை ஒடுக்கிக் கொள்வர். தடுப்பார் = தடுப்பவர். (25)*

**இ-ம்: இந்து நிறைவதேன்?**

**இராமன் சீதையைப் பிரிவதேன்?**

**- கலையினால் கலையினால்**

*வி-ம்: இந்து = நிலவு. பிறை மதியாகத் தோற்றம் தந்து நிறைமதியாக வளரும் நிலையைக் 'கலை' என்பர். நாள்தோறும் வளர்தலும் தேய்தலும் கலை எனப்படுதலைக் குறிப்பது முன்னது. சீதை வனத்தில் இருக்கும் போது மாரீசன் மானின் வடிவாக வந் தான். மாயமானைக் கண்டு மயங்கிய சீதை அதனைப் பிடித்துத் தருமாறு வற்புறுத்தினாள். அம் மானின் மாயத்தால் இராமன் சீதையைப் பிரிய நேர்ந்தது. கலை = மான். (26)*

**இ-ம்: இந்து மறைவதேன்?**

**இலங்கை அழிவதேன்?**

**- இராமன் தாரத்தால் இராமன் தாரத்தால்**

*வி-ம் : இராமன் = கதிரோன். தாரம் (அவதாரம்) தோற்றம். கதிரவன் தோன்றியதால் நிலவின் ஒளி மறைந்து போனது. நிலவு பகலில் இருந்தாலும் அதன் ஒளியோ இருப்போ புலப்படுதல் அரிது ஆதலால் மறைவு எனப்பட்டது.*

*இராமன் பிறந்ததே அரக்கரை - இலங்கையை - அழிக்க என்பது தொன்மம் (புராணம்). ஆதலால் இலங்கை அழிவு கூறப்பட்டது.* *(27)*

**இ-ம்: இருப்புக் கொப்பரை யாவதேன்?**

**யாவரும் சந்தை யேறுவதேன்?**

**- கொள்ளவிக்க கொள்ளவிக்க**

***வி-ம் :*** *கொப்பரை என்பது அண்டா. பெருஞ் சமையலுக்குப் பயன்படும் ஏனம். அது இரும்பால் செய்யப்படுவதும் உண்டு. அதனால் இருப்(ம்)புக் கொப்பரை எனப்படும்.*

*கொள் குதிரை விரும்பி உண்ணும் உணவு. அதற்குப் பெரிய கொப்பரையில் போட்டே அவிப்பர். ஆதலால், கொள் அவிக்க எனப்பட்டது.*

*சந்தைக்குப் பொருள் கொள்ள (வாங்க) விற்க (விக்க) எவரும் செல்வார் என்பதாம்.* *(28)*

**இ-ம்: இருமா வீச மாவதேன்?**

**இறைக்கும் ஏத்தம் நிற்பதேன்?**

**- முக்காணி போல் முக்காணி போல்**

***வி-ம் :*** *இருமா = இரண்டு மா என்னும் பழங்கால அளவு. 20 மா ஒன்று. முக்காணி என்பதும் சிற்றிலக்கத்துள் ஒன்று. இரண்டு மா அளவில் முக்காணி அளவு போய் விட்டால் வீசம் என்னும் அளவு ஆகும். ஆதலால் முக்காணி அளவு குறைந்து போயதைக் கூறுவது முதலது.*

*இறைக்கும் ஏற்றத்தில் முக்காணி என்பது ஓர் உறுப்பு. இறைசாலையும் வடத்தையும் இணைத்துக் கட்டும் இரும்புச் சங்கிலி. திருகு வளையம் உள்ளது. அது கெட்டுப் போனால் சரி செய்தே ஏற்றம் இறைக்க முடியும்.* *(29)*

**இ-ம் : இளமையில் பிள்ளை கெடுவதேன்?**

**எங்கும் மரங்கள் வீழ்வதேன்?**

**- அடியற்று அடியற்று**

***வி-ம் :*** *“அடித்து வளர்க்காத பிள்ளையும் திருக்கி வளர்க்காத மீசையும்” என்றும், “அடி உதவுவது போல் அண்ணன் தம்பி*

*உதவ மாட்டான்" என்றும், "அடியாத பிள்ளை படியாது" என்றும் வழங்கும் பழமொழிகளே முன்னதன் விளக்கம்.*

*மரங்கள் வேர்ப் பிடிப்பு நன்றாக இருந்தால் பெருங் காற்றிலும் வீழா. அடி - வேர்ப்பிடிப்பு - அற்றுப் போனால் காற்று இல்லாமலும் வீழும். ஆற்றங்கரை மரம் ஆற்றரிப்பால் வீழலும் காணலாம். அடி = வேர்; அடியற்று = வேரற்று. (30)*

**இ-ம்: ஈசுவர வருடம் பிறப்பதேன்?**

**இருந்தாற் போலிருந்து சாவதேன்?**

**- தாதுபோய் தாதுபோய்**

***வி-ம் :*** *அறுபது ஆண்டு என்னும் வரிசையில் தாது என்னும் ஆண்டுக்கு அடுத்த ஆண்டு ஈசுவர ஆண்டாகும். ஆதலால் அவ்வருடம் பிறக்க தாது வருடம் போய்விடும் என்பதாம்.*

*உயிர் ஊட்டமாவது தாது எனப்படும். அத் தாது இல்லாமல் போய்விட்டால் வேறு நோய் நொடி இல்லாமலும், இருப்பார் போல் தோன்றி இல்லாமல் போய்விடுவார் என்பதாம். (31)*

**இ-ம்: உயர்ந்த மெத்தை மீது ஏறுவதேன்?**

**உலை வாய்க்கு அரிசி இடுவதேன்?**

**- படிகொண்டு படிகொண்டு**

***வி-ம் :*** *மெத்தை = மாடி. மாடிமேல் ஏறுவதற்கு ஏணிப்படி வேண்டும். அல்லது படிக்கட்டு வேண்டும். இந் நாள் போல் முன்னாளில் 'தூக்கி' (லிப்ட்) என்பது இல்லை. ஆதலால் படி கொண்டே ஏறவாய்த்தது.*

*பொங்கி ஆக்கும் உலையில் அரிசி இவ்வளவு எனப் படியால் அளந்தே இடுவர். படி என்பது நாழி என்னும் முகத்தல் அளவுக் கருவி. அரைப்படி, கால்படி, அரைக்கால்படி, மாகாணிப் படி, பெரும் படி, சிறுபடி என்பவை இருந்தன. பெரிய அளவைக் கருவி மரக்கால். (32)*

**இ-ம்: உழுத சேறு கிடப்பதேன்?**

**ஓங்கிய சீனி சாய்வதேன்?**

**- நடுவாரற்று நடுவாரற்று**

***வி-ம் :*** *சேறுபட உழுதல் என்பதால் நெல் நடவு செய்யும் நன்செய் நிலம் அது. நன்செய் நடவுக்கு நடும் தேர்ச்சி யுடையவர் இல்லாமல் முடியாது. ஆதலால் நடவு செய்வார் கிடையாமையால் உழுத சேறு நடப்படாமல் கிடப்பதாயிற்று.*

*சீனி என்பது படகில் உள்ள பாய்மரத் தூண்; அதில் இழுத்துக் கட்டப்படுவதே பாய் ஆகும். பாயையும் தூணையும் இணைக்கும் கட்டு கயிறு 'நடு வார்' ஆகும். அது, அறுந்து போனால் பாய் சாய்ந்து விடும். நடுவார் = ஊடு கட்டு வார்.(33)*

**இ-ம்: ஊரில் வியாபாரம் நடப்பதேன்?**

**உடம்பு சுளுக்கு வாங்குவதேன்?**

**- செட்டியினால் செட்டியினால்**

***வி-ம் :*** *செட்டு = வாணிகம். அதனைச் செய்பவர் செட்டியார் எனப்பட்டனர்.* ***தொழில் வழிப் பெயர்களே சாதிப் பெயரானமை இது.*** *ஊரில் வணிகம் நிகழ்வது, வணிகராலேயே யாம் என்னும் பொருள் மக்கள் வழக்கில் உண்டு.*

*நரம்பு திடுமென்று இடமாறியோ வளைந்தோ போவதே சுளுக்கு ஆகும். அதனை நீவியும் மருந்து பூசியும் சரிசெய்வர். செட்டும் செட்டி எனப்பட்டது ஒருமைப்படுத்தும் வகையிலேயாம். (34)*

**இ-ம்: ஊர்ப்பன்றி கொழுப்பதேன்?**

**உள்ளம் மயங்கித் தி(ரிவதேன்?)**

**- மலமிக்கதனால் மலமிக்கதனால்**

***வி-ம் :*** *மக்கள் கழிப்பு, பன்றி உணவாகக் கொள்ளும் நிலைமை சிற்றூர்களில் இருப்பதால் மலம் மிகுந்தால் பன்றி கொழுக்கும் எனப்பட்டது.*

*மக்களுக்கும் உள்ளம் நெறியற்றுச் செல்ல மும் மலங்களே மூலம் என்பது சைவ சமயக் கொள்கை. அவை ஆணவம், கன்மம், மாயை என்பர். இம் மலங்களின் மிகையே உள்ளம் நெறிகெட்டுச் செல்லச் செய்வதாம்.*

*முன்னது: கழிவாகிய மலம்; உடற்சார்பு*

*பின்னது: மயக்குவதாம் மலம்; உளச்சார்பு. (35)*

**இ-ம் : சித்திரம் பொன்னிற மாவதேன்?**

**சீரான லங்கை எரிவதேன்?**

**- அரிதாரத்தால் அரிதாரத்தால்**

***வி-ம்:*** *மாற்றுக் குறைந்த மாழை (சித்திரம்) எரியூட்டிக் காய வைத்து அரிதாரம் என்னும் பொடியைத் தூவுதலால் பொன்னாகக் காட்சிவழங்கும். இது, அரக்கு பொன்னிறமாவதேன் என முன்னும் கூறப்பட்டு 'அரிதாரம்' என்னும் விடையும் தரப்பட்டது (5) சிறப்புமிக்க இலங்கை அரியின் (இராமனின்) தாரத்தால் (மனையாளாய சீதையால்) எரியூட் டப்பட்ட தாம். அங்கே (5) "அனுமார் இலங்கை போவதேன்" எனப்பட்டது. (36)*

**இ-ம் : சிறிய ஊர் பட்டண மாவதேன்?**

**வெறியர் மயங்கித் திரிவதேன்?**

**- குடியேறி குடியேறி**

***வி-ம் :*** *சிற்றூர்களில் வாழ்பவர் கல்வி, தொழில், பதவி வாய்ப்பு முதலியவற்றின் காரணமாகத் தம் ஊர்களை விட்டுப் பட்டண வாழ்வினராகின்றனர். அவர்கள் குடியேறுவதால் மக்கள் பெருகி நகராய், மாநகராய் விரிவாகின்றது.*

*வெறியர் என்பார் குடியின் மீது மிகு விருப்புடையவர். ஓயாமலும் மிகவும் குடித்தலால் மதி மயங்கிக் கிடக்கும் இடம், நிலை என்பவை அறியாமல் கிடக்கின்றனர். அதற்குக் காரணம் குடி(ப்பு) ஏறுதலாம். (37)*

**இ-ம்: சிறுக்கி காது பருப்பதேன்?**

**தெருவில் பந்தல் போடுவதேன்?**

**- ஓலையிட்டு ஓலையிட்டு**

***வி-ம் :*** *சிறுக்கி - சிறுமி, சிறுபெண். முன்னாளில் காது குத்தி முதற்கண் பழுப்பு, தக்கை ஆகியவை வைத்து, அதன்பின் ஓலையிடுவது வழக்கம். ஓலை என்பது பனை ஓலை. அதுவே காதோலை, தாலி, குடவோலை, ஓலைச் சீட்டு, நூற் சுவடி ஆகியவற்றுக்குப் பயன்பட்டது.*

*தெருவில் போடும் பந்தலுக்கும் ஓலை பயன்பட்டது. குடிசை முகடு ஓலையால் வேயப்பட்டது. கீற்றினும் வலியது ஓலையாம். (38)*

***குறிப்பு :*** *அடுத்துவரும் இருசொல் அலங்காரம் ஐந்து, சொல்லழகு கொண்டிருந்தும், பொருள் இடக் கரடக்குக் கொண்டு இருப்பதால் இவ்வரிசையில் சேர்க்காமல் தள்ளப் பட்டன. பண்பாட்டுச் சிதைவுக் கதை, படம், ஓவியம், காவியம், கலைகள் ஆகியவற்றைத் தீண்டாமைப் பொருளாகத் தள்ளும் நிலை நாட்டில் ஏற்படாமல் பழம் பெருமை சொல்லல் இழிமையைப் பெருக்கிக் காட்டவே உதவும் என்பதால் விலக்கப்பட்டன. ஐந்தும் சிறுக்கியை முன் வைத்துச் சொல்லப் பட்டவையாம். பின்னும் இத்தகையன விலக்கப்பட்டன.*

**இ-ம் : சீதையை இராமன் பிரிந்ததேன்?**

**துரியனுக்குத் தீம்பு வந்ததேன்?**

**– அம்மானையிட்டு அம்மானையிட்டு**

*வி-ம் : சீதையை இராமன் மாரீசன் என்னும் மாய மானால் பிரிந்தான். அம்மான் என்பதை அ + மான் எனப் பிரித்து அந்த மான் அல்லது அழகிய மான் எனப் பொருள் கொள்ள வேண்டும்.*

*துரியன் = துரியோதனன். அவனுக்கு மாமன் சகுனி என்பவன். சகுனியே சூதுபோர் செய்து பாண் டவரை வெல்லலாம் என வழி கூறி நடத்திக் காட்டியவன். அதனால் துரியோதனன் முதலியவர் அனைவரும் அழிந்தனர். அம்மான் = மாமன்.* *(39)*

**இ-ம்: சீநீர் வடிவதேன்?**

**சிவன் பிச்சை எடுப்பதேன்?**

**– சிரசை யிட்டு சிரசை யிட்டு**

***வி-ம் :*** *சீநீர் = சீழ்நீர். காதில் இருந்து வழியும் நீர் 'சீழ் நீர்' எனப்படும். அது காதின் உள்ளாகத் தலைப் பகுதியில் உண்டாகும் அழற்சி நோயின் நீராகும். சிரசு = தலை.*

*சிவன் கையில் கொண்டு பிச்சை எடுப்பது நான் முகனின் மண்டையோடு என்பது தொன்மக் கதை. ஐந்து தலைகளுள் ஒன்றைத் திருகி எடுத்தபின் நான்முகன் ஆனான் என்பது அது.* *(40)*

**இ-ம்: செல்லாப் பணம் செல்லுவதேன்?**

**செம்பருந்து பறப்பதேன்?**

**– வட்டமிட்டு வட்டமிட்டு**

***வி-ம் :*** *குறையில்லாததும் அரசு முத்திரை உள்ளதுமாம் பணம் செல்லும் பணம். அவற்றில் குறை யுடைய பணம் செல்லாப் பணம். செல்லாப் பணத்தைச் செலுத்த நினைப்பார் வட்டக் காசு (தள்ளுபடிக்காசு) தந்து மாற்றிவிடுவர். வட்டம் = வட்டக் காசு; ஒரு ரூபாயை முக்கால் ரூபா, அரை ரூபா என மாற்றல்.*

*பருந்து நேராகப் பறந்து செல்லாமல் வட்டமிட்டுப் பறப்பதே வழக்கம். அதன் வட்டம் கீழே கிடக்கும் உணவு பற்றிய பார்வையதாகவும் இருக்கும். (41)*

**இ-ம் : தனந்தேடி உண்ணாமல் புதைப்பதேன்?**

**தரணியில் அமரபட்ச மாவதேன்?**

**- மதிகுறைந்து மதிகுறைந்து**

*வி-ம் : பொருளைத் தேடுவது உணவு, உடை முதலியவற்றில் தட்டு இல்லாத வாழ்க்கை கொள்வதற்கே. ஆனால் சிலர் பாடுபட்டுத் தேடிய பணத்தைப் பயன்படுத்தாமல் கருமித்தனமாக வாழ்வர். அப்பணம் கள்வர்க்கோ பிறர்க்கோதான் பயன்படும். இதற்குக் காரணம் அவர்களின் அறிவுக் குறைவேயாம். மதி = அறிவு.*

*அமரபட்சம் என்பது முழுமதி நாளில் இருந்து தேய்ந்து கொண்டே வந்து காருவா எனப்படும் அமாவாசை நாளாதல். மதியாகிய நிலவு, குறைந்து வருவதால் நேர்வது இது. (42)*

**இ-ம் : தாதன் பிச்சை எடுப்பதேன்?**

**தண்டனைக் குட்பட்டிருப்பதேன்?**

**- தப்பையிட்டு தப்பையிட்டு**

***வி-ம் :*** *தாதன் = அடிமை. தமக்கென எந்த உரிமை யும் இல்லாமல் சிலரை அடிமையாளாகக் கொண்டது பழங் காலத்தில் உலகளாவிய நிலையில் இருந்தது. அவர்கள் வீடு நிலம் இல்லாமல் 'தப்பு' என்னும் பறையைக் கொட்டிப் பிச்சை எடுத்து உண்டு வாழ்ந்தனர். தப்பு = தோற்பறைகளுள் ஒன்று.*

*ஒருவருக்குத் தண்டனை கொடுக்க வேண்டுமானால் அவர் ஏதோ ஒரு தப்பு (பிழை, குற்றம்) செய்தவராக இருக்க வேண்டும். அத் தப்புக்காகத் தண்டிக்கப்பட் டான் என்பதாம். (43)*

**இ-ம்: தாரைக் கபகீர்த்தி வந்ததேன்?**

**தக்கோர் எனப் பேர் படைப்பதேன்?**

**- மதியினால் மதியினால்**

***வி-ம் :*** *தாரை = தேவ குரு எனப்படும் வியாழனின் மனைவி தாரை. அபகீர்த்தி = பழி. அவள், குருவின் மாணவனாம் திங்களை விரும்பிப் பழிகொண்டாள் என்பது தொன்ம (புராண)க் கதை மதி = திங்கள்.*

*தக்கோர் = தகுதியானவர். சான்றோர் அவையிலும் பொதுமக்கள் முன்னும் தக்க பெருமைக் குரியவர் என்று பாராட்டடப்படுவது அவர்தம் அறிவுச் சிறப்பாலேயாகும். மதி = அறிவு.* *(44)*

**இ-ம்: திங்கள் வருவதேன்?**

**திருவிளக் கேற்றுவதேன்?**

**- ஞாயிறு போய் ஞாயிறு போய்**

***வி-ம் :*** *திங்கள் = நிலவு, திங்கள் கிழமை.*

*ஞாயிற்றுக் கிழமை போய்விட்டால் திங்கள் கிழமை வரும். இது, உலக முழுவதும் உள்ள வழக்கம் ஆகும்.*

*ஞாயிறு = கதிரோன். கதிரோன் மறைந்து இருள் வரத் தொடங்கும் மாலைப் பொழுதில் வீடுகளில் விளக்கேற்றுதல் வழக்கம். இவ்விளக்கு குத்து விளக்கு ஆகும். இல்லுறை தெய்வமாக விளக்கேற்றி வழிபடுவதால் திருவிளக்கு எனப்பட்டது.* *(45)*

**இ-ம்: திருடனென்று கட்டுவதேன்?**

**திரண்டமயிர் சடையாவதேன்?**

**- சிக்கினால் சிக்கினால்**

***வி-ம் :*** *திருடியவனைக் கையும் களவுமாகக் கண்டு பிடித்தால் தான் திருடன் ஆவான். தப்பிப் போய்விட்டால் திருடவில்லை என்று சாதிப்பான். ஆதலால் அவன் சிக்கினால் தான் - பிடிபட்டால் தான் - திருடன் ஆவான். அவனைக் கட்டிவைத்து ஊர்க் கூட்டத்தில் நிறுத்துவது பழைய வழக்க மாகும்.*

*முடி ஒன்றோடு ஒன்று சேர்வது அழுக்குப் பிடிப்ப தாலே யாகும். சிக்கு என்பது அழுக்கு. சீப்பு, போட முடியாது. சிக்கு வாரியாலும் எடுக்க முடியாமல் சடையாகிவிடும். (46)*

**இ-ம்: திருப்பதி மலைக்குப் போவதேன்?**

**தேவதாசி என்றாவதேன்?**

**- படியேறி படியேறி**

***வி-ம் :*** *திருப்பதிக் கோயிலுக்குப் போக வேண்டு மானால் மலையில் உள்ள படிகளில் ஏறியே ஆக வேண்டும். மகிழ்வுந்து போன்றவற்றில் சென்றாலும் கோயிலுக்குள் போக, படியேறியே ஆக வேண்டும்.*

*தேவதாசி என்பவர் கோயில் பணியாளர். அவர்கள் தேவ அடியார் எனவும் பட்டனர். பின்னர் அச் சொல்லே பெரும் பழிச் சொல்லாகிவிட்டது! அவளை விரும்பியவர் படிகளில் ஏறியமையால் அப்பழி யாயிற்று. (47)*

**இ-ம்: தும்பிக்கையானைத் தொழுவதேன்?**

**கம்பத்து ஏர்கள் உழுவதேன்?**

**-கொழுக் கட்டையிட்டு கொழுக் கட்டையிட்டு**

***வி-ம் :*** *தும்பிக்கையான் = மூத்த பிள்ளையார்; பிள்ளையார் என்பவரும் அவர். அவரைத் தொழுவார், கொழுக்கட்டை செய்து படைப்பர். அவர்க்கு விருப்பமானது என்றும் கூறுவர். மதுரையில் முக்குறுணிப் பிள்ளையார் என ஒரு பிள்ளையார். அவர்க்கு 18 லிட்டர் அரிசியில் ஒரு கொழுக்கட்டை செய்து படைப்பர்.*

*கம்பம் = தடி, ஏர்க்கால். ஏர்க்காலில் கலப்பைக் குத்தியும், அக்கலப்பைக் கத்தியில் கொழு எனப்படும் இரும்புக் கம்பியும் இருக்கும். கொழுவும் கட்டையும் கொழு, கட்டை. (48)*

**இ-ம் : தேகத்தில் நோயுற்று மெலிவதேன்?**

**தேசத்தில் மழைபெய்து சிறப்பதேன்?**

**- மேகத்தால் மேகத்தால்**

***வி-ம் :*** *தேகம் = உடல். மேகம் என்பது ஒருவகை நோய். மேகநோய் எனப்படும். அந் நோயுடையவர் உடல் தேறாமல் மெலிந்து தொல்லைப்படுவர்.*

*மேகம் என்பதற்கு மழை பெய்யும் மேகம் என்னும் பொருளும் உண்டு. நாட்டில் மழை பெய்து வளமும் வாழ்வும் சிறப்பது அந்த மேகத்தாலேயே ஆகும். மேகச் சிறப்பே வான்சிறப்பு என்பதாம்.* *(49)*

**இ-ம் :** **தேரோடுவதேன்?**

**திண்ணை மெழுகுவதேன்?**

**- அச்சாணியிட்டு அச்சாணியிட்டு**

***வி-ம் :*** *தேர் எவ்வளவு பெரியது சிறியது எனினும் அது, நகர்வதற்கு அச்சாணி (அச்சு ஆணி) வேண்டும். அச்சாணி இல்லாத வண்டி முச்சாணும் ஓடாது என்பது பழமொழி.*

*பழங்கால வீடுகளின் தளம், திண்ணை ஆகியவை மண்ணால் அமைந்தவை. அவற்றின் வலுக் குறையாமல் இருக்க, பசுச் சாணமோ, காளையின் சாணமோ இட்டு மெழுகுவது பழக்கம். அ + சாணி = அச்சாணி. இடுதல் இரண்டற்கும் பொது.* *(50)*

**இ-ம் :** **நாட்டிற் பஞ்சாங்கம் திரிவதேன்?**

**பாட்டும் சுற்றும் வருவதேன்?**

**- பார்ப்பாரையிட்டு பார்ப்பாரையிட்டு**

***வி-ம் :*** *நாள் கோள் பார்த்துக் கணிப்பவரைப் பார்ப்பார், பார்ப்பனர் என்றனர். சோதிடம் பார்ப்ப வர், குறிபார்ப்பவர் என்பதே வழக்கம். பார்ப்பவரைப், பார்ப்பனர் என்றனர். பின்னர் சாதிப் பெயராக்கப் பட்டது.*

*பஞ்சாங்கம் நடைமுறையில் இருப்பதற்குக் காரணம் அதனைப் பார்ப்பவர் இருப்பதேயாம். அவ்வாறே பாட்டு ஆராய்ந்து பார்ப்பதும் நாடு கண்டு சுற்றிப் பார்ப்பதும் பார்ப்பவர் இருப்பதா லேயே ஆகும்.* *(51)*

**இ-ம்:** **நாட்டில் உழவு நடப்பதேன்?**

**மூட்டை ஒருவன் எடுப்பதேன்?**

**- கலப்பையாலே கலப்பையாலே**

***வி-ம் :*** *நாட்டில் உழவுத் தொழில் நடப்பது கலப்பை எனப்படும் ஏராலேயே ஆகும். ஏர்க் கலப்பை என்பதும் அதன் பெயரே. மண்ணை உழுது கலக்கச் செய்யும் கருவி கலப்பையாயிற்று.*

*கலம் = ஒரு முகத்தல் அளவு. 12 மரக்கால் அளவு அது. படி அல்லது நாழி என்பது நான்கு கொண்டது மரக்கால் ஆதலால் 48 படி பிடிக்கும் பை - கோணிப்பை - கலப்பை ஆகும். (52)*

**இ-ம் : நொண்டி நடந்து போவதேன்?**

**மண்டி யெடுப்பதேன்?**

**– மரக்காலையிட்டு மரக்காலையிட்டு**

***வி-ம் :*** *கால் முடமாகிப் போதல் நொண்டி எனப் படும். அத்தகையவர்க்கு மரத்தால் கால்போல் செய்து, உள்ள காலொடு பொருத்தி நடையிடச் செய்வது வழக்கம். மரம் + கால் = மரக்கால்.*

*களத்தில் இருந்து நெல்லை மூட்டையாக்குவதற்காக அளப்பவர் மண்டிக்கால் போட்டு - காலை மடக்கிக் குந்தியிருந்து - அளத்தல் வழக்கம். அளக்கும் கருவியின் பெயர் மரக்கால் ஆகும். (53)*

**இ-ம் : பசுவின் பால் கெடுவதேன்?**

**பாரில் கூடம் குவிவதேன்?**

**– கையையிட்டு கையையிட்டு**

***வி-ம் :*** *பசுவின் பால் தூயதாக இருந்தாலும் அது வைக்கப் பட்ட கலத்தின் தூய்மைக் குறைவாலோ, அதற்குள் விடும் கையின் தூய்மைக் குறைவாலோ பால் கெட்டுப் போதல் உண்டு. அதனைக் குறிப்பது முன்னது.*

*கூரை வீடு கட்டுபவர் மேலே கூடம் அமைப்பதற்குக் கைம் மரம் அல்லது வளைக்கை வைப்பர். அதன் மேல் கம்பு வரிச்சுக் கட்டி வேய்வர். இதற்குப் பயன் கை வளை அல்லது கைம் மரம் என்பதாம். (54)*

**இ-ம் : பறிக்கும் அரும்பு மணப்பதேன்?**

**இறைக்கும் ஏற்றம் விழுவதேன்?**

**– மடல் விரிந்து மடல் விரிந்து**

***வி-ம் :*** *அரும்பு நிலையில் மணம் இருப்பினும் வெளிப் படாது. இதழ் (மடல்) விரிந்தால் மணம் வெளிப்பட்டுக் காற்று வழியே பரவும்.*

*இறைக்கும் ஏற்றத்தைத் தாங்கும் தூணின் இரு பக்கமும் மடல் உண்டு. அம் மடலில் உள்ள துளையில் ஏற்றச் சட்டம் தாங்கி நிற்கும். மடல் விரிந்து விட்டால் ஏற்றம் சாய்ந்து போகும்.* *(55)*

**இ-ம் : பாம்பு ஓடுவதேன்?**

**பாறை இடிவதேன்?**

**- அடிப்பாரற்று அடிப்பாரற்று**

***வி-ம் :*** *பாம்பு அச்சமின்றிப் போய்க் கொண்டிருந் தால் அதனை அடிப்பவர் இல்லை என்பது பொருளாம். அடிப்பவர் இருந்தால் மறைந்து பதுங்கிவிடும். அடிப்பார் + அற்று.*

*பாறை இடிய வேண்டுமானால், அதன் அடிப்பகுதி அற்றுப் போயிருக்க வேண்டும். அப்படிப் போயிருந்தால்தான் இடிந்துவிழும். பாறை என்பது 'பார்' எனப்பட்டது.* *(56)*

**இ-ம்: பாரிற் பெட்டி திறப்பதேன்?**

**பயிர்செய் குடிகள் நைவதேன்?**

**- சாவியினால் சாவியினால்**

***வி-ம் :*** *பெட்டியைத் திறப்பதற்கு வேண்டும் கருவி திறவு கோல் எனப்படும் சாவி. ஒவ்வொரு பூட்டுக்கும் அதற்குரிய சாவி போட்டுத் திறத்தல் வேண்டும் என்பதற்கே தனித்தனி உருவாக்கம் செய்கின்றனர். இங்கே சாவி திறவு கோல்.*

*பயிரில் சாவி என்பது பயிர் கதிர்விட்டு, கதிர்மணி பிடியாமல் செத்துப் போவதாகும். மணி பிடியா மையைச் சாவி என்பது உழவர் வழக்கம். மணியில்லாக் கதிர் கண்ட உழவன் வருந்தாமல் இருப்பானா?* *(57)*

**இ-ம் : பாற்கடலன்று கடைவதேன்?**

**பாரிற் களவு பிடிப்பதேன்?**

**- மந்தரத்தால் மந்தரத்தால்**

***வி-ம் :*** *தொன்மத்தில் (புராணத்தில்) பாற் கடல் கடைந்த கதை சொல்லப்படும். பாற் கடலைக் கடைய மந்தரம் என்னும் மலையை மத்தாகக் கொண்டதாகக் கூறுவர். அதைக் குறிப்பது முன்னது.*

*இன்னார் களவு செய்தார் என்பது புலப்படாத போது மந்திரவாதிகளிடம் சென்று குறிகேட்டுக் கண்டுபிடித்தல் என ஒரு வழக்கம் உண்டு. அதனைக் குறிப்பது பின்னது. (58)*

**இ-ம்: பானைச் சாதம் குறைவதேன்?**

**பாரில் தண்ணீர் மொள்ளுவதேன்?**

**- தோண்டியிட்டு தோண்டியிட்டு**

***வி-ம் :*** *பானையில் உள்ள சோற்றைத் தோண்டி (அள்ளி) வழங்கினால் குறையத்தானே செய்யும் பானையில்! எடுக்க எடுக்கக் குறையாமல் நிறையவா செய்யும் சோற்றுப் பானை? ஊற்றாக இருந்தால் மணலையோ மண்ணையோ தோண்டத் தோண்ட நிலத்தடி நீர் ஊறும். தோண்டி என்னும் கலையத்தைப் போட்டுத் தண்ணீரை முகந்து பயன்படுத்த லாம். தோண்டுதல், வினை; தோண்டி, பெயர் (கலையம்). (59)*

**இ-ம் : புருடரைப் பெருமைப் படுத்துவதேன்?**

**பூசாரி பிச்சை எடுப்பதேன்?**

**- உடுக்கையினால் உடுக்கையினால்**

***வி-ம் :*** *ஆள்பாதி ஆடைபாதி என்பது பழமொழி. பொருந்திய உடை பொலிவை மிகப்படுத்தும் என்பது முன்னது உடுக்கை என்பது உடை. பின்னுள்ள உடுக்கை உடுக்கு ஆகும்.*

*உடுக்கடித்துப் பாடிக் கொண்டு இருப்பதைக் காண்பவர் காசு போடும் வழக்கத்தை நினைவூட்டு வது பின்னது.*

*பூசை செய்பவர் இதனைச் செய்யார். இவர் பூசாரி பாடும் பாட்டுப் பாடுவார். (60)*

**இ-ம்: பொன் மாற்றுப் பார்ப்பதேன்?**

**பொட்டி பலகை சேர்ப்பதேன்?**

**- ஆணிவைத்து ஆணிவைத்து**

***வி-ம் :*** *பொன்னின் தர மதிப்பீடு மாற்று எனப்படும். மதிப்பீடு செய்து அதற்கு அடையாளமாக 'ஆணி' அடையாளம் (முத்திரை) இடுவர். அப் பொன் ஆணிப் பொன் எனப்படும். அப் பொன் மாற்றுக் குறையாததாகும்.*

*பெட்டி சேர்ப்பதற்கு மூலப் பொருளாகிய பலகையை அளவாக எடுத்து இழைத்துச் சேர்மானம் செய்து ஆணி அடிப்பர். ஆதலால் இரண்டும் ஆணி வைக்கப்படும் என்பதாம். (61)*

**இ-ம்: மத யானை நடப்பதேன்?**

**வயலில் தண்ணீர் பாய்வதேன்?**

**- தோட்டியினால் தோட்டியினால்**

***வி-ம் :*** *மதயானை அடங்காமல் செல்லும். பாகன் அங்குசம் எனப்படும் தோட்டி கொண்டு அதன் போக்கைக் கட்டுப்படுத்தி நிறுத்துவான். தன்னியல்புக்கு வந்து கட்டுப்படச் செய்வது தோட்டியே யாகும்.*

*தோட்டி என்பது கால் வரத்துத் தண்ணீரைக் கணக்கிட்டு வயலுக்குப் பாய்ச்சும் கரை காவலன் பெயர் ஆகும். அதனைக் குறிப்பது பின்னது. (62)*

**இ-ம்: மாடு கறப்பதேன்?**

**மல்யுத்தம் பண்ணுவதேன்?**

**- மடிபிடித்து மடிபிடித்து**

***வி-ம் :*** *மாட்டில் பால் கறக்க வேண்டுமானால் அதன் மடியை - மடுவைப் பிடித்துக் கறக்க வேண்டும். மடி என்பது காம்பு ஆகும். மற்போர் செய்வாரும் அப்போரில் கால் கைகளை மடித்தல் பிடித்தல் வகைகளைக் கையாள்வர். மடி பிடித்தல் மடக்குதலும் பிடித்தலும் மடி பிடித்து எனப்படும். (63)*

**இ-ம்: முக்காற் பணம் முழுப்பணம் ஆவதேன்?**

**மொண்டிமாடு தண்ணீர் குடிப்பதேன்?**

**- கால்கூடி கால்கூடி**

***வி-ம் :*** *முக்கால் என்பது முழுமையாகிய ஒன்று ஆக வேண்டும் எனின் இன்னும் கால் சேர வேண்டும். கால் பணம் கூடினால் முக்கால் பணம், முழுப்பணம் ஆகிவிடும்.*

*மொண்டி என்பது நொண்டி. மோனை கருதிக் கொச்சை வடிவாகியது. இவ்வாறு வேறு இடங்களிலும் உண்டு. நடவா மாடாகிய நொண்டி மாட்டின் கால் வலியோ முடமோ சரியாகி விட்டால் நடந்து போய்த் தண்ணீர் குடிக்கும். கால், உறுப்பு.(64)*

**இ-ம்:** **முதுகு நீர் ஊத்துவதேன்?**

**முழுப்புண் ஆறுவதேன்?**

**- சீமந்தத்தால் சீமந்தத்தால்**

***வி-ம் :*** *சீமந்தம் என்பது கருவுற்ற மகளிர்க்கு ஆறாம் மாதத்தில் உச்சி எடுத்து, முதுகில் நீர் சொரியும் நிகழ்வைக் குறிப்பதாகும்.*

*ஒரு புண் முழுவதாக ஆறிவிட்டது என்பதற்கு அடையாளம் உள்ளிருந்து நீர், சீழ் ஆயவை வருதல் இன்றி நின்றுவிடல் வேண்டும். சீ(ழ்) மந்தம் = சீழ் இல்லாமல் போதல். (65)*

**இ-ம் :** **மூடன் கற்றோன் ஆவதேன்?**

**முழுப் புடவை நெய்வதேன்?**

**- நூல் மிகுத்து நூல் மிகுத்து**

***வி-ம் :*** *அறியாமை உடையவனும் அக்கறையுடன் முயன்று பல நூல்களைக் கற்றால் அறிவாளியாகி விடுவான் இது, அறிவு நூல் மிகுதியாகக் கற்பதால் உண்டாவது.*

*ஆடை நூல் மிகுதியாக இருந்தால் முழுப் புடவை என அந் நாளில் சொல்லப்பட்ட 16 முழப் புடவை நெய்து விடலாம் என்பது. மிகுத்து = மிகுதியாகி. (66)*

**இ-ம் :** **மேதினி எங்கும் செழிப்பதேன்?**

**மெய்யெல்லாம் கொப்பளிப்பதேன்?**

**- மாரியினால் மாரியினால்**

***வி-ம் :*** *உலகம் எல்லாம் விளைவுமிக்க வளம் சிறக்கக் காரணமாக இருப்பது மழையே (மாரியே) ஆகும். மாரி அல்லது காரியம் இல்லை என்பது முன்னோர் சொல். அதனைச் சொல்வது முன்னது.*

*மெய் = உடல். உடலெல்லாம் கொப்புளம் கொள்வது அம்மை எனப்படும் மாரியாலேயாம். அம்மையை மாரியம்மை என்பர். மழையின்றி வெப்பும் குருவும் தொடர என்பது சிலப்பதிகாரம். (67)*

**இ-ம் :** **மோட்டு வளைகள் மறைவதேன்?**

**மோர்க்குடம் அடியில் ஒழுகுவதேன்?**

**- ஓட்டையிட்டு ஓட்டையிட்டு**

***வி-ம் :*** *மோடு = முகடு. வளை பரப்பிய முகடுகள் வானம் பாராது மறைக்கப்பட வேண்டுமானால் ஓடு பரப்பி வேயப்பட வேண்டும் என்பது முன்னது.*

*மோர்க்குடம் கீழே ஒழுகிப் போவதானால் அக் குடத்தில் ஓட்டை ஏற்பட்டிருக்க வேண்டும் என்பது பின்னது. (68)*

**இ-ம்: வக்கா பட்சி பறப்பதேன்?**

**மாற்றான் கழுத்தை அறுப்பதேன்?**

**- கத்தி கொண்டு கத்தி கொண்டு**

***வி-ம் :*** *வக்கா என்னும் பறவை ஒலி செய்து கொண்டே பறக்கும். கத்தி = ஒலித்து.*

*மாற்றான் = பகைவன். பகைவனை அழிக்க நினைப் பவன் கத்தியால் அவன் கழுத்தை அறுத்துக் கொல் வான் என்பது பின்னது. கத்தி = கருவி. (69)*

**இ-ம் : வடகம் உலகில் இடுவதேன்?**

**வந்த படைகள் ஓடுவதேன்?**

**- வங்காரமிட்டு வங்காரமிட்டு**

***வி-ம் :*** *வடகம் என்பது வெங்காயம் கடுகு முதலிய வற்றை - காரச் சரக்குகள் சிலவற்றை இட்டு அரைத்துக் காயவைத்துச் செய்யப்படும் தொடுகறி.*

*சண்டைக்கு வந்த படைகள் வலிய படை முன் நிற்க முடியாமல் புறமுதுகு காட்டினால் பேரொலி செய்து கொண்டு ஓடுவர். வங்காரம் = வலிய ஒலி. (70)*

**இ-ம்: வரகு சோறு சமைப்பதேன்?**

**வானோர் முனிவர் துதிப்பதேன்?**

**- அரிசிவந்தான் அரிசிவந்தான்**

***வி-ம் :*** *வரகு என்பது ஓர் உணவுப்பயிர். அதில் கதிர் உண்டாகி மணிபிடித்தால் அதனைச் சோறாக்கி உண்பர். "வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்" என்பது ஔவையார் பாட்டு.*

*"அரிசி வந்தால்" இறுதி லகரம் னகரம் ஆயது.*

*வானவரும் முனிவரும் வணங்குவது அரி என்பதும் சிவம் என்பதும் தான். அரி + சிவம் = தான். (71)*

**இ-ம் : வாலி இறப்பதேன்?**

**வௌவால் விழுவதேன்?**

**- அம்புருவி அம்புருவி**

*வி-ம் : வாலி இராமன் ஏவிய அம்பு உடலைத் துளைத்துச் சென்றதால் உயிர் நீங்கினான். அம்பு + உருவி.*

*வௌவால் இயல்பு வௌவுதல். வௌவுதலாவது பற்றிக் கொள்ளல் ஆகும். அப் பற்றுதல் சரியாக இல்லை எனின் விழுதல் இயல்பு. அம்பு = அப்பு. அப்புதல் = பற்றிக் கொள்ளுதல். உருவி = தவறி விழுந்து. (72)*

**இ-ம் : வாழைக் குலை சாய்வதேன்?**

**மாதர் கொண்டை முடிப்பதேன்?**

**- சீப்பிட்டு சீப்பிட்டு**

***வி-ம் :*** *வாழை குலை தள்ளி அதிலுள்ள சீப்புகள் மிகுந்து முற்றிப் போனால் கனம் தாழாமல் சாய்ந்துவிடும். சீப்பு = வாழைப் பழ அடுக்கமைப்பு.*

*மாதர் = மகளிர். கூந்தலை முடிப்பதற்கு மகளிர் சீப்பை எடுத்துச் சீவுதல் வழக்கம். கூந்தல் வாரும் சீப்பு அது. (73)*

**இ-ம் : விநாயகனைத் தொழுவதேன்?**

**வெள்ளாடு வளர்ப்பதேன்?**

**- குட்டி கொண்டு குட்டி கொண்டு**

***வி-ம் :*** *விநாயகனைத் தொழுபவர் தோப்புக்கரணம் போட்டுத் தலையில் கையால் குட்டிக் கொள்வது வழக்கம். அதனைக் குறித்தது முன்னது.*

*வெள்ளாடு வளர்ப்பவர் அவ்வாறு குட்டிபோட்டுப் பெருகினால் பணம் சேரும் என்னும் விருப்பாலே வளர்ப்பது வழக்கம். குட்டி கொண்டு = குட்டி பெற்றுப் பெருக வேண்டும் என்பது எண்ணி. (74)*

**இ-ம்: வீதியில் மனிதர் புரளுவதேன்?**

**வீடுகள் எங்கும் நிறைவதேன்?**

**- குடிமிகுந்து குடிமிகுந்து**

***வி-ம் :*** *மது வகைகளை மட்டோடு குடித்துக் கொள்பவர் தங்கள் வீடுகளுக்குப் போய்ச் சேரும் அளவு தெளிவினராக இருப்பர். அம் மட்டு இன்றிக் குடிப்பவர் வீதிகளிலே எப்படிக் கிடக்கிறோம் என்பதும் தெரியாமல் கிடப்பர்.*

*குடி = மதுக் குடிப்பு. ஒவ்வோர் ஊரிலும் மக்கள் பெருக்கம் உண்டானால் அதற்குத்தக வீடுகளும் பெருகவே நேரும். குடி = குடியிருக்கும் மக்கள். (75)*

**இ-ம் : வெந்த கறி மணப்பதேன்?**

**வேந்தர்படை முரிவதேன்?**

**- பெருங்காயத்தால் பெருங்காயத்தால்**

***வி-ம் :*** *வெந்த கறியில் பெருங்காயப் பொடி தூவி னால் உள்ள மணத்தை மேலும் உயர்த்திக் காட்டும். அதற்குப் பயன்படுவது பெருங்காயம் என்னும் கூட்டுச் சரக்கு.*

*வேந்தர் படை போர்க்களம் வந்து புறமுதுகிடக் காரணம் பகைவர் படையின் தாக்குதலால் உண்டாகிய பெரிய புண்களாலேயே ஆகும். காயம் = புண். (76)*

**இ-ம்: வெற்றிலை சுமப்பதேன்?**

**வேந்தர் சரணடைவதேன்?**

**- கோட்டையிட்டு கோட்டையிட்டு**

***வி-ம் :*** *வெற்றிலையைப் பறித்துச் சீராக அடுக்கி, அவ் வடுக்குகளைக் கூடை, வாழை மட்டை ஆகியவற்றில் தக்கவாறு அடுக்கிக் கட்டாக்கிச் சுமந்து செல்வது குறித்தது முன்னது.*

*அரசர் தம் கோட்டையைப் போரில் வெற்றி கொண்ட அரசரிடம் ஒப்படைத்து அவர் அடிக்கீழ் நிற்பது உண்டு. அதனைக் குறித்தது பின்னது. கோட்டை = மதில். (77)*

***குறிப்பு : 78 முதல் 100 முடிய உள்ள 23 இரு சொல் அழகுகளும் புதிதாக எம்மால் இயற்றி விளக்கம்தரப்பட்டவை. (பு-ம்)***

*எண்ணிக்கையால் நூறாக்கல் கருதியது மட்டு மன்று இது. இப்படிப் புனைய இதனைப் படிப் பார்க்கும் இயலும் என்பதைத் தூண்டவே இது செய்யப்பட்டதாம்.*

**பு-ம் : அரிசி மாவு புளித்ததேன்?**

**அந்தப் பிள்ளை அரண்டதேன்?**

**- ஆட்டிவைக்க ஆட்டிவைக்க**

*வி-ம் : அரிசியை மாவாக ஆட்டி வைத்தால் வெப்பத்தால் புளிப்பு ஏற்படும். அதற்கு அரிசியை ஆட்டி (அரைத்து) வைக்க வேண்டும்.*

*அடித்துமிரட்டித் துடிக்கச் செய்வதில்சிலர்க்கு இன்பமுண்டு. அவர்கள் அலைக்களிப்பாளர். அவரைக் கண்டாலே குழந்தைகள் அஞ்சி நடுங்கும். ஆட்டி வைத்தல் = அலைக்கழித்தல். (78)*

**பு-ம் : அழகு வண்டி ஓடுவதேன்?**

**அரிய நீறு ஆவதேன்?**

**- அச்சாணியால் அச்சாணியால்**

***வி-ம் :*** *எந்த வண்டி எனினும் அச்சாணி வேண்டும். அச்சு + ஆணி = அச்சாணி. தேருக்கும் அச்சாணி உண்டு. நடை வண்டிக்கும் உண்டு.*

*அரிய நீறு = அருமையான திருநீறு. அதனைச் சாணி யாலேதான் செய்வர். ஆதலால் மூலப் பொருள் அதுவாகும். அ + சாணி = அச்சாணி. (79)*

**பு-ம் : ஆய்வுக்காகச் சென்ற தெங்கே?**

**ஆசைக்காக முத்திய தெங்கே?**

**- செவ்வாய்க்கு செவ்வாய்க்கு**

*வி-ம் : அறிவியல் ஆய்வாளர்கள் திங்களை ஆய்ந்தனர். இதுகால் செவ்வாய் என்னும் கோளினை ஆய விண் ஓடம் செலுத்துகின்றனர். அதனைக் குறிப்பது முன்னது. செவ்வாய் = கோளின் பெயர்.*

*ஆர்வத்தால் மழலையர்க்குப் பரிசாகத் தாய்மார் குழந்தை களின் சிவந்த வாயில் முத்தம் தருதலைக் குறிப்பது பின்னது. செவ் வாய் = சிவந்த வாய். (80)*

**பு-ம்: ஆனையை வென்ற தெதனாலே?**

**அறுவடை, காலத்தே முடிந்த தெதனாலே?**

**- வேலை ஏவி வேலை ஏவி**

***வி-ம் :*** *யானைப் போர்க்கு உரிய கருவி வேல் ஆகும். அஞ்சாது வேலை ஏவி வெற்றி பெற்ற வீரனே வேலன் என்க. வேல் = கருவி.*

*அறுவடைக்கு ஆள்விடுத்துப் பயனில்லை. நின்று வேலை செய்வாரை ஏவி வேலையை முடித்தல் வேண்டும். வேலை = தொழில்; தொழில் புரிபவர். (81)*

**பு-ம் : ஓடாய் உடைந்து கிடப்பதேன்?**

**ஓலமிட்டுக் கதறுவதேன்?**

**- கலம் கவிழ்ந்து கலம் கவிழ்ந்து**

***வி-ம் :*** *அடுக்கிவைக்கப்பட்ட மண்பாண்டம் கவிழ்ந்தால் உடைந்து ஓடாகக் கிடக்கும். கலம் = ஏனம் (பாத்திரம்).*

*கடலில் சென்ற கப்பல் கவிழ்ந்தால் தப்பிப் பிழைக்க ஒவ்வொருவரும் ஓலமிட்டுக் கதறுவர். ஓலம் = கூக்குரல். கலம் = கப்பல். (82)*

**பு-ம்: கடன் கேட்பவர் நிலையென்ன?**

**களஞ்சியம் பதத்தால் நிலையென்ன?**

**- மடிபிடித்தல் மடிபிடித்தல்**

***வி-ம் :*** *முன்னாளில் பணப்பையை மடியில் வைக்கும் வழக்கத்தால் கடன் தந்தவர் மடியைப் பிடித்துப் பார்ப்பர். மடி = இடுப்பு வேட்டி.*

*களஞ்சியத்தில் உள்ள தவசத்தில் ஈரம் பட்டால் ஒரு நெடி உண்டாகும். அத்தவசம் கெட்டுப்போன அடையாளம் அது. மடி = மடித்துப் போதல். (83)*

**பு-ம் : உள்ளத் தச்சம் உறுவதேன்?**

**உருகிக் கண்ணீர் வடிப்பதேன்?**

**- வேங்கை கண்டு வேங்கை கண்டு**

***வி-ம் :*** *வேங்கை = புலி. புலியைக் கண்டவுடன் அதன் அழகு - பாய்ச்சல் தோன்றுவது இல்லை. தோன்றுவது அச்சமே ஆகும். "பந்தம் எரியுதோடி, கண்கள் பார்க்கப் பயமாகுதடி" என்றார் கவிமணி.*

*வேம் + கை = வேங்கை. வேகும்கை. தீயில் வேகும் கையை உடையவர் மட்டுமா, காண்பவரும் உருகிக் கண்ணீர் வடிக்கத்தானே செய்வர்? (84)*

**பு-ம்: கருப்புக் கட்டி கிடைப்பதேன்?**

**காலில் கட்டி காண்பதேன்?**

**- கரும்பாலையால் கரும்பாலையால்**

***வி-ம் :*** *கரும்பு ஆட்டிக் கட்டி எடுக்கப்படும் ஆலை கரும்பு ஆலை ஆகும். ஆதலால் கருப்புக் கட்டி எடுக்கக் கரும்பு ஆலை வேண்டும்.*

*காலில் கட்டி (கொப்புளம்) உண்டாவது கடுமை யான வெப்பமுள்ள நிலத்தில் நடந்தால் உண்டாகி விடும். கரும் + பாலை = கரும்பாலை. பாலை = வெப்பமிக்க நிலம். (85)*

**பு-ம்: கரை பார்த்து மகிழ்வதேன்?**

**களம் பார்த்து வருந்துவதேன்?**

**- கால்வரவால் கால்வரவால்**

***வி-ம் :*** *கால்வாய்க் கரையில் நின்று நீர் பெருகிவரக் கண்டால் மகிழ்வு உண்டாகும். பயிர் விளைந்து விடும் என்பது மகிழ்வின் காரணமாம்.*

*கதிராகி அடிக்கும் களத்தில் விளைவு கால் பங்கு வரவாக இருந்தால் வருத்தம் உண்டாதல் இயற்கை. வரவேண்டிய அளவில் கால் பங்கு வருதல், கால் வரவு. (86)*

**பு-ம்: கழுத்தில் புண்ணாகி வழிவதேன்?**

**காட்சி இன்பம் வாய்ப்பதேன்?**

**- கண்டமாலையால் கண்டமாலையால்**

***வி-ம் :*** *கழுத்தில் வளையமாய்ச் சுற்றிப் புண்ணாகி நீர் ஒழுகும் நோய் 'கண்ட மாலை' எனப்படும். கண்டம் = கழுத்து. மாலை = மாலை போன்ற வளைவு உடையது.*

*பின்வரும் காட்சி இன்பம் மாலைப் பொழுதில் கதிரோன் மறையும் நிலையில் காணப்படும் வானக் காட்சி இன்பமாகும். கண்ட = பார்த்த.* *(87)*

**பு-ம் : கழுதை முட்டி தட்டுவதேன்?**

**கவிதை பிழையில் முட்டுவதேன்?**

**- தளை தட்டி தளை தட்டி**

***வி-ம் :*** *கழுதையின் காலைக் கட்டிவிட்டால் எங்கும் ஓடாது. இன்னும் இரண்டு கழுதைகளைக் கட்டியும் வைத்தல் உண்டு. தளை = கட்டு; தட்டி = தடையாகி.*

*பாடலுக்கும் தளையுண்டு. அந்த அந்தப் பாடலுக்கு உரிய தளை மாறினால் பாடல் தளை தட்டிப் பிழைபட்டதாகிவிடும். தளை என்பது சீர்களை இணைக்கும் தட்டு. தட்டி = பிழையாகி.(88)*

**பு-ம்: கீரை கறியாக்கச் செய்வதென்ன?**

**கிடைக்கும் விருதுக்குச் செய்வதென்ன?**

**- ஆய்வு செய்தல் ஆய்வு செய்தல்**

***வி-ம் :*** *கீரையைக் கறியாக ஆக்குவதற்கு அதனை ஆய்தல் செய்வர். ஆய்தல் என்பது முற்றியது அழுகியது பூச்சி பிடித்தது நீக்கி, நல்லதைக் கொள்வதாகும். பெறவேண்டிய பட்டத்திற்காகப் படிப்பவர் அதற்கென ஒரு தலைப்பில் ஆராய்ச்சி மேற்கொண்டு அதனை எழுத்துருவாக்கிப் படைப்பார். அப்பணி, ஆய்வுப் பணி எனப்படும்.* *(89)*

**பு-ம் : கொல்லர் கூடப் பணியென்ன?**

**கொண்ட சமையல் பணியென்ன?**

**- காய்ச்சி வடித்தல் காய்ச்சி வடித்தல்**

***வி-ம் :*** *கொல்லர் உலைக் கூடத்தில் இரும்பைக் காய்ச்சி வேண்டும் கருவிகளை உருவாக்குவார்கள். வடித்தல், வடிவமாக்குதல்.*

*சமையல் கூடத்தில் சோறாக்கி - கறியாக்கி, வடிப்பதை வடித்துப் பணி செய்வர். வடித்தல் = வடியச் செய்தல்.* *(90)*

**பு-ம் : செருக்கின் அடையாளம் ஆவதெது?**

**சேர்த்துக் கூட்டினால் அரையாவதெது?**

**- கால்மேல் கால் கால்மேல் கால்**

***வி-ம் :*** *செருக்குடையவன் அவை மதிப்போ அடுத்திருப்பவன் பற்றிக் கவலையோ படாமல் கால்மேல் கால் போட்டு இருப்பான். கால், உறுப்பின் பெயர்.*

*கூட்டல் கணக்கில் கால் என்னும் அளவுப் பெயருடன் கால் சேர்க்கப்படுமானால் அரை என்னும் அளவுப் பெயர் ஆகும். கால் அளவுப் பெயர். (91)*

**பு-ம் : சொற்றொடரின் முடிநிலை என்ன?**

**சொற்கேளான் வாழ்நிலை என்ன?**

**- பயனிலை பயனிலை**

***வி-ம் :*** *சொற்றொடரின் முடிநிலை என்பது வினை முற்று. அது பயனிலை ஆகும். பயன் நிற்கும் இடம் பயன் நிலை.*

*ஆசிரியர் பெற்றோர் நல்லோர் சொல் கேட்டு நடவாதவன் வாழ்வு பயன் இல்லாத வாழ்வாகும். பயன் + இலை = பயனிலை.*

*தம்பி எழுவாய்; இருந்து பயனிலை;*

*செல்வது செயப்படு பொருள் என்பதை நினைக. (92)*

**பு-ம் : சொன்னபடி உண்டீரா?**

**சுவையாக இருந்ததுவா?**

**- உணவருந்தினேன் உணவருந்தினேன்**

***வி-ம் :*** *சொல்லியவாறு நான் விருந்துணவு உண்டேன்; அதாவது உணவு அருந்தினேன். முதல் வினாவின் விடை இது.*

*உணவை உண்டதன் பயன் என்ன ஆயது? வயிற்றைப் புரட்டியது; வலித்தது. கலக்கு கலக்கெனக் கலக்கியது. அதனால் "உண(உண்ண) வருந்தினேன்" என்பது அதன் விடையாயிற்று.(93)*

**பு-ம் : தஞ்சைப் பொம்மை நிலை என்ன?**

**தழுவிப் பிழைப்பார் இயல்பென்ன?**

**- தலையாட்டல் தலையாட்டல்**

***வி-ம் :*** *தஞ்சாவூர் பொம்மை என்பவை தலை யாட்டிப் பொம்மை என்றே பெயர் வழங்கி வருகின் றது.*

*தாமாக உழைத்துப் பிழைக்கமாட்டாமல் பிறர்க்கு இச்சகம் பேசி வாழ்பவர் தம் தலையாட்டி, "ஆமாம் ஆமாம்" என்றே வாழ்பவராக இருப்பர். (94)*

**பு-ம் : தமிழர் பொங்கல் பேரென்ன?**

**தாளக் கட்டின் ஒலிப்பென்ன?**

**- தை தை**

***வி-ம் :*** *தமிழர் திருநாள் - பொங்கல் நாள். அது தைத்திங்கள் முதல்நாள் ஆகும். தைப் பிறந்தால் வழி பிறக்கும் என்பது பழமொழி.*

*நடம் ஆடுவதற்குக் கால் வரிசை வைக்கத் தட்டி ஒலிக்கப் படும் தாளம் 'தைத் தக்க தை' என்பதாம். தை என்பது தாளத்தின் முதல் ஒலி. (95)*

**பு-ம் : தாழ்ந்த கிளை நிமிர்வதேன்?**

**தழைத்த சேறு சாறாவதேன்?**

**- கொம்பை வெட்டிக் கால் கொடுக்க**
**கொம்பை வெட்டிக் கால் கொடுக்க**

***வி-ம் :*** *தாழ்ந்த கிளை நிமிர்வதற்கு மற்றொரு மரக்கிளையை (கொம்பை) வெட்டி ஊன்று காலாகத் தந்தால் போதும். நிமிர்ந்து விடும். கொம்பு = கிளை; கால் = ஊன்று, முட்டு.*

*சேறு என்பதில் இரட்டைக் கொம்பு முன்னாக உள்ளது. அதனை நீக்கி, ஆ என்பதற்கு அடையாள மான கால் (ா) தந்து விட்டால் சே என்பது சா ஆகிவிடும். சேறு என்பது சாறாகும். கொம்பு, கால் என்பவை எழுத்துக் குறியீடுகள். அந்தகக் கவிவீர ராகவர் அம்மைச்சி வரலாற்றின் பின்னணி யுடையது இது.(96)*

**பு-ம்: நல்லறி வில்லாமை ஏன்?**

**நடையில் நொண்டி ஆவதேன்?**

**- முட்டாளால் முட்டாளால்**

***வி-ம் :*** *நல்லறிவு இருக்குமானால் அவனை அறிந்தவர் முட்டாள் எனக் கூறார். தன்னறிவோ சொல் வார் அறிவோ இல்லானே முட்டாள் என்று பழிக்கப்படுவான்.*

*நல்ல காலுடையவன் நொண்டி நடக்க மாட்டான். அவன் காலில் முள் தைத்து விட்டால் நொண்டி நடப்பான். அதனைக் குறிப்பது பின்னுள்ள முட்டாள். முள் + தாள் = முட்டாள்.(97)*

**பு-ம் : வீணாய்ச் சுற்றற் கென்ன பெயர்?**

**விரும்பும் தையற் கென்ன செயல்?**

**- வெட்டி வேலை வெட்டி வேலை**

***வி-ம் :*** *வேலையில்லாமல் சுற்றித் திரிவதை வெட்டி வேலை என்று பழிப்பது வழக்கம். வெட்டித் தனமாகத் திரிவதே வேலை; வேறு வேலை இல்லை என்பதாம்.*

*சட்டை வகைகள் துணியில் ஆக்குபவர் அளவு எடுத்துத் துணியை அதற்குத் தக வெட்டி வேலை செய்தலால் அது வெட்டி வேலை செய்தல் ஆயிற்று. வேலையே வெட்டுதலால், வெட்டி வேலை. (98)*

**பு-ம் : வென்றெடுப்ப தெதனாலே?**

**வெட்கிக் குனிவ தெதனாலே?**

**- அக்கறையால் அக்கறையால்**

***வி-ம் :*** *எம் முயற்சி எனினும் செம் முயற்சியாய் அமைய அக்கறைப்பட்டால் எடுத்த செயல் வெற்றியாக முடிதல் உறுதி. வெற்றியினும் முதலாக வேண்டுவது அக்கறையே.*

*பலர் முன்னே ஆயினும் தனித்தும் கூட, உடுத்திய உடையில் கறையிருந்து பளிச்சிட்டுக் காட்டினால் வெட்கம் தானே வந்து தலை குனியும். அ + கறை = அந்தக் கறை. (99)*

**பு-ம் : வேலை இடையே விடுவதேன்?**

**விழா எனக் கொண்டாடுவதேன்?**

**- மதியம் பார்த்து மதியம் பார்த்து**

***வி-ம் :*** *உழவு சார்ந்த வேலையாள்கள் உணவு இடை வேளைக்கு நடுப்பகல் பொழுதை (மதியத்தை) நோக்குவர்.*

*ஊர் விழாக்களுள் பலவும் வளர்பிறை, முழுமதி என்பவற்றைப் பார்த்தே நிகழ்த்துவர். அம்மதியம் என்பது முழுமதிப் பொழுதையே யாகும். (100)*

# முச்சொல் அலங்காரம்

*இருசொல் அலங்காரம் அச்சிட்டபின் தொடர்ச்சி யாக அச்சிடப்பட்டிருந்தது இது.*

**காப்பு**

**மு-ம் :** **சச்சி தானந்தன் தாள்இணை பணிந்து**
**முச்சொல் அலங்காரம் யான் மொழிவேனே.**

**வி-ம் :** **சச்சி தானந்தன் = சிவன். தாள் = திருவடி.**

**மு-ம் :** **அக்குத் தொக்கு இல்லாதவன் ஆண்மையும்**
**வெட்கஞ் சிக்கில் லாதான் வீரியமும்**
**துக்கப்பட் டுண்ணாதான் சோறும்**
**– இம் மூன்றும்**
**கைக்கித் தின்ன நாயோ டொக்கும்.**

**வி-ம் :** *அக்குத் தொக்கு = உற்றார் உறவு; வளம் வாய்ப்பு. வெள் கஞ்சிக்கு இல்லாதவன் = வெறுங் கஞ்சிக்கும் வழியற்றவன்; உழைத்துத் துன்பப் படாமல் உண்பவன். கைக்கி = கக்கி. தான் தின்ற உணவைக் கக்கி மீண்டும் அதனைத் தின்னல் நாயின் இழிதன்மை. துணையில்லான் துணிவு வெட்கக் கேடானது கஞ்சிக்கு வழியற்றவன் சொல்லுக்குக் காது தரார் எவரும், உழைத்து உண்ணாதவன் ஊர்க் கேடன் என்பவை பலரும் பயில வழங்குபவை.* *(1)*

**மு-ம் :** **ஆடோடு ஆடிய காடும்**
**அரசனோடு ஆடிய ஊரும்**
**அடிக்கடி தாய்வீடு ஓடிய பெண்ணும்**
**– இம் மூன்றும்**
**பேயோடு ஆடிய கூத்து.**

***வி-ம் :*** *ஆடுகள் ஓடிய காட்டின் வளமை ஒழியும் அரசனோடு கூடிக் கூத்தடிக்கும் ஊரும் கெடும். கணவன் வீட்டை விட்டுத் தாய் வீடே தஞ்சமாகி இருப்பவள் வாழ்வு கெடும்.*

*பேயோடு ஆடுதல் இல்லாது ஒழிதல். வெள்ளாடு போன காடு வெறுங்காடு என்பது பழமொழி.*

*"அரசறிய வீற்றிருந்த வாழ்வு விழும்" என்பது முன்னவர் மொழி. பிறந்த வீட்டையே நோக்குபவள் பெரும்பேதை என்பது வழங்கு மொழி. (2)*

**மு-ம்:** **ஆறு நேரான குளமும்**

**அரசரோடு ஏறுமாறான குடியும்**

**புருடனைச் சீறும் மாறான பெண்டிரும்**

**- இம் மூன்றும்**

**நீறு நீறாய் விடும்.**

***வி-ம் :*** *ஆற்றுக்கு நேராக இருக்கும் குளம் நீர்ப்பெருக்கு ஏற்பட்டு வெள்ளமாகும் போது, கரை அழிந்து ஊருக்கும் கேடாம். அரசர் பகை அழிவாக் கும். கணவனை மோதுதலால் குடும்பத்தைப் பாழாக் கும் மனைவி - நீறு என்பது சாம்பல். சாம்பல் புழுதி போலக் காற்றில் பறந்து ஒழிந்து போகும். (3)*

**மு-ம் :** **ஆணி ஆனை வாலொத்த கரும்பும்**

**ஆறு நான்கில் பெற்ற புதல்வனும்**

**புரட்டாசி பதினைந்தில் நட்ட நடவும்**

**- இம் மூன்றும்**

**பெரியோர்கள் வைத்த தனம்.**

***வி-ம் :*** *ஆணி ஆனை = வலிய யானை. கரும்பு வளமாக வளர்ந்து தடித்திருத்தல். 24 ஆம் வயதில் பெற்ற பிள்ளை பெற்றோர்க்குப் பொன் விழாக் காணும்போதே அவனும் குடும்பத்தவனாகி விடுவான். காலம் அறிந்து பயிரிடல் பயன் பெருக் கும் என்பது புரட்டாசி 15 என்பது. நடவு = நெல் நடுதல் பெரியோர்கள் வைத்த தனம் என்பது முன்னோர்கள் தேடி வைத்த தேட்டுப் போன்றது என்பதாம். (4)*

**மு-ம்:** **இரும்பை அரம்போல் தேய்க்கின்ற உறவும்**
**இல்லறத்தில் வல்லாண்மை பேசு மனையாளும்**
**நல்ல மரமேற் புல்லுருவி பாய்கின்ற நட்பும்**
**- இம் மூன்றும்**
**கொல்ல வரவிட்ட கூற்று.**

***வி-ம் :*** *வலிய இரும்பை எளிமையாகத் தூளாக்கும் கருவி அரம். குடும்பத்தில் சண்டையுண்டானால் ஆக்கச் செயல் இல்லாமல் அழிந்து போகும். நல்ல மரத்தில் புல்லுருவி உண்டானால் நீரையும் உரத்தையும் உறிஞ்சி மரத்தைக் கெடுக்கும். அழிவுக்கு மூலமானவை இவை.* *(5)*

**மு-ம் :** **எழுதிப் பாராதவன் கணக்கும்**
**உழுது விதைக்காதவன் செல்வமும்**
**அழுது புரண்ட மனையாளும்**
**- இம் மூன்றும்**
**கழுதை புரண்ட களம்.**

***வி-ம் :*** *கழுதை புரண்ட களம் என்பது தெருப்புழுதி, குட்டிச் சுவர், வரவு செலவு எழுதிப்பார்த்தல் பொருளியல் சீர்.*

*உழுது விதைத்து உரிய பணிபுரிதல் உழவன் கடன்.*

*மலர்ச்சியோடு வாழ்ந்து மனையறம் பேணல் மனைவிக்குச் சிறப்பு. இவை இல்லையேல் பாழானவை யாம்.* *(6)*

**மு-ம்:** **தட்டானைச் சேரும் தறுதலையும்**
**தன்மனையாள் இட்டம்பெற உரைக்கும் ஏழ்மையும்**
**வெட்கத்தில் இருந்துண்ணும் விருந்தும்**
**- இம் மூன்றும்**
**ஆட்டின் கழுத்தின் அதர்.**

***வி-ம் :*** *ஆட்டின் கழுத்தில் தொங்கும் தசை அதர் எனப்படும். எப்பயனும் இல்லாமல் தொங்கிக் கொண்டிருப்பதே அது. அது போல், அணிகலமே குறி என்று திரிபவரும், மனையாள் மதியாத அளவு வறுமைப்பாட்டாளனாக இருக்கும் சோம்பனும், வெட்கம் கெட்டுப் போய் வேண்டா விருந்தாளனாக இருப்பவனும் பயனிலா வாழ்வினர்.* *(7)*

**மு-ம் :** **வேளானைச் சேரும் விருதாவளியும்**
**வேசியர் சொல் தள்ளாமல் செய்யும் தறுதலையும்**
**பாட்டுக்குப் பயனறியாத பாவலரும்**
**- இம் மூன்றும்**
**மாட்டின் அடிவயிற்று மயிர்.**

***வி-ம் :*** *வேளாண்மைத் தொழிலனைச் சேர்ந்த வெட்டித் தனமானவனும், பொருட் பெண்டிரின் சொற் கேட்டுத் திரிபவனும், பாட்டின் சுவையறியாத படிப்பாளியும் ஆகிய இம் மூவரும் இருந்தும் இல்லாதவரேயாவர். (8)*

**மு-ம்:** **நாளை நாளை என்பவன் கொடையும்**
**நலமறியாக் காளையுடன் கலக்கலும்**
**பூவிற் குவிந்தவழி விழுந்த ஈயும்**
**- இம் மூன்றும்**
**கடலில் கவிழ்ந்த கலம்.**

***வி-ம் :*** *உடனே கொடாமல் காலம் கடத்துபவன் ஈகையும், நல்லது பொல்லது அறிந்து பழகாதவனொடு நட்பாடலும், குவியும் பூவுக்குள் புகுந்து விட்ட ஈயும் ஆகிய இம் மூன்றும் இருப்பவை என்பதற்கும் அடையாளம் தெரியாமல் போவவை யாம். (9)*

**மு-ம்:** **காலையில் பலநூல் ஆராயாத் தலைமகனும்**
**ஆலெரிபோன்ற அயலானும்**
**சாலை மனைக்கட்டில் இருக்கிற துணையாளும்**
**- இம் மூன்றும்**
**அட்டமத்தில் சனி.**

***வி-ம் :*** *விடி பொழுதில் எழுந்து கல்வியில் கருத்து வைக்காத கல்வியாளனும், ஆலஞ்சருகுபோல் எரிந்து, எப்பயனும் செய்யாமல் போகின்ற அயலான் நட்பும், தெருப்பார்த்த வீட்டின் மனைக் கட்டில் இருந்து தெருவையே பார்த்துக் கொண்டிருக்கும் பெண்ணும் எட்டாமிடத்துச் சனிபோல் கேடானவர். (10)*

***முற்றும்***

## 3. தனிப்பாடல் கனிச்சுவை

*தனிப்பாடல் திரட்டு பல்லாயிரம் பாடல்களையுடையது. அப்பாடல்களில் வெண்பா முதலிய எல்லாப் பாடல்களும் உண்டு. பழம் புலவர்கள் முதல் இந்நாள் புலவர்கள் வரையுள்ளவர் பாடிய பாடல் கள் உண்டு.*

*வெண்பா என்னும் ஒருவகைப் பாடல் மட்டுமே இத் தொகுப்பில் இடம் பெற்றுள. ஔவையார் முதலாக இடைக் கால - பிற்காலப் புலவர்கள் பாடல்கள் அவை தோன்றிய சூழ்நிலையொடு கூறப்பட்டுள. பாடல்கள் பற்றிய விளக்கம் - தோன்றிய வகை - அதன் பொருள் என்பவற்றை முறையே கூறி அதன்பின் பாடல் கூறப் பட்டமையால் பொருள் இயல்பாக விளங் கும். பாடலில் அருஞ்சொற்கள் இடம் பெற்றிருந்தால் அவற்றின் பொருளும் நிறைவில் கூறப்பட்டுள்ளது.*

*இப்பாடல்கள் ஒரு பாட்டொடு இன்னொரு பாட்டு, தொடர்தல் இல்லா மல் முடியும் தனிப் பாடல்கள் ஆகும். சிலேடைப் பாடல் (இரட்டுறல்), வினா விடைப் பாடல், (எடுப்பும் முடிப்பும்) முதலியவை தனித் தனியே வரும் ஆதலின் அப் பாடல்கள் இவண் சேர்க்கப் பட்டில.*

*நம்முன்னவர்கள் வரலாறு, நிகழ்ச்சி, தமிழ்வளம், பாநலம், இலக்கியப் பயிற்சி, இலக்கிய நுகர்ச்சி என்பவற்றைத் தொடக்கக் கல்வியினரும் அறியும் எண்ணத்தில் தொகுக்கப்பட்டது இத் தொகையாகும். இதனை வெளியிடும்* **மாணவர் பதிப்பகம்** *நன்றிக்குரியது.*

*அன்புடன்,*

**இரா. இளங்குமரன்.**

# 1. பட்டு

*சோழன் ஔவையார்க்கு ஒரு பட்டாடை வழங்கினான். அது மிக்க பெறுமானம் உடையது; அதனை வழங்குதலில் பெரிதும் மகிழ்ந்தான் சோழன். ஔவையார் தாம் வழங்கும் பாட்டினும் இப்பட்டோ சிறந்தது? எனத் தமக்குள் வினவினார். அதன் விடை யாக ஒரு பாட்டுப் பாடினார்.*

*வேந்தே! நீ தரும் பட்டாடை ஆயிரக்கணக்கான பொன் பெறுவதாக இருந்தாலும் நான்கு திங்கள் அளவில் கிழிந்துபோம். ஆனால் நான் வழங்கும் பாட்டு இருக்கின்றதே! அஃது, என்றாவது கிழியுமா? கிழியாது!" என்று கூறித் தாம் வழங்கும் பாட்டின் சிறப்பை நிலை நாட்டினார். உண்மைதானே! சோழன் வழங்கிய பட்டு இப்பொழுது உண்டா? ஆனால் ஔவையார் வழங்கிய பாட்டு இருக்கிறதே!*

"நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினு நூற்சீலை
நாற்றிங்கள் நாளுக்குள் நைந்துவிடும்-மாற்றலரைப்
பொன்றப் பொருதடக்கைப் போர்வேல் அகளங்கா!
என்றுங் கிழியாதென் பாட்டு."

நாற்றிங்கள் – நான்கு மாதம். நைந்துவிடும் – கிழிந்துபோகும். மாற்றலர் – பகைவர். பொன்ற – அழிய. பொருதடக்கை – போர் செய்யும் வலிய கை. அகளங்கா – களங்கமில்லாதவனே.

## 2. பொன்னாடு

ஔவையார் சேரநாடு சென்றார்; சேர வேந்தனைக் கண்டு அளவளாவினார்; தமக்கு ஓர் ஆடு வேண்டும் என்று வேந்தனிடம் கேட்டார். ஔவையார் பாலாடு கேட்டார் என்றாலும் வேந்தன் தன் கொடைச் சிறப்புப் புலப்படுமாறு 'பொன் ஆடு' ஒன்று தந்தான். நல்லியற் புலமையாட்டியாகிய ஔவையார் 'சேரா! உன்னாடு பொன்னாடு' என்றார். 'உன் ஆடு பொன் ஆடு' என்றும் 'உன் நாடு பொன் நாடு' என்றும் பொருள் தந்து சேரனையும் அவைப் புலவர்களையும் இன்பத்தில் ஆழ்த்தியது. பின்னே ஒரு வெண்பாப் பாடினார். "யான் பால் சுரக்கும் ஆடு கேட்டேன்; அவனோ பொன்னாடு தந்தான்; ஒன்றைப் பெற விரும்புபவர் எதைத் தந்தாலும் பெறுவர்; ஆனால் கொடுப்பவர்களே தம் கொடையின் சிறப்பை அறிவர்" என்னுங் கருத்துடன் அமைந்தது அப்பாட்டு.

"சிரப்பான் மணிமுடிச் சேரமான் தன்னைச்
சுரப்பாடு யான்கேட்கப் பொன்னாடொன் றீந்தான்
இரப்பவர் என்பெறினும் கொள்வர் கொடுப்பவர்
தாமறிவார் தங்கொடையின் சீர்."

சிரப்பான் – தலைமேல். சுரப்பாடு – கறவை ஆடு. இரப்பவர் – ஒன்றைக் கேட்டு வாங்குபவர். சீர் – சிறப்பு.

## 3. உண்டி

*பாண்டியனுக்குத் திருமணம் நிகழ்ந்தது; மன்னன் திருமணம் என்றால் மக்கள் கூட்டத்திற்கு அளவு இருக்குமா? எள் விழவும் இடமில்லாத கூட்டம். இந்தக் கூட்டத்துள் ஔவையாரும் அகப்பட்டுக் கொண்டார். நிற்கவும் முடியவில்லை; இருக்கவும் முடியவில்லை; சோறு உண்ணவும் முடியவில்லை. இந்நிலையில் ஔவையாரைப் பார்த்துச், "சோறு உண்டீர்களா?" என வினவினார் ஒருவர்.*

*ஔவையாருக்குத் திருமணக் கூட்டத்துள் தாம் பட்ட பாடு நினைவுக்கு வந்தது. ஒரு பாட்டும் வெளி வந்தது, அவர் என்ன உண்டார், என்ன உண்ணவில்லை என்பதை எவ்வளவு அழகாகச் சொல்லுகின்றார்! பட்டினியால் கிடைத்த பாட்டியின் பாட்டு இப் பொழுதும் சுவையூட்டுகின்றதைப் பாருங்கள்.*

"வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலி யாணத்(து)
உண்ட பெருக்கம் உரைக்கக்கேள்-அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியி னாலே
சுருக்குண்டேன் சோறுண்டி லேன்."

வழுதி – பாண்டியன். அண்டி – அண்மையில் சென்று. சுருக் குண்டேன் – குடல் சுருங்கப்பெற்றேன்.

## 4. திரி

*கோரைக்கால் என்பதோர் ஊர்; அவ்வூரிலிருந்த ஒருவன் கோரைக்கால் ஆழ்வான் எனப்பட்டான். அவனிடம் சென்று ஔவையார் பாடினார்; பரிசு இல்லை என்று சொல்லி விடவும் அவனுக்குத் துணிவு வரவில்லை. ஏனெனில் ஔவையார் பெருமை நாடெங்கும் பரவியிருப்பதையும் மன்னர்களும் மதித்து நடப்பதையும் அவன் அறிவான். ஆனால், கொடுக்கவும் மனம் வரவில்லை. அதற்காக 'இல்லை' யென்று வாயால் சொல்லாமல், கொடுக்கமாட்டான் என்பதை ஔவையாரே அறிந்து கொள்ளுமாறு 'அது தருவேன்'; 'இது தருவேன்' என்று நாளைக் கடத்தினான் அவன் கொடைச் சிறப்பை எப்படிப் பாராட்டுவார் ஔவையார்? ஒரு பாட்டுப் பாடினார்.*

*"ஆழ்வான், யானை தருகின்றேன்; குதிரை தருகின்றேன்; எருமை தருகின்றேன்; எருது தருகின்றேன்; என்று சொல்லிக் கடைசியில் சீலையுமாகித் திரிதிரியாய்ப் போய் விட்டது; நடந்து காலும் தேய்ந்து விட்டது" என்றார்.*

"கரியாய்ப் பரியாகிக் காரெருமை தானாய்
எருதாய் முழப்புடைவை யாகித்-திரிதிரியாய்த்
தேரைக்கால் பெற்றுமிகத் தேய்ந்துகால் ஓய்ந்ததே
கோரைக்கால் ஆழ்வான் கொடை."

---

காரெருமை – கரிய எருமை. எருது – காளை. தேரைக்கால் பெற்று – தேரையின் கால்போல் மெலிந்து.

# 5. இலை

*திருக்குடந்தையில் திருத்தங்கி, மருத்தன் என இருவர் இருந்தனர். அவர்களுள் திருத்தங்கி ஈயாத கருமி; மருத்தன் பெருவள்ளல். இருவரும் வாழைத் தோட்டம், வைத்திருந்தனர். திருத்தங்கியின் வாழைத் தோட்டம் இலையறுக்கப்படாமலும், பூப்பறிக்கப் படாமலும், குலை வெட்டப்படாமலும் பார்க்க அழகாக இருந்தது. மருத்தன் வள்ளல் ஆதலால், நாள்தோறும் பலர் விருந்துண்ண வருதலால் குருத்தும் இலையும் பூவும் காயும் இல்லாமல் இருந்தது. இத் தோட்டங்களை ஔவையார் கண்டார்! புகழ்வது போலப் பழித்துத் திருத்தங்கியைப் பாடினார். பழிப்பது போலப் புகழ்ந்து மருத்தனைப் பாடினார்! வாழை பொலிவாகத் தோற்றம் அளித்தது கருமித்தனத்தாலும், பொலிவிழந்து தோன்றியது வள்ளல் தன்மையாலும் அல்லவா?*

“திருத்தங்கி தன்வாழை தேம்பழுத்து நிற்கும்;
மருத்தன் திருக்குடந்தை வாழை-குருத்தும்
இலையுமிலை பூவுமிலை காயுமிலை என்றும்
உலகில் வருவிருந்தோ டுண்டு”

---

தேம் – இனிமை (பார்க்க இனிமை). திருக்குடந்தை – கும்பகோணம். ‘உண்ணுதலால் இலை’ என்னும் நயம் கண்டு இன்புறத்தக்கது.

# 6. போலி

*போலித்தோற்றம் எவரையும் ஏமாறச் செய்யும். இல்லாத மதிப்பை யெல்லாம் உண்டாக்கும். செய்யாத சிறப்பெல்லாம் செய்ய வைக்கும். உண்மை தன்னை அறிமுகம் செய்து கொள்ளவோ தற்பெருமை கொள்ளவோ செய்யாது. யாராவது புகழ்ந்தாலும் நாணுமே ஒழியத் தலைநிமிர்ந்து கேளாது.*

*பொதுவாக இவ்வியல்பை, புலவர் சிலர் பொய்த் தோற்றம் காட்டி விளக்கினார் ஔவையார்.*

*அறிவாளர் இருவர் புகழவேண்டும்; விரல்களில் மோதிரங்கள் வேண்டும். இடுப்பில் உயரிய உடை வேண்டும். இவ்வளவு இருந்தால் அப்புலவர் பாட்டு நஞ்சாக இருந்தாலும் வேம்பாக இருந்தாலும் நல்லதாக மதிக்கப்படும் என்னும் பொருளில் ஒரு பாடல் பாடினார்; அது*

"விரகர் இருவர் புகழ்ந்திடவே வேண்டும்
விரல் நிறைய மோதிரங்கள் வேண்டும்-அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும்; அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று"

---

விரகர் – அறிவாளர். அரை – இடுப்பு. பஞ்சு – பருத்தியுடை.

# 7. கூடு

*எல்லாவற்றையும் யான் செய்வேன் என்று ஒருவர் சொல்லிவிடவும் முடியாது. எதுவும் தெரியாதவர் என ஒருவரைத் தள்ளி விடவும் முடியாது. எல்லாம் தெரிந்த வர்க்குத் தெரியாததும் உண்டு. எதுவும் தெரியாதவர்க் கும் சில தெரிதல் உண்டு. இக் கருத்தை மக்களுக்குத் தெரிவிக்க ஔவையார் எண்ணினார். வரிசையாகச்சில கூடுகளைக் குறிப்பிட்டார். மக்கள் உடலும் 'கூடு' எனப்படுவது உண்டு அல்லவா!*

*குருவிக் கூடு, அரக்குக் கூடு, தேன் கூடு, சிலந்திக் கூடு, கறையான் கூடு இவற்றை நாம் செய்தல் அரிது. ஆனால் அவற்றைக் குருவி முதலியவை எளிமையாகச் செய்து விடுகின்றன. இதனால், ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொன்று எளிது. இதனை நினைத்தால் யான் வலியவன் என்று ஒருவன் தற்பெருமை கொள்ளல் முறையாகாது என்றார். இதனை விளக்கும் அவர் பாடல்:*

"வான்குருவியின் கூடு வல்லரக்கு தொல்கறையான்
தேன் சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால்-யாம் பெரிதும்
வல்லோமே என்று வலிமை சொல வேண்டாங்காண்
எல்லார்க்கும் ஒவ்வொன் றெளிது."

தொல் – பழமை. சிலம்பி – சிலந்திக்கூடு.

## 8. பழக்கமும் பண்பும்

*பயிற்சியால் ஒவ்வொருவர்க்கும் வருவன சில; பயிற்சியில்லாமல் பிறவியோடு வருகின்ற தன்மைகளும் உண்டு. ஆதலால் ஒருவர் 'இயல் செயல்' என்பவை இவ்விரண்டையும் கொண்டே அமைகின்றன என்று அறிதல் வேண்டும்.*

*இவ்விரண்டன் தன்மையையும் எவரும் எளிதில் உணரும் வகையில் எடுத்துக்காட்டினார் ஔவையார். ஓவியம் ஓயாது வரைந்து பழகுதலால் அமையும்; நல்ல தமிழ் பேசுதல் நாளும் பழகுதலால் வரும்; கல்வி மனத்தே பதித்து வரப்படுத்துதல் வழியாக வாய்க்கும். ஆனால் ஒழுக்கம், நட்பு, இரக்கம், கொடை என்பவை பிறவிக் குணமாக அமையும் என்று கூறினார்:*

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்-நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

*என்பது அப்பாடல்.*

---

நித்தம் – நாள்தோறும். நடை – ஒழுக்கம். தயை – இரக்கம், அருள்.

# 9. பேச்சும் கீச்சும்

கல்லாதவர்களும் நல்லவர்கள் ஆகலாம். அவர்கள் கற்றவர்களின்முன் சொல்லுதல் இல்லாமல் கேட்டுக் கொண்டிருப்பவராக மட்டும் இருக்க வேண்டும் என்பார் திருவள்ளுவர்.

ஔவையார் அறிவுடையவர் இல்லாத இடத்தில் மனத்தில் தோன்றிய வாறெல்லாம் ஒருவன் பேசி விடலாம், ஆனால் அறிவுடையவர் முன் அப்படிப் பேசுதல் ஆகாது. பேசினால் பிழை பட்டுத் தலைக்குனிவே உண்டாகும்.

பேசிப் பழக்கப்பட்ட கிளியாக இருந்தாலும் கண்டாலே நடுங்கவைக்கும் கடுவன் பூனை வந்து விட்டால் அக்கிளியின் பேச்சு என்ன ஆகும். அது அச்சத்தால் கீச்சுக் கீச்சு என்று ஒலிக்க மட்டுமே செய்யும். இதனை,

“காணாமல் வேணதெலாம் கத்தலாம்; கற்றோர்முன்
கோணாமல் வாய் திறக்கக் கூடாதே - நாணாமல்
பேச்சுப்பேச் சென்னும் பெரும் பூனை வந்தக்கால்
கீச்சுக்கீச் சென்னும் கிளி”

என்று பாடினார்.

வேணது – விரும்பியது. நாணாமல் – அஞ்சி நடுங்காமல். பெரும்பூனை – கடுவன் பூனை. வெருகு என்பதும் அது.

## 10. செல்வம்

*செல்வம் ஓரிடத்திலே முடங்கிக் கிடவாமல் செலவும் வரவுமாக இருத்தல் வேண்டும். அதுவே செல்வப்பயன் ஆகும். ஒரு காசோ தாளோ செல்லுமா, செல்லாதா என்று பார்க்கும் வழக்கத்தை அறிந்தால் அதன் செல்லுதல் பொருள் விளங்கும்.*

*செல்லும் பொருள் நல்ல வழிக்குச் செல்ல வேண்டும். கொடுப்பவர்க்கும் பெறுபவர்க்கும் நலமாய் - இன்பமாய் - வளர்ச்சியாய் - வாழ்வாய் அமையும் செல்வமே சிறந்த செல்வம். அவ்வாறு செலவிடாச் செல்வமும் செல்லத்தான் செய்யும்! எப்படிச் செல்லும்? எவர்க்குச் செல்லும்?*

*நன்மைக்குப் பயன்படாத செல்வம், தீமைக்கே தந்தோ பறித்தோ அழிந்தோ போகவே செய்யும். ஆதலால் நன்மைக்கே பயன்படுத்துதல் செல்வர்களின் கடமை என்று பாடினார் ஔவையார்.*

"நம்பன் அடியார்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம் - வம்புக்காம்
கொள்ளைக்காம் கள்ளுக்காம் கோவுக்காம் சாவுக்காம்
கள்ளர்க்காம் தீக்காகும் காண்"

*என்பது அப்பாடல்.*

---

நம்பன் அடியார் – இறையடியார்; நம்பிக்கைக்குரிய நல்லோர். நல்கல் – கொடுத்தல். திரவியம் – செல்வம். பம்புக்கு – புதைப்புக்கு. பரத்தை யர் – கட்டமையாத இயல்பினர். கோ – அரசு(பறித்துக் கொள்ள).

# 11. பெரியர்

*ஒரு நல்ல செயலைச் செய்யவேண்டும் என்று பிறர் சொல்லாமல் தாமே உணர்ந்து செய்பவர் பெரியவர்; அதனைச் செய்ய வேண்டும் என்று பிறர் கேட்டுக் கொண்ட போதில் ஆயினும், செய்பவர் அப்பெரியவர் அல்லர். எனினும் அவரிற் சிறியவர் ஆவர். அவ்வாறு சொல்லியும் செய்யாதவர் இழிமை யானவர் என்பது ஔவையார் கூறிய கருத்து. அதனைத் தக்க உவமையால் கூற விரும்பிப் "பலாமாவைப் பாதிரியைப் பார்" என்றார்.*

*பலாவின் பூ வெளிப்படாமலே காய்க்கும்*

*மாவின் பூ வெளிப்பட்டுக் காய்க்கும்*

*பாதிரியின் பூ வெளிப்பட்டும் காய்த்தல் இல்லை.*

*தக்கதைத்தாமே உணர்ந்து செய்யும் செயலுடை யவரே பெரியவர் என்பது அவர் கூறிய நல்லுரையாம். அப்பாடல்:*

"சொல்லாம லேபெரியர் சொல்லிச்செய் வார்சிறியர்
சொல்லியும் செய்யாற் கயவரே - நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடிற்
பலாமாவைப் பாதிரியைப் பார்"

---

கயவர் – இழிந்தவர். குலாமாலை – விளங்குகின்ற மாலை. குலாவுதல் – தழுவுதல், விளங்குதல். கூறு உவமை (கூறுவமை) – சொல்லும் உவமை. நாடில் – எண்ணினால். பாதிரி – பாடலம்.

## 12. உடனே சொல்லுக

*நாடி பார்த்து மருந்து வழங்குதல் சித்த மருத்துவச் சிறப்பாகும். நாடித் துடிப்பைக் கையைப் பிடித்துப் பார்த்து நோய் நிலை அறிவதால் 'நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்' என நாடி என்னும் சொல் பன்முறை வரப் பாடினார் திருவள்ளுவர்.*

*நாடிகள் மூன்றாகும். வளி(வாதம்) பித்தம் கோழை (சிலேத்துமம்) என்பவை அவை. வளி அடங்கின் ஒரு நாளிலும், பித்தம் அடங்கின் ஒரு நாழிகையிலும் (24 நிமிடம்), கோழை அடங்கின் ஒரு நிமிடத்திலும் உயிர் போகும். தொல்லை இல்லாத சாவு உடனே வருவதாம். அதுபோல் இல்லை என்பதுவும் உடனேயே சொல்லி விடுதல் நல்லது எனச் சொல்லும் வகையில் சொன்னார் ஔவையார். அது,*

"வாதக்கோன் நாளையென்றான்; மற்றைக்கோன் பின்னையென்றான்;
ஏதக்கோன் ஏதேனும் இல்லையென்றான் - ஓதக்கேள்
வாதக்கோன் சொல்லதினும் மற்றைக்கோன் சொல்லதினும்
ஏதக்கோன் சொல்லே இனிது"

*என்பது.*

---

கோன் – தலைவன். நாடி,ஏதம் – துயர். கொடுக்கவோ செய்யவோ முடியாது என்றால் காலம் கடத்தாமல் உடனே சொல்லி விடல் நன்று என்பது இது

# 13. வீணானவை

*பயன் செய்பவை, பயன் செய்யாதவை என எந்தப் பொருளிலும் செயலிலும் உண்டு. அவற்றைப் பற்றி எண்ணிய ஔவையார் இவை இவை வீணானவை எனக் குறிப்பிடுகிறார்.*

*உழவன் என்றால் மாடு இருக்க வேண்டும்; மாடு இல்லாத உழவன் வாழ்வு பயன்செய்யாது.*

*வணிகம் செய்வானுக்கு நல்ல அறிவு வேண்டும்; அறிவில்லாதவன் வணிகம் பயன் செய்யாது.*

*ஆட்சி நடத்துபவன் என்றால் நல்ல நாடு இருக்க வேண்டும்; நல்ல நாடு இல்லாதவன் ஆட்சி ஆட்சி ஆகாது. கல்வி என்றால் கற்பிக்கும் ஆசிரியன் வேண்டும்; கற்பிப்பவன் இல்லாத கல்வி பயன் செய்யாது. குடும்பம் என்றால் குணமிக்க பெண் இருத்தல் வேண்டும்; குணமில்லாப் பெண், குடும்பப் பயன் செய்யாள். வீடு என்றால் விருந்தோம்பல் வேண்டும்; விருந்து செய்தலில்லாவீடு பயனாகாது. இக்கருத்துடைய பாடல்:*

“மாடில்லான் வாழ்வு; மதியில்லான் வாணிகம்; நல்
நாடில்லான் செங்கோல் நடாத்துவதும்; - கூடும்
குருவில்லா வித்தை; குணமில்லாப் பெண்டு;
விருந்தில்லா வீடும் விழல்”

---

மதி – அறிவு. செங்கோல் – ஆட்சி. குரு – ஆசிரியர். விழல் – வீண், பயனற்றது.

## 14.நாற்பொருள்

*தமிழர் அறம் பொருள் இன்பம் என முப்பொருள் கண்டனர். இன்பம் என்பதை இவ்வுலக இன்பம், அவ் வுலக இன்பம் என இரண்டாக்கிப் பின்வந்தோர் நாற் பொருள் எனக் கண்டனர். அவற்றை அறம் பொருள் இன்பம் வீடு எனப் பெயரிட்டு வழங்கினர். ஔவை யார் இந்நான்கு பொருள்களையும் ஒரே பாடலில் சுருக்கி உரைத்தார்.*

*ஈகை என்னும் கொடை அறமாகும்; தீமை நேராமல் தேடுவதே பொருள்; அன்புடைய ஓராணும் பெண்ணும் ஒத்த எண்ணத்தோடு வாழும் வாழ்வே இன்பம். இறைவனை எண்ணி இம்மூன்றிலும் பற்றில் லாது வாழ்வது பேரின்பம் எனப்படும் வீடாகும். இவற்றை,*

"ஈதல் அறம்; தீவினைவிட் டீட்டல்பொருள்; எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத்தொருமித்து - ஆதரவு
பட்டதே இன்பம்; பரனை நினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு"

*என்று கூறினார்*

ஈதல் – கொடுத்தல். ஈட்டல் – தேடுதல். ஆதரவு – அன்பு, அரவணைப்பு. எஞ்ஞான்றும் – எப்போதும். பரன் – இறைவன்.

## 15. போகின்றவை

*கூடிவாழும் வாழ்வே மாந்தர் வாழ்வு. குடும்பம் சுற்றம் கொள்ளல் கொடுத்தல் உற்றார் உறவு என்பனவெல்லாம் கொண்டதே கூட்டு வாழ்வு.*

*இவ்வாழ்வில் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வோர் கடமை உண்டு. அவர் இல்லா விட்டால் அவர் செய்யும் கடமை நிகழாமல் இழப்பு ஏற்பட்டு விடும். ஒருவர் இழப்பால் ஏற்படும் இழப்பு எது என்று ஔவையார் கூறுகிறார்.*

*தாயை இழந்தால் சுவையான உணவு வாயாது; தந்தையை இழந்தால் கல்வி சிறப்பு வாயாது; மகவை இழந்தால் தாம் பெற்ற செல்வம் பயன்படாது; நல்வாழ்வு உற்றார் உறவினர் இல்லை என்றால் வாயாது; உடன் பிறந்தார் போய்விட்டால் உற்ற பொழுதில் துணை இன்றிப் போகும்; மனைவி இல்லாமல் போனால் உள்ள எல்லாமும் இல்லாமல் போய்விடும் என்றார்.*

"தாயோடு அறுசுவைபோம்; தந்தையோடு கல்விபோம்;
சேயோடு தான் பெற்ற செல்வம்போம்; - ஆயவாழ்வு
உற்றார் உடன்போம்; உடற் பிறப்பால் தோள்வலிபோம்;
பொற்றாலி யோடெவையும் போம்."

---

அறு – ஆறு. இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, உறைப்பு, உப்பு, கசப்பு; சேய் – மகவு. ஆய – உண்டாகிய. வலி – வலிமை. தாலி – மனைவி. போம் – போகும்.

## 16. துரும்பு

*துரும்பு என்பது மிகச் சிறிய தாள், ஈர்க்கு முதலியன சிலர்க்குப் பெரிதாகத் தோன்றுவனவும் சிலர்க்குத் துரும்பு போல் சிறிதாகத் தோன்றுதல் நாம் காணக் கூடியதே.*

*எறும்பு கடித்தால் தாங்காதவர்கள் உண்டு. தேள் கடித்தாலும் தேய்த்துவிட்டுப் போவார் உண்டு. சல்லிக் காசு தரவும் சங்கடப்படுவார் உண்டு. கோடி கொடுக்கவும் முந்துவார் உண்டு. இவற்றை எண்ணிய ஔவையார் கூறுகிறார்.*

*பெரிய கொடையாளனுக்குப் பொன் துரும்பு போன்றது; துணிவானவனுக்குச் சாவு துரும்பு போன்றது; ஐம்புல அடக்கம் உடையவர்க்குப் பாலின்பம் துரும்பாகும்; பற்றற்ற துறவியர்க்கு ஆளும் அரசனும் துரும்பு ஆவான். பொது மக்களால் பெரிது பெரிதாக எண்ணப் படுவனவெல்லாம் இவர்களுக்குத் துரும் பாகத் தோன்றுவனவாம் என்கிறார்:*

“போந்த உதாரனுக்குப் பொன் துரும்பு; சூரனுக்குச்
சேர்ந்த மரணம் சிறு துரும்பு - ஆய்ந்த
அறிவோர்க்கு நாரியருத்துரும்பாம்; இல்லத்
துறவோர்க்கு வேந்தன் துரும்பு”

போந்த – போய. உதாரன் – கொடையாளன். சூரன் – வீரன். நாரியர் – பெண்டிர். இல்லத் துறவோர் – குடும்பப்பற்று விட்டவர்.

# 17. கையூட்டு

*முறையாக ஒன்றைச் செய்வது ஊழ் எனப்படும். அதற்கு மாறாகச் செய்வது ஊழல் எனப்படும். ஊழ் அல்லாதது ஊழல்.*

*காட்டின் இடையே ஒரு நெல்லிமரம் பட்டுப் போய் இலையுதிர்ந்து காணப்பட்டது. அதனை ஒருவர் ஔவையார்க்குக் காட்டி பக்கத்து மரங்கள் எல்லாம் பசுமையாக இருக்கவும் இம்மரம் பட்டுப் போயது ஏன் என்றார். வினாவியவர் மட்டுமன்றி யார் யாரும் அறம் காக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துவார் போல ஔவையார் கூறினார்.*

*கற்றவர்களே, வளமான காட்டிலே நெல்லி மரம் இலையுதிர்ந்து பட்டுப் போய் நிற்பதேன் என வினாவு கின்றீர்; கேளுங்கள். வழக்குத் தோற்றுப் போகும் என்பதை உணர்ந்து அதனை வெற்றியாக்குவதற்காகக் கையூட்டுப் பெற்று வெல்லச் செய்யும் சூழ்ச்சிக்காரன் சுற்றத்தைப் போல் இம்மரம் அழிந்தது என்றார். கையூட்டுப் பெற்றவனை அன்றி அவன் சுற்றமும் அழியும் என்பது அறக்காவல் பற்றிய ஆக்க உரையாம்.*

“கல்வி உடையீர்! கருங்கா னகத்திடையே
நெல்லி இலையுதிர்ந்து நிற்பதெவன்? - வல்லாய்கேள்
வெல்லா வழக்கை விலைவாங்கி வெல்விக்கும்
வல்லாளன் சுற்றம்போல் மாண்டு”

கரும்கானகம் – அடர்ந்தகாடு. விலை வாங்கி – விலைக்கு வாங்குதல் போல் பணத்தால் வெற்றியை வாங்கி. வெல்விக்கும் – வெற்றிபெறச் செய்யும். வல்லாளன் – சூழ்ச்சிக்காரன்.

# 18. நாட்டுவளம்

*ஒவ்வொரு நாட்டுக்கும் பெருமை தருவனவாகச் சில பொருள்கள் உண்டு. அப்பொருள்களால் அந் நாட்டுக்கே பெருமை ஏற்படுவதும் உண்டு. சென்னை '***மெரினா** *கடற்கரை' உலகப் புகழ் வாய்ந்தது.* **குற்றால** *அருவி இந்தியப் புகழ் உடையது. இவ்வாறே முற் காலத்தில் இருந்த சேர, சோழ, பாண்டிய, தொண்டை நாடுகளின் பெருமையெனப் பேசப்பட்டவற்றை ஔவையார் ஒரு பாடலில் கூறினார்.*

*சேர நாட்டுக்குச் சிறப்பு யானைவளம்; சோழ நாட்டுக்குப் பெருமை சோற்றுவளம்; பாண்டிய நாட்டுக்குப் பெருமை முத்துவளம்; தொண்டை நாட்டுக்குப் பெருமை சான்றோர் வளம்;*

*என்றார் அப்பாடல்:*

"வேழம் உடைத்து மலைநாடு; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து - பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து"

---

வேழம் – யானை. மலை நாடு – சேரநாடு. பூழியர்கோன் – பாண்டியன். தெண்ணீர் – தெளிந்த நீர்.

# 19. தீயவை நீங்கும்

*ஒருவர் வாழ்வில் அறம் தலைப்படுமானால் அதற்கு மாறான பாவம் தானே ஒழிந்து விடும். அவ் வறம் என்பது எளிமையானது; எவர்க்கும் செய்யக் கூடுவது. எப்பொழுதும் நன்மை உண்டாக்குவது.*

*இவ் வறத்தை இன்ன தென விளக்கும் ஔவையார், அறத்தின் பயனையும் உரைக்கிறார். பசித்தவர் முகம்பார்த்து அவர்க்கு உணவு கொடுங்கள். இச் செயல் அறச் செயல் என்பதை எண்ணி அதனைக் கடைப்பிடியாகக் கொண்டு வாழுங்கள் உண்ணும் போதில் ஒருவர் வரின் உள்ளதைப் பகுத்து உண்ணுங்கள். தெய்வம் பலப்பல இல்லை; ஒன்றே என்று உணருங்கள். இவற்றைச் செய்தால் தீராத தீமைகள் எல்லாமும் தீர்ந்து போகும்.*

"ஐயம் இடுமின்; அறநெறியைக் கைப்பிடிமின்
இவ்வளவே னும் அன்னம் இட்டுண்மின் - தெய்வம்
ஒருவனே என்ன உணரவல் லீரேல்
அருவினைகள் ஐந்தும் அறும்.

---

ஐயம் – பிச்சை. அன்னம் – சோறு. அருவினை – நீங்காத தீச் செயல். ஐந்து – ஐம்பொறிகள் வழியாகவும் ஏற்படும் தீமைகள். அறும் – நீங்கும்.

## 20. அரிதில் அரிது

*எல்லாரும் எளிதாகச் செய்வனவும் உண்டு. அரிதாகச் செய்வனவும் உண்டு. ஓர் அரிய செயலுக்கும் அரிய செயலும் உண்டு. அப்படிப்பட்ட அரிய செயல் களை அடுக்கிக் கூறுகிறார் ஔவையார்.*

*பலரும் படித்துணருமாறு ஏட்டில் எழுதுவது அரியதாகும்; தாம் முன்னர் எழுதிய எழுத்தே எனினும் தாமோ பிறருமோ பிழை இல்லாமல் வாசிப்பது அரிதாகும்; அன்றியும் அதனை முழுவதாகக் கற்றுக் கொள்வது அரிது; அக் கல்வியால் ஆகும் பயனைக் கண்டு கொள்வது அதனினும் அரிதாகும். அவ்வாறு கண்டாலும் கண்ட நிலையிலேயே உறுதிப்பிடியாக வாழ்வது அரிதாகும்.*

*இச் செய்திகளைக் கூறும் பாடல்:*

எழுதரிது; முன்னம் எழுதிய பின்னாப்
பழுதறவா சிப்பரிது; பண்பாய் - முழுதுமதைக்
கற்பரிது; நற்பயனைக் காண்பரிது; கண்டக்கால்
நிற்பரிது, தான் அந் நிலை.

---

முன்னம் – முன்பு. பழுது – குற்றம். அற – நீங்க. கற்பு – கற்பது. நிற்க – நிற்பது. காண்பு – காண்பது.

## 21. உழவு இனிது

உழவுத் தொழில் ஓயாத் தொழில்; இரவும் பகலும் பார்க்கும் தொழில்; காலம் கருதாமல் கடினம் எண்ணாமல் குடும்பத்தோடு ஈடுபட்டுச் செய்யும் தொழில். வெயில், பனி, மழை எல்லாம் தாங்கிச் செய்யும் தொழில். ஆயினும் அத் தொழிலே உயிர் வாழ்வுக்கு மூலமாகிய உணவு வழங்கும் தொழில். அத் தொழில் சிறப்பானது என்று கொள்ள வேண்டும் என்றால், என்ன வேண்டும் என்பதை ஔவையார் உரைத்தார்.

ஓர் ஏராக இல்லாமல் இரண்டு ஏர் இருக்க வேண்டும். விதைப்பஞ்சம் இல்லாமல் வீட்டில் விதை இருக்க வேண்டும். நீர்நிலைக்குப் பக்கமாக நிலம் இருக்க வேண்டும். அந்நிலமும் ஊர்க்குப் பக்கமாகவும் போய் வர எளிமையானதாகவும் இருக்கவேண்டும். இவற்றையுடைய உழவரைக் கேட்டால் அவர் தொழில் களில் உழவுத் தொழிலே இன்பமான தொழில் என்பார் என்பது அது. அப் பாடல்

ஏரும் இரண்டுளதாய் இல்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுளதாய் - ஊரருகே
சென்று வரஎளிதாய்ச் செய்வாரும் சொற்கேட்கில்
என்றும் உழவே இனிது.

ஏர் – கலப்பை – 2, மாடு – 4. வித்து – விதை. செய்வார் – உழவு செய்வார்.

# 22. காட்சி

*ஒன்றை மதிப்பிடுதல், ஒவ்வொருவர் அறிவுத் திறம் ஆற்றல் என்பவற்றுக்குத் தக அமையும்.*

*நாம் வீரன் என்று தடிவைத்திருப்பவரையும், வாள் வேல் துமுக்கி(துப்பாக்கி)வைத்திருப்பவரையும் மதிப்பிடுகிறோம். அஞ்சி நடுங்கும் கோழையின் கருவி அவை என்று சொல்பவர்களும் உளர். ஔவையார் காட்சி, வீரம், கல்வி, உணவு என்பவை எவை என்பதை ஒரு பாடலாகக் கூறுகிறார்.*

*ஐம்புலனையும் ஒன்றாக்கிக் காணும் அறிவே காட்சி எனப்படும். ஐம்புலனையும் வெற்றி கொண்டவன் வீரமே வீரமாகும்; கற்ற எதனையும் மறவாமல் பாதுகாக்கும் திறமே கல்வியாகும்; பிறர் கையையோ ஆணையையோ எதிர்பார்த்திராமல் தான் விரும்பும் போது தன் உழைப்பால் வந்த உணவை உண்பதே உணவு ஆகும். அப்பாடல்:*

ஒன்றாகக் காண்பதே காட்சி; புலனைந்தும்
வென்றான்தன் வீரமே வீரமாம் - ஒன்றானும்
சாவாமல் கற்பதே கல்வி; தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்.

---

காட்சி – பார்வை, அறிவு. புலன் ஐந்து – கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிதல். சாவாமல் – அழியாமல். ஏவாமல் – கட்டளை இடாமல்.

## 23. ஓட்டைச்செவி

*இந்நாள் கேரளம் முன்னாளில் சேரலம் எனப் பட்டது. அந்நாட்டில் 'ஏழில்' என்பதோர் நாடு. அது ஒரு மலை நாடு. ஏழில் மலை எழில்மலை, எலிமலை எனப்பட்டு மூசிக பருவதம் எனவும் ஆயது.*

*ஏழில் நாட்டை ஆட்சி புரிந்த மன்னன் தமிழ் மன்னன். அவனை ஔவையார் போய்க்கண்டார். அவன் அவரைக் கண்டு கொள்ளவும் இல்லை. அவர் சொல்லுக்குச் செவி கொடுக்கவும் இல்லை. அதனால் அவருக்குத் தமிழை இழிவு படுத்தியதாகச் சினம் எழும்பியது.*

*ஏழிற் கோமானே, உன் கண் குருடும் அன்று; தெளிவு மிக்க பாட்டும் உரையும் கேட்கக் கூடிய செவியும் உனக்கில்லை. உன் செவி சொல்லைக் கேட்டறியா ஓட்டைச் செவி என்று பழித்தார்.*

"இருள் தீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே!
குருடேயும் அன்று நின் கொற்றம் - மருள் தீர்ந்த
பாட்டும் உரையும் பயிலா தன இரண்டு
ஓட்டைச் செவியும் உள"

*என்றார்.*

தீர் – நீங்கிய. கொற்றம் – அரசும் குருடு பட்டு விட்டது கண்ணைப் போல். மருள் – மயக்கம். பயிலுதல் – பழகுதல், கேட்டறிதல்.

## 24. தலை

*முருகனுக்குத்தான் ஆறுதலை உண்டு என்பதை அறிவோம்; அவன் பெயரே 'ஆறுமுகன்' 'சண்முகன்' அல்லவா!*

*காளமேகப் புலவர், சங்கரனுக்கு மாறுதலை யாம்! பிள்ளையார்க்கு மாறுதலையாம்; திருமாலுக்கு மாறுதலையாம்; சிவன் அடியார்க்கு மாறுதலையாம்! என்று பாடினார்.*

*சங்கரனாகிய சிவபெருமான் தலையில் கங்கை ஆறு இருப்பதால் அவருக்கு 'ஆறுதலை'. பிள்ளையார்க்கு மனிதத் தலையில்லை, யானைத்தலை ஆதலால் மாறுதலை. சங்கம் ஏந்தியாகிய திருமால் மீன் ஆமை பன்றி எனப் பல பிறப்புகள் அடைந்தமையால் அவர் தலையும் 'மாறுதலை'. இறைவன் திருவடியை அடைந்த அடியார்க்கு வாய்ப்பது ஆறுதலை (இளைப்பாறுதல்)*

*ஆறுதலையும் மாறுதலையும் செய்யும் அழகு விளையாட்டு இஃது அல்லவா?*

"சங்கரர்க்கு மாறுதலை; சண்முகர்க்கு மாறுதலை;
ஐங்கரர்க்கு மாறுதலை ஆனதே-சங்கைப்
பிடித்தோர்க்கு மாறுதலை; பித்தாநின் பாதம்
படித்தோர்க்கு மாறுதலை பார்."

---

ஐங்கரர் – பிள்ளையார். நான்கு கைகளும் துதிக்கை ஒன்றும் ஆகிய ஐந்து கைகளையுடையவர். பித்தா – சிவனே. பாதம் படித்தோர் – திருவடியை அடைந்த அடியார், படிந்தோர், படித்தோர் என்று வல்லினமாயது.

# 25. அரியாசனம்

*நாட்டை ஆள்பவர் வேந்தர் எனப் பெற்றனர்! அவர்க்கு இணையாகக் கவிஞரும் போற்றப் பெற்றனர்! அரசர்க்கு உயர்ந்த அரசராகவும், அரசரே பணி செய்யும் அரசர்க்கு அரசராகவும் புலவர்கள் விளங்கிய வரலாறுகள் பல உண்டு. புவியரசர், கவியரசர் என்றும், புவிவேந்தர் கவிவேந்தர் என்றும் புவிச் சக்கரவர்த்தி, கவிச்சக்கரவர்த்தி என்றும், கோவேந்தர் பாவேந்தர் என்றும் இவற்றைப் போல் பிறவாறும் காவலரையும் பாவலரையும் இணைத்துப் பேசும் சொற்கள் உண்மையே இதற்கு எடுத்துக் காட்டாம்.*

*அரசருடன் கற்றோர்க்கு ஒப்பான பெயரும் புகழும் பேறும் வாய்த்தது எதனால்? கலையால் தானே! ஆதலால் கலைமகள் அவ்வுயர்வைத் தமக்கு அருளிய தாகப் பாராட்டி வாழ்த்தினார்* ***காளமேகப் புலவர்****.*

*“வெண்பட்டு உடுத்தியவள்; வெண்ணிற அணிகள் பூண்டவள்; வெண்டாமரையில் இருப்பவள்; வெண் மலர் பரப்பிய அரியணையில் (சிம்மாசனத்தில்) அரசர் களோடு என்னைச் சரிநிகராக வைத்தவள்; அன்னை கலைமகளே”*

“வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியா சனத்தில் அரசரோ(டு) என்னைச்
சரியா சனம்வைத்த தாய்.”

---

கலை – உடை. பணி – அணிகலம். கமலம் – தாமரை. சரியாசனம் – இணையான ஆசனம்.

## 26. ஆறுமுகன் பெருமை

ஆறுமுகன் பெருமை அளவுக்கு உட்பட்டதன்று. திருமுருகாற்றுப்படை, திருப்புகழ், கந்தரலங்காரம், கந்த புராணம் ஆகியன அவன் அழகியல்களைக் கொள்ளை கொள்ளையாய் விரிக்கும்! வசைபாடுதலில் தேர்ந்த காளமேகப் புலவர் முருகனையும் விட்டு வைத்தாரா? இகழ்வது போலப் புகழ்ந்து இன்பம் பெருக ஒரு பாட்டுப் பாடினார். "இகழ்வது போல் புகழ்தல்" என்று இத்தகைய பாடல்களை அணி இலக்கணம் கூறும்.

ஆறுமுகனுக்கு அப்பனாகிய சிவபெருமான் இரந்து உண்பவன்; அவன் ஆத்தாள் ஆகிய பார்வதி மலைநீலி; மாமனாகிய கண்ணன் உறிதிருடி; அண்ணன் விநாயகனுக்குச் சப்பைக்கால்; பெருவயிறு; இவையெல்லாம் ஆறுமுகன் பெருமை அல்லவா?

"அப்பன் இரந்துண்ணி ஆத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாமன் உறிதிருடி - சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத் தானுக்கிங்(கு)
எண்ணும் பெருமை இவை."

---

இரந்து உண்ணி – இரந்து உண்பவன். மலைநீலி – மலை யரசன் பெற்ற கரிய மகள். ஒப்பரிய – ஒப்பில்லாத. சப்பைக்கால் – நடக்க ஓட முடியாத கால். எண்ணும் பெருமை – நினைக்கும் பெருமை.

## 27. ஏழை

*"ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்" என்பது பழமொழி. மோழை - கொம்பில்லாத கடா; கொம்பில்லாத கடாவே பாயுமென்றால் மற்றவை பாயக் கேட்பானேன்!*

*காளமேகப் புலவர்க்குச் சிவபெருமான் ஏழை யாகத் தோன்றினார். 'இரந்து உண்பவர்' ஏழை என்று தானே மதிக்கப் பெறுவர்?*

*சிவபெருமான் ஏழையானதால் என்ன நேரிட்டது? தலையின்மேல் ஒருத்தி (கங்கை) ஏறிக்கொண்டாள்; செருப்பைப் போட்டு மிதித்தான் ஒருவன் (கண்ணப் பன்); 'பித்தன்' 'பேயன்' என்று ஒருவன் வைதான் (சுந்தரமூர்த்தி நாயனார்)வில் முறிய அறைந்தான் (அருச்சுனன்) ஒருவன்! இவ்வளவும் நீ ஏழையாய் இல்லை யென்றால் ஏற்பட்டு இருக்குமா?*

*இப் பாடலும் இகழ்வது போல் புகழ்ந்தது ஆகும்.*

"தாண்டி ஒருத்தி தலையின்மேல் ஏறாளோ?
பூண்டசெருப் பாலொருவன் போடானோ? - மீண்டொருவன்
வையானோ? வில்முறிய மாட்டானோ? தென்புலியூர்
ஐயாநீ ஏழையா னால்."

---

தென் புலியூர் – சிதம்பரம். பூண்ட – காலில் அணிந்த. போடுதல் என்றது இங்கே மிதித்தலை

# 28. மருத்துவர் வீட்டில் மாறாநோய்

*“மருத்துவருக்கும் நோய்; மருத்துவர் வீட்டா ருக்கும் நோய்; இவ்வாறிருக்க அந்த மருத்துவர் ஊரார் நோயைப் போக்குவது எப்படி?”- இவ்வாறு புள்ளிருக்கும் வேளூர்ப் பெருமானை வினவுகிறார் காளமேகப் புலவர்.*

*புள்ளிருக்கும் வேளூர் இறைவன் பெயர் வைத்திய நாதர் என்பது; வைத்திய நாதராகிய அவருக்கு வாதக் கால்; மைத்துனராகிய திருமாலுக்கு நீரிழிவு; பிள்ளை யாம் விநாயகருக்குப் பெருவயிறு; இந்த வினை தீர்க்க இயலாத இவர் எந்த வினை தீர்ப்பார்? எனக் கேட்கின்றார் புலவர்.*

*வாதநோய் உடையவர் அந்நோய் வலியால் ஒவ் வொரு வேளை தம் காலைத் தூக்கிக் கொண்டிருப்பர். இவரோ நடராசர்; ஆதலால் கால் தூக்கி ஆடும் இவர் வாதக் காலராம்.*

*திருமால் நீரில் (கடலில்) படுத்திருப்பவர்; ஆதலால் அவர்க்கு நீரிழிவாம்.*

*பிள்ளையார் வயிறு மத்தள வயிறு ஆதலால் வயிறு வீங்கு நோய் உடையவராம்! எள்ளுதலால் எத்தனை இன்பச் சுவை!*

“வாதக்கா லாந்தமக்கு; மைத்துனர்க்கு நீரிழிவாம்;
பேதப் பெருவயிறாம் பிள்ளைதனக்(கு); - ஓதக்கேள்
வந்தவினை தீர்க்க வகையறியா வேளூரார்
எந்தவினை தீர்ப்பார் இவர்?”

பேதம்–மாறுபாடு. ஓதக் கேள்–சொல்லக்கேள். வேளூர் –புள்ளிருக்கும் வேளூர் (வைத்தீசுவரன் கோயில்)

## 29. கால்

*பூனைக்கு எத்தனை கால்? பறவைக்கு எத்தனை கால்? ஆனைக்கு எத்தனை கால்? "இவை தெரியாவா எங்களுக்கு" என்று நீங்கள் நினைக்கலாம். காளமேகப் புலவர் சொல்கிறார்: பூனைக்கு ஆறு கால்; பறவைக்கு ஒன்பது கால்; ஆனைக்குப் பதினேழு கால்! இப்படி ஒருவர் சொன்னால் மூளைக்கோளாறு என்றே முடிவு கட்டி விடுவோம். ஆனால் சொல்பவர் கவி காள மேகம் அல்லவா! இன்னும் விட்டாரா? தாமரைக் குள்ளே நீலப் பூக்கள் பூத்தனவாம். அதனைக் கண்டாராம்; ஆனால் வேறொருவரும் சொல்லக் கேட்ட தில்லையாம்! வியப்புக்கு மேல் வியப்பான செய்தி!*

*பூ நக்கி எது? தேனீ! அதன் கால்கள் ஆறு. பூ நக்கி ஆறு கால். ஒன்பது கால் எத்தனை? இரண்டே கால்! பறவைகளுக்கு இரண்டு கால்கள் தாமே. பதினேழு கால் எத்தனை? நாலே கால்! யானைக்கு நாலே கால்கள் தாமே!*

*தாமரை போன்ற முகத்திலே நீலவிழிகள் இரண்டு இருப்பது நீலமலர்கள் பூத்தது போன்றனவாம்.*

"பூ நக்கி ஆறுகால் புள்ளினத்துக் கொன்பதுகால்
ஆனைக்குக் கால்பதினே ழானதே - மானேகேள்!
முண்டகத்தின் மீது முழுநீலம் பூத்ததுண்டு
கண்டதுண்டு கேட்டதில்லை காண்."

---

புள் – பறவை. முண்டகம் – தாமரை. நீலம் – நீலப்பூ(கருங்குவனை). காண் – ஆராய்ந்து கூறு.

# 30. ஆவரை

*ஆவரை என்னும் செடி அழகிய மஞ்சள் நிறப் பூக்களைப் பூக்கும். ஆதலால் அதனைப் பொன்னா வரை என்பர். பொன்னாவரைச் செடி ஒன்று பூத்துக் காய்த்துப் பொலிவோடு விளங்குவதைக் காளமேகப் புலவர் கண்டார். அவர் உளத்தைக் கவர்ந்த அச் செடி ஒரு பாட்டையும் பெற்றுப் பெருமை யடைந்தது.*

*இலை காய் பூ இவற்றுடன் விளங்கிய பொன்னா வரைக்குள் திருமால் வரலாறுகளில் பலவற்றை அடக்கி விட்டார் காளமேகப் புலவர். 'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்' என்பது பழமொழி அல்லவா!*

*திருமால் உடையாக உடுத்தியது பொன்னாடை (பொன்). கண்ணன் அவதாரத்தில் மேய்த்தது பசு(ஆ). பசுக்களைக் காப்பதற்காகக் குடையாக எடுத்தது மலை(வரை). ஊழிக் காலத்தில் படுத்தது ஆலிலை (இலை). பசுக்கன்றின் வடிவில் வந்த அசுரனைத் தூக்கி விளாமர வடிவில் நின்ற அசுரன்மேல் எறிந்து காயுதிரச் செய்தார்(காய்). மாவலியினிடம் மூன்றடி மண் (பூ) இரந்தார். இவற்றை முறையே அமைத்துப் 'பொன் னாவரையிலை காய் பூ' எனப் பாட்டை முடித்தார்.*

"உடுத்ததுவும் மேய்த்ததுவும் உம்பர்கோன் தன்னால்
எடுத்ததுவும் பள்ளிக் கியையப் - படுத்ததுவும்
அந்நாள் எறிந்ததுவும் அன்பின் இரந்ததுவும்
பொன்னா வரையிலைகாய் பூ.

---

உம்பர்கோன் – இந்திரன். பள்ளி – படுக்கை. உடுத்தது பொன், மேய்த்தது ஆ என்பனபோலப் பொருத்திக்கொள்க.

# 31. டுடுடுடுடு

*கேட்டவர் கேட்டபடி உடனே பாடுவதில் மிகத் தேர்ந்தவர் காளமேகப் புலவர். அவரிடம் ஒருவர் "ஐந்து 'டு' தொடுத்து வருமாறு ஒரு வெண்பாப் பாட வேண்டும்" என்றார். ஒலிக் குறிப்பாகத்தான் 'டுடு டுடு' என வரும்; அருணகிரியார் பாட்டில் அவ்வாறு வந்துள்ளது. பொருள் தரும் சொல்லாக எப்படி ஐந்து 'டு' வை அடுக்குவது?*

*காளமேகப் புலவர் அழகாக அடுக்கிப் பொருளும் அணியும் சிறக்க ஒரு பாடல் செய்தார். குடந்தை நகரில் அவர் இருந்தபோது இதனைப் பாட நேர்ந்தமை யால், "குடந்தைச் சிவபெருமான் கையில் எடுப்பது 'ஓடு'; நடமிடுவது 'காடு'; ஏறுவது 'மாடு'; அடியார்க்குத் தருவது 'வீடு'; காதில் அணிவது தோடு' என்றார். ஐந்து 'டு' வரும் சொற்கள் உள்ளன அல்லவா. முன் ஐந்து எழுத்துக்களையும் தனியே பிரித்து "ஓ கா மா வீ தோ" என முன்நிறுத்தி 'டு டு டு டு டு' என ஐந்து 'டு'வையும் பின்நிறுத்தி நிரல் நிறையணி என்னும் பெயர் பெற வைத்தார்.*

"ஓகாமா வீதோ உரைப்பன் டுடுடுடுடு
நாகார் குடந்தை நகர்க்கதிபர் - வாகாய்
எடுப்பர் நடமிடுவர் ஏறுவர் அன்பர்க்குக்
கொடுப்பர் அணிவர் குழைக்கு."

---

நாகார் – வளமமைந்த. அதிபர் – தலைவர். வாகாய் – திறமையாய். குழைக்கு – காதிற்கு. எடுப்பர் ஓடு, நடமிடுவர் காடு, ஏறுவர் மாடு, கொடுப்பர் வீடு, அணிவர் தோடு எனப் பொருத்துக.

## 32. மா

*திருநாவுக்கரசர் பிறந்த பெருமை மிக்கது திருவாமூர் அதனால் திருவாமூரைத் 'திரு ஆம் ஊர்' என்று இரு பொருள் அமையக் கூறிப் பேருவகை கொண்டார் சேக்கிழார் பெருமான். அத் திருவாமூரில் வேங்கட முதலியார் என்னும் ஒருவர் இருந்தார். அவர் காளமேகப் புலவர்க்கு அன்பர். ஒரு முறை ஆமூர் சென்ற காளமேகப் புலவர் முதலியார் குதிரையைக் கண்டு வியந்தார். அதன் அழகிலே ஈடுபட்டு அரிய பாட்டொன்று பாடினார்.*

*ஆமூரைக் குறிக்கும்போது சேக்கிழாரைப் போலவே இரு பொருள் வரக் கூறினார். பிழைக்க ஆறு (வழி) ஆமூர், பதினாறு பேறுகளும் ஆமூர் என்று குறிக்குமாறு, "ஆறும் பதினாறும் ஆமூர்" என்றார்.*

*ஆமூர் வேங்கட முதலியார் ஏறும் மாவே ஏற்ற மா ஆகும். மற்றையோர் ஏறும் மாவெல்லாம் 'வெந்தமா' 'சும்மா' 'வெறும் மா' 'களி கிண்டுவதற்கு வந்த மா' என்றே கூறலாம் என்றார். இப் பாட்டைத்தம் இனிய மாமனிடம் கூறுவதுபோல் முடித்தார்.*

"ஆறும் பதினாறும் ஆமூரில் வேங்கட்டன்
ஏறும் பரிமாவே ஏற்றமா - வேறுமா
வெந்தமா சும்மா வெறும்மா களிகிளற
வந்தமா சந்தமா மா."

---

பரிமா – குதிரை. சந்த மாமா – இனிய மானனே. மா – குதிரை என்றும் மாவு என்றும் பொருள் பெறும்.

## 33. அவாள்

*திருமலைராயன் என்னும் மன்னன் காளமேகப் புலவரால் மிகப் பாராட்டப் பெற்றவன் ஆவான். அவன் கையில் இருந்த வெற்றி தரும் வீர வாளின்மேல் புலவர் பார்வை சென்றது. அவ்வொன்றே 'வாள்' என்று சொல்லும் பெருமைக்குரியது. மற்றையோர் கையில் உள்ள வாள்களெல்லாம் வாள்களல்ல. அவை, 'போவாள்' 'வருவாள்' 'புகுவாள்' 'புறப்படுவாள்' 'ஆவாள்' 'அவாள்' 'இவாள்' ஆகும் என்றார்.*

*'போவாள் வருவாள்' முதலாக ஒரு பெண்போல நகைப்புறக் கூறினாலும், 'போகும் வாள்' 'வரும் வாள்' 'புகும் வாள்' புறப்படும் வாள்' 'ஆகும் வாள்' 'அந்த வாள்' 'இந்த வாள்' 'என்று பெயரளவில் சொல்லப் படுவதன்றி 'வீர வாள்' என்றோ 'வெற்றி வாள்' என்றோ பேசும் பேற்றைப் பெறாது என்னும் பொருள் வைத்துக் கூறினர் புலவர்.*

"செற்றலரை வென்ற திருமலைரா யன்கரத்தில்
வெற்றிபுரி யும்வாளே வீரவாள் - மற்றையர்வாள்
போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள்
ஆவாள் இவாள் அவாள் ஆம்."

செற்றலர் – பகைவர். மற்றையர் – பிறர்.

# 34. கரி

*நம்மிடம் உமி இருந்தால் கரியாக்கலாம்; உமிக் கரியாக்கிப் பல்லும் விளக்கலாம். ஆனால் காளமேகப் புலவரிடம் கரியும் உமியும் இருந்தால் சுவை மிக்க கவியாகத் திகழ்கின்றது.*

*பாடலைக் 'கரி' என்று தொடங்க வேண்டும்; 'உமி என்று முடிக்க வேண்டும்! அப்படி ஒரு பாட்டு அன்று இரண்டு பாட்டுப் பாடினார்.*

*சிவபெருமான் 'கரி'யை (யானையை) உரித்து அதன் தோலைப் போர்த்துக் கொண்டவர். ஆதலால் அவரை முன்னிறுத்திப் பாட்டைத் தொடங்கினார். தேவர்கள் அமுதம் கடைந்தபோது முதலாவது நஞ்சே வெளிப்பட்டது. அதனை உண்டு 'நீலகண்டன்' ஆகிய வரும் சிவபெருமான். ஆதலால் அந் நஞ்சை இங்கே 'உமி' என்று முடித்தார்.*

"கரியதனை யேயுரிந்த கையா! வளையேந்(து)
அரி அயற்கும் எட்டாத ஐயா! - பரிவாக
அண்டரெல்லாங் கூடி அமுதங் கடைந்தபொழு(து)
உண்டநஞ்சை இங்கே உமி."

---

வளை – சங்கு. அரி – திருமால். அயன் – நான்முகன். பரிவாக – அன்பாக. அண்டர் – தேவர். உமி – காறி உமிழ் (துப்பு).

# 35. உமி

*கரி உமி நினைப்பிலே காளமேகப் புலவர் இருந்தார். அவர் ஒரு வீட்டில் உண்ணச் சென்றார்; அவர்க்கு உறவினரானவர் வீடு அது. அங்கே அத்திக் காய்ப்பொரியல், வாழைக்காய் வாட்டல், மாங்காய்ப் பச்சடி, கத்தரிக்காய் நெய்த் துவட்டல் ஆகியவற்றை அவர் அத்தைமகள் ஆக்கி வைத்திருந்தாள். ஆனால் அவற்றில் உப்பு மட்டும் அளவுக்கு மிஞ்சி இருந்ததால் புலவரால் உண்ண முடியவில்லை. கறியைத் துப்புமாறு நேரிட்டது. இச் செய்தியை வைத்து 'கரி' என்று எடுத்து 'உமி' என்று முடித்தார்.*

"கரிக்காய் பொரித்தாள்கன் னிக்காயைத் தீய்த்தாள்
பரிக்காயைப் பச்சடியாய்ப் பண்ணி - உருக்கமுள்ள
அப்பைக்காய் நெய்த்துவட்ட லாக்கினாள் அத்தைமகன்
உப்புக்காண் சீச்சீ உமி."

---

கரி என்பது யானை: யானைக்கு அத்தி என்றொரு பெயர் உண்டு; ஆதலால் கரிக்காய் (அத்திக்காய்).

கன்னி என்பது பெண்ணையும் வாழையையும் குறிக்கும். இங்குக் கன்னிக்காய் வாழைக்காய்.

பரி என்பது குதிரை; குதிரைக்கு 'மா' என்னும் பெயருமுண்டாதலால் பரிக்காய் (மாங்காய்).

அப்பை – அழகிய பையையுடைய பாம்பு. பாம்பில் கத்தரி என்பது ஒருவகை. ஆதலால் அப்பைக்காய் கத்தரிக்காய்.

## 36. காதவழி

*விகடராமன் என்பவன் ஓர் அதிகாரி; அவன் வேதத்தில் தேர்ந்தவன்; அவனுக்கு ஒரு குதிரை இருந்தது; அதை அவன் பேணுவது இல்லை. ஆனால் எங்குச் சென்றாலும் அதன்மேல் ஏறிச் செல்ல அவன் தவறுவதில்லை. அவன் வேலைக்காரர்கள் பலர் இருந்த தால் அக் குதிரையை முன்னும் பின்னும் இழுத்தும் தள்ளியும் நடத்திச் சென்றனர். இக் காட்சியை ஒரு நாள் காளமேகப் புலவர் கண்டார். அந்த அழகுக் காட்சியை அழகிய பாட்டாகப் பாடினார்.*

*"எப்பொழுதும் வேதம் ஓதும் விகடராமன் குதிரையை மூன்று பேர் முன்னே இருந்து கடி வாளத்தைப் பிடித்து இழுப்பர்; பின்னே இருந்து இரண்டு பேர் தள்ளுவர்; இவ்வாறு மாதத்திற்குக் காததூரம் செல்லும்! அவ்வாறு காற்றாகப் பறக்கும்!"*

"முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்திரண்டு பேர்தள்ள - எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடரா மன்குதிரை
மாதம்போம் காத வழி."

---

வேதம்போம் – வேதம் ஓதும். காதம் – பத்துக்கல் தொலைவு.

## 37. நராயணன்

*கம்பர் 'நாராயணன்' என்னும் பெயரை 'நராயணன்' என்று பாடினார். 'நா' என்னும் நெடிலை 'ந' என்னும் குறிலாகப் பாடியதைக் காளமேகப்புலவர் விரும்பவில்லை. ஆதலால் அதனைச் சுட்டிக்காட்டி ஒரு பாட்டுப் பாடினார்.*

*"கம்பர் நாராயணனை நராயணன் என்று பாடி யமையால் இனி நான் 'வார்' என்பதை 'வர்' என்பேன்; 'வாள்' என்பதை 'வள்' என்பேன்' 'நார்' என்பதை 'நர்' என்பேன். 'நான்' அல்லன் 'நன்' என்றார். இதனால் அவரவர் விரும்பிய வண்ணம் மொழியைச் சிதைப்பது முறையற்றது என்று காளமேகப் புலவர் கருதினார் என்பது தெளிவாகும்.*

"நாரா யணனை நராயணனென் றேகம்பன்
ஓராது சொன்ன உறுதியால் - நேராக
வாரென்றால் வர்ரென்பேன் வாளென்றால் வள்ளென்பேன்
நாரென்றால் நர்ரென்பேன் நன்."

---

ஓராது – ஆராயாது.

## 38. பூசுணை

கொண்டத்தூர் என்பதோர் ஊர்; அவ்வூரில் தண்டைக் கால் அம்மை என்றோர் அம்மையர் இருந்தார். அவர் சமையற் கலையில் மிகத் தேர்ந்தவர்; ஒருபோது பூசுணைக்காயைச் சுவையாகக் கறியாக்கிக் காளமேகப் புலவருக்கு உணவு வழங்கினார். புலவர் பூசுணைக்காய்க் கறியின் சுவையில் ஈடுபட்டுச் சுவையான ஒரு பாட்டுப் பாடினார்.

கொண்டத்தூர் தண்டைக்கால் அம்மையார் சமைத்த பூசுணைக்காய்க் கறியைக் கண்டவர் கைலாயம் கண்ட இன்பம் பெறுவர்; கையில் எடுத்து உண்டவர் முத்தியே பெற்றவராவர்; அதன் சுவை தேவர்க்கும் சிவபெருமானுக்கும் உரியதாக அமையும்.

"கண்டக்காற் கிட்டும் கயிலாயம்; கைக்கொண்டுட்
கொண்டக்கால் மோட்சம் கொடுக்குமே;-கொண்டத்தூர்
தண்டைக்கால் அம்மை சமைத்துவைத்த பூசணிக்காய்
அண்டர்க்காம் ஈசர்க்கு மாம்."

---

கண்டக்கால் – கண்டபோது. அண்டர் – தேவர். ஈசர் – சிவ பெருமான். பூசணிக்காய் – பூசுணைக்காய்.

## 39. பணிவிடை

*நேராக ஒன்றாகச் சொல்லலினும் சுற்றிச் சொல்லல் பொருள்காண அரிதெனினும் பொருள் காணும்போது சுவையும் அதிகமாம். அப்படிப்பாடிய ஒரு பாடல் வருகிறது; காளமேகப் புலவர் பாடியது.*

*பண்புள்ளவருக்கு ஒரு பறவைப் பெயர் (ஈ); பாவம் செய்வதற்கு ஓர் இலக்கம் (அஞ்சு) நட்பில்லாதவரைக் கண்டால் நாற்காலி (விலங்கு, விலகு); சொக்கர்க்கு அரவம் (பணி) வாகனம் (விடை) நல்ல நிலம் (செய்). எடுப்பும் முடிப்புமாக அமைந்த அருமையது இது.*

"பண்புளருக் கோர்பறவை; பாவத்திற் கோரிலக்கம்;
நண்பிலரைக் கண்டக்கால் நாற்காலி - திண்புவியை
ஆள்வார் மதுரை அழகியசொக் கர்க்கரவம்
நீள்வா கனநன் னிலம்"

---

நண்பிலர் – பகைவர்; புவி – உலகம்; அரவம் – பாம்பு; அதன் மற்றொரு பெயர் பணி; வாகனம் காளை (விடை) நிலம் – செய்; நன்செய்.

## 40. பெற்றவர் பெருமை

*வசைபாடுதலில் வல்லவர் காளமேகர். கும்பகோணத்திற்குப் போன அவர் ஒரு விருந்திலே கலந்து கொண்டார். அவருக்குப் பக்கத்தில் முன்குடுமிக்காரன் ஒருவன் இருந்து உண்டான். அவன் குனிந்து நிமிரும் போது குடுமியின் முடிச்சு அவிழ்ந்து விட்டது. ஆயினும் அவன் குனியவும் நிமிரவுமாக-அவன் குடுமி யும் கீழும் மேலும் போக உண்டான். வேடிக்கை யாகப் பார்ப்பவர் இருந்தாலும் காளமேகருக்கு வேதனை யாக்கியது அவன் பக்கத்தில் இருந்து உண்டதும் அவன் சாப்பிட்ட முறையும் சலிப்பூட்டின. அவனைப் பெற்றவளையும் விடாமல் பழித்தார்.*

*பெற்றவர்க்குப் பெருமை சேர்க்கும் பிள்ளை களும் உளர். பெற்றவர்களுக்குச் சிறுமை சேர்ப்பவரும் உளர். இதனை எண்ணிப் பார்க்கத் தூண்டுகிறது காளமேகர் பாட்டு.*

'சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்
பொருக்குலர்ந்தவாயா புலையா - திருக்குடந்தைக்
கோட்டானே நாயே குரங்கே உனையொருத்தி
போட்டாளே வேலையற்றுப் போய்.

சுருக்கு – முடிப்பு. சோழியன் – சோழ நாட்டான். பொருக்கு – பருக்கை. குடந்தை – கும்பகோணம். கோட்டான் – ஆந்தை. போட்டாள் – பெற்றாள் (தாய்).

# 41. நல்ல வாணிகம்

*வாணிகர்க்கு ஓர் அரிய வாய்ப்பு இருப்பதை வள்ளுவர் எடுத்துக் காட்டினார். வாணிகத்தால் வாழ்வுக்கு வேண்டும் பொருள் ஈட்டுவதுடன் புகழ் வாழ்வுக்குரிய அருள் அறம் ஆகியவற்றையும் தேடிக் கொள்ள முடியும் என்றார். அதற்கு ஒரு வழி தம் பொருள் போலப் பிறர் பொருளையும் ஒப்ப மதித்து வாணிகம் செய்தல் வேண்டும் என்பது.*

*தண்டாங்கூர் என்னும் ஓர் ஊரில் வாணிகர் பண்டங்களை வாங்குதலிலும் விற்றலிலும் செய்தகேடு காளமேகப் புலவரால் அறியப்பட்டது. அவர் நேரே வணிகர்களை அழைத்தார். வழக்கம்போல் வந்த வசைப்பாட்டைப் பொழிந்தார். அவர்கள் குணக் கேட்டைக் கண்டித்ததுடன் மக்கள் படும் பாட்டையும் பாட்டாக்கினார்.*

தண்டாங்கூர் மாசனங்காள் சற்குணத்தீர் என்றிருந்தேன்
பண்டம் குறையவிற்ற பாவிகாள் -பெண்டுகளைத்
தேடியுண்ண விட்டீர் தெருக்கள் தெருக்கள்தொறும்
ஆடிமுதல் ஆனிவரைக் கும்.

---

மாசனம் – பெருமக்கள். சற்குணம் – நற்குணம். ஆடிமுதல் ஆனி வரை என்றால் ஆண்டு முழுவதும். ஆடி மாதம் வறட்சி மிக்க காலம்; அந்நிலையே வரும் ஆனிவரையும் என்பதாம்.

## 42. அலைந்தபாடு

*காளமேகப்புலவர் அங்கும் இங்கும் போய்ச் சில வள்ளல்களைத் தேடினார். தேடி அலுத்த பாடு பெரி தாயிற்று. நடந்த களைப்பு - சோர்வு - என்ற அளவோடு நிற்கவில்லை.*

*ஒருநாள் இருநாள் என்று இல்லாமல் நெட்ட நெடுங்காலம் வள்ளல்களைத் தேடி அலைந்தாராம். தம் உள்ளங்காலில் உள்ள வெண்ணிற எலும்பு தானும் தேயுமாறு தேடி அலைந்தாராம்! இந்த அலைவு எப்படி நீங்கியது?*

*ஆமூர் என்னும் ஓர் ஊர்க்குச் சென்றார். ஆங்கோர் வள்ளலைக் கண்டு கொண்டார். கண்டு கொண்டதற்குப் பின்னர், அதற்கு முன் அவரைக் காணாது அலைந்த பாடுகள் புலப்பட்டன. அப் புலப்பாடு பாட்டாகியது.*

"உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற ஒருகோடி
வெள்ளங்கா லம்திரிந்து விட்டோமே - உள்ளபடி
ஆமூர் முதலி அமரர்கோன் இங்கிருக்கப்
போமூர் அறியாமற் போய்"

*என்பதுஅது.*

வெள்ளம் – ஒரு பெரிய எண்ணிக்கை. அமரர்கோன் – தேவர் தலைவன், ஒப்பானவன். போம் – போகும்.

# 43. வாட்டம்

*காளமேகப் புலவர் ஒருமுறை மதுரைக்குச் சென்றிருந்தார். அவரை அறிந்து பேணிக் கொள்வார் எவரும் வாய்க்கவில்லை. பொழுதும் இரவாகிவிட்டது. அவ்வேளையில் அவர்க்கு உணவுக்கும் படுத்து உறங்குவதற்கும் தக்க வாய்ப்புக் கிடைக்க வில்லை.*

*பசி வாட்டப் படுக்க வேண்டியவரானார். படுத்த இடத்திலோ கொசுக்கடி தாங்க முடியவில்லை. பசிக் கடியோ காலை நீட்டிப் படுக்க விடவில்லை. தப்பிப் தவறிக் கண்ணை மூடி உறங்க நேர்ந்தாலும் பக்கத்தே கட்டப்பட்டிருந்த மாடுகளின் மணியோசை கேட்டுத் தொடர்ந்து உறங்கவும் முடியவில்லை. அந்தத் துயரங்கள் ஒரு பாட்டாகின. புலவர் பட்ட துன்பமும் இன்பமும் சாவாவாழ்வு பெற்று விடும். இதோ அந்தப் பாட்டு: பாண்டியனை நினைத்துப் பாடியது.*

"மசகம் இசைகாட்ட: மாடுமணி காட்ட;
நிசியும் ஒருக்காலை நீட்டேன் - பசியால்
வாடினேன் வாடி மனந்தளர்ந்து நானுன்னைத்
தேடினேன் தென்னவரா யா"

---

மசகம் – கொசு. நிசி – இரவு. தென்னவர் ராயன் – பாண்டியன். தென்னாட்டு அரசன்.

# 44. அம் என்றால்

*அதிமதுரக் கவிராயர் என்பவர் முதன் முறையாகக் காளமேகப் புலவரைக் கண்டார். இன்னார் என்று அறியாமல், "உம் பெயர் என்ன? நீர் பாடல் இயற்றுவீரா?" என்று வினவினார்.*

*அவ்வினாக்களைக் கேட்ட காளமேகர் தம் பேரையும் பாடற்சிறப்பையும் கூறும் வகையில் ஒரு பாடல் பாடினார்.*

*இம் என்று சொல்லுமுன் எழுநூறும் எண் ணூறும் பாடுவோன்;*

*அம் என்று சொல்லுமுன் ஆயிரம் பாடுவேன்;*

*சும்மா அமைந்து இருக்கவும் செய்வேன். பாடும் எழுச்சி வந்துவிட்டால்பெரியமழைப்பொழிவு போல்பாடல்பொழிவேன். காளமேகம் என்பது என்பெயர் என்றார். அப்பாடல்:*

"இம்மென்னு முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம்பாட் டாகாதோ - சும்மா
இருந்தால் இருந்தேன்; எழுந்தேனே யாயின்
பெருங்காள மேகம் பிளாய்"

*என்பது.*

---

இம், அம் என்பவை ஒலிக்குறிப்புகள்; உடனே என்பது பொருள். பிளாய் – என்பது பிள்ளாய் என்பதன் தொகை. சிறு பிள்ளையாக எண்ணிச் சொல்லிய குறிப்பு இது.

# 45. கடையை மூடு

*புலவருக்கும் புலவருக்கும் உண்டாகும் போட்டி புலமைக் காய்ச்சல் என்று சொல்லும் நிலை 16, 17, 18 ஆம் நூற்றாண்டு களில் மிக இருந்தது. அக்காய்ச் சலைப் பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்கள் கதை கதையாகப் பின்னிவிட்டு மகிழ்வும் கொண்டார்கள். அவ்வகையில் அவர்களால் பின்னிப் போடப் பட்ட முடிச்சுகள் வரலாற்றுப் பார்வைக்கு ஒப்ப ஆகாததாகவும் அமைந்தன.*

*காளமேகப் புலவர் அதிமதுர கவிராயரைப் பழித்தார் என்றால் அதிமதுரம் அவரை விடுவாரா?*

*மூச்சு விடுமுன்னே முன்னூறு பாடுவாராம்; நானூறும் பாடுவாராம்; 'ஆச்' என்று ஒரு தும்மல் போடும் நேரத்துள் ஆயிரம் பாட்டும் பாடுவாராம்; காளமேகப் புலவர் தம் கவிக் கடையை மூட வேண்டுமாம்;*

மூச்சு விடுமுன்னே முன்னூறும் நானூறும்
ஆச்சென்றால் ஆயிரம்பாட் டாகாதோ - பேச்சென்ன
வெள்ளைக் கவிக்காள மேகமே நின்னுடைய
கள்ளக் கவிக்கடையைக் கட்டு

*என்றார்.*

---

வெள்ளைக்கவி – பொருளில்லாப்பாடல். கள்ளக்கவி – வஞ்சம் – திட்டு – உடைய பாட்டு. கடையைக் கட்டுதல் – மூடுதல்.

## 46. சற்றே இரு

*மதுரகவிராயர் என்பார் தொண்டை நாட்டு அமரம் பேட்டைச் சேர்ந்தவர். திருநின்ற ஊரினராகிய காளத்தியப்பர் என்னும் வள்ளலைக் கண்டு தம் வறுமை நீங்க நினைத்தார்.*

*சிலவற்றை நினைக்கும் போதே, இன்பம் சுரக்கும். அவற்றைப் பெற்றது போன்ற நிறைவும் ஏற்படும். வறுமையில் தவித்த மதுரகவி காளத்தியப்பரை நினைத்த அளவிலேயே தம் வறுமை தொலைந்ததாக எண்ணிப் பூரிப் படைந்தார்.*

*எப்பொழுதும் விடாமல் நிழலைப் போல் தொடரும் வறுமையே, நாளைக்கு நான் திருநின்ற ஊர் சென்று காளத்தியாரைக் கண்டு விட்டேன் எனின் உனக்கும் எனக்கும் என்ன உறவிருக்கும்? இன்றைக்கு மட்டும் என்னோடு சிறிது இரு என்று பாடினார். அப்பாடல்:*

நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நிழல்போல
நாளைக் கிருப்பாயோ நல்குரவே - காளத்தி
நின்றைக்கே சென்றக்கால் நீயெங்கே? நானெங்கே?
இன்றைக்கே சற்றே இரு.

*என்பது அது.*

நல்குரவு – வறுமை. நின்றை – திருநின்ற ஊர். சற்றே – சிறிது பொழுதே.

# 47. சடையன் ஊர்

*ஒரு நாட்டுக்கு நிலவளம், நீர்வளம் என்பவை இன்றியமையாதவை. இவ்விரண்டும் இருப்பின் விளைவு சிறக்கும். மக்கள் வாழ்வில் வறுமை இல்லாமையால் களவு வஞ்சம் என்பவை இருத்தல் அரிது.*

*கம்பர் என்னும் பாவலரைக் காத்த வள்ளல் சடையப்பர். அவர் ஊர் வளத்தைச் சொல்லும் வகையில் அந்நாட்டவர் அமைதி வாழ்வையும் கூறுகிறார்.*

*பருத்த எருமை குளத்துள் புகுந்து நீருள் படுக் கிறது. அந் நீரில் இருந்த வரால் மீன் எருமையின் மடுவை முட்டுகிறது. அம் முட்டுதலைத் தன் கன்றின் முட்டுதலாக எண்ணிய எருமை வீடுவரை பாலைக் கொட்டுகிறது. இத்தகு வளம் உள்ளமையால் வீட்டுக் கதவுகளை அடைத்துக் காப்பவர் இல்லை. களவு போய் விடும் என்னும் அச்சமும் இல்லை. இத்தகைய ஊர் திருவெண்ணெய் நல்லூர்.*

மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே - நாட்டில்
அடையா நெடுங்கதவும் அஞ்சலென்ற சொல்லும்
உடையான் சடையன்தன் ஊர்.

---

மோடு – பெரிய. வாவி – குளம். வெண்ணெய் – திருவெண்ணெய் நல்லூர். அஞ்சல் – அஞ்சாதே. சடையன் – சடையப்ப வள்ளல்.

## 48. வெளியேறு

*கம்பருக்கும் சோழவேந்தனுக்கும் கருத்து மாறுபாடு ஏற்பட்டிருக்கிறது. கோவேந்தனாகிய சோழன் என் நாட்டை விட்டு வெளியேறும் என்று கம்பரைக் கூறினானாம். கம்பர் பாவேந்தன் அல்லவா! அதனால் சினம் கொண்டான்; சீறினான்; அச்சீற்றம் பாட்டு ஆகியது.*

*மன்னன் என்றால் உலகில் நீ ஒருவன் தானா? வள மிக்க நாடு என்றால் உன் நாடு மட்டும்தானா உலகில் உண்டு? நீ என்னைக் காப்பாய் என்று எண்ணியோ தமிழை நான்கற்றேன்? என்னை வருக என்று வரவேற்காத அரசொன்றும் உண்டோ? குரங்கை ஏற்றுக் கொள்ளாத மரக்கொம்பு ஒன்றுதானும் உண்டோ? வருகிறேன் என்று சொல்லிவிட்டுப்போனார் என்பது அப்பாடல்.*

மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ
உன்னைஅறிந் தோதமிழை ஓதினேன் - என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ உண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு.

---

வள நாடு – வளமிக்க நாடு, சோழநாடு. ஓதினேன் – கற்றேன். கொம்பு – கிளை. வேந்து – அரசன், அரசு.

# 49. இல்லையோ இடம்

*நாட்டை விட்டுப் போகச் சொல்லிய வேந்தன் சோழனை நோக்கி மேலும் கம்பர் ஒரு பாட்டுப் பாடினார்.*

*அந்நாளில் சோழநாடு 24 காதம் பரப்புடையதாக இருந்திருக்கிறது. இந்த உலகத்தில் இந்த இருபத்து நான்கு காதம் தான் உண்டா? அதற்கு மேல் இடம் ஏதும் இல்லையா? இருக்கும் இடத்தையும் கடலே அள்ளிக் கொண்டு போய் விட்டதா? நீ சினம் கொண்டால் என்னைப் போன்றவர்களுக்கு இடமே கிடையாதா? என்றார்.*

*காவிரியன்னையின் அருள் பொன்கொழித்தால் தான் என்ன? கொல்லிமலை தேன் பொழிந்தால் தான் என்ன? ஆள்பவனுக்கு வளமான உள்ளமும் இனிய செயலும் இருந்தால் அல்லவோ பயன் என எண்ணி னார்.*

காதம் இருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல்கொண் டொழித்ததோ - மேதினியில்
கொல்லிமலைத் தேன்சொரியும் கொற்றவா நீமுனிந்தால்
இல்லையோ எங்கட் கிடம்?

---

காதம் – (24) 10 கல்பரப்பு. காசினி – உலகம். ஓதக்கடல் – அலைவீசும் கடல். கொற்றவன் – அரசன். எங்கட்கு – கம்பர் தம்மை மட்டுமன்றித் தம் மொத்த புலவர்களையும் குறித்தது.

# 50. அம்பு

கம்பருக்கும் சோழனுக்கும் கருத்து வேற்றுமை முற்றியிருக்கும் போலும். அதற்குக் காரணமாகக் கம்பர் மகன் இருந்திருப்பான்போலும். அவனைச் சோழன் தன் வில்லால் தாக்கியிருப்பான் போலும். இதனால் கம்பர் சோழனை நோக்கிக் கூறியதாக ஒரு பாட்டைக் கூறுதல் அறியப்படுகின்றது.

வில்லில் இருந்து வெளிப்பட்டுத் தாக்கும் அம்பு கொடியதா? வாயில் இருந்து வெளிப்பட்டுத்தாக்கும் சொல்லம்பு கொடியதா? வில்லம்பினும் சொல்லம்பே கொடுமையானதாகும். வேந்தனே உன் வில்லம்பு என் நெஞ்சை வாடச் செய்தது. ஆனால் என் சொல்லம்போ உன்னளவில் நில்லாமல் உன் குடியையே சுட்டெரித்தது என்று ஒரு பாடல் பாடினார் என்பது அது.

"வில்லம்பு சொல்லம்பு மேதினியில் ரெண்டுண்டு
வில்லம்பில் சொல்லம்பே மேலதிகம் - வில்லம்பு
பட்டதடா என்மார்பில் பார்வேந்தே நின்குலத்தைச்
சுட்டதடா என்வாயில் சொல்."

மேதினி – உலகம். ரெண்டு – இரண்டு. பார் – உலகம். பட்டது அடா; சுட்டது அடா; அடா அடே என்பவை தம்மில் தாழ்த்தியுரைக்கும் சொல். சீற்றத்தில் சொல்லிய சொல்லுமாம்.

# 51. நன்றி

*கம்பருக்கும் காலமெல்லாம் உதவிய வள்ளல் சடையப்பர். தம் உதவியால் இராமாயணத்தில் பாடு புகழ் பெற்றவர் அவர். கம்பர் வயதால் முதிர்ந்து மூத்து மூச்சொடுங்கும் நிலையிலும் சடையப்பர் கொடையை மறந்தார் அல்லர். நன்றியை மறப்பதை நன்றி கொல்லுதல் என்று கூறிய வள்ளுவரை வழிமொழிந்து பாடியவர் கம்பர்.*

*சடையப்பர் கம்பரைக் கவலையுடன் பார்த்தார். கால அளவைக்கு உட்பட்ட உடலையும் அதன் தளர்வையும் உணர்ந்து வருந்தினார். அந்நிலையில் கம்பர், பசுப்பால் என்ன, தேன் என்ன, வாழை, மா, பலாக் கனிவகை என்ன, இன்னவையெல்லாம் இனிதாக உண்டு திளைத்த என்னால், யான் இறக்கும் போதேயும் கூட சடையப்ப வள்ளலே உமை மறக்க முடியுமா? என்று பாடினார்.*

“ஆன்பாலும் தேனும் அரம்பைமுதல் முக்கனியும்
தேம்பாய உண்டு தெவிட்டுமனம் - தீம்பாய்
மறக்குமோ வெண்ணெய் வருசடையா! கம்பன்
இறக்கும்போ தேனும் இனி”

*என்பது அது.*

---

ஆன் – பசு. அரம்பை – வாழை. தேம்பாய – இனிமை பெருக. தெவிட்டுதல் – சுவை மிகுதல். தீம்பாய் – தீமையாய். வெண்ணெய் – திருவெண்ணெய் நல்லூர். சடையப்பர் ஊர்.

## 52. முடி நடல்

*கம்பர்தம்மாணவராகவும்செல்வராகவும்கொடையாளராகவும் விளங்கியவர் ஏகம்பவாணர் என்பார். அவரைப் போலவே அவர் மனைவியாரும், வேலையாளும் பாவன்மை பெற்றுவிளங்கினர்.*

*ஒருமுறை அரசு அலுவலர் ஒருவர் ஏகம்பவாணரைத் தேடிவந்தார். வாணர் வீட்டில் இல்லை. தம்முடைய அலுவல் செருக்கால் வாணர் முடிநடப் போயினரா என இகழ்வதுபோல் வினாவினார். அவர்தம் எள்ளல் குறிப்பை உணர்ந்த ஏகம்பவாணர் துணைவியார் ஒரு பாட்டுப் பாடினார்.*

*படைகளை யெல்லாம் மிதிக்கும் தழைகள் ஆக்கி, போர்க் களத்தில் கொட்டும் குருதியை நீராகத்தேக்கி, யானையை விட்டுத் தொழியாக மிதித்த நல்ல சேற்றில் மானமிக்கவரும், பாவலர்க்குப் பாவலரும் ஆகிய வாணர் மூவேந்தரும் அணிந்த முடிகளைப் பறித்து நட்டார் என்றார். உழவரால் தாம் உலகம் வாழ்கிறது; அரசும் ஆள்கிறது என்பதைக் காட்டியது அது.*

சேனை தழையாக்கி, செங்குருதி நீர்தேக்கி,
ஆனை மிதித்த அருஞ்சேற்றில் - மானபரன்
பாவேந்தர் வேந்தன் பறித்து நட்டான் ஏகம்பன்
மூவேந்தர் தங்கள் முடி.

*என்பது பாடல்.*

---

சேனை – படை. குருதி – இரத்தம். மானபரன் – பெருமை மிக்கவன். முடி – நாற்றுமுடி. வேந்தர் மகுடம், தலை.

## 53. புலவன்

*கம்பர் மகன் அம்பிகாபதி; அம்பிகாபதியின் மகன் பொய்யாமொழி; பொய்யாமொழிப்புலவர் தஞ்சைவாணன் கோவை பாடியவர். அவரை மதித்த அரசர் 'புலவர் என்றால் பொய்யா மொழியாரே புலவர்' என்று பாராட்டினார். ஆனால் பண்பா டமைந்த புலவராகிய பொய்யாமொழியார் இப்புகழ்ச் சொல் கேட்டு தலை நாணினார்.*

*அறநூலாகிய திருக்குறளை இயற்றியவனும் புலவன்; அத்திருக்குறளுக்கு உரைகண்ட புலவனும் புலவன்; குறுமுனிவன் என்று சொல்லப்படுவானும் புலவன். இவர்களோடு என்னையும் புலவர் என்றால் அறிவுடைய பெருமக்கள் ஏற்றுக் கொள்வரோ என்று பாடினார்.*

"அறமுரைத் தானும் புலவன்முப் பாலின்
திறமுரைத் தானும் புலவன் - குறுமுனி
தானும் புலவன்; தரணி பொறுக்குமோ
யானும் புலவன் எனின்"

*என்பது அப்பாடல்.*

---

அறம், முப்பால் – திருக்குறள். குறுமுனி – அகத்தியன்; தரணி – உலகம். புலவர்கள்; எனின் – என்று சொன்னால்.

## 54. கலிங்கம்

*இரட்டைப் புலவர்கள் மதுரைக்கு வந்தனர்; பொற்றாமரைக் குளத்தில் குளித்தனர். அப்பொழுது குருடராகிய புலவர் தம் உடையை நீரில் தோய்த்துத் தப்பினார். அவர் அதைத் தப்பி நீரில் அலசிக் கொண் டிருந்தபோது அவரை விட்டு ஆடை தப்பிப் போய் விட்டது. கரைமேல் இருந்த முடவராகிய புலவர், நீரில் தோய்த்து நாம் தப்பிக் கொண்டிருந்தால் அந்த ஆடை நம்மை விட்டுத் தப்பாதோ?" என்றார். உடனே குருடர் இக் கலிங்கம் (இந்த ஆடை) போனால் என்ன? சொக்கலிங்கம் நமக்கு இருக்கிறார்' என்று பதில் கூறினார். இருவரும் பாதி பாதியாகப் பாடிய வெண்பா வருமாறு;*

"அப்பிலே தோய்த்திட்(டு) அடுத்தடுத்து நாமதனைத்
தப்பினால் நம்மையது தப்பாதோ - இப்புவியில்
இக்கலிங்கம் போனாலென் ஏகலிங்க மாமதுரைச்
சொக்கலிங்கம் தானிருக்கச் சொல்."

---

அப்பு – நீர். புவியில் – உலகில். கலிங்கம் – ஆடை. ஏக லிங்கம் – ஒப்பற்ற லிங்கம். சொக்கலிங்கம் – மதுரையில் உள்ள இறைவன் திருப்பெயர்.

# 55. ஓசை உண்டு

*இரட்டைப் புலவர்கள் ஆங்கூர் என்னும் ஊர்க்குச் சென்றனர். அங்கே இருந்த கோயிலில் தங்கினர்; பசி மிகுதியாக அவர்களுக்கு இருந்தது; அந்த நேரம் பூசை செய்வதற்குப் பூசாரி வந்தார். சரி! பூசை முடிந்தால் பொங்கல் வடை முதலிய உணவு கிடைக்கும் என்று புலவர்கள் எண்ணியிருந்தனர்; சங்கு முழங் கியது; முரசு அறையப் பெற்றது; கொட்டு அடிக்கப் பெற்றது! பூசை முடிந்தது! இறைவனுக்கே பொங்க லிட்டுப் படைக்காமல் பூசையை முடித்துப்போய் விட்டவர்கள் புலவர்களுக்குத் தானோ பொங்கல் கொடுப்பார்கள்.*

*குருடர் பாடலைத் தொடங்கினார். "ஆங்கூர்ச் சிவனே, இரவும் பகலும் ஆட்சி நடத்துபவனே, நாங்கள் பசியோடு இருப்பது முறையா?" என்றார். அதற்கு முடவர், "சங்கும் முரசும் கொட்டும் முழங்கக் கேட்டதல்லாமல் சோறு கண்ட தெய்வம் எது?" என்று முடித்தார்.*

"தேங்குபுகழ் ஆங்கூர்ச் சிவனேஅல் லாளியப்பா!
நாங்கள் பசித்திருக்க ஞாயமோ - போங்காணும்!
கூறுசங்கு தோல்முரசு கொட்டோசை அல்லாமல்
சோறுகண்ட மூளியார் சொல்."

---

தேங்குபுகழ் – மிகுந்தபுகழ். அல் ஆளி – இரவிலும் ஆளும். மூளி – உறுப்புக் குறையுள்ள மனிதன்.

# 56. இனியான்

*திருவேங்கடம் என்பவன் இரக்கமுடையவன்; பெருங் கொடையாளன்; இரட்டைப் புலவர் மேல் பேரன்பு உடையவன்; அவன் இரட்டைப் புலவர்கட்கு அடிக்கடி பரிசு அளித்து மகிழ்வான்.*

*அவனுடைய அண்ணனாகிய கண்ணுக்கினியான் என்பவன் யாருக்கும் ஒன்றும் அளிக்கமாட்டான்; இரக்கம் இல்லாதவன். அவன் கண்ணுக்கு இனியவனே யன்றிக் காதுக்கு இனியவனோ நெஞ்சுக்கு இனிய வனோ அல்லன்.*

*கொடையாளியாகிய திருவேங்கடன் ஊரில் இல்லாத போது ஒருநாள் இரட்டைப் புலவர்கள் கண்ணுக்கினியானைச் சென்று கண்டனர். பரிசு கிடைக்கவில்லை. ஏமாற்றமடைந்த அவர்கள் அப்பொழுது பாடிய பாடல் சுவை யுடையது.*

*"தேன் போல் மொழியும் திருவாயையுடைய திரு வேங்கடத்துடனே ஏன் பிறந்தான் கண்ணுக் கினியான்?" என்பது முடவர் வினா?*

*"சீதேவியுடன் அவள் பிறந்த பாற்கடலிலே மூதேவி ஏன் பிறந்தாள்?" என்று வினாவி, அந்த வினாவாலேயே விடையையும் கூறிவைத்தார் குருடர்:*

"தேன்பொழிந்த வாயான் திருவேங் கடத்துடனே
ஏன்பிறந்தான் கண்ணுக் கினியானே - வான்சிறந்த
சீதேவி யாருடனே செய்யதிருப் பாற்கடலில்
மூதேவி ஏன்பிறந்தாள் முன்."

---

வான்சிறந்த – மிகச்சிறந்த. தெய்வத் தன்மையால் சிறந்த. செய்ய – செவ்விய. சீதேவியும் மூதேவியும் உடன் பிறந்த கதையை உட் கொண்டு கூறினார்.

# 57. கொடார்

*நல்லுள்ளம் இல்லாத சிலர் தாமும் கொடுக்க மாட்டார்; பிறர் உவந்து கொடுத்தலைக் கண்டு மனம் பொறாது தடுப்பர். இவ்வாறு சிலர் இருத்தலை இரட்டைப் புலவர்கள் எண்ணினர். அவ்வெண்ணம் ஓர் உவமையாக வளர்ந்தது.*

*"வேலமரம் குறைந்த நிழலுடையது; முள் நிரம்ப வுடையது: நெருங்கியவரைத் தைத்து வலிக்கச் செய்ய வல்லது; அதனை அடுத்து நறுங்கனி உதவும் வாழை பலா முதலியவை நிரம்பிய பழத்தோப்பு இருப்பினும் அங்குப் போய்ப் பயன்கொள்ளா வண்ணம் தடுக்கும் இயல்புடையது. அதுபோல் கீழ்மக்கள் தாமும் கொடார்; சிலராகச் கூடிச் சேர்ந்து பிறரையும் கொடுக்க விடார்" என்னும் பொருளமையப் பாடினர்:*

"வெள்ளிலைவேல் அற்பநிழல்; மெத்தவே முள்தைக்கும்
துள்ளுநற வாழைபலாச் சோலைக்குள் - மெள்ள
அடுக்கவொட்டா வாறுபோல் அற்பர்சிலர் கூடிக்
கொடுக்கவொட்டார் தாமும் கொடார்."

---

வெள்ளிலை – வெண்ணிற இலை. வேல் – வேலமரம், வெள்வேல். அற்பம் – குறைந்த. துள்ளுநற – தேன் துளிக்கும். அடுக்க ஒட்டா வாறு – நெருங்கவிடாவாறு. கொடுக்க ஒட்டார் – கொடுக்கவிடார்.

# 58. எரியூட்டல்

*முற்றுந் துறந்த துறவர் பட்டினத்தார். எல்லாவற்றையும் துறந்தாலும் தாயன்பைத் துறவாத தனிப் பெரும் துறவி அவர். ஒருநாள் தம் தாயார் இறந்த செய்தியைக் கேள்வியுற்று ஓடோடி வந்தார். ஆறாகப் பெருகியது கண்ணீர்; உள்ளம் உருகியது; தாயார் திருவுடலைக் கட்டையிற் கிடத்தித் தீ மூட்ட வேண்டிய கடனைச் செய்தார். தாய் உடலில் தீ மூட்டிய நிலையை அவரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அந்நிலையில் உள்ளம் வெதும்பிப் பல பாடல்கள் பாடினார். அவற்றுள் ஒரு பாட்டு*

*"அந்தோ! அன்னை முந்தித் தவங்கிடந்தார்; என்னை, முந்நூறு நாள் சுமந்தார்; இரவும் பகலும் இடைவிடாமல் இறைவனை வழிபட்டார்; வயிறு சரியுமாறு சுமந்து இளைத்தார்; அவருக்கோ நான் தீ மூட்டுவேன்."*

"முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியுந் தழல்மூட்டு வேன்."

---

அந்தி – இரவு. தழல் – தீ.

## 59. பார்

*பாண்டிவேந்தன் **வரதுங்கராம பாண்டியன்** ஒரு பெருங் கவிஞன்; அவன் மனைவியும் கவியரசி; அவன் உடன் பிறந்த தம்பி அதிவீரராம பாண்டியனும் பெருங்கவிஞன்.*

*அதிவீரராம பாண்டியன் தென்காசியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தான். அவன் தன் அண்ணன் மேல் பகை கொண்டு படையெடுத்து வந்தான். அப் படையைக் கண்ட **வரதுங்கராம பாண்டியன் மனைவி** ஒரு பாடல் எழுதி அதிவீரராம பாண்டியனுக்கு அனுப்பினாள்.*

*"சூரியன் மகனாகிய சுக்கிரீவனையும், தென்னிலங்கை வேந்தனாகிய வீடணனையும், பாண்டவர்களில் ஒருவனான அருச்சுனனையும் உடன்பிறந்தாராக எண்ணாதே. அவர்கள் முறையே தம் அண்ணன் மார்களான வாலி, இராவணன், கன்னன் ஆகியோரைக் கொன்றனர். அவர்களைப்போல் இராமல் 'உடன்பிறந்தார் என்றால் இப்படியல்லவோ இருக்க வேண்டும்' என்று பாராட்டுமாறு வாழ்ந்த பரதனையும் இராமனை யும் பார்" என்னும் பொருள் அப் பாடலில் அமைந்திருந்தது. அதனைக் கண்ட அதிவீரராம பாண்டியன் அமைதியடைந்தான்; போர் நின்றது. போரை நிறுத்திய புகழ்மிக்க பாடல் இது;*

"செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே - விஞ்சு
விரதமே பூண்டிந்த மேதினியை ஆண்ட
பரதனையும் ராமனையும் பார்."

---

செஞ்சுடரோன் – சூரியன். பஞ்சவர் – பாண்டவர் ஐவர். பார்த்தன் – அருச்சுனன். விஞ்சு விரதம் – சிறந்த விரதம், (இராமனைப் போலவே பரதனும் துறவியாக இருந்தமை). மேதினி – உலகம்.

# 60. ஏன்?

***அந்தகக்கவி வீரராகவர்*** *கண்ணொளியற்றவர்; எண்ணும் எழுத்தும் கண்ணாகக் கொண்டு கவி வீர ராகவர் என்னும் பெயரோடு விளங்கியவர்; அரிய நூல்கள் பலவற்றைப் படைத்தவர்.*

*வீரராகவர் தமிழ்நாடு முழுமையும் சுற்றி வந்தார். இலங்கைக்கும் சென்றார். அங்குப் பரராச சிங்கன் என்னும் பெயருடைய மன்னன் ஒருவன் ஆட்சி செலுத்தி வந்தான். கண்ணொளி இல்லாத புலவரை வரவேற்றுப் பாராட்ட அவன் விரும்பவில்லை. பின்னர்ப் புலவர்தம் புலமைத் திறனைக் கேள்விப்பட்டு வரவேற்க இசைந்தான்.*

*புலவர் வரும் வழியில் தன் கையில் வில்லை வைத்துக் கொண்டு நின்றான் பரராசன். உள்ளொளி மிக்க புலவர் வேந்தன் விற்பிடித்து நிற்பதை உணர்ந் தார்; உடனே, "இங்கே இராவணன் இல்லை; மாரீசனாகிய மான் இல்லை, மராமரங்களும் இல்லை; அவ் வாறாகவும் வில்லை எடுத்துக் கொண்டு நீ எதற்காக நின்றாய்? என்பதைச் சொல்லுவாயாக" என்னும் பொருளமைய ஒரு பாட்டுப் பாடினார், வேந்தன் திகைப்பும் வியப்பும் அடைந்து புலவரை நன்கு போற்றினான்.*

"வாழும் இலங்கைக்கோ மானில்லை மானில்லை;
ஏழு மராமரமோ ஈங்கில்லை - ஆழி
அலை அடைத்த செங்கை அபிராமா! இன்று
சிலையெடுத்த வாறெமக்குச் செப்பு."

---

இலங்கைக் கோமான் – இராவணன். மான் – மாரீசன். ஆழி – கடல். அலை அடைத்த – கடலில் அணை கட்டிய. அபிராமா – அழகனே. சிலை – வில். செப்பு – சொல்லு.

# 61. முத்து

***வெண்பாப் புலிக்கவிராயர்*** *என்பவர் எட்டைய புரத்திற்குப் போயிருந்தார். அங்கிருந்த பெண்களின் பற்கள் மிகத் தூய்மையாகவும், அழகாகவும் இருந்தமை புலவரைக் கவர்ந்தது. அதனால் அப் பற்களைச் சிறப்பித்து ஒரு பாடல் பாடினார்.*

*தூது மதுரை, துவரை-கடை இடை முன் மூன்றெழுத்தை ஒக்கும் பற்கள்" என்றார்.*

*'தூது' என்பதில் கடைசி எழுத்து 'து'. 'மதுரை' என்பதில் இடை எழுத்து 'து'. 'துவரை' என்பதில் முன் எழுத்தும் 'து'.*

*எத்தனை 'து' வந்துள்ளன? மூன்று 'து'-முத்'து'! வந்துள்ளதல்லவா!*

*பற்கள் முத்துப்போல் உள்ளனவாம்!*

"தூதுமதுரை துவரை கடையிடை முன்
ஓதுகின்ற மூன்றெழுத்தை ஒக்குமே - நீதி
செகராச ராசர்கள்தம் சிங்கே(று) இளசை
நகரார் இளையர் நகை.

செகராசராசர் – உலகிலுள்ள பேரரசர்கள். சிங்கஏறு – ஆண் சிங்கம். இளசை – எட்டையபுரம். நகர் ஆர் இளையார் – நகரிலுள்ள அழகிய இளம் பெண்கள். நகை – பல்.

## 62. பிள்ளையார்

*இராமகவிராயர் தொண்டை நாட்டைச் சேர்ந்தவர். அவர் நகைச்சுவை ததும்பப் பாடுதலில் தேர்ந்தவர். ஒருமுறை திருச்சி மலைக்கோட்டை மேலுள்ள உச்சிப் பிள்ளையாரை வணங்கு வதற்குச் சென்றார். சென்ற போது தம் கையில் இருந்த பணத்தை வேட்டியில் முடிந்து வைத்திருந்தார். அவர் அயர்ந்த பொழுதைப் பார்த்து ஒரு திருடன் அதை அவிழ்த்துக்கொண்டு போய்விட்டான். பணத்தைப் பறிகொடுத்த பாவலர் எண்ணம் பிள்ளையார் மேல் திரும்பியது! பிள்ளையாரைப் பார்க்க வந்தபொழுதில் பணம் பறிபோனதால் அப்பிள்ளையாரே தாம் திருட்டுக்குப் பொறுப்பாளர் என்று முடிவு செய்தார். அதனால் நகைச்சுவையுடன் ஒரு பாட்டுப் பாடினார். பணம் பறி போனாலும் பைந் தமிழுக்குச் சுவையான பாடல் ஒன்று வாய்த்தது! போகும் இடங்களிலெல்லாம் புலவர் பறிகொடுத்திருந் தால் புதுப்புதுப் பாட்டுக் கிடைத்திருக்குமே என்று நினைக்க வைக்கின்றது!*

“தம்பியோ பெண்திருடி; தாயார் உடன்பிறந்த
வம்பனோ நெய்திருடி மாயனாம் - அம்புவியில்
மூத்தபிள்ளை யாரே முடிச்சவிழ்த்துக் கொண்டீரே!
கோத்திரத்துக் குள்ள குணம்.”

---

தம்பி – முருகன். பெண் திருடி – வள்ளியைக் களவு நெறியில் திருமணம் கொண்டவர். தாயார் – உமையம்மை. அவர் உடன் பிறந்த மாயன் – கண்ணன். அம்புவியில் – அழகிய உலகில். கோத்திரம் – குடும்பம்.

# 63. சென்னை

***இராமகவிராயர்*** *ஒருமுறை சென்னைக்குச் சென்றார். அங்குச் சேர்ந்ததும் அவர் சிவபெருமான் ஆகி விட்டாராம். அப்படி யென்ன 'திடீர்ப் பதவி' பெற்றார்?*

*சிவபெருமான் நான்முகனாகிய அன்னம் அறிய முயன்றும் அறிய முடியாதவர். இவர்க்குச் சென்னை யில் சோறு கிடைக்க வில்லை. ஆதலால் இருவரும் அன்னமறியாதவர் ஆனார்.*

*சிவபெருமான் ஒரு சிரம் (தலை) கைக்கொண் டவர். இவர் சென்னையில் சிரங்கைக் கொண்டார்.*

*சிவபெருமான் தலையில் பிறைமதி (அரைச் சோமன்) உண்டு. துண்டு, வேட்டி என்னும் ஆடை இரண்டுள் துண்டை இழந்து அரையில் மட்டும் ஆடை உடுத்து (அரைச் சோமன் கட்டி) அலைந்தார்.*

*சிவபெருமான் சடைபோல இவர்க்கும் சடை யாகி விட்டது. குளிக்காமையாலும் எண்ணெய் தேய்க் காமையாலும் நேரிட்டது இது.*

*சிவபெருமான் வெண்ணீறு விளங்க இருப்பவர். இவர்க்கோ உடலெல்லாம் புழுதி! புலவர் சிவமான செய்தி சிறந்த சுவையானது அல்லவா!*

"சென்னபுரி மேவிச் சிவமாயி னேன்நல்ல
அன்ன மறியா தவனாகி - மன்னுசிரங்
கைக்கொண் டரைச்சோமன் கட்டிச் சடைமுறுக்கி
மெய்க்கொண்ட நீறணிந்து மே."

---

மன்னு – நிலைத்த. மெய் – உடல். நீறு – திருநீறு. சோமன் – நிலா, உடை.

## 64. கோடி

*பெரும்புலவர் **திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை** திருவாவடுதுறை மடத்தில் உறைந்தார். அவர்க்கு உடை வேண்டியிருந்தது. மடத்தின் தலைவராக இருந்தவர் சுப்பிரமணிய தேசிகர். அவரிடம் தம் விழைவைக் கூறினார். அஃது ஒரு பாட்டாகவே வெளிப்பட்டது.*

*புத்துடையைக் 'கோடி' என்பது வழக்கம். ஓர் ஆடை என்றாலும் அதுகோடி ஆடை அல்லவா! அதனால் "ஒன்றைத் தந்தாலே கோடி என்று மகிழ்ச்சி கொள்வேன்; எனக்குக் கோடி தந்தால் எவ்வாறு மகிழ்வேனோ?" என்று தம் கவித்திறனும் நன்றி யுணர்வும் ஒருங்கே தோன்றப் பாடினார்.*

"ஒன்றளித்தால் கோடியென உன்னுவேற்குக் கோடி
இன்றளித்தால் என்னவென எண்ணுவனோ - நன்றுணர்வாய்
வண்ணமா டத்துறைசை வாழ்சுப் பிரமணிய
அண்ணலே இன்னே அருள்.

---

கோடி – ஓர் எண்; புத்துடை. துறைசை – திருவாவடு துறை. வண்ணமாடம் – அழகிய மாடம். இன்னே – இப்பொழுதே. அருள் – வழங்குவாயாக.

## 65. அப்பாத்துரை

*திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் அன்பர் அப்பாத்துரை முதலியார் என்பவர். அவர் பெயரை இறுதியடியாக வைத்துச் சுவையான ஒரு பாட்டுப் பாடினார் பிள்ளையவர்கள்.*

*சிவன் முடியில் இருப்பதுவும், சங்கமேந்தியாகிய திருமால் மேய்த்ததுவும், வெள்ளைக்காரர்களைக் குறிப்பதும், வணிகர்கள் சேர்த்து வைப்பதும், வந்தவரை வினாவுவதும் சேர்ந்தால் அப்பாத்துரை முதலியாராம்.*

*சிவன் முடியில் இருப்பது - அப்பு (கங்கை)*

*திருமால் மேய்த்தது - ஆ*

*வெள்ளையர்களைக் குறிப்பது - துரை*

*வணிகர் சேர்த்து வைப்பது - முதல்*

*வந்தவரை வினாவுவது - யார்?*

“தாணுமுடி மேலதுவும் சங்கரிமுன் மேய்த்ததுவும்
பேணும் சுவேதரையே பேசுவதும் - வாணிகர்கள்
வைப்பா யிருப்பதுவும் வந்தவரைக் கேட்பதுவும்
அப்பாத் துரைமுதலி யார்.”

---

தாணு – சிவபெருமான். சங்கரி – (சங்கு அரி) சங்கம் ஏந்திய திருமால். சுவேதர் – வெள்ளை நிறத்தினர். வைப்பு – சேர்த்து வைப்பது.

## 66. மாசு

*மழை பெய்யுங் காலத்தில் மழை பெய்யவில்லை. ஊரெல்லாம் உழுதொழில் செய்ய முடியாமல் வானத்தைப் பார்த்த வண்ணம் இருந்தனர். சில வேளை களில் மேகம் கூடி நின்று மழை கொட்டிவிடும்போல் தெரியும். ஆனால் பெய்யாமல் போய்விடும். மேகத்தின் இந்த வஞ்சகச் செயலைக் கண்டு ஒரு நீதிபதியால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை! மேகத்தைக் கொண்டுவந்து குற்றக் கூண்டில் நிறுத்த முடியுமா? பாட்டிலே நிறுத்தினார் -* **வேதநாயகம் பிள்ளை** *என்பவரே அந்த நீதிபதி.*

*"மேகமே! நீ வேண்டும்போது பெய்யமாட்டாய்; வேண்டாதபோது பெய்வாய்; பரவிச் செல்லும் முகிலே! உனக்கு 'மாசு' என்றொரு பெயரை வழங்கினார்களே முன்னோர்! அவர்களுக்குப் பட்டம் தந்து பாராட்டலாம்! உன் செயல் மாசு (குற்றம்) தானே!"*

"வேண்டுங்கால் நீ பெய்யாய் வேண்டாத போதுபெய்வாய்
தாண்டுநீ செய்வதெல்லாம் தப்புகளே - நீண்டுலவும்
வட்டமுகி லேயுனக்கு மாசெனப் பேர்தந்தோர்க்குப்
பட்டமது கட்டுவேன் பார்."

தாண்டு நீ – ஓடிச் செல்லும் நீ. தப்பு – தவறு. முகில் – மேகம். மாசு – மேகம், குற்றம்.

## 67. செல்

*மேகத்திற்குச் 'செல்' என்று ஒரு பெயரும் உண்டு. மேகம் மழை பொழியாமல் செல்வதைக் கண்டார் வேதநாயகம் பிள்ளை. அப்பொழுது 'செல்' என அதற்கொரு பெயருண்மையை எண்ணினார். அதனால், ''செல் எனப் பெயரிட்டு உன்னை அழைத்ததை அல்லா மல் மழை பெய்யாமல் செல் என்று நாங்கள் கட்டளை இட்டோமோ? காரிருட்டு என்றே சொல்லு மாறு இருண்டு வந்த நீ பெய்யாமல் போனது ஏன்?'' என வினவினார். அவர் தாமே, 'மாசு' எனப் பெயரிட்ட வர்க்குப் பட்டம் வழங்கலாம் என்று பாராட்டியவர்!*

''செல்லென்றுன் நாமத்தைச் செப்பினதே அல்லாது
செல்லென் றுனைநாங்கள் செப்பினமா? - அல்லென்று
மெய்யா உவமிக்க விண்மீது தோன்றியநீ
பெய்யாமற் போனதென்னோ பேசு.''

---

நாமம் – பெயர். அல் – இரவு, இருள். மெய்யா – மெய்யாக. உவமிக்க – உவமையாகக் கூற.

## 68. தத்தை

*பாரதம் என்பது இந் நாட்டின் ஒரு பெயர். பாரதக் கதை இலக்கிய உலகில் உண்டு. பாண்டவர் துரியோதனர் வரலாறு கூறும் நூல். அது வடமொழியில் வியாச முனிவரும், தமிழில் வில்லிபுத்தூர் ஆழ்வாரும் பாடி யுள்ளனர்.*

*பாரதத்தை முற்றும் முறையாகப் படித்துப் பார்த்தாராம் ஒரு புலவர்; அதில் முழுப் புலமையும் பெற்றாராம்; அதன் சாரத்தை அவர் வடித்துக் கூறுவதைக் கேட்க வேண்டுமாம்; மாலை அணிந் திருக்குமாம்; பச்சை வண்ணமாக இருக்குமாம்; இரண்டு சிறகு இருக்குமாம்; காலும் இரண்டு உண்டாம்; பறந்து போகுமாம்! நல்ல பாரதத்தைச் சொன்னார் எனத் தோன்றுகின்றதா? 'பார - தத்தை' என்பதற்கு 'பெரிய கிளி' என்பது பொருள்! கிளிக்குக் கழுத்தில் மாலையும், உடலில் பசுமையும் சிறகும் காலும் உண்டல்லவா? பறவாக் கிளி யுண்டோ? கூண்டுக் கிளியன்றி! இப் பாட்டைப் பாடியவரும் வேதநாயகம் பிள்ளையே.*

"பாரதத்தை முற்றுமே பார்த்துணர்ந்த பண்டிதர்நாம்
சாரமுற்ற அச்சரிதை தான்கேளீர் - ஆரமுற்ற
தேகமெலாம் பச்சை; சிறகிரண்டும் காலிரண்டும்
ஆகப் பறக்கும் அது."

---

பண்டிதர் – புலவர். சரிதை – சரித்திரம். ஆரம் – மாலை. தேகம் – உடல். பார – பெரிய. தத்தை – கிளி.

# 69. கோமான்

*பொன்னம்பலம் பிள்ளை என்பவர் சிறந்த புலவர். அவர் சேற்றூர் பெருநிலக் கிழாரைக் காணச் சென்றார். சேற்றூர் பெருநிலக்கிழார் சிவப்பிரகாச திருவநாத துரை என்பவர். அவர் புலவர் வந்ததைக் கேள்வியுற்று உண்டுகொண்டிருந்த கையோடே வரவேற்க வந்தார். மற்றைக் கையில் பொன்னை அள்ளிக்கொண்டு வந்தார். முகமும் அகமும் மலர வர வேற்றார். அவர் தம் உளமாண்பும், கொடைமாண்பும் புலவரை இன்பக் கடலில் ஆழ்த்தின. அதனால் "ஒரு கையில் சோறும், ஒரு கையிலே பொன்னும் வருகையிலே இனிய சொல்லும் உடையவராக வரவேற்பது எங்கள் சிவப்பிரகாச துரைக்கு இயல்பான குண மாகும்." என்னும் பொருளமைய ஒருபாடல் பாடினார்.*

"ஒருகையிலே அன்னம்; ஒருகையிலே சொன்னம்;
வருகையிலே சம்மான வார்த்தை; - பெருகுபுகழ்ச்
சீமானாம் எங்கள் சிவப்பிரகா சத்திருவக்
கோமானுக் குள்ள குணம்.

---

சொன்னம் – சொர்ணம் (பொன்) சம்மான வார்த்தை – இனிய புகழ்மொழி. சிவப்பிரகாசத் திருவக் கோமான் – சிவப்பிரகாச திருவநாத துரை.

# 70. கால்

*திருக்குற்றாலத்தை அடுத்துள்ள செங்கோட்டையில்* ***கவிராச பண்டாரத்தையா*** *என்னும் பெய ருடைய புலவர் ஒருவர் இருந்தார். அவர் குற்றாலத் திற்குச் சென்று குழல்வாய் மொழி அம்மையுடன் கூடிய குற்றால நாதரை வணங்கினார். வணங்கி ஆர்வ மிகுதியால், "குற்றாலத்து ஐயா! உன்னைக் கண்டு அதன் பின்னே பிரிந்திருக்க மாட்டேன்; அம்மைக்கு உன் உடலில் பாதியை தந்து அம்மையப்பனாகினாய். எனக்கு அவ்வளவு வேண்டா; அதில் பாதி தந்தால் போதும்; அதைத் தந்து கண்பார்த்தருள்வாயாக" என்று வேண்டினார். அவ் வேண்டுதல் ஒரு வெண்பா ஆகியது.*

*பாதியில் பாதி எவ்வளவு? 'கால்' தானே! இறை வனே உன் கால் - திருவடி - அருள்! எனக்கு வேண்டி யது அவ்வொன்றே என்பதை எவ்வளவு நயமாகக் கூறியுள்ளார்!*

"அருவித் திரிகூடத் தையா! உனைநான்
மருவிப் பிரிந்திருக்க மாட்டேன் - ஒரு விமலைக்(கு)
ஆதியிலே பாதிதந்தாய்; அத்தகை வேண் டாமெனக்குப்
பாதியில் பாதிதந்து பார்."

---

திரிகூடம் – திருக்குற்றாலம். மருவி – கூடி. ஒருவிமலை – (ஒரு + விமலை) ஒப்பற்ற உமையம்மை. ஆதியிலே – முன்னே.

# 71. தட்டல்

*திருநெல்வேலியில்* ***அழகிய சொக்கநாத பிள்ளை*** *என்றொரு கவிஞர் இருந்தார். அவர் நகைச்சுவையாகப் பாடுதலில் தேர்ந்தவர். அவரைக்காத்த வள்ளல் முத்துசாமிப் பிள்ளை என்பவர். அவரைத் தலைவராகக் கொண்டு கவிஞர் பல பாடல்கள் இயற்றினார். அவற்றுள் ஒரு பாடல் வருமாறு:*

*தேர்ச்சி பெறாத ஒருவன் மத்தளங் கொட்டு வதைக் கேட்டார். அவருக்கு அவன் கற்றுக்குட்டி நிலையை நினைக்க நகைப்பாக இருந்தது. அந் நகைப்பைப் பாட்டாக்கி உலாவரச் செய்தார்.*

*"முத்துசாமி வள்ளலே! இங்கே ஒருவன் ஓயாமல் மிருதங்கம் (மத்தளம்) தட்டினான்; அங்கங்கே கூடியிருந்த பெண்கள் எல்லாரும் எரு வாங்குவதற்காகக் கூடைகளை எடுத்துக் கொண்டு ஓடி வந்தனர்; இக் காட்சியை நீ கண்டாயோ?" என்பது அவர் பாடிய பாடற்பொருளாகும்.*

"எங்கள்முத்து சாமிமன்னா! இங்கே ஒருவன்மிரு
தங்கமதை ஓயாமல் தட்டினான் - அங்கங்கே
கூடிநின்ற பெண்களெருக் கொள்வதற்குக் கூடையெடுத்(து)
ஓடிவந்தார் நீபார்த்தா யோ?"

---

மிருதங்கம் – மத்தளம். எருத்தட்டுவதுபோல் தட்டினான் என்பதாம்.

## 72. படுக்கை

***தத்துவப் பிரகாசர்*** *என்பவர் ஒரு புலவர். அவர் உண்மைப் பொருள் ஆய்வில் ஊன்றியவர்; அவர் சாளுவ நாயகர் என்னும் அரசியல் அதிகாரி ஒருவரைக் கண்டார். அவர், பிரகாசர் படுப்பதற்கு ஒரு வீட்டைக் காட்டினார். பாயும் தலையணையும் அங்கே இருந்தன. நாயகர் சொன்னபடி பிரகாசர் அவ்வீட்டிற் போய்ப் படுத்துக் கொண்டார். விடியுமட்டும் உறங்கினாரல்லர். காலையில் நாயகர், 'புலவரே இரவு நன்றாக உறங்கினீரா?" என்று வினவினார். அதற்கு மறுமொழியாக ஒரு பாட்டுப் பாடினார் பிரகாசர்.*

*"என்ன அழகான விடுதி! மூட்டை ஒரு கலம் இருக்கும்; புழுதி மூன்று கலம் இருக்கும்; பாயோ கிழிசல்; தலையணையோ வைக்கோல்! படுத்திருந்த பெருமையைச் சொல்லி முடியுமா?"*

"மூட்டை கலம்; புகுதி முக்கலம்; சுத்தப்பாழ்
வீட்டை விடுதியாய் விட்டாயே - போட்ட
தடுக்கெல்லாம் பீறல்; தலையணையோ வைக்கோல்
படுக்கலா மோசொல்லப் பா."

---

கலம் – ஒரு முகத்தலளவை. 12 மரக்கால் அல்லது 48 படி கொண்ட ஓர் அளவு. தடுக்கு – பாய். பீறல் – கிழிசல்.

## 73. கறி வை

***சிவஞான முனிவர்*** *பெரும் புலவர்; கவிஞர்; சிறந்த உரையாசிரியர்; அவர் பாண்டி நாட்டு விக்கிரம சிங்கபுரத்தில் தோன்றி, திருவாவடு துறைத் திருமடத்தில் திகழ்ந்தவர். சைவ சாத்திரங்கள், தமிழ் இலக்கணம், வடமொழி இவற்றில் சிறந்த புலமையுடையவர். புகழ் வாய்ந்த மாணவர் பலர் அவரிடம் பயின்று சிறப்படைந்தனர்.*

*சிவஞான முனிவர் பாடம் சொல்லுவதைக் கேட்டுக் கேட்டு அவர்தம் சமையல்காரரும் புலமையாளராகத் திகழ்ந்தனர். அவர்களுக்குச் சிலவேளைகளில் பாட்டாகவே இன்ன கறி செய்ய வேண்டும் என்று கட்டளையிடுவார். அவ்வாறு ஒரு பொழுதில் கூறியது வருமாறு:*

"சற்றே துவையலரை; தம்பி! ஒரு பச்சடிவை;
வற்றல்ஏ தேனும் வறுத்துவை; - குற்றமிலை
காயமிட்டுக் கீரைகடை; கம்மென வேமிளகுக்
காயரைத்து வைப்பாய் கறி."

சற்றே – சிறிதே. காயம் – பெருங்காயம். கம்மெனவே – மணமிகவே. மிளகுக்காய் – மிளகாய்.

## 74. அருமை

*சிவஞான முனிவர் என்பவர் பெரும் புலமைச் செல்வர்; இளமையிலேயே துறவில் நாட்டம் கொண்டவர்; பன்னூலாசிரியர். அவர் இளம்பருவத்திலேயே துறவியரோடு பழகுவதையும், அவர்களைத் தம் வீட்டுக்கு அழைத்துவந்து விருந்து செய்வதையும் மேற்கொண்டிருந்தார்.*

*அவர் தந்தையார் ஆனந்தக் கூத்தர். அன்னையார் மயிலம்மையார். அவர்கள் தம்மைந்தர் விரும்பிய வண்ணம் நடந்து இன்புறுத்தினர். அதனால் தம் பெற்றோரை மனமுவந்து பாராட்டும் வகையால் பாடினார். பெற்றோர் பாராட்டும் பிள்ளையாகவும், பிள்ளை பாராட்டும் பெற்றோராகவும் வாய்த்த அருமைக் குடும்பம் ஆனந்தக் கூத்தர் குடும்பம் ஆகும்.*

"அருந்ததிஎன் அம்மை அடியவர்கட் கென்றும்
திருந்த அமுதளிக்கும் செல்வி - பொருந்தவே
ஆனந்தக் கூத்தர் அகமகிழத் தொண்டுசெயும்
மானந் தவாத மயில்."

*என்பது அப்பாடல்.*

---

செல்வி – திருமகள் போன்றவள். மானம் தவாத – பெருமை நீங்காத. மயில் – பெயர்.

# 75. கணு

*சிவப்பிரகாசர், கருணைப்பிரகாசர், வேலையர் என்னும் மூவரும் உடன் பிறந்தவர்கள். சிறந்த பாலவர்கள். வீரசைவர்கள். சிவப்பிரகாசர் கற்பனைக் களஞ்சியம் என்று பாராட்டப் படுபவர்.*

*சிவப்பிரகாசரும் கருணைப்பிரகாசரும் இயற்கை எய்தினர். இடையே பிறந்தவராகிய வேலைய அடிகள் தாம் இருக்கும் நிலையை எண்ணி வருந்தினார்.*

*ஒரு கரும்பை எடுத்தால் கணுக்கள் பல இருக்கும் கணுவுக்கு மேலும் கீழும் இருக்கும் பகுதியே கடித்துச் சாறு குடிக்கும் சிறப்புடையதாக இருக்கும். இரண் டிற்கும் இடையே உள்ள கணுவோ ஒதுக்கித் தள்ளப்படும். அதுபோல் என் மூத்தாரும் இளையாரும் ஆகியவர்களை உண்டுவிட்ட காலன், என்னைக் கணு என்று உண்ணாமல் விட்டுவிட்டான். என்று வருந்திக் கூறினார்.*

"அல்லிமலர்ப் பண்ணவனும் ஆராய்ந் தறிகவிதை
சொல்லும் இருவரிடைத் தோன்றியவான் - முல்லை
அரும்பிற் பொலியும் அணிமுறுவல் நல்லாய்!
கரும்பிற் கணுநிகர்த்தேன் யான்."

அல்லி – தாமரை. பண்ணவன் – நான்முகன். இருவர் – மூத்தவர். இளையவர். முறுவல் – பல். நிகர்த்தேன் – ஒப்பானேன்.

## 76. பத்து உரூபா

*சீர்காழி அருணாசலக் கவிராயர் என்பவர் இராம நாடகக் கீர்த்தனை இயற்றியவர். அவர் பாப்பைய வேள் என்னும் வள்ளலைப் போய்க் கண்டார். அவருக்குப் பத்து ரூபா வேண்டி யிருந்தது. அதனைப் பாப்பையவேளிடம் கேட்டார். அவர் உடனே அதனைத் தராமல் தவிர்க்க முயன்றிருப்பார் போலும் அதனால் புலவர் விடாமல் தம் கருத்தை வலியுறுத் தினார்.*

*பத்துப் பிறப்பெடுத்த திருமாலுக்கு ஒப்பான பாப்பைய வேளே, உனக்கென்ன பத்து ரூபா எனக்குத் தரப் பஞ்சமாகி விட்டதா? முத்துப் போன்ற பல்லும் வீழிப்பழம் போன்ற வாயுமுடைய அம்மை வழங்கிய அமுதமுண்ட ஞானசம்பந்தர் பிறந்த சீர்காழியிலே பிறந்த புலவன் யான் என்றார்.*

"பத்துரூ பாயனைநேர் பாப்பையவே ளேயுனக்குப்
பத்துரூ பாயென்ன பஞ்சமோ? - முத்தநகை
வீழிவாய்ப் பாலுண்ட வேந்தன் பிறந்தசீ
காழியரு ணாசலன்யான் காண்."

பத்து உருபு ஆயன் – திருமால். வேந்தன் – ஞானசம்பந்தன். நகை – பல்.

# 77. அவனா?

*சீர்காழி அருணாசலக் கவிராயர் பலப்பலரைத் தேடிச் சென்று பாடியும் பரிசில் வேண்டியும் வறுமை தீர்ந்த பாடில்லை. பரிசில் தாராரை நோவதா? பரிசில் தாராதவனை வேண்டி நின்ற தம்மை நோவதா? அவர்க்கு ஐயம் எழுந்தது.*

*என்னைப்பாடு; நான் தருகின்றேன் என்று எவனேனும் அழைத்தானா? நான் தானே தேடித் தேடிப் போய்ப் பாடிப் பரிசில் வேண்டி நின்றேன். தர வாய்த்த போது தராதவனை நொந்து ஆவதென்ன என்று தம்மைத் தாமே தேற்றிக் கொண்டார். தர வில்லை என்று திட்டாமல் தம் குற்றம் அது என உணர்வதும் உயர்ந்த பண்பு தானே.*

"கால்வீழ்ந்து நம்மைக் கவிபாடச் சொன்னானோ?
மேல்வீழ்ந்து நாமே விளம்பினோம்! - நூலறிந்து
தந்தக்கால் தந்தான்; தராக்கால் நமதுமனம்
நொந்தக்கால் என்னாகு மோ."

விளம்பினோம் – கேட்டோம். கால் – காலம், பொழுது.

## 78. முதலை

*யானை ஒன்று ஒரு பொய்கைக்குள் புகுந்தது. அந்த யானையின் காலை முதலை ஒன்று பற்றியிழுத்து வெளியேற முடியாத நிலையில் அவ்யானையைத் திருமால் முதலையை அழித்துக் காத்தார் என்பது தொன்ம(புராண)க் கதை. "நெடுங் கடலுள் வெல்லும் முதலை" என்று முதலைக்கு நீருக்குள் இருக்கும் போதுள்ள வலிமையை வள்ளுவர் கூறினார்.*

*மதுர கவிகள் என்பார், உடையான் என்பவன் தமக்குச் செய்த தீமையை ஆறாயிரம் என்பான், தீர்த் ததை முதலை வாயில் இருந்து யானையைத் தப்புவித்த கதைபோல உருவகப்படுத்திக் கூறினார். அது:*

"காக்கைக் குளமாம் கடிமலர்ப்பூம் பொய்கை
ஊர்க்கட் கராவாம் உடையானே - நீர்க்குந்த
வாரணமே நல்ல மதுரகவி நேமிதொட்ட
ஆரணனே ஆறா யிரம்."

---

காக்கைக்குளம் – ஊர்ப்பெயர். கடி – மணம். கரா – முதலை. உடையான் – துன்புறுத்திய ஒருவன். வாரணம் – யானை. நேமி – சக்கரம். ஆரணன் – திருமால். ஆறாயிரம் – தீமையை விலக் கியவன் பெயர்.

# 79. மிளகு சாறு

*திருச்சிராப்பள்ளியைச் சார்ந்ததோர் ஊர் சோமரசம் பேட்டை என்பது. அவ்வூரில் திரிசிரபுரம் பெரும்பாவலர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை வாழ்ந்த துண்டு. அங்கே சுப்பம்மாள் என்றோர் அம்மையார் இருந்தார். அவர் வீட்டில் சுப்பையர் என்னும் புலவர் உணவு கொண்டார். உணவின் சுவை பாவலர் உணர்வை எழுப்ப ஒரு பாடலை இயற்றிப் பாராட்டி னார். ஆறு சுவை விருந்தும் அற்றுப் போய்விடும். ஆனால் எட்டுச் சுவையுடைய பாடல் விருந்தோ காலமெல் லாம் சுவை குறைவது இல்லையே.*

*மிளகு சாறு என்றும் சாறு என்றும் சொல்லப் படும் உணவுத்துணைப்பொருள் 'இரசம்' எனப் பட்டது. சோறு என்றாலே நெல்லரிசியால் ஆக்கப்பட் டதே சோறு எனப்படும். அது, அன்னம் என வழங்க லாயிற்று. எந்த ரசமும் இந்த ரசத்திற்கு இணையில்லை; அன்னம் என்னும் பறவையும் இவ் வன்னத்தைக் கண்டு வெளுத்துப்போகும் எனப்பாடினார்.*

"சோம ரசம்பேட்டை சுப்பம்மாள் வைத்தரசம்
காமரச மெல்லாம் கசக்குமே - நேமமுடன்
அன்னத்தைக் கண்டக்கால் அன்னம் வெளுப்படையும்
என்னத்தைச் சொல்வேன் இனி."

---

நேமம் – நியமம், முறை. அன்னம் – சோறு, பறவை.

## 80. கண்டால் கதி

*கடந்த சில நூற்றாண்டுகளில் இலக்கண இலக்கியக் கல்வியை மதியாமல் மெய்ப்பொருள் கூறும் வேதாந்தம் சித்தாந்தம் கற்றலே கல்வி என்னும் கருத்துப் பரப்பப்பட்டது. அப் பரப்பலால் இலக்கிய இலக்கணம் கற்பிப்பாரும் கற்பாரும் குறைந்தனர். அந்நூல்களும் பேணுவாரற்றுப் போய் அழிந்தன.*

*சின்ன நல்லப்பர் என்பார் ஒருவர். அவர் குருவார் நமச்சிவாயர் என்பார். அவரைக் கண்டால் போதுமே: கற்றலால் ஆவதென்ன என்று பாடினார்.*

*நன்னூல் காரிகை திவாகரம் முதலாய நூல் களைக் கற்பதால் பயனில்லை என்று கூறுகிறார் அவர்.*

> "நன்னூலும் காரிகையும் நன்றாம் திவாகரமும்
> பன்னூலும் ஆராய்ந்து பார்ப்பதேன் - எந்நூலும்
> கொண்டாடும் தில்லை குருநமச்சி வாயர்முகம்
> கண்டாலும் உண்டே கதி."

*என்பது அப்பாட்டு.*

---

நன்னூல் – எழுத்து, சொல் இலக்கணம். காரிகை – யாப்பு இலக்கணம். திவாகரம் – சொற்பொருள் நூல். தில்லை – சிதம்பரம். கதி – நற்பேறு.

# 81. கல்லாடம்

*"கல்லாடம் கற்றாரிடம் சொல்லாடாதே" என்பதொரு பழமொழி. கல்லாடம் கல்லாடர் என்பாரால் செய்யப்பட்ட செறிவு மிக்க நூல். அதன் சொல்லாட்சி பொருளாட்சி ஆகியவையும் உவமை முதலிய நயங்களும் உள்ளம் கொள்ளை கொள்ள வல்லன.*

*அக் கல்லாடத்தைக் 'கச்சிரங்க துரை' என்பார் நன்றாகக் கற்றறிந்திருந்தார். ஆதலால் அவரோடு தருக்கம் செய்து வெற்றிபெற எவருக்கும் முடியாது என்று பாலசரசுவதி சுப்பிரமணியக் கவிராயர் என்பவர் ஒரு பாடல் பாடினார்.*

"கல்லாட மேமுதலாக் கற்றுணர்ந்தாய், கல்விபெற்றோர்
பல்லாடக் கூடுமோ பார்வேந்தே - சொல்லாடும்
கச்சிரங்க சாமியெனும் காலாட்கள் தோழாநீ
வச்சிரதே கம்பெற்று வாழ்."

*என்பது அப்பாடல்.*

---

பல்லாடல் – எதிரிட்டுப்பேசல். கச்சிரங்கசாமி – காஞ்சிபுரத்து அரங்க சாமி. வச்சிரம் – கெட்டிமிக்க. தேகம் – உடல்.

## 82. பொல்லார் நட்பு

*நல்லவர்களைக் காணல், நல்லவர் சொல் கேட்டல், நல்லவர் குணங்களைப் பேசல், நல்லவர்களோடு நட்பாக இருத்தல் நலம் என்று நல்லோர் கூறுவர். நல்லவர்க்கு மாறான தீயோரைக் காணல், தீயோர் சொற்கேட்டல், தீயோர் குணங்களை உரைத்தல் தீயோரோடு இணங்கியிருத்தல் தீமை என்பதையும் அவர்கள் கூறினர்.*

*சண்பக மன்னார் என்னும் புலவர் தம்மிடம் பாடங்கேட்ட ஒருவர் தீயோர் தொடர்பினராக இருப்பது கண்டு வருந்தினார்.*

*அதனால், பொருள், புகழ், அருள், அழகு, தெளிவு ஆகியவை போகும் என்றும், கீழாம் தன்மை சேரும் என்றும் பாடினார்.*

"பொருள்போம்; புகழ்போம்; புலைத்தன்மை சேரும்;
அருள்போம்; அழகுபோம்; அல்லால் - தெருள்போகும்
கல்லாத நெஞ்சக் கயவர்பாற் சேர்ப்பிக்கும்
பொல்லாத மாந்தர் புணர்ப்பு."

---

போம் – போகும். புலைத்தன்மை – கீழ்த்தன்மை. அல்லால் – அல்லாமல். தெருள் – தெளிவு. கயவர் – கீழோர். புணர்ப்பு – நட்பு.

# 83. கையிரண்டு

*செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர் செய்த தவப் பயனாகத் தோன்றியவர்* **கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை**. *குழந்தைப் பாடல்கள் மிகுதியாகப் பாடிய பெருங் கவிஞர் அவர். குழந்தை உள்ளம் படைத்த அவர் குழந்தை போலவே கள்ளங் கபடம் எள்ளளவும் இன்றி வாழ்ந்தார். அவருக்கு ஒரு சமயம் 'சிரங்கு' பற்றிக் கொண்டது. புலவர்க்குச் சிரங்கு வந்தால் மற்றவர் சிரங்குபோல் போய்விடுவதில்லை. அதற்குப் புகழ் ஏற்பட்டு விடுகின்றது. பெரியாரைத் துணைக் கொண்ட பெருமை அதற்கு மட்டும் வாய்க் காமல் போகுமா?*

*கவிமணி வழிபடு கடவுளாகிய முருகனிடம் வேண்டினார்: "திருச்செந்தில் குமரனே, திருமாலின் மருகனே, என் உள்ளத்தில் குடிகொண்டவனே, மெலிந்த என் உடலில் பற்றிக் கொண்ட சிரங்கை விடியுமளவும் சொறிவதற்கு இரண்டு கை போதாது" என்றார். பன்னிரு கையனிடம் இருகை போதாது என்றது நயமிக்கது அல்லவா!*

"செந்தில் குமரா! திருமால் மருகா! என்
சிந்தை குடிகொண்ட தேசிகா! - நொந்தஇம்
மெய்யிற் சிரங்கை விடியுமட் டுஞ்சொறியக்
கையிரண்டு போதாது காண்."

---

செந்தில் – திருச்செந்தூர். மருகா – மருகனே. சிந்தை – மனம். தேசிகன் – குரு. மெய் – உடல்.

# 84. தரம்

*கவிமணி சிரங்கைச் சொறியக் கையிரண்டு போதாது என்று வேண்டினார் அல்லவா! இதோ அந்தச் சிரங்குகள் எத்தகைய மணிமாலைகளாகத் திகழ்கின்றன!*

*கவிமணி கூறுகின்றார்: புலவராகிய அவர்க்குச் சிரங்கப்ப ராயன் பரிசுப் பொருள் வழங்கி இருக்கின்றானாம். முத்து பவழம் வயிரம் மாணிக்கம் ஆகியவை மின்னும் பதக்கத்தைப் பரிசாக வழங்கியுள்ளானாம். எப்படி?*

*சில சிரங்குகள் நீர்க் கோத்து நிற்கின்றன; அவை, முத்துக்கள். சில நீர் வழிந்து புண்ணாக உள்ளன; அவை, பவழங்கள்; சில கருந்தழும்பு பட்டுள்ளன; அவை, வயிரம்; சில செந்தழும்பு பட்டுள்ளன; அவை, மாணிக்கம். இவையெல்லாம் கழுத்தில் படர்ந்துள்ளன. அப்படியானால் பதக்கந்தானே! கவிராயனுக்குப் பரிசு வழங்குபவனும் ஓர் இராயன் (அரசன்) தானே! அதனால் சிரங்கைச் சிரங்கப்ப ராயன் என்று கவிமணி சொல்லுவது எவ்வளவு பொருத்தம்!*

"முத்துப் பவழம் முழுவயிர மாணிக்கம்
பத்திஒளி வீசு பதக்கமெலாம் - சித்தன்
சிரங்கப்ப ராயன் சிறியேன் எனக்குத்
தரங்கண்டு தந்த தனம்."

---

பத்திஒளி – வரிசையாகப் பதித்து வீசும் ஒளி. சித்தன் – மனத்து இருப்பவன். இராயன் – அரசன். தரம் – தகுதி. தனம் – செல்வம்.

# 85. முகட்டுப்பூச்சி

*மதுரையில்* ***கோபால கிருட்டிண ஐயர்*** *என்றொரு புலவர் இருந்தார். நல்லியற் புலமையும், நகைச்சுவையாகப் பாடுந் திறமும் ஒருங்கு பெற்றவர். அவர்க்கு ஒரு நாள் மூட்டைக் கடி தாங்கமாட்டாத நிலையுண்டாயிற்று! அப்பூச்சியின் சிறுமையும் அதன் தொழிற் பெருமையும் புலவர் உள்ளத்தில் புயலாகக் கிளம்பி ஒரு பாட்டாக வெளிப்பட்டது.*

*சிவபெருமான் வெள்ளிப் பனி மலையாகிய கயிலாயத்திற்கு ஏன் போனான்?*

*கருமுகில் வண்ணனாகிய திருமால் பாற்கடலுக்கு ஏன் போனான்?*

*நான்முகன் தாமரை மலரை ஏன் தனக்கு உறை விடமாகக் கொண்டான்?*

*எல்லாம் இந்த மூட்டைப் பூச்சி செய்யும் கொடுமையைத் தாங்கிக் கொள்ள மாட்டாமையால் தான்!*

“கண்ணுதலான் கைலையையும் கார்வண்ணன் பாற்கடலும்
எண்ணும் பிரமன் எழில்மலரும் - நண்ணியதேன்?
வஞ்சகமூட் டுப்பூச்சி வன்கொடுமைக் காற்றாதே
அஞ்சிஅவர் சென்றார் அறி.”

---

கண்ணுதலான் – நெற்றிக் கண்ணையுடைய சிவன். கார் வண்ணன் – கருமுகில் வண்ணனான திருமால். எழில் மலர் – தாமரை மலர். ஆற்றாது – பொறுக்காது.

## 86. கடையார்

*திருநெல்வேலியை அடுத்துள்ளதாகிய மேலைப் பாளையத்தில்* ***திரு. செ. சுப்பிரமணிய பிள்ளை*** *என்பார் ஒருவர் இருந்தார். அவர் எளிய இனிய கவி பாடத் தேர்ந்தவர். நகரவைத் தேர்தலில் வேட்பாளராக நின்றார். தேர்தலுக்கு நிற்பவர் 'வாக்காளரைத் தேடிச் சென்று வாக்குத் திரட்ட வேண்டிய கடமை உண்டல்லவா! அதனால் தமக்கு உண்டாகிய மனத் தளர்வை ஒரு பாட்டாக்கிப் பாடினார்.*

*இரும்புக் கடையை வன் பொருட் கடை என்பர்; அத்தகைய இரும்புக் கடைக்காரர்களும் மற்றை மற்றைக் கடைக்காரர்களும் 'துரும்பிற் கடையர்' என்று தோன்றுமாறு செய்தது நகரவைத் தேர்தலுக்கு நின்று நகருக்குப் பாடுபடவேண்டும் என்று ஏற்பட்ட ஆவல். அதை நினைக்க நாணமாக உள்ளது என்று பாடினார்.*

"இரும்புக் கடையாரும் ஏனையரும் இப்போ
துரும்பிற் கடையராய்த் தோன்ற - விரும்பா
விதியின் செயலென்று வெள்கினமே நெல்லைப்
பதியின்மேல் வைத்த பரிவு."

---

வெள்கினம் – நாணினோம். நெல்லைப்பதி – திருநெல்வேலி நகரம். பரிவு – அன்பு. இப்போ – இப்பொழுது.

# 87. வினாவிடை

*திருவெண்ணெய் நெல்லூரில்* **வடிவேல் முதலியார்** *என்றொரு புலவர் இருந்தார். அவர் தம் ஊர்ப் பெயர் வருமாறு ஒரு வினாவிடை வெண்பாப் பாடினார். அப் பாடலின் முதல் மூன்று அடிகளில் வினாவும், இறுதியடியில் விடையும் அமைந்துள்ளன. அவ்வெண்பா அரிய பொருட்சுவை தருகின்றது.*

*தாமரையில் உறைபவள் யார்?*

*கண்ணன் விரும்புவது என்ன?*

*செஞ்சாலி என்று எதனைக் கூறுவர்?*

*வாழும் பதியைக் குறிக்கும் பெயர் என்ன?*

*இவற்றைச் சேர்த்தால் என்ன விடை வருகின்றது?*

*தாமரையில் உறைபவள் - திரு*

*கண்ணன் விரும்புவது - வெண்ணெய்*

*செஞ்சாலி என்பது - நெல்*

*வாழும்பதி - ஊர்*

*சேர்த்தால் - திருவெண்ணெய் நெல்லூர்.*

"கஞ்சத் துறைபவள்யார்? கண்ணன் விரும்புவதென்?
செஞ்சாலி என்றெவரும் செப்புவதென்? - எஞ்சலிலா(து)
எண்ணும் பதிப்பெயரென் ஈசன்வாழ் கின்றதிரு
வெண்ணெய்நெல் லூராம் விடை."

---

கஞ்சம் – தாமரை. சாலி – நெல். எஞ்சலிலா – குறையாத. என் – என்ன.

## 88. வாழல

*சொற்களைச் சிதைத்துப் பேசுவதைக் கற்கண்டுப் பொங்கலாகக் கருதுபவர் மிகப் பலர். அத்தகைய பேச்சு ஒன்றைக் கேட்டு வருந்தினர்* **புலவர் வடிவேல் முதலியார்**. *சொல்லைச் சிதைத்துப பேசுவார்க்குச் சூடுவைப்பதுபோல் அப் பாட்டு அமைந்தது.*

*வாழை யிலை விற்கும் இளம் பெண்ணொருத்தி வாழலை! வாழலை!' என்று கூறிக்கொண்டு போனாள். அதைக் கேட்டார் புலவர். இவள் கணவன் வெறுத் தானோ? மற்றவர்கள் பகைத்தார்களோ? பெண் தன்மையைத்தான் இழந்து விட்டாளோ? நல்வாழ்வு கொள்ளவேண்டும் என்பதற்காக மணஞ்செய்து கொண்ட கொடி போன்ற பெண் 'வாழலை' என்று சொல்வது ஏன்?*

"கொண்கன் வெறுத்தனனோ? கூடியுளார் தாம்பகையோ?
பெண்மை இழந்தனளோ? பேசுவீர் - பண்புடனே
வாழ மணம்பூண்ட வஞ்சி யவளின்று
வாழலையென் றேசொல் வகை."

---

கொண்கன் – கணவன். வஞ்சி – கொடி.

## 89. உரை!

*கம்பர் வீட்டிற்குச் சோமாசி என்னும் புலவர் ஒருவர் வந்தார். அவர் மிகச் செருக்குடையவராக இருந்தார். இதனைக்* **கம்பர் வீட்டு வேலைக்காரி** *உணர்ந்தாள். தாமே அவருக்கு நல்லறிவு உண்டாக்க வேண்டும் என்று நினைத்து ஒரு விடுகதை கூறினார்; 'சோமாசி, உனக்கு ஒரு நாள் பொழுது தருகிறேன்; பின்பு நாளை வந்து விடைகூறு' என்று அனுப்பினார்.*

*என்ன விடுகதை சொன்னார்?*

*முழுமதிபோல் இருக்கும்; நெருப்புக் கொடி படரும்; மகளிர் கையில் கூத்தாடும்; சுட்டபின் 'அரகரா' என்று சொல்ல வைக்கும் - இது என்ன?*

"வட்டமதி போலிருக்கும் வன்னிக் கொடிதாவும்
கொட்டுவார் கையினின்று கூத்தாடும் - சுட்டால்
அரகரா என்னும் அம்பல சோமாசி!
ஒருநாள்விட் டேன்ஈ(து) உரை."

---

வட்டமதி – முழுமதி. வன்னிக்கொடி – தீ. அரகரா என்னும் – 'அரகரா' என்று சொல்லி நெற்றியில் பூசிக் கொள்ளச் செய்யும் (திருநீறு) இதன் பொருள் 'வறட்டி' என்பதாகும்.

## 90. முத்தலை

*"பத்துக்கால், மூன்று தலை, ஆறு கண், ஆறு முகம், நான்கு வாய் இவற்றை ஓரிடத்துக் கண்டேன்; இதற்கு விடை கூறு" என்று விடுகதை சொன்னார் ஒருவர்.*

*விடு கதையின் பொருள் யாது?*

*உழவன் "ஏரோட்டும் நிலை"யே விடுகதைப் பொருளாம். மூன்றுதலை; மூன்று தலையிலும் அமைந்த கண் ஆறு; இந்த மூன்று முகங்களுடன் கொழு முகம் ஒன்றும், நுகத்தடி முகம் இரண்டும் ஆக முகம் ஆறு. மனிதன் வாய், மாட்டின் வாய் இவற்றுடன் உழவு சாலின் வாய் ஒன்றும் சேர வாய் நான்கு.*

*இவ் விடுகதையை விடுகவியாகப் பாடியவர்* ***சுந்தர கவிராயர்*** *என்பவர்.*

"பத்துக்கால்; மூன்றுதலை; பார்க்குங்கண் ஆறு;முகம்
இத்தரையில் ஆறு;வாய் ஈரிரண்டாம்; - இத்தனையும்
ஓரிடத்துக் கண்டேன் உகந்தேன் களிகூர்ந்தேன்
பாரிடத்திற் கண்டே பகர்."

---

ஈரிரண்டு – நான்கு. உகந்தேன் – விரும்பினேன். களி கூர்ந்தேன் – மகிழ்ந்தேன். பகர் – கூறு.

# 4. பொதுமக்கள் பேச்சில் பொய்யாமொழி

## முகம்

*வளமான வாழ்வியலில் காலம் காலமாகப் பழுத்துக் கனிந்தவை* ***பழமொழிகள்****. அவ்வாறே வழிவழி மரபாக வந்து பேணப்பட்ட பெருஞ்செல்வம்* ***மரபுத் தொடர்கள்****. இரண்டும் பழமையானவை மண்ணின் மணம் பரப்புவவை. அதனால், இவற்றை,*

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயர் எல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியது என்மனார் புலவர்" (1336)

*என்றார் தொல்காப்பியர். அவர் காலத்திற்கு முன்னரே பழமொழி, முதுமொழி எனப்பட்டமை, அதன் நெட்ட நெடும் பழமை உணர்த்தும். முதுமொழி யையும் ஒரு யாப்பியலாகவே கூறினார் என்பதை எண்ணுவதுடன், "அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே" என்று அவர் கூறுவதும் எண்ணத்தகும் (1292). அடி என்பது இருசீர் கொண்ட குறளடியையும் குறிக்கும். அதனால் தான்,*

"அறஞ்செய விரும்பு"

"ஆறுவது சினம்"

*என இருசீர்க் குறளடியால் 'ஆத்தி சூடி' மரபு நிலை மாறாது அமைந்தது. வள்ளுவர், பா வகையில் குறுகிய குறட்பாவால் நூலை இயற்றினார் எனவும், ஆத்தி சூடி குறளடியால் அமைந்தது எனவும் எண்ண வேண்டும்.*

*வள்ளுவர் கூறிய குறட்பாவினும் குறளடிப்பா குறுகியது என்பதை விளக்க வேண்டியது இல்லை.* ***பா வகையில் குறுகியது***

**வள்ளுவர் பா. அடி வகையில் குறுகியது ஔவையார் ஆத்தி சூடிப்பா.**

*வள்ளுவர், பாவில் கூறும் செய்தியைப் பொது மக்கள் மரபுச் சொல்லாகவும், பழமொழியாகவும் வழங்குதலை எண்ணிப் பார்ப்பது இக் கட்டுரை. வள்ளுவரைக் கொண்டு செய்தார்களா, அவர் பாடலைக் கருதாமலே தம் போக்கில் அமைத்துக் கொண்டார்களா என்பதை எண்ணாமல்,* ***இரண்டும் ஒத்து இயல்வதையும், எளிமையும் அழகும் தெளி வும் சுருக்கமும் கொண்டு இயல்வதையும் எண்ணின் வியப்பு மிக்கதாம்.***

*இத்தொகை நூல் முத்தொகை கொண்டது. ஒன்று, வள்ளுவத் தொகை; இரண்டு, பொது மக்கள் வாக்குத் தொகை; மூன்று, ஒப்புக் கண்டு உரைக்கும் ஒப்பாய்வுத் தொகை. இம்முத்தொகையும் ஒருங்கே கிடைக்கும் வகையை வழங்கிய தோன்றல் எவர்? தமிழ்மண்ணின் வளமாக நூல் வெளியிடும் வளவன் பதிப்பக நிறுவனர் தோன்றல்* **கோ. இளவழகன்** *அவர்தம் நல்லார்வமும் நல்லெண்ணமும் நன்றிக் குரியவை.*

*அன்புடன்,*

***இரா. இளங்குமரன்***

## 1. கழிசடை

*அறிவு தெளிவு ஆற்றல் பண்பாடு என்பவற்றை யுடையது மாந்தர் பிறவி. ஆனால், அவற்றை இல்லாதவரும் தோற்றத் தாலும் உறுப்பாலும் மாந்தர் எனவே காணப்படுகின்றனர். அவரை எண்ணிய வள்ளுவர் முடியில்* **இருப்பதும் 'முடி'தான்;** *அம் முடியில்* **இருந்து கழிந்ததும் 'முடி'தானே!** *இரண்டன் நிலையும் ஒப்பாகுமா? என நினைகிறார்.*

*அவரும் மாந்தர்; இவரும் மாந்தர் என்பது தகுமா; தகாதே என்றெண்ணி,*

"தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை"

*என்றார்.*

*இப்பாடல் சிக்கல் இல்லாதது; எளிதில் பொருள் விளங்குவது. குறளைப் படித்தார்க்கும் கேட்டார்க்கும் எல்லாம் தெரிந்தது. கல்லா மாந்தரும் இதனைக் கேட்டு அறியாதவரும்கூட அறியும் வகையில் மரபுச் சொல் ஒன்று வழங்குகிறது.* **சூத்திரம்** *என்றும்* **கலைச் சொல்** *என்றும் சொல்லும் சிறப்பொடு வழங்கி வருகிறது.* ***தினையளவுப் பனி நீரில் தென்னைமரம் மட்டுமா பேரால மரமும் பெருமலையும் தெரிவது போல் தெரியச் செய்வது அது.***

*ஒழுங்கு அற்றவரும், மதிக்கத் தகாதவரும், இழி செயல் செய்பவரும் ஒதுக்கத் தக்கவரும் அருவறுப் புக்கு இடமாகி இருப்பவரும் ஆகியவரைப் பொது மக்கள்* ***'கழிசடை'*** *என்று பழிக்கின்றனர் அல்லரோ! அக் கழிசடை என்பது என்ன?*

*சடை - குடுமி - முடி - ஆயவற்றில் இருந்து கழிந்தது தானே! இருபத்தொன்பது எழுத்துகளையுடைய குறளை நான்கு எழுத்துகளாகக் குறுக்கி வள்ளுவக் குறட் பொருளை விளக்கும் தேர்ச்சி இஃதாகி இன்பம் சேர்க்கிறது.*

**திருக்குறள்** *அது என்றால் இது,* **தெருக்குறளாகக்** *கேட்பது தானே!*

*திருக்குறளினும் எத்தகு சுருக்கம்; எத்தகு விளக்கம்;* **பொதுமக்கள் வழக்கு பொலிவுறு வழக்காம்.**

## 2. கயவாளி

"ஈரக்கையையும் உதறமாட்டான்"

"எச்சிற் கையையும் உதறமாட்டான்"

என்னும் இருவகைகளாலும், ஒரு பொருள்தரும் பழமொழி வழக்கில் உள்ளது; கருமியின் இயல்பைப் படம் பிடித்துக் காட்டுவது.

"புண்ணுக்குத் தடவச் சுண்ணாம்பும் தரமாட்டான்" என்பதொரு பழமொழியும் கருமித்தனம் விளக்குவதே.

ஒரு புலவர், "பண்ணாகப் பாடிய தம் பாட்டை, அண்ணாந்து கேட்டு அழகு அழகு என்றவர், சுண்ணாம்பு பட்ட இலையும் தாராது போனதைக் கண்டு வருந்திப் பாடிய பாடல் தனிப்பாடல் திரட்டில் உண்டு.

இத்தகு கருத்துகளின் செறிவாகவும் முன்னோடி யாகவும் விளங்கும் ஒரு குறட்பாவை நினைக்க வியப்பாக உள்ளது. அது,

"ஈர்ங்கை விதிரார் கயவர், கொடிறுடைக்கும்
கூன்கையர் அல்லா தவர்க்கு"

என்பது.

கருமித்தனம் அமைந்த கயவர், தம் கன்னத்தை உடைக்கும் கொடிய கையை உடையவர்க்கு அல்லாமல் பிறர்க்கு ஈரக்கையையும் உதறமாட்டார் என்பது இதன் பொருளாம். ஈரக்கையையும் உதறினால் கையில் ஒட்டியுள்ள ஈரத்துளி கீழே வீழ்ந்து வீணாகப் போய்விடுமே என்று கையை உதறுவது இல்லையாம்!

குறளைக் குறுக்கிக் காட்டிய பழமொழிகளைக் கண்ட நாம் வியக்கிறோம். வியப்பின் மேல் வியப்பாக ஒரு மரபுச் சொல் வழங்குவதை அறிய இறும்பூது அடைகிறோம்.

*அது, **‘கசவாளி’** என்பதாம். ஈயாக் கயமையை ஆள்பவன். கயவாளி > கசவாளி ‘கயம்’ என்னும் ஆழமான நீர்நிலை, ‘கசம்’ என வழங்குவதும் ‘கயம்’ என்னும் யானைப் பெயர், ‘கசம்’ என வழங்குவதும் எண்ணிப்பார்த்தால் **‘கசவாளி’** என்பது **‘கயவாளி’** என்பதன் திரிபு வடிவம் என்பது புலப்படும். புலப்படவே ‘கயவாளி’ என்பது, “ஈர்ங்கை விதிரார் கயவர்” என்னும் குறளடியின், ‘தொகை’ இம்மரபுத் தொடர் என்பது விளக்கமாகும்; இனிப்புமாகும்.*

# 3. தமுக்கு

*தீய பழக்கங்களுள் ஒன்று கோள்சொல்லுதல் என்பது. ஒருவர் மறைவாகச் சொல்லும் சொல் லையோ, ஓரிடத்துக் கேட்ட மறைவான சொல்லை யோ பிறர் பிறர்க்கும், பிற பிற இடங்களுக்கும் பரப்புதல் கோள் சொல்லுதல் ஆகும். 'கோள்' என்பது 'கொள்வது' ஆகும்.*

*அவனுக்குத் தெரிந்தால் இதனைத் **'தமுக்கடித்து'** விடுவான் என்றும், **'தண்டோராப்'** போட்டு விடுவான் என்றும் கோள் சொல்வானை ஊரவர் கூறுதல் இன்றும் கேட்கக் கூடியது.*

*முற்காலத்திலும் சரி, இக் காலத்திலும் சரி, அரசுசார் செய்திகளையோ ஊர்சார் செய்திகளையோ தமுக்கு அடித்தும் தண்டோராப் போட்டும் ஊரறியச் செய்தல் வழக்கமேயாம். அரசியல் செய்திகளில் முதன்மையான வற்றை 'வள்ளுவ முதுமகன்' யானைமேல் இருந்து ஊரவர் அறியப் பறை அறைந்தமையைப் பழைய இலக்கியங்கள் கூறுகின்றன. அரசன் பிறந்த நாளாகிய பெருமங்கல நாள், அவன் திருமண நாள் என்ப வற்றையே அறிவிப்பான் வள்ளுவ முதுமகன் என்றும் கூறும். அதன் வழி வந்ததே தமுக்கடித்தலும், தண்டோ ராப் போடுதலும் ஆம்.*

*பின்னாளில் அறிவியலால் வந்தது தொலைவரிச் செய்தி. அதனைத் 'தந்தி' என்றும் 'கம்பியில்லாத் தந்தி' என்றும் கூறுவதும் வழக்கத்தில் உள்ளது. எங்கிருந்தோ வரும் செய்தி எங்கோ அறியப்பட்டு ஊர் அறிபொருளாக ஆகிவிடுதலால் அவ்வாறு ஊரறியச் செய்வாரைத் 'தந்தி' என்று கூறுவதும் வழக்காம்.*

*மகவைத் தந்தவர் தந்தையாவதுபோல், செய்தியைத் தந்தவரைத் 'தந்தி' எனப் பெயரிட்டுப் பொருந்த வழங்கினர் பொதுமக்கள்.*

*பின்னாளில் 'தந்தி' என்னும் பெயரால் இதழ் வந்தது. அதனால், தந்தியில் செய்திபோட வேண்டிய தில்லை; அவனுக்குச் சொன்னால் போதும்; ஊருக்குப் பரப்பிவிடுவான் என்றனர். இல்லாத பொல்லாத வற்றையும் இணைத்துக் கூறுவதால் அவனையும் அச் செய்தியையும் 'வதந்தி' என்றும் கூறினர். 'வராத தந்தி' சுருங்கி 'வதந்தி' ஆயிற்றாம்.*

*இறந்தவர்களின் இமை ஆடுவது இல்லை; அதனால் இறந்தவரை 'இமையார்' என்றனர். பின்னர் அது தேவர்களுக்கு ஆயது. அவர்கள் இமைக்க மாட்டார்க ளாம்! இமையாதவர்களாகிய அவர்களை ஒரு புலவர் கற்பனை செய்தார்! "ஏன் இவர்கள் இமைப்பதில்லை?" எனத் தமக்குள் ஒரு வினா எழுப்பினார். ஒரு முடிவுக்கு வந்தார். "முன்னே புகழ்ந்து விட்டுப் பின்னேபோய்ப் பழிப்பாரை அஞ்சியே தேவர் விழித்திமையார் நின்ற நிலை" என்றார். அது,*

"அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்" (1076) என்பது.

*வாயால் சொல்லுவார் இருக்கட்டும்; என் கண்ணே என்னைக் காட்டிக் கொடுத்து விடுகிறதே என்னும் தலைவி,*

"மறைபெறல் ஊரார்க்கு அரிதன்றால், எம்போல்
அறைபறை கண்ணார் **அகத்து**"

*என்கிறாள் (திருக்.1180).*

*இவற்றால் வள்ளுவம் பொதுமக்கள் வாய்மொழி யாகப் பெருக வழங்கப் பெறுதலை நன்கு அறியலாம்.*

# 4. ஏழைசொல்

*ஏழை சொல் அம்பலம் ஏறுமா? என்பதொரு பழமொழி. ஏழை சொல் 'அரங்கம் ஏறுமா' என்பதும் அது. வறியவர் தம்மை நொந்து கொள்ளும் உரை இது. ஒன்றன் இரட்டை நடைகள் இவை.*

*"ஏழையைக் கண்டால் மோழையும் பாயும்" என்பதும், பழமொழியே. மோழை என்பது கொம்பில்லாக் கடா. மொட்டைக் கடா என்பதும் அது.*

*செல்வர்களும் பதவியாளர்களும் தவறும் பழியும் செய்தாலும் தப்பித்துக் கொள்வதும், வறியவர்கள் அதே தவற்றையும் பழியையும் செய்தால் மாட்டிக் கொள்ளப்பட்டு நலிவதையும் ஒருவமை வழியே காட்டுவார் அறிஞர்* **மு.வ.**

*புலவுக் கடையில் ஒரு தட்டில் புலால் உள்ளது. அதில் இருந்து ஒரு துண்டைப் பருந்து ஒன்று தூக்கிக் கொண்டு பறந்துவிடுகின்றது. மற்றொரு துண்டை ஒரு நாய் கௌவிக் கொண்டு ஓடுகின்றது. கடைக்காரன் மேலே பறந்த பருந்தைப் பார்த்து விட்டு ஒன்றும் செய்யாது இருந்துவிட்டான். ஆனால், கட்டைத் தடியை எடுத்துக் கொண்டு நாயை வெருட்டி வெருட்டி அடித்தான்! பதவி பணம் உடையவர் தவறு செய்து விட்டுத் தப்புவதையும், அதே தவற்றைச் செய்து வறியவர் மாட்டிக் கொள்வதையும் இக் காட்சி கொண்டு விளக்குவார்.*

*செல்வத் தோற்ற முடைய புலவர் பெறும் சிறப்பை யும் அஃதில்லார் பெறும் புறக்கணிப்பையும் கண்ட புலவர் ஒருவர்,*

"விரகர் ஒருவர் புகழ்ந்திடவே வேண்டும்;
விரல் நிறைய மோதிரங்கள் வேண்டும்; அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டும்; அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று"

*என்று அவர் பாடியமை தனிப்பாடல் திரட்டில் உண்டு.*

"கொடியதில் கொடியது, வறுமை"

*என்றார் ஔவையார்.*

"இன்மையின் இன்னாதது யாதெனில் இன்மையின்
இன்மையே இன்னா தது"

*என்றார் வள்ளுவர்.*

*இதனைக் கூறிய நல்குரவு (வறுமை)ப் பகுதியில்,*

"நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்"

*என்று வள்ளுவர் கூறுவது எண்ணத் தக்கது (1046)*

*"நற் பொருளையே கூறுகிறார்; நன்றாக உணர்ந்தே கூறுகிறார். ஆனாலும், அவர் வறியராக இருப்பதால் அவர் சொன்ன சொல்லும் அதன் பொருட் சிறப்பும் சிறப்புப் பெறாமல் புறக்கணிக்கவும் தள்ளவும் பட்டு விடுகின்றன" என்கிறார். இது நடைமுறை உண்மை அல்லவா!*

*ஒரே சொல், சொல்பவரைக் கொண்டு கொள்ளவும் தள்ளவும் படுதல் காணக் கூடியவை தாமே! ஒருவன் கால மெல்லாம் ஆராய்ந்து கருதிக் கருதிச் சொல்லும் சொல்லையும் செய்தித்தாள் அறிந்துகொள்வதில்லை; வானொலிக் காது, கேட்பதில்லை தொலைக்காட்சிக் கண், காண்பதில்லை. அறிவாளர்களும் செவி சாய்ப்ப தில்லை.*

*பணம் பதவி பட்டம் பகட்டு உடையார் சொல்லும் கவைக்குதவாததாய் - கருத்தொடு கூடாததாய் - இருக்கும் சொல்லும், கொட்டை எழுத்துகளில் காணப்படுகின்றன அல்லவா! எங்கும் போலிமை! எல்லாம் போலிமை ஏதோ பெயருக்கு ஒன்றிரண்டு உண்மைகள்!*

*இந்நாளில் பெருக்கமாக விளங்கும் இதன் அகவை, வள்ளுவர் நாளுக்கு முற்பட்ட பழமையது அல்லவா! அவர் காலத்தில் காணாத அளவு இன்று வேண்டுமானால் பெருக்கமும் பளிச்சீடும் பெருகி இருக்கலாம்; அவ்வளவே! இல்லை எனின், வழிவழி வாய்ச்சொல் ஆகி இராதே.*

# 5. மடையன்

*"தின்னி மாடன்" என்று சிலர்க்குப் பொருள் பொதிந்த பட்டம் வழங்கக் காண்கிறோம். 'பொந்தன்' என்றும் 'வயிறன்' என்றும் பட்டப் பெயர் பெற்றாரைக் காண்கிறோம். பாட்டால் புகழ்கொண்ட இராமனுக்கு எதிராகச் சாப்பாட்டால் புகழ்பெற்ற 'சாப்பாட்டு ராமனை'க் காண்கிறோம். இவைமட்டுமா?*

*சிலரைத் திட்டும் போது 'மடையன்' என்கிறோம்.* **மடை** *என்பது என்ன? சோறு தானே! மடைப்பள்ளி, சமையற் கூடம்; மடையன் சோற்றை நிரம்பநிரம்ப அடைக்கும் பெருந்தீனியன்; பெருந்தின்னி (பெருந் திண்டி); பெருந்தீனி; குண்டா போலும் வயிறன் - குண்டோதரன் (உதரம் - வயிறு); குண்டம் - பள்ளம்; ஆழ்குழி. "குண்டு கண் அகழி" என்பது புறப்பாடல்.*

*மாட்டுக்குப் போடும் தீனியை இரை என்பர்; சிலரை "இரை போடுகிறார்; இரை எடுக்கிறார்" என்பர். மாடுபோல் தின்பவரைக் குறிப்பது இது.*

*திருவள்ளுவர் பெருந்தீனியரைக்* **"கழிபேர் இரை யான்"** *என்பார். உடல் நலத்தின் பெரும்பகுதி ஊண் முறை, அளவு என்பவற்றிலேயே உள்ளது. அவற்றைப் பேணிக் கொண்டார்க்கு "மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு" என்பார். எதனால் எனில், முன்னே உண்டது அற்று - எரித்து - செரித்து - விட்டது என்பதை அறிந்து உண்பவர்க்கு என்பார். மருந்து அதிகாரம் பத்துப்பாடல்களுள் ஆறுபாடல்களில் உணவு பற்றியே கூறிய தகவு அறியத்தக்கது. மற்றும் கள்ளுண்ணாமை என்றும் புலால் மறுத்தல் என்றும் கூறிய அதிகாரப் பொருள்களும் வள்ளுவர் உடல்நலக் கொள்கை விளக்கங்களேயாம்.*

"அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு"

"நொறுங்கத் தின்று நோயகற்று"

*என்பவை பழமொழிகள். இப்படி வழங்குவன வட்டாரம் தோறும் உண்டு.*

## 6. குறி கூறுதல்

*குறி கூறுதல் என்பது என்ன? வருபவர் முகக்குறி செயற் குறி, வினாக்குறி இன்னவற்றைக் கண்டு அகக் குறி இன்னதெனக் கூறுவதே குறி கூறலாம். கோடாங்கி என்பது கோள் தாங்கி என்பதாம். கொண்ட கருத்தை உணர்ந்து சொல்வதே அப் பெயர்ப் பொருளாம். திருக்குறள் குறிப்பறிதல், குறிப்பறிவுறுத் தல் என்பவை இவ்வகையில் எண்ணத் தக்கனவாம்.*

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்"

"முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினும்
காயினும் தான்முந் துறும்"

"கூறாமை நோக்கிக் குறிப்பறிதல்"

*இன்னவை குறிப்பறிதல் வள்ளுவங்கள்.*

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்"

*என்பது பழமொழியே. "முயல் பிடிக்கும் நாயை மூஞ்சி யைப் பார்த்தால் தெரியும்". என்பதும் அவ்வழியதே.*

*பொதுமக்கள் குரலும் பொய்யாமொழியார் குறளும் ஒத்துநடையிடும் இதனை ஆராயத் தோன்றுவ தென்ன? அது, திருக்குறள் வாழ்வியல் நூலே என்பது வாம்.*

# 7. செல்வாக்கு

*கேள்வியைச் செவிச் செல்வம் என்பது வள்ளுவம். சொல்லை நல் வகையில் வாங்கிக் கொள்ளும் கூர்ஞ்செவி வேண்டும் என்பது திருவள்ளுவம். அது செல்வத்துள் செல்வம் என்பார்.*

*வள்ளுவக் கலைச் சொற்களுள் ஒன்று, செலச் சொல்லல் என்பது. அதனை ஏழு இடங்களில் ஆள்கிறார் (424, 686, 719, 722,724,728,730 என்பவை)*

எண்பொருள வாகச் செலச் சொல்லல்
நல்லவையுள் நன்கு செலச் சொல்லுவார்
கற்றார்முன் கற்ற செலச் சொல்லுவார்

*என்று உடன்பாட்டிலும், "செலச் சொல்லாதார்" என எதிர்மறையிலும் செலச் சொல்லலைக் குறிப்பிடு கிறார்.*

*செவியுள் செலச் சொல்லல் என்னும் அளவினதா செலச் சொல்லல்! இல்லை; கருத்தில் பதிவாகுமாறு செலச் சொல்லல்; கடமையில் ஊன்றுமாறு செலச் சொல்லல்; தாம் கேட்டதைப் பிறர் பிறர்க்கும் செலச் சொல்லல்; பிறபிற இடங்களுக்கும் காலங்களுக்கும் செலச் சொல்லல்; என்று பலவாறு விரிக்கத் தக்கது இச் செலச் சொல்லல்.*

*வள்ளுவர் உள்ளங் கவர்ந்த இச் செலச் சொல்லல், பொது மக்கள் வாயில் தமிழ்கூறும் உலக அளவில் எப்படி வழங்கு கின்றது எனின்* '**செல்வாக்கு**' *என்னும் பெயரால் வழங்குகின்றது என்பதாம்.*

*செல்விருந்து போன்றது செல்வாக்கு. ஆனால் செல்வாக்கு என்பது புகழ், வாய்ப்பு என்னும் பொருள் களில் வழங்குகின்றது. செல்லும் சொல்லே செல்வாக் காம். வள்ளுவர் கூறும் செலச் சொல்லல் செல்வாக் காகப் பொருள் மாற்றத்துடன் வழங்கு கின்றதாம்.*

*ஓர் அறிஞர் உலகத்தின் ஒரு மூலையில் இருந்து கூறுகின்றார். அவர் கூற்று உலகவரை யெல்லாம் ஆட்படுத்துகின்றது. செயற்கரிய என்பன வெல்லாம் நடத்தற் கரியன என்பன வெல்லாம் நிகழ்ந்து விடுகின் றன. இச்சொல் அல்லது வாக்கு செல்வாக்குத் தானே! செலச் சொல்லல் தானே! "**நா அசைய நாடு அசையும்**" என்பது பழமொழி.*

# 8. சுடுசொல்

**வடுப்படுதல்:**

*“யாகாவார் ஆயினும் நாகாக்க” என்றார் திருவள்ளுவர். ஏன்? நாவினைக் காவாமல் சொல்லும் சொல் பயக்கும் தீமைக்கு எல்லை இல்லை. “பல்லக்கு ஏறுவதும் சொல்லாலே, பல் உடைபடுவதும் சொல்லாலே” என்பதும் பழமொழி.*

*தீயபுண்ணுக்கும் தீய புண், தீய சொல்லால் உண்டாகும் ஆறாப் புண்ணே என்றும் வள்ளுவர் கூறுவார். மேலும்,*

“தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்”

*என்றும் விளக்குவார்.*

*தீயால் நன்மை உண்டாகும் பகுதி நிரம்ப உண்டு. ஆனால் தீயவற்றால் நன்மை உண்டாவது இல்லை என்பது மட்டும் இல்லை மாறாத் தீமையும் உண்டாம் என்பது எவரும் அறிந்தது.*

*பொதுமக்களும் தீய சொல், தீச்சொல் என வழங்கு கின்றனர். இன்னும் விளக்கமாகச் **‘சுடு சொல்’** என்றும் சொல் கின்றனர். ஒருவர் சொல்லும் சொல்லைக் கேட்டு வெறுத்துச் சொல்லுவாரிடம் என்ன நான் சொன்னது **வடுப்பட்டுப் போயிற்றோ - வடுப்பட்டு விட்டதோ** - என்று கூறுவதை நாம் கேட்கவே செய் கிறோம்.*

*வள்ளுவர் வாய் மொழியை வாங்கி வழிமொழியும் சொற்கள் அல்லவோ **சுடுசொல்; வடுப்படல்** என்பவை.*

“ஒன்றானும் தீச்சொல்
பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்”

*என்பது வள்ளுவமே.*

# 9. பொருட்டு

பொருளின் இன்றியமையாமையை,

"பொருளில்லார்க் கிவ்வுலகம் இல்லை" என்றும்

"பொருளல்லவரைப் பொருளாகச் செய்யும்

பொருளல்ல தில்லை பொருள்" என்றும்

"பொருள் என்னும் பொய்யா விளக்கம்"

என்றும் மொழிகின்றார் பொய்யாமொழியார்.

"பொருளான் ஆம் எல்லாம்" என்று யாருக்கும் எதற்கும் உதவாத கருமிகளையும் குறிக்கிறார். இப் பொருட் சிறப்பைப் பொதுமக்கள் உணராமல் இல்லை.

"நான் அவரைப் பார்க்கப் போனேன். அவர் என்னை ஒரு பொருளாகக் கருதவில்லை" என்றும், "என்னைப் **பொருட்டாக** மதிக்கவில்லை" என்றும் வருந்தி யுரைக்கும் உரையிலே பொருட் சிறப்புப் புலப்படவே செய்கின்றது.

பொருட்டாகஎன்பது என் பொருட்டாக, அவர் பொருட்டாக எனவும் வழங்குகின்றது. பொருள் உடையது பொருட்டு என்பது எளிமையில் அருமை யாய் விளங்குகின்றதாம்.

தெனாலிராமன் ஒரு விருந்துக்குச் சென்றான். அவன் உடையின் அழுக்கையும் கிழிசலையும் கண்டு உள்ளே விடவில்லை. அவன் வீட்டுக்குத் திரும்பினான். பட்டுடை, பட்டுச்சட்டை அணிந்தான். விருந்து மண்டபத்திற்கு மீண்டும் சென்றான். வருக வருக என வரவேற்றனர். உயர்ந்த இடத்தில் இருக்கச் செய்தனர். பணிவுடன் பரிமாறினர். தெனாலி எண்ணினான். இவ்விருந்து எனக்குத் தரப்படவிவில்லை. இவ்வுடையின் பொலிவுக்கே தரப்பட்டது என்று. அதனால் சட்டையைக் கழற்றி அதன் பையில் சோறு கறிகளைத் தின்னு தின்னு என்று செலுத்தினான். பின்னர் உடை மதிப்பை ஊரறியச் சொன்னான். "ஆடை பாதி ஆள் பாதி" என்பதும், "காசேதான் கடவுளடா" என்பதும் மக்கள் வழக்குகள். இவை **பொருட்டு** என்பதன் விளக்கம்.

# 10. செவிலி

பெற்றதாய் நற்றாய் எனப்படுவது அகப்பொருள் இலக்கண இலக்கியச் செய்தி. பெற்றதாயை நல்லம்மா என்பது பொது வழக்கு. தாயைப் போன்ற சிறிய தாயை நல்லம்மா என்பதும், தந்தை போன்ற சிற்றப்பாவை நல்லப்பா என்பதும் நடைமுறை.

வளர்க்கும் தாயைச் செவிலித்தாய் என்பது முன்னோர் முறைமை. அம் முறைமை வள்ளுவராலும் போற்றப்பட்டது. அன்பு என்னும் தாய் பெற்ற சேய் அருள் என்பது. அதனைப் பொருள் என்னும் செல்வச் செவிலி வளர்க்கிறாள் என்கிறார். பொருளைச் செல்வம் என்பதும் வழக்கே. அதனைச் 'செல்வச் செவிலி' என்பது நயமான ஆட்சியாம்.

வளர்க்கும் தாய், வாய்ப்புத் தாயாகவும் இருக்க வேண்டும்; கல்வி, செல்வம்; கேள்வி, செல்வம்; பண்பு, செல்வம்; பொருளும் செல்வம்; உடல்நலமும் செல்வம்; மக்களும் செல்வம்; மனைவியும் செல்வம்; இச் செல்வங்களை ஒருங்குடையவள் **'செல்வச் செவிலி'**, இச் செவிலியின் சிறப்பியல் **'செவிலிப் பயிற்சி'** என்னும் ஒரு பயிற்சியை இந் நாள் உண்டாக்கி உள்ளது அரசு.

மருத்துவமனையில் மருத்துவர்க்கு உதவியாகவும்,நோயரைப் பேணுபவராகவும் இருப்பவர்க்குத் தரும் பயிற்சியே 'செவிலியர் பயிற்சி' யாகும். பணியும் செவிலியர் பணியே (Nursing Course, Nurse), வானூர்தியில் செவிலியராகப் பேணிநலம் செய்யும் தொழிலரும் உளர்.

பெற்றோர் பொறுப்பிலே இருந்து காப்பவரைக் 'காப்பாளர்' என்பது இற்றை நடைமுறை. 'கார்டியன்' என்பது ஆங்கிலச் சொல். 'போசகர்' என வழங்கியது வட சொல். 'காவல் பெண்டு' என்பார் அரண்மனை - அந்தப்புர வாழ்வுடைய கோப்பெண்டைக் காக்கும் கடமையுடையார். காவல் பெண்டின் பாட்டு புறநானூற்றில் உண்டு.

*வள்ளுவர் வழங்கும்,*

“அருள்என்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலி**யால் உண்டு**”

*என்னும் ‘செவிலி’ பொதுமக்கள் வழங்குமொழியாகிப் பொருள் சிறந்து விளங்குதல் அறியத்தக்கதாம்.*

*பெற்ற தாயை அடுத்துச் சொல்லப்படுபவள் செவிலித்தாய். ஆட்டு தாய், ஊட்டு தாய், கைத் தாய் எனப்படுவார் பிறர். அந்நாளில் செல்வக் குடும்பங்களில் ‘ஐந்தாயர்’ எண்ணப் பட்டனர்.*

## 11. இருக்கிறார்

ஒருவரைப் பார்த்து 'ஓர் ஆள் என்று இருக்கிறார்'; 'ஏதோ பேர்க்கு இருக்கிறார்'. என்பது பொதுவழக்கில் உள்ளதாம். வாழ்கிறார் என்பதற்குரிய செயற்பாடு எதுவும் இல்லாமல் இருப்பவரைக் குறித்தது இது.

இப்படிப்பட்டவர் இன்று மட்டுமா உள்ளனர். எங்கேயும் எப்போதும் இருந்திருக்கத் தானே செய்வர்.

அத்தகையர் வாழ்வு வாழ்வாகாதே. வசையொழிய வாழ்வாரே வாழ்வார்; வாழ்வாங்கு வாழ்பவரே வாழ்வார்; உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; இன்னவாறு சொல்பவர் அல்லரோ திருவள்ளுவர். அவர் இத்தகையர் வாழ்வை எப்படி மதிப்பிடுகிறார்.

"உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர்"

என்கிறார். உயிரோடு இருக்கிறார் என்னும் அளவை யன்றி வேறுவகையில் இல்லாதவர் அவர். நிலம் என்னும் பெயரைக் கொண்டும் விளைவுக்குப் பயன்படாக் களர்நிலம் போன்றவர். அவர் எவர் எனின், கல்லாதவர் என்கிறார். மூச்சுவிடுதற்காக மட்டுமே இருப்பவரை 'உயிர்ப்ப உளர்' என்றும் கூறுவார்.

"பேருக்கு இருக்கிறார்" "ஓர் ஆள் என்று இருக்கிறார்" என்னும் பொதுமக்கள் குரல், 'உளரென்னும் மாத்திரையர்' என்றும் 'உயிர்ப்ப உளர்' என்றும் சொல்லப்படுகின்றனவாம்.

## 12. முளையிலே கிள்ளல்

"இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து"

என்பது வள்ளுவம். பகை, மாறுபாடு முதலியவை தோன்றும் எனின் தோன்றும் போதே அழித்துவிட வேண்டும். அதனை வளரவிட்டால் பின்னர் அதனை அழிக்க நினைப்பாரை அது அழித்துவிடும் என்பது இதன் பொருள். பகைத் திறம் தெரிதல் குறள் இது.

ஒரு நோய் தொடங்குகிறது; தொடங்கும் போதே அதனை அழிக்கத் தவறினால் ஆளையே அழித்து விடுகிறது அல்லவா!

வீட்டுள் ஒரு மனத்தாங்கல் அதனை உடனே பேசித் தீர்க்கத் தவறினால் குடும்பமே அலைக்கழிந்து போகிறது அல்லவா!

ஒரு கருவி அல்லது பொறி பழுதாகின்றது. அப் பழுதை உடனே நீக்காவிட்டால் அக் கருவி, அல்லது அப்பொறி கெட்டொழிந்து போகின்றது அல்லவா!

ஆனபின்னே ஐயோ என்று ஆவதென்ன?

போனபின்னே புலம்பிப் பயனென்ன?

இவ்வுயரிய கருத்தைப் பொதுமக்கள் வாய் எப்படிப் புகல்கின்றது. **முளையிலேயே கிள்ளி எறிதல்** என்கிறது. **இளைதாக முள்மரம் கொல்லல்** என்பது **முளையிலே கிள்ளல்** என்று உருக் கொள்கிறது.

உழவு நிலத்தில் ஒரு முட்செடி முளைத்துவிட்டால் உடனே பிடுங்கி எறிவர். அவ்வாறு செய்யத் தவறினால் அது வளர்த்து பெரிதாகி நிலப்பரப்பை வளைத்து விளைவைக் கெடுத்துவிடும்.

*முள்மரம் பயன்படுமே எரிவிறகுக்கும் பலகை சட்டம் ஆகியவை எடுத்தற்கும் உதவுமே எனின் மஞ்சள் இஞ்சி வாழை கரும்பு நெல் என விளையும் விளைவைக் கெடுத்து விடுவதை எண்ண வேண்டும் அல்லவா! முள் மரம் முளையிலே களையப்படா விடின் விரைந்து மரமாவதுடன் நிலமெல்லாம் வித்தும் வேரும் பரப்பிக் கெடுத்து விடுதல் ஒரு தலை.*

*வேலிக் கருவேல், நெய்வேலி ஆமணக்கு என்பவை எப்படிப் பரவி விளை நிலங்களைப் பாழாக்குகின்றன என்பது கண்கூடு அல்லவா!*

*சில தீமைகளை முளையிலே கிள்ளா விட்டால், முழுதழிவும் உண்டாகிவிடும் என்பது தெளிவாம்.*

# 13. குருடு

கல்வியைக் கண் என்பது வள்ளுவம். “கண்ணுடையவர் என்பவர் கற்றோர்” என்னும் அவர், அக்கண்கள் இரண்டனை எண்ணி,

“எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு”

என்கிறார். “எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்” என்பது ஔவை மொழியாயிற்று.

படியாத ஒருவர்க்கு வீடு தெரிகிறது, மாடு தெரிகி றது; மரம் தெரிகிறது, மட்டை தெரிகிறது; கண்பார்வை இருந்தும் எழுதிய எழுத்தைப் படிக்க முடியவில்லை. தமக்குரிய பெயரை எழுதவும் முடியவில்லை. கீறல், கைரேகை எனச் சொல்ல இருக்கின்றார்.

அவர்க்கு வந்த கடிதத்தைப் படிக்கத் தெரியாமல், அவர் ஏற வேண்டிய வண்டி எண் தெரியாமல் பக்கத் தில் உள்ளவரைப் பார்வையில்லாதவராய்க் கேட் கிறார்.

‘நான் குருடன்’ என்று தம்மை அறிமுகமும் செய் கிறார். குருடாக இருப்பது வள்ளுவத்தில் குற்றம் எனக் கூறப்படாது. ஆனால் பார்வை இருந்தும் கல்விக் கண் இல்லாராய் இருப்பாரை விலங்கு என்று அது கூறும். விலங்குக்குக் கண் இருந்தும் அக்கண்ணால் எழுத்தைப் படியாது அல்லவா! விலங்கு விலங்காக இருப்பதில் குறையில்லை. ஒளி இழந்தவர் அந்நிலையில் இருப்ப தும் குறையில்லை. ஆனால் ஒளிபெற்றும் கல்வி அறியாதவர் விலங்கினும் இழிந்தவரே யாம். கண் பெற்றும் குருடரே யாம்! அவரே ஏற்கும் - ஒப்பும் - தாழ்நிலை யல்லவா இது.

வள்ளுவர் மொழி, கல்லார் வாயிலும் வருவதே ‘நான்குருடு’ என்பதாம்.

"கற்றறி வில்லா மாந்தர்
கண்கெட்ட மாடே ஆவர்;

*என்று கூறும் கா. நமசிவாயர்,*

"பெற்றவர் செய்த பாவம்
பிள்ளையாய்ப் பிறந்த தாமே"

*எனக் "கயவன் கல்வி அருமை அறிந்தது" என்னும் கதைப் பாடலில் கூறுவார்.*

## 14. விதை நெல்

விருந்தோம்பல் உலகளாவிய ஓர் உயர்பண்பு. விருந்து போடுதல், விருந்து அளித்தல், விருந்து செய்தல் என்னாமல் **விருந்தோம்பல்** என்பது தமிழ்நெறி. தன்னைத் தான் பேணுவது போல், புதியவராக வருவாரைப் பேணுதல் விருந்தோம்பல் எனப்படும். கணவன் மனைவியர்க்குள் சிறுசினம் இருப்பினும் புதியராக வருவாரைக் கண்ட அளவில் தம் சினத்தை மறந்து விருந்தோம்பலில் ஈடுபடுவர். இதனை 'விருந்து கண்டு ஒளித்த ஊடல்' என்பார் **தொல்காப்பியர்**.

விருந்தினரைப் பேண வீட்டில் வாய்ப்பில்லாத நிலையில், வருங்கால விளைவுக்கு மூலமான விதை நெல்லைக் குத்தியும் விருந்து செய்வார் உண்டு. எவ்வளவு வறுமையிலும் தமக்கென விதை நெல்லை இடித்துப் பயன்படுத்தாதவரும் விருந்தோம்புதற்குப் பயன்படுத்துவர் என்பதைக் கண்டார் திருவள்ளுவர். அதனால்

"வித்தும் இடம்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்"

என்றார்.

"விருந்தினர்க்கு வழங்கி மீதத்தை உண்பவன் தன் நிலத்திற்கு விதை இடவும் விரும்புவனோ? மாட்டான்" என்பது இதன் பொருளாம். இளையான் குடிமாறனார் வயலில் இட்ட விதை நெல்லை அரித்து வந்து அரிசியாக்கிச் சமைத்தது பெரிய புராணச் செய்தி.

"வித்து அட்டு உண்டனை" என்பது ஔவையார் மொழி. பொதுமக்களும் இதனைப் புரியார் அல்லர். அவர்கள் வாக்கிலே

"விதை நெல்லைக் குத்தி விருந்து வைத்தல்"

என வழங்குகின்றது. இவ் வழக்குச் சொல் இக் குறளின் பொருளைத் தெளிவாகவும் விளக்கிவிடுகின்றது.

*மக்களுள்ளும் விதை நெல் போன்றவரும் உளர். அவர் உலகம் வாழ வாழ்பவர். அவர்களால்தான் உலகில் பண்பாடு காப்பாற்றவும் வளர்க்கவும் படுகின் றது. அத்தகையர் வித்தகர் (வித்தின் தன்மை அமைந்தவர்) என்பது வள்ளுவம். அவ்வித்தகரைப் பேணலும், அவர்வழியில் நிற்றலும் உலக நலம் என்பதால் "பண்புடையார்ப் பட்டுண் டுலகம்" என்றும் கூறினார்.*

# 15. பசியாற்றல்

'குடியேற்றப் பாதுகாப்பு' என்பதொரு சொல்லியல் முறையும், பண்பாட்டு முறையும் உண்டு. தாய் மண்ணின் பழவழக்கு, தாய்மண்ணில் இல்லாமல் மறைந்து போயிருக்கும். ஆனால் நெடுநாள்களுக்கு முன்னர்ப் புலம் பெயர்ந்து வேறிடத்துக் குடியிருப்பார் வழக்கில் அச் சொல்லும் அப் பண்பாடும் ஒழியாமல் காக்கப்பட்டிருக்கும். இதனைக் **குடியேற்றப் பாது காப்பு** என்பார் பாவாணர்.

காலையில் உண்ணும் உணவைச் சிற்றுண்டி என்பதும், நண்பகல் உண்பதைச் சாப்பாடு என்பதும் நம் வழக்கம். ஆனால் மலையகத்தில் உண்பதைப் பசியாறல் என்பது வழக்கு. ஒருவரை ஒருவர் காணும் போதும் பேசும் போதும் கேட்கும் முதல் வினாவே 'பசியாறிவிட்டீர்களா' என்பதே யாம். இவ்வழக்கு பழமையானது என்பது சங்க இலக்கியங்களாலும் திருக்குறளாலும் நன்கு விளங்கும்.

"ஆற்றுதல் என்பது அலந்தவர்க்கு உதவுதல்" என்பது கலித்தொகை. ஆபுத்திரனாரும் மணிமேகலை யாரும் வள்ளலாரும் கண்ட பேரறப்பணி பசி ஆற்று தலேயாம். வள்ளுவர் பசியாற்றுதலை அருமையாகச் சொல்கிறார்.

"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்; அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்"

என்பது அது.

தம் பசியைப் பொறுத்துப் பிறர்பசியாற்றுதலும் பசி யாற்றலே; தாமும் உண்டு பசித்தாரும் உண்டு பசியாறு தலும் பசியாற்றலே. அவ்வாறு பசிப்போர்க்கு அப்பசி வாராவகையில் அவரே தேடிக் கொள்ள வழிகாட்டல் பசியாற்றலின் மேம்பட்ட ஆற்றலே என்பது வள்ளுவ விளக்கமாம்.

*வள்ளுவம் கண்ட 'பசியாற்றல்' இன்றும் தாய் நாடு, சேய்நாடு ஆயவற்றில் வழக்காக உள்ளமை போற்றத் தக்கதாம்.*

'பசித்தோர் முகம்பார்' என்பதும்

*'பசித்திரு' என்பதும்* **வள்ளலார்** *வாக்கு. உன் பசியைத் தாங்கியும் பிறர் பசியை ஆற்று என்பதே இவற்றின் விளக்கமாம்.*

## 16. பகுத்துண்ணல்

*சான்றோர் உலகுக்கென வகுத்துத் தந்த செய்திகளில் தலையாய ஒன்று 'பகுத்து உண்ணல்' என்பது. இதனைத் திருக்குறள்*

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" *(322)*

*என்று சிறப்பிக்கும். இப்பாடல் விருந்தோம்பலில் வருவதன்று. ஒப்புரவு கண்ணோட்டம் ஆகியவற்றில் வருவதும் அன்று. ஈகையில் வருவதும் அன்று;* **கொல்லாமை***யில் வருவது. ஏன்?*

*பசி என்பது பிணி; அது, 'பசிப்பிணி' என்றும் 'பசி நோய்' என்றும் சொல்லப்படும். அப்பசிப்பிணி அகற்றும் மருந்து உணவு ஆகும். ஆதலால் பசித்துயர் தீர்ப்பாரைப் 'பசிப்பிணி மருத்துவர்' என்பது சங்கநூல் ஆட்சி. "பசிப்பிணி மருத்துவன் இல்லம் அணித்தோ சேய்த்தோ?" என்பது கிள்ளிவளவன் வினா? (புறம்.)*

*பசிநோய் கொல்லலும் கொலைதானே! அதனால் பசியகற்றுதலைக் கொல்லாமையில் வைத்தார் வள்ளுவர்.*

*பகுத்துண்ணல் என்பது, "படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும் உடைப்பெரும் செல்வர்க்கே உரியது அன்று. வறியர்க்கும் ஆவது; 'யாவர்க்குமாம் ஒரு வாயுறை' என்பாரே திருமூலர். அவ்வாறு அனைவர்க்கும் ஆவது.*

*உண்ணும் அளவு மட்டுமே உணவு உள்ளது. அந் நிலையில் பசித்தார் வருகிறார். இருக்கும் உணவைப் பகுத்து அவருக்கு வழங்கித் தாமும் உண்பதே பகுத்துண்பது ஆகும். இவ்வினிய பெருநெறியைப் பொதுமக்கள் வாய் எப்படிப் புகழ்பட மொழிகின்றது?*

*"பகுந்து சாப்பிட்டால் பசியாறும்" என்கிறது. 'பகுத்துண்டு ஓம்புதல்' பொதுமக்கள் பொருளாகி எளிமையாய் விளக்கு கின்றது அல்லவா!*

# 17. துப்புக் கெட்டவன்

*'அறம்' என்பது திருக்குறளுக்குரிய பழைய பெயர்களுள் பழையது. அறத்தை ஊடகமாகக் கொண்டு உரைக்கப்பட்டதே திருக்குறள். அறநெறிக்கு மாறான நெறி தலைகாட்டுவதைக் கடுமையாகக் கண்டித்துக் கூறுவதும் திருக்குறள் நெறி.*

*ஒருவன், வறிய ஒருவனுக்கு அவனுக்குத் தேவையாம் ஒன்றைக் கொடுக்கின்றான். அவ்வாறு கொடுப்பவனை ஒருவன் தானே வலிந்து போய்த் தடுக்கிறான். தானும் கொடாமல், கொடுப்பவனையும் கொடுக்க விடாமல் தடுப்பவனைக் கண்ட அளவில் வள்ளுவர் இளகிய உள்ளம் கடுமை கொள்கிறது. கண்டித்துச் சாவிப்புக் (சவிப்புக்) கூறுகின்றது.*

"கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்" *(166)*

*என்கிறது. இவ்வாறு, ஆக்கம் செய்வாரையும் அடுத்துத் தடுக்கும் கேடரை நல்லுள்ளம் பழித்தல் இயற்கையேயாம். பொதுமக்கள் வழக்கில் இக் காட்சி யுரை வழங்கவே செய்கின்றது. கேடு செய்து கெடு வாரைத் 'துப்புக் கெட்டவன்' என்பதை நாம் கேட்ட தில்லையா? துப்பு என்பது என்ன? '**துய்ப்பு**' என்பது **துப்பு** ஆயது. துய்ப்புக் கெட்டவன் என்றால் உணவு - நுகர்வு - இல்லாமல் ஒழிந்தவன் என்பதாம்.*

"துப்பார்க் குத் துப்பாய துப்பாக்கி துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை" (12)

*என்பது துப்பின் வள்ளுவ விளக்கம் அல்லவா! துப்புரவு என்பது உணவு - நுகர்வு என்னும் பொரு ளினவையே. (திருக். 263, 378, 1050).*

*ஒன்றை ஒருவர் கேட்கிறார். அதனை இல்லாதவர் 'துப்புரவாக இல்லை' என்கிறார். துப்புரவாக என்பது முழுவதாக - முற்றாக - என்னும் பொருளது.*

*உணவு இல்லாமை ஒன்றே 'முழுவதாக இல்லை' என்பதை விளக்கும் சான்றாம்.*

## 18. நிலக்கிழார்

*கிழமை என்பது உரிமை என்னும் பொருளமைந்த பழஞ்சொல்; மண உரிமை, மனை உரிமை, நில உரிமை, ஆட்சி உரிமை எனப்பலவாய உரிமை குறிக்கும் சொல் அது. கிழவன் என்பதன் பெண்பால் கிழத்தி என்பது. இவ்வுரிமைகள் எல்லாம் ஒன்றற்கு ஒன்று தொடர் புடையவை என்பது வெளிப்பட விளங்குவன.*

*உழவன் தன் நிலத்தைப் பல்காலும் சென்று பார்த்துச், செய்யும் செயல்களை எல்லாம் தவறாது செய்தால், எதிர்பார்த்த பயனுக்கு மேலும் கிடைக்கும். இல்லையேல் போட்ட முதலும் அற்றுப் போகும். இதனைக் கூறவரும் உழவு பாடிய கிழவர் திருவள்ளுவர், மனைக் கிழத்தியுடன் நிலக்கிழத்தியை இணைத் துக்கூறி இனிக்கச் செய்கிறார். அது,*

"இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"

*எனப் பொது வகையாலும்,*

"செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்"

*எனச் சிறப்பு வகையாலும் அவரால் கூறப்படுகின்றது (1040,1039)*

*நிலக்கிழார், பெருநிலக் கிழார் வழக்கை அறிய வேண்டுமா? இந்நூல் திருமண அழைப்பைப் பார்த்தால் போதுமே!*

*திருமணத்திற்கு அழைப்பார் உழவுத் தொழிலர் - நில உடைமையாளர் எனின், நிலக்கிழார், பெருநிலக்கிழார் என விருது, பட்டம் போல் போடுவது இல்லையா?*

*கிழவன் உரிமையாளன் என்றால் கிழத்தியும் உரிமையாட்டி தானே! மனை உரிமை போலவே நில வுரிமையும் ஆட்சி உரிமையும் பால் வேறுபாடு காணாமல் இருந்த முன்னோர்*

*பண்பாட்டுச் சிறப்பை விளக்கும் ஆட்சி கிழவன் கிழத்தி என்பவையாம்.*

*சங்க காலத் தலைவன் தலைவியர் கிழவன் கிழத்தி எனப்பட்டவை ஒப்புரிமைச் சிறப்பு உரைப்பதாம்.*

## 19. கூலி

என் குடும்பத்தை உயர்த்தி ஆவேன் எனத் துணிவோடு உழைப்பவனுக்கு உதவத் தெய்வமே துணிவுடன், துணியை வரிந்து கட்டிக் கொண்டு ஓடிவந்து முன்னிற்கும் என்பது வள்ளுவம். மேலும் துணைக்கு வரும் தெய்வமே துணை செய்யாததுடன் தடுப்பதாக முன்னின்றாலும் நீ விடாது முயற்சி செய்; ஓயாது உழை; உழைப்புக்குக் கூலி இல்லாமல் போகாது; கிடைத்தே தீரும் என்றும் கூறுகிறார் திருவள்ளுவர்.

அவை,

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்" (1023)

"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்" (619)

என்பவையாம்.

"உழைப்புக்குக் கூலி இல்லாமல் போகாது"

"பட்டபாட்டுக்குக் கூலி இல்லாமல் போகாது"

என்பவை பொதுமக்கள் வாயில் இருந்து கேட்கக் கூடியவை. இவை எளிமையில் அருமையாய் வள்ளுவக் கருத்தை வழங்கு கின்றன.

பழநாளில் முயற்சி உழைப்பு என்பவை உழவாகவும் உழவு சார்ந்தனவாகவுமே அமைந்தன. அந்நாளில் 'பண்டமாற்றே' வணிகமாகவும் இருந்தது. அண்மைக் காலம் வரை சிற்றூர் வழக்கு அப்படியே இருந்தது. அதுபோல் உழவர் விளைவித்த கூலம் (தவசம்) அவ்விளைவுக்கு உதவிய உழைப்பாளர்க்கு உழைப்பு ஈடாகத் தரப்பட்டது. கூலமாகத் தரப்பட்ட அது கூலி எனப்பட்டது. கூல வாணிகம் செய்த சீத்தலைச் சாத்தனார்

*கூலவாணிகன் சீத்தனார் என வழங்கப்பட்டார். பின்னர் உழைப்புக் கூலியாக நெல்லும் உப்பும் தரப்பட்டன. அவை சம்பு (நெல்) அளம் (உப்பு) என்பவை. அதனால் 'சம்பளம்' ஆயது. சாலரி என்னும் ஆங்கிலச் சொல் அடி உப்பு (சால்ட்) அரி (நெல்) எனப் பாவாணர் கூறுவார்.*

# 20. பொச்சாப்பு

'**பொச்சாவாமை**' என்பதோர் அதிகாரப் பெயர் (54); புறத்திரட்டிலும் இப்பெயரால் ஓர் அதிகாரம் உண்டு (62).

பொச்சாப்பு என்பது "மிகுந்த இன்பக் களிப்பால் ஏற்படும் மறதி" என்றும் (531) "புகழைக் கொல்வது" என்றும் (532, 533) கூறுவார் திருவள்ளுவர். மேலும் பொச்சாப்பு **தம் மகிழ்ச்சியால் மயங்குவது** என்றும் (539) கூறுவார்.

இயல்பாக எழும் நகை வேறு; பொய்யாக எண்ணிச் செருக்கால் கொள்ளும் நகை வேறு; பொய்யாக எழும் நகையைப் '**பொய்த்து நகை**' என்பது வள்ளுவம் (182).

பொய்த்து ஆர்ப்பது எது, அது **பொச்சாப்பு**.

புகழ் என்பது ஒருவர் பண்பாலும் செயலாலும் அவரைத் தேடிப் புகுவதாகும். தானே புகுவதை அன்றித் தேடிப் போவதால் அடைய முடியாதது அது. ஆனால், இல்லாப் புகழையும் இருப்பதாக இட்டுக் கட்டி மகிழும் மகிழ்வே பொய்த்து ஆர்ப்பு (பொச் சாப்பு) ஆகும். அது, ஏதாவது ஒரு புகழ் இருக்கு மாயினும், அதனையும் அழித்துவிடும்.

இப் பொருள் புரிவரோ, புரியாரோ! ஆனால், இதனைப் பொதுமக்கள் வழங்குதல் கண்கூடு. நெல்லை முகவை மாவட்டப் பரப்பில் கேட்கப்படுவது இது.

"உன் '**பொச்சாப்பும்** பூழாப்பும்' நன்றாகத் தெரியும்" என்பது பழிப்புரை. இதில் முற்சொல் பொய்யாகச் செருக்கி மகிழ்வது; **புகழார்ப்பு** என்பது பூழாப்பு ஆய்விட்டது. புகழுண்டாயினும் ஆர்ப்பது இயல்பில்லை; தம்புகழ் கேட்குங்கால் தலைதாழ்தல் இயற்கை எனக் கலித்தொகை உரைக்கும். பொய்த்து ஆர்ப்புச் செய்யாமையைப், 'பொச்சாவாமை' என்னும் வள்ளுவப் பொருள் பொதுமக்கள் வாயில் வழங்கு வதும், அது பழிக்கு இடமாக இருப்பதும் அறிந்து கொள்ளத்தக்க செய்திகளாம். **'அருஞ்சொல்' எனக் கற்றோர் இந்நாள் நினைப்பதும், பொதுமக்கள் வழக்கில் இயல்பாகவும் எளிமையாகவும் வழங்கப் படுதல் நினையின் வியப்பேயாம்.**

# 21. காடிக்குக் கேடு

*துப்புரவுக்கு (நுகர்வுக்கு) வாய்ப்பு இல்லை; இதனையே அரிய வாய்ப்பாகக் கொண்டு பற்றற்ற துறவைப் பற்றி இருக்கவேண்டும். அதனைச் செய்தல் இல்லாமல் 'அங்கு அது கிடைக்குமா? இங்கு இது கிடைக்குமா?' என்று ஆசைப்படுவார் உளர். அத்தகைய வகையில், வாழாமல் வாழ்வார் வாழ்வு ஒரு வாழ்வு தானா என்று எண்ணிய வள்ளுவர்,*

"துப்புரவு இல்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று"

*என்கிறார். காடி என்பது புளித்துப் போன கஞ்சி. காடிக்கஞ்சி ஆனாலும் மூடிக்குடி என்பது நலப் பழமொழி. அக் கஞ்சியைக் குடிக்கத் தொடு கறியாக ஊறுகாய் இல்லை என்றாலும் புளிப்பை மட்டுப் படுத்த உப்பாவது வேண்டும். அதனால் உப்புக்கும் காடிக்கும் எமனாக இருப்பவர் என்றார்.*

*பொதுமக்கள் வாய் இதனை எளிமையாகப் பயன் படுத்துகின்றது. சிலர் வாழ்வை உன்னிப்பாகப் பார்த்துக் "கஞ்சிக்குக் கேடு" "சோற்றுக்குத் தண்டம்" என்று கூறுகின்றனர்.*

*துறவு என்பது பொறி புலன்களின் அடக்கமாகும். அதற்கு மூல அடக்கம் சுவையடக்கம். உணவில் கட்டுப்பாடு இல்லாதவர் துறவியர் ஆகார். "ஒருபோது உண்பான் யோகி!" ஆனால் தின்று கொழுக்கவும், உழைப்பு இல்லாமல் பொழுது கழிக்கவும் விரும்பும் சோம்பர் பெரும் பெரும் துறவு மடங்களில் உள்ளமை துறவுக்கும் கேடு! உறவுக்கும் கேடு! ஆதலால் துப்புரவு பெற்று உழையாச் சோம்பரைப் பெருக்கும் இந்நாள் துறவு மடங்கள் தம்மைத் தாமே ஆய்வு செய்தல் வேண்டும். இல்லையேல் அம்மடங்களே உப்புக்கும் காடிக்கும் கூற்றாகிவிடும்.*

# 22. பூமிக்குப்பாரம்

*இதற்கு மேலேயும் போய்ப் '**பூமிக்குப் பாரம்**' என்றும் கூறுகின்றனர். பூமிக்குப் பாரம் என்பது வள்ளுவரால் 'நிலக்குப் பொறை' எனப்படுகின்றது.*

"கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை" (570)

"கண்ணோட்டத் துள்ள துலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை" (572)

"ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை" (1003)

"சான்றவர் சான்றாண்மை குன்றின் **இருநிலந்தான்**
தாங்காது மன்னோ **பொறை**" (990).

*மூன்று இடங்களில் நிலக்குப் பொறை என்ற வள்ளுவர், ஓரிடத்தே 'இருநிலந்தான் தாங்காது மன்னோ பொறை' என்கிறார். பொறையாவது பாரம், சுமை.*

*அறிவிலார் வழியில் நிற்கும் அரசு, ஈவிரக்கம் இல்லார் வாழ்வு, கருமிகள் வாழ்வு ஆகியவை மண்ணுக்குப் பாரம்; சான்றோர் பண்பு குறைந்தால் தன் பாரத்தையும் கூட நிலம் தாங்காது என்று குறிக்கிறார் திருவள்ளுவர்.*

*கல்வியால் இயங்க வேண்டிய ஆட்சியாளர் கல்லாமையை அரவணைப்பதும், கனிவுக்குரிய கண் இருந்தும் கண்ணோட்டம் இல்லாராய் இருப்பாரும், முயற்சிக் குரிய பிறப்பு எடுத்தும் ஈட்டாதும் ஈயாதும் இருப்பா ரும் பிறவிக்குக் கேடு செய்பவர் ஆதலால் அவர் மண்ணுக்குப் பாரமாயினர். சால்பைக் கட்டிக் காத்தலே உலகக் காவலாய் இருக்கவும், அவரே அச்சால் பில் குறைதல் உலகியல் அழிவே என்பதால் நிலம் உலகோரைத் தாங்காது என்றார்.*

*சான்றோர் சான்றாண்மையே உலகச் சுமையைக் குறைப்பது. அச்சான்றாண்மை அவரிடமே குறைந்து போனால், பாரத்தின் மேல் பாரம் தானே உலகுக்கு!*

## 23. பதர்

*அரிய அறிவுப் பிறவியாம் மாந்தருள் பலர் பயனில்லாத சொற்களைச் சொல்லியே நாளைப் போக்குகின்றனர். அவர்கள் வெட்டிப் பேச்சுப் பேசியே பொழுதைக் கழிக்கின்றனர். இத்தகையவரை 'வீணர்' என்பர் பொதுமக்கள். வீண் செலவினைச் செய்வாரை 'ஊதாரி' என்கிறோம். ஆனால் பொருளினும் உயர்ந்த பொழுதை வீணாக்குபவரை என்ன சொல்வது? 'பதர்' என்பர் பொதுமக்கள். திருவள்ளுவரோ பயனில்லாத சொல்லைச் சொல்பவனை அன்றி, அதனைக் கேட்பவனையும், அதனைப் பாராட்டுபவனையும் பதர் என்பார்.*

"பயனில் சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி எனல்"

*பொதுமக்கள் வாயும் அதனையே கூறுகின்றது. பயனில்லானைப் 'பதர்' என்றே அவர்களும் கூறுகின்றனர். வள்ளுவர் 'பதடி' என்றார்; பொது மக்கள் பதர் என்கின்றனர்.*

## 24. சாய்க்கடையில் பால்

*தக்கார் அவையில் தக்கதைச் சொல்ல வேண்டும். அறிவற்றவர் அவையில் அறிவு கூர்ந்த செய்தியைக் கூறுவது சாய்க்கடையில் கொட்டப்பட்ட பாலைப் போன்றது என்பார் திருவள்ளுவர் (720) அவர், 'அங்கணத்துள் உக்க அமிழ்து' என்பார். பொது மக்களோ அங்கணம் என்பதைச் சாய்க்கடை என வெளிப் படுத்தி, அமிழ்து என்பதற்குப் பால் எனப் பொருள் தந்து வழங்குகின்றனர்.*

*'அங்கணம்' என்பது சாய்க்கடை, சலதாரை என இந்நாளிலும் தென் மாவட்டங்களில் வழங்கப்படுதல் கேட்கக் கூடியதாம்.*

*"அவனுக்கு நான் எவ்வளவோ சொன்னேன்; சாக்கடையில் கொட்டிய பால் ஆகிவிட்டது" என்பார் சொல் நம் காதில் விழத்தானே செய்கின்றது.*

"பன்றியின் முன்னர் மணியைப் போடாதீர்"

"கழுதை அறியுமா கற்பூர வாடை"

*என்பவையும் அத்தகையவே.*

*சொல்லிவய சொல் பயன் சொல்! அதனைச் சொல்லும் இடமோ பயன்படா இடம்! ஆதலால் பயன் சொல் தன் பயன் இழத்தல் ஆகாது என்னும் எச்சரிக்கை இதுவாம்.*

# 25. வேடதாரி

'தமக்கென வாழாப் பிறர்க் குரியாளர்' என வாழ்வார் தவவாழ்வர்; பிறர் வேண்டும் வேண்டும் என்பவற்றை 'வேண்டா' என்று நீத்தவர் அவர். ஆனால் தவத் தோற்றம் உடையார் பலர் தவத்தன் மையராக இருப்பது இல்லை. அவர்கள் போலித் தவத் தராக வாழ்கின்றனர். வஞ்சம் சூது கயமை என்பவற் றுக்கு உறைவிடமாகத் திகழ்கின்றனர். இவர்கள் வாழ்வு கண்ட திருவள்ளுவர் 'கூடா ஒழுக்கத்தார்' என்றார்.

கூடா ஒழுக்கத்தார் தவவேடம் கொண்டிருப்பார்; ஆனால் அவர் எண்ணமும் செயலும் சொல்லும் தவத்தொடு கூடாதவையாக இருக்கும். ஊரை ஏமாற்ற நாடகமாந்தர்போல் வேடம் போட்டவர் அவர். அதனைப் 'பசு புலித்தோல் போர்த்து மேய்வது' என்றும் புதர்க்குள் மறைந்து கொண்டு வேட்டுவன் பறவையை வேட்டையாடுவது என்றும் கூறுகிறார்.

"வலியில் நிலைமையால் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று"

"தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று"

என்பவை அவை.

நல்லவனாக நடித்துப் பொல்லாதவனாகக் கேடு செய்பவனைப் பொதுமக்கள் நாளும் காணத்தானே செய்கின்றனர். அவர்கள், அத்தகையவர்களைக் கவட நாடகத்தான், வேடதாரி, பகல் வேடக்காரன், நடிகன் என்றெல்லாம் கூறுகின்றனர். ஆளுக்குத் தக்கபடியும் நேரத்துக்குத்தக்க படியும் தோற்றம் தருபவனைப் 'பச்சோந்தி' என்கின்றனர்.

அறவோர் ஆட்சியும் பொதுமக்கள் காட்சியும் ஒத்த வகையில் ஒரு பொதுமைப்பட்டுத் தோன்றுவது இத்தகையவற்றால் புலப்படும், சந்தன மணம் சந்தனக் கிண்ணத்திலும், பூவின் மணம் பூக்குடலையிலும் படிந்து கிடப்பது போன்றது இது.

*இன்னும் ஒரு காட்சி: நல்லவனாக நடித்து நம்ப வைத்துக் கெடுப்பானுக்கு ஒரு மரபுத் தொடர் வழங்கு கின்றது. அது "ருத்ராட்சப் பூனை" (உருத்திராக்கப் பூனை) என்பது. உருத்திராக்கம் தலையில் மட்டுமா? கழுத்தில் அலையலையாகத் தொங்குதல் மட்டுமா? கையில் புரளுதல் - (புரட்டுதல் இன்னும் சரியாக இருக்குமோ) என எத்தனை போர் போலித்துறவிகள்! பூனைக்கு வரவேற்பு என்ன? "இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா?" என்னும் மக்கள் உரை மேலும் விளக்கமாக்குகின்றது. தெருக்குரல், அகராதி கொண்டு பொருள் பார்க்கத்தக்கது இல்லையே.*

## 26. செத்தவன்

*உயிரோடு இருக்கும் ஒருவனைச் 'செத்தவன்' என்பது உலகவர் வழக்கு. சாக வேண்டியவன் சாகாமல் இருந்தால் அவனைச் 'சாவாரம் செத்தவன்' என்பதும் உண்டு. அத்தொடர் வழுவமைந்த தொடராம். சாகத்தக்க குறைகளை யுடையவன் சாகாவரம் பெற்றதால் சாகாமல் கிடக்கிறான் என்பது கருத்தாம்.*

*திருவள்ளுவர், உயிரோடு இருப்பார் சிலரைச் செத்தாருள் வைக்கத் தக்கவராகக் குறிப்பிடுவார்; இறப்பு, விளிவு முதலிய சொல்லைக் குறித்தும் கூறுவார்.*

"விளிந்தாரின் வேறல்லர்" (143)

"சாதல் அறம் கூறும் ஆக்கம் தரும்" (173)

"செத்தாருள் வைக்கப் படும்" (214)

"இறந்தார் இறந்தார் அனையர்" (310)

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்" (926)

"உளரெனினும் இல்லாரோடு ஒப்பர்" (730)

*இவை அத்தகையவை. பிறர்மனை நயப்பார், புறங் கூறுவார், ஒத்தது அறியார், சினமிக்கார், துஞ்சினார், களனஞ்சுவார் இன்னவர் உயிருடன் இருப்பவர் எனினும் இல்லாதவராகக் கொள்ளும் இப்பார்வை, பழிவழிப்பட்டவர் உயிருடையவர் ஆகார் என விளக் கும். இன்றும் இவ்வாறு கூறுதல் உண்டு என்பதை உயிருடன் இருப்பவனைச் செத்த பயல், என்றும் சாகமாட்டாதவன் என்றும் பொது மக்கள் வசை மொழியாகப் பயன்படுத்துதல் எண்ணத்தக்கது.*

*உயிருடையவர் என்பதற்கு உரிய அடையாளம் என்ன? ஆக்கவழியில் இயக்கம்! அவ்வியக்கம் இல்லாதவன் உயிரோடு இருந்தாலும் செத்தவன் தானே!*

## 27. உறவாடிக் கெடுத்தல்

ஒருவரை ஒருவர் பகைத்து அழிப்பதற்குப் பகையாடிக் கெடுத்தல் என்பது பெயர். ஆனால் நட்பாகக் காட்டிக் கெடுப்பதும் உலக வழக்கே. பகையாக இருந்து உறவாக வருவாரிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று திருவள்ளுவர் கூறுவார்.

"பகைநட்பாம் காலம் வருங்கால் முகம்நட்டு
அகநட்பு ஒரீஇ விடல்"

என்பது அது.

தாய்க் கோழி தன் குஞ்சைப் பருந்தினிடம் இருந்து காப்பதற்குக் குரல் கொடுத்து சிறகுள் வைத்துக் காப்பது போல நல்லவர்கள் பொல்லாதவர்களை நம்பிக் கெட்டுப்போகாமல் இருக்க இவ்வழி காட்டி னார் திருவள்ளுவர்.

பகைவன் நண்பனாக வருவான் எனில், அவனிடம் முகத்தால் நண்பனாகக் காட்டிக்கொள்; ஆனால் உள்ளத்தால் நட்பாளன் என்பதைக் காட்டாமல் ஒதுக்கிவிடு என்றார்.

இதனைப் பொதுமக்கள் எவ்வளவு எளிமையாகச் சொல்லி விடுகின்றனர்; **உறவாடிக் கெடுத்தல், அடுத்துக் கெடுத்தல்** என்பவை அவை.

உறவு என்பது நம்பத்தக்கது. நட்பு என்பது பால் வேறுபாடு அற்ற தூய காதல். காதல் கேடு ஒப்பது இந்நட்புக் கேடு.

உலகில் வாழ்வில் உண்டாகும் கெடுதல்களில் பெரிய கெடுதல் நம்பிக் கெடுதலேயாகும். பெரிய பெரிய அரசுகள் வீழ்ச்சியும் நம்பிக் கெட்டது உண்டு. வஞ்சம் கொண்டு கெடுக்க எண்ணும் அமைச்சர் ஒருவனினும், பகையாக இருப்பார் எழுபது கோடிப் பேர் எனினும் கேடு செய்திட மாட்டார் என்பார். நல்லோர் பகை கேடு செய்யாது. ஆனால் நயவஞ்சகம் கெடுக்காமல் ஒழியாது.

## 28. சிரித்துக் கெடுத்தல்

*நண்பர்களுள் சிலர் இனிக்க இனிக்கப் பேசுவர், சிரிக்கச் சிரிக்கப் பேசுவர்; உள்ளன்பு என்பதோ துளியும் இராது. முகநட்பு அன்றி அகநட்பு அவர் அறியார். இத்தகையவரை*

"நகைவகைய ராகிய நட்பு"

*என்பார் திருவள்ளுவர். இவர்களால் ஏற்படும் கெடுதலைப்*

"பகைவரால் பத்தடுத்த கோடி யுறும்"

*என்பார். இந் நட்பினரினும் பகைவர் எவ்வளவோ நல்லவர் என்கிறார்.*

*பகைவர் கேடு செய்வர் என விழிப்பாக இருக்கலாம். ஆனால் நகைவகையர் நம்பிக்கை யூட்டிக் கெடுப்பவர் ஆயிற்றே. என்ன விழிப்பும் வீழச் செய்வரே!*

*இனி அழுது கெடுப்பாரும் உளர் என்பதை,*

"தொழுத கையுள்ளும் படைஒடுங்கும் ஒன்னார்
**அழுதகண் ணீரும்** அனைத்து"

*என்கிறார் திருவள்ளுவர்.*

"சிரித்துச் சிரித்தே கழுத்தை அறுப்பான்" என்பர்.

*"ஈரத் துணியைக் கழுத்தில் போட்டு இறுக்குவான்" என்பர். அதற்கு மாறானது அழுது கெடுத்தல். வஞ்ச எண்ணத்தை வழியும் கண்ணீராலேயே நிறைவேற்றிக் கொள்வது. பொய்யை மெய்யாக்க வல்லது பொய்க் கண்ணீர். அதேபொழுதில் மெய்யைப் பொய்யாக்கிக் காணாத தீமையெல்லாம் காண வைப்பதும்அது. அதனால் சிரிக்கும் பெண்ணையும் அழும் ஆணையும் நம்பாதே என்னும் மக்கள் வழக்கும் உண்டாயிற்று. அழுவாரை அன்றித் தொழுது கெடுப்பாரும் கண்கூடு.*

## 29. புதைமண்

*பகை என்பது பிரிப்பது பிளப்பது என்னும் பொருளது. அப்பகை அகப்பகை புறப்பகை என்றும் உட் பகை வெளிப்பகை என்றும் இரண்டாகச் சொல்லப் படும்.*

*மெய்யாகவே பகை என முடிவு செய்யப்பட்டது புறப்பகை அல்லது வெளிப்பகை.*

*அவ்வாறு வெளிப்படத் தோன்றாமல் ஒரு குடும்பமாக - ஒரு தொழிலாக - ஓர் உறவாக இருப்பவர் தம் பகையை மறைத்து ஒட்டியிருப்பார் போல் இருந்து சமயம் வாய்க்கும் போது அழிப்பது உட்பகையாம்.*

*உட்பகை நாட்டைக் கெடுக்கும்; இனத்தைக் கெடுக்கும்; மொழியைக் கெடுக்கும்; குடியையும் கெடுக்கும். இதனால் உட்பகை என்றோர் அதிகாரம் திருக்குறளில் உண்டு.*

*எள்ளளவு உட்பகை இருப்பினும் பெருங்கேடாம். ஓர் உட்பகை எழுபது கோடி வெளிப்பகையினும் கேடுதரும் என்பது வள்ளுவம்.*

> "உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து
> மட்பகையின் மாணத் தெறும்"

*என்று உட்பகையின் அழிவை உவமையால் விளக்குவார்.*

*செப்பும் மூடியும் சேர்ந்திருப்பதுபோல் தோன்றி னாலும் தனித்தனியானவையாம் அவை. அதுபோல் எப்படி வெளிப் படாமல் ஒட்டி இருப்பினும் உட்பகை பிளவுபட்டதே என்றும் கூறுவார்.*

*மட்பகை யாவது எது என்றால், குயவர் சக்கரத்தின்மேல் வைத்த கலத்தை அறுத்து எடுக்கும் அறுவைக் கருவிக்கு மட்பகை என்பது பெயர் என உரைகண்டனர் முன்னுரைகாரர்களும் பின்னுரைகாரர்களும். ஆனால் திருவள்ளுவர் மண்பகையாவது, 'காலாழ்களர்' என்பதனால் குறிப்பார். பொதுமக்கள் சில*

இடங்களைப் 'புதைகுழி' என்கின்றனர்; 'புதை மண்' என்கின்றனர்; 'புதை மணல்' என்கின்றனர்.

மட்பகை என்பதை அவர்கள் அறிந்த பட்டறிவு கொண்டு பெயர் சூட்டியுள்ளனர். மற்றவர்களும் அப்பொருளை உணர்ந்து கொண்டு நலம்பெற வழிகாட்டுகின்றனர். படியாதவர்கள் மேல் குற்ற மில்லை. இது 'புதைமண்' 'புதை மணல்' என எழுதி யுள்ள பலகையை அறியாமல் வீழ்ந்து படுகின்றனர். படித்தவர்கள் அதனைப் பொருட்டாக எண்ணாமல் உயர்பொருளில் உயர் பொருளாம் உடலையும் உயிரையும் அழித்துக் கொள்கின்றனர்.

மட்பகை என்னும் வள்ளுவச் சொல்விளக்கம், புதைமண் புதைமணல் என்பனவற்றால் எளிமையில் இனிமையாய் விளக்கம் பெறுகின்றதாம். 'பூரியர்கள் ஆழும் அளறு' என்னும் 'அளறு' புதை மண்ணேயாம்.

முன்னாளில் வஞ்சம் தீர்ப்பதற்கும் தண்டிப்பதற்கும் பயன் படுத்தப்பட்டது அளறு. அதற்கு நரகம் எனவும் பின்னாள் உரை உண்டாயிற்று.

புதைமண், யானையையும் உள்வாங்கும்எனின் மற்றவை உள்விழுந்து மீளுமா? ஒருவர் புதைமண்ணுள் புகுந்ததும் தெரியாமல் போகும். தெரிந்து ஒருவர் போனாலும் அவர் நிலையும் அதுவே. ஆதலால் புதைமண், புதைமணல் எனப் பொதுமக்கள் வழங்கும் 'புதைகுழி', 'இடுகாடு' 'புதைகாடு' என்பனவும் ஒப்பாக எண்ணத்தக்கனவேயாம்! மட்பகை என்பதற்குப் பொதுமக்கள் படைத்துள்ள படைப்புச் சொற்களை எண்ண எண்ண வியப்பில்லையா?

## 30. ஆற்றமாட்டாதவன்

*பொதுமக்கள் வாயில், எதுவும் செய்ய இயலாதவனை ஆற்றமாட்டாதவன் என்று பழிப்பது பரவலாகக் கேட்கும் செய்தி.*

*ஆற்ற என்பது செயலாற்ற என்பதாம். அவன் உண்பான், உடுப்பான், பிள்ளை பெறுவான் அவையும் செயல்கள் தாமே! அவற்றைச் செய்வானை ஆற்ற மாட்டாதவன் எனலாமா?*

*மக்கள் செய்யும், அச் செயல்களை விலங்குகளும் பறவைகளும் செய்யும்! இவன் மனிதன். மனிதன் என்பான் பகுத்தறிவாம் மனஅறிவு உடையவன். தன்னால் மட்டுமா அவன் வாழ்கிறான்! உலகோர் கொடையால் வாழ்கிறான்! அத்தகையவன் உலகுக்காக வாழவேண்டுமே! பிறருக்கு இயன்ற உதவிபுரிந்து வாழ வேண்டுமே! அவற்றை ஆற்றாதவன் - ஆற்ற விரும்பா தவன் - ஆற்ற வாய்த்தும் தவறுபவன்* ***ஆற்றமாட்டாதவன்*** *என்றே பழிக்கப்படுகின்றான்.*

*ஆற்றமாட்டாதவன் என்பதைத் திருவள்ளுவர் '****ஆற்றாதான்****' என்பார்.*

*உண்ண இல்லேம்; உடுக்க இல்லேம்; உறைய இல்லேம்; கற்க வகை இல்லேம்; தொழில் வாய்ப்பு இல்லேம்; உற்றார் உறவு இல்லேம் என்பார் உலகில் இருந்து எதிர்பார்த்து வாழ்கின்றனரே! அத்தகையர்க்கு உதவுதலை ஆற்றுதல் என்கிறார். இதனை அற்றார்க்கு ஒன்று ஆற்றுதல் என்க. இவ்வாறு ஆற்றாதவனை 'அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான்' என்பார் பொய்யா மொழியார்.*

*ஆற்றுதல் என்பதைக்* ***கலித்தொகை*** *என்னும் நூல்,*

"ஆற்றுதல் என்பது அலந்தவர்க்கு உதவுதல்"

*என்று கூறும். அலந்தவர் என்பார், இல்லாமையால் வருந்துவார். 'அற்றார்க்கும் அலந்தார்க்கும்' என்பது இணைச் சொல்.*

*"ஆற்றா மாக்கள் அரும்பசி களை வோர்" எனப் பசியாற்றும் அறத்தை மணிமேகலை விரித்துக் கூறும். "பசித்தோர் முகம்பார்" என்பார் வள்ளலார்.*

*"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்" என்பார் வள்ளு வர். அப்பசியை ஆற்றுதல் உணவு தருதலால் மட்டுமா கூடும்? உணவைத் தாமே தேடிக் கொள்ளும் வகையால் பெற வழி காட்டினால், அவர்கள் கையேந்திப் பிழையாமல், தம் கை செய்து உண்ணும் வழக்கத்தைக் கொள்வார்களே! அப்படியாய் விட்டால் அவர்கள்,*

*இரவாரே! இரப்பார்க்கும் ஈவாரே என எண்ணிய வள்ளுவர்,*

"இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்"

*என்கிறார். மேலும் இதனைத் தெளிவுறுத்தும் வகை யில்,*

"ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்"

*என்கிறார். உணவு தருவதற்குப் பதிலாக, உணவு தேடிக் கொள்ளத்தக்க வழியும் வகையும் செய்து தருக என்கிறார். ஆற்றமாட்டாதவனை உணவு தந்து என்றும் ஆற்றமாட்டாதவனாக வைத்திருத்தலை விடுத்து, அவனை ஆற்றமாட்டாதவர்க்கு ஆற்றுவானாக ஆக்கு என்கிறார். இவற்றால் ஆற்றமாட்டாதவன் என்னும் பொதுமக்கள் பழிப்புரை, பொய்யா மொழியார் வாக்கு விளக்கமாக இருத்தல் புலப்படும்.*

## முடிவுரை

*ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய பொய்யா மொழி, இன்றும் என்றும் பொய்யா மொழியே என்பதைப் பொதுமக்கள் பேச்சு வழக்கில் இருந்து எடுத்துக் கூறப்பட்டவை இவை. இவ்வளவே என்பது இல்லை. இன்னும் விரிவாகவும் அமர்வாகவும் எண்ணிப் பார்த்தால் பலப்பல குறள்களில் பொதுமக்கள் பேச்சில் வழங்கும் பொய்யாமொழிகள் புலப்படும்.*

*மக்கள் வழக்கிலுள்ள சொற்கள் தெளிவு, சுருக்கம் என்னும் இரண்டு கால்களாலும் நடக்கும், ஓடும் தாவும் என்பதை இங்குக் காட்டப்பட்ட எடுத்துக்காட்டுகள் கொண்டும் தெளிவு செய்யலாம்! அந் நோக்கில் ஆய்வு மேற்கொள்ளல் திருக்குறள் நடைமுறை வாழ்வு நூல் என்பதை மலைமேல் கதிரோன் எனக் காட்ட உதவும்!*

*ஒருமொழி உயிரோட்ட மொழி என்பதும், ஓர் அறம் உயிரோட்ட அறம் என்பதும் மக்கள் வழக்கால் மட்டுமே நிலைநாட்டப்படும். இல்லையேல் வாழும் மொழியாக இல்லாமல் வாழ்ந்த வரலாற்று மொழியாக - அகழ்வாய்வு மொழியாகவே தங்கி நிற்கும். மக்கள் வாழ்வில் தாங்கி நிற்கும் நம்மொழியின் வளத்தை நம் புலமையர் கண்டும் கொண்டும் பயன் கொள்ளல் அவர் தலைக்கடன் எனக் கூறல் இவ்வாய்வின் முடிவுரையாம்.*

**முற்றும்**